# மனோன்மணியம்சுந்தரனார்பல்கலைக்கழகம்
# திருநெல்வேலி

# MANONMAIAM SUNDARANAR UNIVERSITY
# TIRUNELVELI

## தொலைநெறித்தொடர்கல்விஇயக்ககம்

## Directorate of Distance and Continuing Education

**முனைவர். இரா. நி. ஸ்ரீகலா**

உதவிப்பேராசிரியை, தமிழ்த்துறை

தெ. தி. இந்துக்கல்லூரி

நாகர்கோவில்

**பக்திஇலக்கியம்**

**அலகு : 1**

**திருஞானசம்பந்தர்தேவாரம்**

**நான்காம்பதிகம்**

**திருமுதுகுன்றம்**

திருஞான சம்பந்தர்

சைவம் என்ற சொல் உயிர்களிடத்தில் அன்பாக இருத்தல் என்ற பொருளின் காரணமாக உருவானது. சிவம் என்பதற்கு செம்மை அளிப்பது, மங்கலத்தைத் தருவது என்ற பொருள்களும் உள்ளன. சைவர்கள் தமிழுக்கு செய்த தொண்டு அளவிடற்கரியது. சைவத்தமிழ் இலக்கியப் பரப்பைப் பன்னிரு திருமுறைகள் மெய்கண்ட சாத்திர ற்கள் என வகைப்படுத்தலாம்.

தேவாரம்

தேவாரம் – தே + ஆரம். தேவாரம் என்ற சொல்லாட்சி இறைவழிபாடு என்ற பொருளில் வழங்கப்படுகிறது. இறைவழிபாட்டில் பாடப்பட்ட மூவர் பாடல்களும் தேவாரம் என வழங்கப் பெற்றன.

சம்பந்தர் சீர்காழியில் அந்தணர் குலத்தில் தோன்றியவர். தந்தை சிவபாத இருதயர் தாய் பகவதியார். இவர் பிறந்த மூன்றாம் ஆண்டு இறைவனிடம் ஞானப்பால் பெற்றார். கி.பி. ஏழாம் ற்றாண்டினர். தேவாரப் பாடல்களில் முதல் மூன்று திருமுறைகள் இவரால் பாடப்பட்டவை. பாடிய பதிகங்கள் 389. ஒவ்வொரு பதிகத்திலும் 11 பாடல்கள் உள்ளன. பாடிய பாடல்களின் எண்ணிக்கை 4168 பாடல்கள் ஆகும்.

**திருமுதுகுன்றம்**

தேவாரப்பாடல்களில்இடம்பெறும்திருமுதுகுன்றம்தற்போதுவிருத்தாச்சலம்என்றுவழங்கப்படுகிறது. இங்குஎழுந்தருளியிருக்கின்றஇறைவர்பழமலைநாதர், விருத்தகிரிசுரர். இறைவிபெரியநாயகி.

1. **மெய்த்துஆறுசுவையும், ஏழ்இசையும்,எண்**
   **குணங்களும், விரும்புநால்வே**
   **தத்தாலும் அறிவொண்ணா நடைதெளியப்**
   **பளிங்கேபோல் அரிவைபாகம்**

**ஒத்து, ஆறு சமயங்கட்கு ஒருதலைவன்**
**கருதும் ஊர்உலவுதெண்ணீர்**
**முத்தாறு வெதிர்உதிர நித்திலம்வா**
**ரிக்கொழிக்கு முதுகுன்றமே.**

மெய்யினால்அறியத்தக்கதாகிய ஆறு சுவைகள் ஏழிசைகள் , எண் குணங்கள், எல்லோராலும் விரும்பப்பெறும் நான்கு வேதங்கள் ஆகியவற்றால் அறிய ஒண்ணாதவனும், அன்போடு நடத்தலால் தெளியப் பெறுபவனும் , பளிங்கு போன்றவனும், உமையம்மையை ஒரு பாகமாக உடையவனும் , ஆறு சமயங்களாலும் மாறுபாடின்றி ஏற்றுக் கொள்ளப் பெறும் ஒரே தலைவனும் ஆகிய சிவபிரான் விரும்பும் ஊர், தெளிந்த நீர் நிறைந்த மணிமுத்தாறு மலையின்கண் உள்ள மூங்கில்கள் உதிர்க்கும் முத்துக்களை வாரிக்கொணர்ந்து கரையிற் கொழிக்கும் திருமுதுகுன்றமாகும்.

2. **வேரிமிகுகுழலியொடுவேடுவனாய்**
**வெங்கானில் விசயன்மேவு**
**போரின்மிகு பொறைஅளந்து பாசுபதம்**
**புரிந்துஅளித்த புராணர்கோயில்**
**காரின்மலி கடிபொழில்கள் கனிகள்பல**
**மலர்உதிர்த்துக் கயமுயங்கி**
**மூரிவளங் கிளர்தென்றல் திருமுன்றில்**
**புகுந்துஉலவு முதுகுன்றமே.**

தேன் மணம் மிகும் கூந்தலையுடைய உமையம்மை யோடு வேட்டுவ உருவந்தாங்கி அருச்சுனன் தவம் புரியும் கொடிய கானகத்திற்குச் சென்று அவனோடு போர் செய்து அவன் பொறுமையை அளந்து அவனுக்குப் பாசுபதக் கணையை விரும்பி அளித்த பழையோனாகிய சிவபிரான் உறையும் கோயில் , மழையால் செழித்த மணமுடைய சோலைகளில் கனிகளையும் பல மலர்களையும் உதிர்த்து , நீர் நிலைகளைப் பொருந்தி வலிய வளமுடைய தென்றல் காற்று அழகிய வீடுகள் தோறும் புகுந்து உலவும் திருமுதுகுன்றமாகும்.

3. **தக்கனதுபெருவேள்விச்சந்திரன்இந்**
**திரன்,எச்சன், அருக்கன், அங்கி**
**மிக்கவிதா தாவினொடும் விதிவழியே**
**தண்டித்த விமலர்கோயில்**

கொக்குஇனிய கொழும்வருக்கை கதலிகமுகு
உயர்தெங்கின் குலைகொள்சோலை
முக்கனியின் சாறுஒழுகிச் சேறுஉலரா
நீள்வயல்சூழ் முதுகுன்றமே.

தக்கன்செய்தபெருவேள்வியில்சந்திரன், இந்திரன், எச்சன், சூரியன், அனலோன், பிரமன், முதலியவர்களைவீரபத்திரனைக் கொண்டு தண்டித்த விமலனாகிய சிவபெருமான் உறையும் கோயில் , இனிய மாங்கனிகள் , வளமான பலாக்கனிகள் , வாழைக் கனிகள் ஆகிய முக்கனிகளின் சாறு ஒழுகிச் சேறு உலராத நீண்ட வயல்களும் குலைகளையுடைய கமுகு , தென்னை ஆகிய மரங்கள் நிறைந்த சோலைகளும் சூழ்ந்த திருமுதுகுன்றமாகும்.

4. வெம்மைமிகுபுரவாணர்மிகைசெய்ய
விறல்அழிந்து, விண்உளோர்கள்
செம்மலரோன் இந்திரன்மால் சென்றுஇரப்ப
தேவர்களே தேர்அதாக
மைம்மருவு மேருவிலு மாசுண நாண்,
அரிஎரிகால் வாளியாக
மும்மதிலும் நொடிஅளவில் பொடிசெய்த
முதல்வன்இடம் முதுகுன்றமே.

கொடுமை மிகுந்து முப்புரங்களில் வாழும் அவுணர்கள் தீங்கு செய்ய அதனால் தங்கள் வலிமை அழிந்துதேவர்களும் , பிரமனும், இந்திரனும், திருமாலும் சென்று தங்களைக் காத்தருளுமாறு வேண்ட , தேவர்களைத் தேராகவும் , மேகங்கள் தவழும் உயர்ச்சியையுடைய மேருமலையை வில்லாகவும் , வாசுகி என்னும் பாம்பை நாணாகவும், திருமால், அனலோன், வாயுவாகிய முத்தேவர்களையும் அம்பாகவும் கொண்டு அவுணர்களின் மும்மதில்களையும் ஒரு நொடிப் பொழுதில் பொடி செய்த தலைவனாகிய சிவபிரானது இடம், திருமுதுகுன்றமாகும்.

5. இழைமேவுகலைஅல்குல் ஏந்திழையாள்
ஒருபாலாய், ஒருபால்எள்காது
உழைமேவும் உரிஉடுத்த ஒருவன்இருப்

**பிடம்என்பர், உம்பர்ஓங்கு**
**கழைமேவு மடமந்தி மழைகண்டு**
**மகவினொடும் புகஒண்கல்லின்**
**முழைமேவு மால்யானை உரைதேரும்**
**வளர்சாரல் முதுகுன்றமே.**

மேகலை என்னும் அணிகலன் பொருந்திய அல்குலையும் , அழகிய முத்துவடம் முதலியன அணிந்த மேனியையும் உடையவளாகிய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு தனக்குரியதான ஒருபாகத்தே மான்தோலை இகழாது உடுத்த ஒப்பற்றவனாகிய சிவபிரானது இருப்பிடம், ஊரின் நடுவே உயர்ந்த மூங்கில்மேல் ஏறி அமர்ந்த மடமந்தி , மழை வருதலைக் கண்டு அஞ்சித்தன் குட்டியோடும் ஒலி சிறந்த மலைக்குகைகளில் ஒடுங்குவதும் , பெரியயானைகள் இரை தேர்ந்து திரிவதும் நிகழும் நீண்ட சாரலையுடைய திருமுதுகுன்றமாகும்.

**6. நகைஆர்வெண்தலைமாலைமுடிக்குஅணிந்த**
**நாதன்இடம், நன்முத்தாறு**
**வகைஆரும் வரைப்பண்டம் கொண்டு இரண்டு**
**கரைஅருகும் மறியமோதித்**
**தகையாரும் வரம்புஇடறிச் சாலிகழு**
**நீர்குவளை சாயப்பாய்ந்து**
**முகைஆர்செந் தாமரைகள் முகமலர**
**வயல்தழுவு முதுகுன்றமே.**

சிரித்தலைப் பொருந்திய வெண்மையான தலை மாலையை முடியில் அணிந்துள்ள நாதனாகிய சிவபிரானது இடம் , நல்ல மணிமுத்தாறு வகை வகையான மலைபடு பொருள்களைக் கொண்டு நெல் , கழுநீர், குவளை ஆகியன சாயுமாறு பாய்ந்து வந்து , தாமரை மொட்டுக்கள் முகம் மலரும்படி வயலைச் சென்றடையும் திருமுதுகுன்றமாகும்.

**7. அறங்கிளரும்நால்வேதம்ஆலின்கீழ்**
**இருந்துஅருளி அமரர்வேண்ட**
**நிறங்கிளர்செந் தாமரையோன் சிரம்ஐந்தின்**
**ஒன்றுஅறுத்த நிமலர்கோயில்**

**திறங்கொண்மணித் தரளங்கள் வரத்திரண்டுஅங்கு**
**எழில்குறவர் சிறுமிமார்கள்**
**முறங்களினால் கொழித்துமணி செலவிலக்கி**
**முத்துஉலைப்பெய் முதுகுன்றமே.**

அறநெறி விளங்கித் தோன்றும் நான்கு வேதங்களை ஆலின்கீழ் இருந்து சனகாதியர்க்கு அருளி , தேவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கி , செந்நிறம் விளங்கும் தாமரையில் எழுந்தருளிய பிரமனின் ஐந்து தலைகளில் ஒன்றைக் கொய்த நிமலனாகிய சிவ பிரானது கோயில் , முற்றிய மாணிக்கங்கள். முத்துக்கள் ஆகியன ஆற்றில் வருதலைக் கண்டு அழகிய குறவர் குடிப்பெண்கள் திரண்டு சென்று அவற்றை முறங்களால் வாரிமணிகளை விலக்கிப் புடைத்து முத்துக்களை அரிசியாக உலையில் பெய்து சிற்றில் இழைத்து விளையாடி மகிழும் திருமுதுகுன்றமாகும்.

**8. கதிர்ஒளியநெடுமுடிபத்துஉடையகடல்**
**இலங்கையர்கோன் கண்ணும்வாயும்**
**பிதிர்ஒளிய கனல்பிறங்கப் பெருங்கயிலை**
**மலையைநிலை பெயர்த்தஞான்று**
**மதில்அளகைக்கு இறைமுரல மலர்அடிஒன்று**
**ஊன்றி, மறை பாட ஆங்கே**
**முதிர்ஒளிய சுடர்நெடுவாள் முன்ஈந்தான்**
**வாய்ந்தபதி முதுகுன்றமே.**

கதிரவன் போன்ற ஒளியுடைய நீண்ட மகுடங்களைச் சூடிய பத்துத் தலைகளையுடைய இராவணன் கண்களும் , வாயும், ஒளிபரவும் தீ வெளிப்படச் சினங்கொண்டு பெரிய கயிலாயமலையை நிலைபெயர்த்த காலத்து , மதில்கள் சூழ்ந்த அளகாபுரிக்கு இறைவனாகிய குபேரன் மகிழுமாறு , மலர்போன்ற தன் திருவடி ஒன்றை ஊன்றி அவ் இராவணனைத் தண்டித்துப் பின் அவன் மறைபாடித் துதித்த அளவில் அவனுக்கு மிக்க ஒளியுள்ள நீண்ட வாளை முற்படத்தந்த சிவபிரான் எழுந்தருளிய பதி திருமுதுகுன்றமாகும்.

**9. பூஆர்பொன்தவிசின்மிசைஇருந்தவனும்**
**பூந்துழாய் புனைந்தமாலும்**
**ஓவாது கழுகுஏனமாய் உயர்ந்துஆழ்ந்து**
**உறநாடி, ஊண்மைகாணாத்**
**தேஆரும் திருவுருவன் சேரும்மலை**

செழுநிலத்தை மூடவந்த
மூவாத முழங்குஒலிநீர் கீழ்தாழ
மேல்உயர்ந்த முதுகுன்றமே.

தாமரை மலராகிய அழகிய தவிசின்மிசை விளங்கும் பிரமனும் , அழகிய துளசிமாலை அணிந்த திருமாலும் , அன்னமாகவும், பன்றியாகவும் உருமாறி வானில் பறந்தும், நிலத்தை அகழ்ந்தும் இடைவிடாது தேடியும் உண்மை காண இயலாத தெய்வஒளி பொருந்திய திருவுருவை உடையவனாகிய சிவபிரான் எழுந்தருளிய மலை, ஊழிக் காலத்து உலகத்தை மூடுமாறு முழங்கி வந்த கடல்நீர் கீழ்ப்படத் தான் மேல் உயர்ந்து தோன்றும் திருமுதுகுன்றமாகும்.

10. மேனியில்சீவரத்தாரும் விரிதருதட்டு
உடையாரும் விரவலாகா
ஊனிகளாய் உள்ளார்சொல் கொள்ளாதுஉம்
உள்ளுணர்ந்துஅங்கு உய்மின்தொண்டீர்
ஞானிகளாய் உள்ளார்கள் நான்மறையை
முழுதுஉணர்ந்து, ஐம் புலன்கள்செற்று,
மோனிகளாய், முனிச்செல்வர் தனித்துஇருந்து
தவம்புரியும் முதுகுன்றமே.

உடம்பில் துவராடை புனைந்த புத்த மதத்தினரும் , விரிந்த ஓலைத் தடுக்கை உடையாகப் பூண்ட சமணர்களும் , நட்புச் செய்து கோடற்கு ஏலாதவராய்த் தங்கள் உடலை வளர்த்தலையே குறிக்கோளாக உடைய ஊனிகளாவர். அவர்கள் சொற்களைக் கேளாது ஞானிகளாக உள்ளவர்களும் , நான்மறைகளை உணர்ந்தவர்களும், ஐம்புலன்களை வென்ற மௌனிகளும் , முனிவர்களாகிய செல்வர்களும், தனித்திருந்து தவம் புரியும் திருமுதுகுன்றை உள்ளத்தால் உணர்ந்து, தொண்டர்களே! உய்வீர்களாக.

11. முழங்குஒலிநீர் முத்தாறு வலம்செய்யும்
முதுகுன்றத்து இறையை மூவாப்
பழங்கிழமைப் பன்னிருபேர் படைத்துஉடைய
கழுமலமே பதியாக்கொண்டு
தழங்குஎரிமூன்று ஓம்புதொழில் தமிழ்ஞான
சம்பந்தன் சமைத்தபாடல்
வழங்கும்இசை கூடும்வகை பாடும்அவர்

நீடுஉலகம் ஆள்வர்தாமே.

ஆரவாரத்தோடு நிறைந்துவரும் மணிமுத்தாறு வலஞ்செய்து இறைஞ்சும் திருமுதுகுன்றத்து இறைவனை , முதுமையுறாததாய்ப் பழமையாகவே பன்னிரு பெயர்களைக் கொண்டுள்ள கழுமலப்பதியில் முத்தீ வேட்கும் தொழிலையுடைய தமிழ் ஞானசம் பந்தன் இயற்றிய இப்பதிகப் பாடல்களைப் பொருந்தும் இசையோடு இயன்ற அளவில் பாடி வழிபடுபவர் உலகத்தை நெடுங்காலம் ஆள்வர்.

**வினாக்கள்**

1. தேவாரம்குறிப்புவரைக
2. திருமுதுகுன்றத்தின்சிறப்பினைஎழுதுக.
3. திருமுதுகுன்றத்தில்எழுந்தருளியுள்ளசிவபெருமானின்பெருமைகளைசம்மந்தர்எவ்வாறுவிளக்குகிறார்.

**திருநாவுக்கரசர்தேவாரம்**

நாவுக்கரசரின்இயற்பெயர்**மருள்நீக்கியார்.** தந்தைபுகழனார்.தாய்மாதினியார்.தமக்கைதிலகவதியார்.இளமையில்சமணராகஇருந்துதமக்கையால்சைவத்துக்குமாறியவர்.அப்பர்என்றும்அழைக்கப்படுகிறார்.கி.பி.ஏழாம்நூற்றாண்டில்வாழ்ந்தவர்.இவர்பாடியபதிகங்கள் 313.பாடல்கள் 3066.அப்பர்தாண்டகம்பாடுவதில்வல்லவர்.**தாண்டகவேந்தர்**எனவும்அழைக்கப்படுவார்.**'பேசாதநாளெல்லாம்பிறவாதநாளே,என்கடன்பணிசெய்துகிடப்பதே,யாமார்க்கும்குடியல்லோம்நமனைஅஞ்சோம்'**என்றதொடர்கள்இவருடையவை.நாவுக்கரசரின்பதிகங்கள்பன்னிருதிருமுறைகளில்நான்கு,ஐந்து,ஆறாம்திருமுறைகளில்அடங்கும்.

திருஇராமேச்சரத்தில்எழுந்தருளியிருக்கின்றசிவபெருமானைபக்திப்பெருக்கோடுபாடுவதாகஅமைந்தபகுதிஇதுவாகும்.

**தலச்சிறப்பு**

பன்னிருஜோதிலிங்ககோயில்களுள்ஒன்று.நீண்டுஅகன்றபெரியகோயில்.இராமபிரான்ராவணன்,கும்பகருணன்போன்றோரைகொன்றபாவச்செயல்தீரலிங்கம்அமைத்துவழிபட்டதால்இராமேச்சரம்எனப்பெயர்பெற்றது.லிங்கம்கொண்டுவரகாசிக்குச்சென்றஅனுமன்வரதாழ்ந்தமையின்சீதாபிராட்டியார்மணலில்குவித்துசெய்தலிங்கத்தையேஇராமபிரான்பூசித்தார்.பின்னர்அனுமன்கொணர்ந்தஇலிங்கத்தையும்மூலலிங்கத்தின்வடபுறத்தில்பிரதிஷ்டைசெய்தனர்.இதுவேவிசுவலிங்கம்ஆகும்.இந்தலிங்கத்திற்குமுதலில்பூசைநிகழ்கின்றது.
இராமேச்சரம்திருக்கோயிலினுள்பலபுண்ணியதீர்த்தங்கள்உள்ளன
(23கிணறுகள்).அவற்றுள்நீராடியபின்னரேசுவாமிதரிசனம்செய்யவேண்டும்.

**பதிகவரலாறு**

திருப்புவனம்நண்ணிபணிந்தேத்தியபின்னர்ஆளுடையரசுதிருஇராமேச்சரம்போந்துஇராம பிரான்வழிபட்டபெருமைகொண்டபிஞ்சகனைவணங்கச்சென்று“ நேசமிக்கானிருந்ததிருவிராமேச்சரமே’எனப்பாடிபரவுகின்றார்.

(1)

நீங்குதற்குரியபாசத்தையும்கழிக்கும்வன்மையற்றஅரக்கர்கள்போரில்இறக்குமாறுபோரிட் டஇராமபிரான்சிவஞானஉணர்வால்நறுமணமலர்கள்கொண்டுபூசித்தகோயில்ஒளிமிக்கதா கவிளங்கும்இராமேச்சரமேஆகும்.அங்குஎழுந்தருளியுள்ளஇறைவனைநேசம்மிகுந்தஅன் பால்நாள்தோறும்நினைந்துபோற்றிஉய்மின்.

**பாசமும்கழிக்ககில்லா**

**அரக்கரைப்படுத்துத்தக்க**

**வாசமிக்கலர்கள்கொண்டு**

**மதியினால்மால்செய்கோயில்**

**நேசமிக்கன்பினாலே**

**நினைமினீர்நின்றுநாளும்**

**நேசமிக்கான்இருந்த**

**திருஇராமேச்சுரம்மே. (பாடல். 2832)**

(2)நெஞ்சே!இராவணனின்வாழ்நாள்முடிந்துபோனநிலையில்போரியற்றிவெற்றிகொண்ட இராமபிரான்அமைத்துவழிபட்டகோயிலானஇராமேச்சரத்தைநீபற்றிஇருந்துபரவுக.படர்ந் தசடைமுடியைஉடையஈசனைப்பரவுகமனமேஎன்கிறார்.

**முற்றினநாள்கள்என்று**

**முடிப்பதேகாரணமாய்**

**உற்றவன்போர்களாலே**

**உணர்விலாஅரக்கர்தம்மைச்**

**செற்றமால்செய்தகோயில்**

**திருஇராமேச்சுரத்தைப்**

**பற்றிநீபரவுநெஞ்சே**

**படர்சடைஈசன்பாலே. ( 2833 )**

(3)

கடலின்இடையில்மலைக்கற்களைக்கொண்டுபாலம்அமைத்துச்சென்றுஇராவணனைஅழித்தபின்னர்இராமபிரான்தன்பணியைமுடித்து,தீவுத்திடல்போன்றஇராமேச்சரத்தைதன்நெஞ்சினுள்வைத்துபோற்றினார்.அவ்வாறுமனதில்நினைத்துநாஉச்சரித்துபோற்றுகின்றநிலைகளில்தூய்மையற்றஇவ்வுடலில்ஐம்புலன்கள்அளவிடமுடியாதத்துன்பத்தைத்தருகின்றன.நான்அவ்வைம்புலன்களால்ஆட்டிப்படைக்கப்படுகின்றேன்என்கிறார்.ஐம்புலன்களைஅடக்குதல்என்பதுஅரிதானதுஎன்பதையும்இதன்மூலம்அறிந்துகொள்ளமுடிகிறது.

**கடலிடைமலைகள்தம்மால்**

**அடைத்துமால்தரும்முற்றித்**

**திடலிடைச்செய்தகோயில்**

**திருஇராமேச்சுரத்தைத்**

**தொடலிடைவைத்துநாவிற்**

**கழல்கின்றேன்தூய்மையின்றி**

**உடலிடைநின்றும்பேரா**

**ஐவர்ஆட்டுண்டுநானே. ( 2834)**

(4)குன்றுபோன்றுதிரண்டுருண்டதோள்களைஉடையசாதுவானகுணம்இல்லாதஅரக்கர்களைக்கொன்றுவெற்றிகண்டசக்கரப்படையையுடையதிருமாலாகியஇராமபிரான்சிவபூசையைவிரும்பிச்செய்ததிருக்கோயில்திருஇராமேச்சரம்ஆகும்.நெஞ்சமே!நீநல்லவன்போல்

தோற்றம்கொண்டாய்.எனினும்நீநல்லவன்இல்லை.நீநல்லப்பொருளைஅறியவேண்டுமானால்இராமேச்சுரம்சென்றுவணங்குவாயாகஎன்றுஇராமேச்சுரத்தின்பெருமையைக்கூறுகிறார்.

**குன்றுபோல்தோளுடைய**

**குணமிலாஅரக்கர்தம்மைக்**

**கொன்றுபோர்ஆழியம்மால்**

**வேட்கையாற்செய்தகோயில்**

**நன்றுபோல்நெஞ்சமேநீ**

**நன்மையையறிதியாயில்**

**சென்றுநீதொழுதுய்கண்டாய்**

**திருஇராமேச்சுரம்மே. (2835)**

(5)

வீரமிக்ககோரைப்பல்லைக்காட்டும்அரக்கனாகியஇராவணன்,நீண்டவாழ்நாளைப்பெற்றுகொடுமைபுரிபவனானான்.அவனைக்கொன்றழித்ததீரமிக்கஇராமபிரான்இருந்துசிவபூசைசெய்ததிருஇராமேச்சுரத்தைத்தளராதசிந்தனையுடன்வணங்கிப்போற்றுங்கள்.இங்கனம்செய்வார்நற்கதிஅடையும்தவத்தின்பயனைஅடைவார்கள்.

**வீரமிக்கெயிறுகாட்டி**

**விண்ணுறநீண்டரக்கன்**

**கூரமிக்கவனைச்சென்று**

**கொன்றுடன்கடற்படுத்துத்**

**தீரமிக்கான்இருந்த**

**திருஇராமேச்சுரத்தைக்**

**கோரமிக்கார்தவத்தாற்**

**கூடுவார்குறிப்புளாரே. (2836)**

(6)அரக்கர்கள்தம்மினும்உடல்வலிமைஉடையவர்கள்எவரும்இல்லைஎன்றஎண்ணத்தில்த ருக்கிபோர்செய்தனர்.அத்தகையோரைபோரிலேவீழ்த்திவெற்றிக்கண்டவர்இராமபிரான். அவர்ஆங்குவந்துசிவலிங்கம்எழுப்பி,சிவபூசைசெய்ததைமடநெஞ்சமே!நீஉணருவாயாக.நீ யும்அங்குசென்றுசெஞ்சடைநாதனைப்போற்றிப்புகழ்ந்துமகிழ்வாயாக.

**ஆர்வலநம்மின்மிக்கார்**

**என்றஅவ்அரக்கர்கூடிப்**

**போர்வலம்செய்துமிக்குப்**

**பொருதவர்தம்மைவீட்டித்**

**தேர்வலம்செற்றமால்செய்**

**திருஇராமேச்சுரத்தைச்**

**சேர்மடநெஞ்சமேநீ**

**செஞ்சடைஎந்தைபாலே. ( 2837)**

(7)

இனிமையானஉரைகளைப்பேசாதவர்கள்அரக்கர்கள்.அவர்களைப்போரில்அழித்துவெற் றிகண்டவர்திருமால்.அவர்கடற்கரையில்அமைத்ததிருஇராமேச்சுரத்தைகண்டுவணங்குப வர்களுக்குப்பிறவிஎன்னும்நோயும்அதற்குக்காரணமானவினையும்கெட்டொழியும்.

**வாக்கினால்இன்புஉரைத்து**

**வாழ்கிலார்தம்மைஎல்லாம்**

**போக்கினாற்புடைத்தவர்கள்**

**உயிர்தனைஉண்டுமால்தான்**

**தேக்குநீர்செய்தகோயில்**

**திருஇராமேச்சுரத்தை**

**நோக்கினால்வணங்குவார்கள்**

**நோய்வினைநுணுகும்அன்றே. ( 2838)**

(8)

பலகாலங்கள்தீமையேபுரிந்துஉலகினைவதைத்துத்துன்புறுத்திக்கொலைத்தொழிலேபுரியும்வில்தொழிலைமேற்கொண்டகொடியவரானஅரக்கர்களைக்கொன்றுகுவித்த,கோதண்டத்தைக்கையில்கொண்டஇராமபிரான்செய்தமைத்ததிருக்கோயில்திருஇராமேச்சுரம்ஆகும். இக்கோயிலைதலைதாழ்த்திவணங்கும்அடியார்களுக்குப்பாவம்தாழ்வடைசெய்யும்தவம் மேலோங்கிநற்கதியைத்தரும்.

**பலவுநாள்தீமைசெய்து**

**பார்தன்மேல்குழுமிவந்து**

**கொலைவிலார்கொடியராய**

**அரக்கரைக்கொன்றுவீழ்த்த**

**சிலையினான்செய்தகோயில்**

**திருஇராமேச்சுரத்தைத்**

**தலையினால்வணங்குவார்கள்**

**தாழ்வாரம்தவம்தாமே. ( 2839)**

(9)நெஞ்சமேஅரியபெரியதவங்கள்புரிந்துபல்வேறுவரங்களையும்பெற்றகுன்றுபோன்றவலிமைகொண்டஅரக்கர்களைவீழ்த்திஅவர்கள்மடியுமாறுசக்கரப்படையைச்செலுத்திவெற்றிக்கண்டவர்திருமால்.அவரேபின்னர்இராமர்அவதாரத்தில்அன்புபூண்டுமேலிடச்செய்த கோயில்திருஇராமேச்சுரம்.இக்கோயிலானதுஉனக்குநன்னெறியைக்காட்டும்.

**கோடிமாதவங்கள்செய்து**

**குன்றினன்தம்மையெல்லாம்**

**வீடவேசக்கரத்தால்**

**எரிந்துபின்அன்புகொண்டு**

**தேடிமால்செய்தகோயில்**

**திருஇராமேச்சுரத்தைத்**

**நாடிவாழ்நெஞ்சமேநீ**

**நன்னெறியாகுமன்றே.  ( 2840)**

(10)கொடுமைகொண்டஅரக்கர்கள்நன்குவாழ்வதற்குரியசெயல்முறைகளைஅறியாதவர். அவர்கள்பிறருக்குத்துன்பம்செய்வதையேபழக்கமாகக்கொண்டவர்கள்.அத்தகையோரைப் போரில்வென்றவர்இராமபிரான்.அவர்அமைத்ததிருக்கோயில்இராமேச்சுரம்.அதனைத்தன் கண்களால்வணங்கிப்போற்றுவார்கள்இறைவனின்திருவடியில்சிறந்துவிளங்குவார்கள்.

**வன்கண்ணார்வாளரக்கர்**

**வாழ்வினைஒன்றறியார்**

**புண்கண்ணர்ஆகிநின்று**

**போர்கள்செய்தாரைமாட்டிச்**

**செங்கண்மால்செய்தகோயில்**

**திருஇராமேச்சுரத்தைத்**

**தன்கணால்எய்தவல்லார்**

**தாழ்வாரம்தலைவன்பாலே. (2841)**

(11) மலைகளைப்போன்றநெடியமணிமுடிகொண்டஇராவணனைமுற்றும்ஒடுக்கிஅழித்து திரும்பும்போது,இராமபிரான்செய்தகோயில்கடல்அலைகள்முத்துக்களைக்காணிக்கையா கச்செலுத்திவணங்கும்இராமேச்சுரம்ஆகும்.அச்சிறப்புடையஇத்திருப்பதிகத்தைப்போற்றி ப்படிப்பவர்கள்அன்பின்பெருக்கில்திளைப்பார்கள்.

**வரைகள்ஒத்தேயுயர்ந்த**

**மணிமுடிஅரக்கர்கோனை**

**விரையமுற்றற்வொடுக்கி**

**மீண்டுமால்செய்தகோயில்**

**திரைகள்முத்தால்வணங்கும்**

**திருஇராமேச்சுரத்தை**

**உரைகள்பத்தாலுரைப்பர்**

**உள்குவார்அன்பினாலே. (2842)**

இராவணனைவதம்செய்தபின்னர்இராமபிரான்சிவபூசைசெய்தஇராமேச்சுரத்தின்சிறப்பும் அக்கோவிலில்சென்றுவணங்குபவர்கள்அடைகின்றமேன்மையினையும்இப்பதிகம்காட்டு கிறது.

**வினாக்கள்**

1. நாவுக்கரசர்குறிப்புவரைக
2. இராமேச்சுரத்தின்பெருமையைநாவுக்கரசர்பாடல்கள்வழிவிவரி.
3. இராமன்பூஜைசெய்தசிறப்பினைஉடையஇராமேச்சரசிவதலத்தில்எழுந்தருளியுள்ள சிவபெருமானின்சிறப்பினைநாவுக்கரசர்பாடல்கள்வழிவிளக்குக

**சுந்தரர்தேவாரம்**

பன்னிருத்திருமுறைகளில்சுந்தரர்பாடியபதிகங்கள்ஏழாம்திருமுறையில்அடங்கும்.இவர்திருநாவலூரில்பிறந்தவர்.நரசிங்கமுனையார்என்றசிற்றரசனால்வளர்க்கப்பட்டவர்.திருமணநாளில்இறைவனால்தடுத்தாட்கொள்ளப்பட்டவர்.இவர்கி.பி.ஒன்பதாம்நூற்றாண்டில்வாழ்ந்தவர். 100 பதிகங்கள்பாடியுள்ளார்.இவர்பாடியபாடல்கள் 1026.இவருக்குத்**திருநாவலூரார்,வன்தொண்டன்**என்றபெயர்களும்உண்டு.
**‘பித்தாபிறைசூடிபெருமானேஅருளாளா**
**’**என்றபாடல்இவருக்கும்இறைவனுக்கும்உள்ளஉறவைப்புலப்படுத்துகிறது.

**பதிகவரலாறு**

திருவாலங்காட்டில்எழுந்தருளியுள்ளசிவபெருமானைசுந்தரர்பாடியதலம்.திருவெண்பாக்கத்தில்ஊன்றுகோல்பெற்றஆரூரர்பழையனூர்சென்றுதிருவாலங்காட்டின்எல்லையைஅடைய,காரைக்கால்அம்மையார்தலையால்நடந்தபுனிதத்தலம்.இந்நிலத்தில்‘நம்அடிபடுதல்சாலாது’எனஎண்ணியவராய்ப்புறத்தேஒதுங்கிஇத்திருப்பதிகத்தைப்பாடத்தொடங்கினார். இங்குஎழுந்தருளியுள்ளஇறைவன்ஊர்த்துவதாண்டவேசுரர்ஆவார்.

**1)அடியவர்களுக்குஅடியவன்**

பாசங்களினின்றுநீங்கியவனே!அனைவருக்கும்முத்திதரவல்லவனே!அரும்பனையதனங்களைஉடையஉமையொருபாகனே!சித்தனே!அச்சித்திகளைக்காட்டிடும்சிவனே!தேவர்களின்சிங்கமே!பத்தனே!அன்பர்பலர்போற்றும்பரமனே!பழையனூரில்எழுந்தருளியுள்ளஅத்தனே!திருவாலங்காடனே!நான்உன்அடியவர்களுக்குஅடியவன்ஆவேன்என்றுவணங்குகிறார்.

**முத்தாமுத்திதரவல்ல**
**முகிழ்மென்முலையாள்உமைபங்கா**
**சித்தாசித்தித்திறங்காட்டும்**
**சிவனேதேவர்சிங்கமே**
**பத்தாபத்தர்பலர்போற்றும்**

**பரமாபழையனூர்மேய**

**அத்தாஆலங்காடாஉன்**

**அடியார்க்குஅடியேன்ஆவேனே. (720)**

**2) தடுத்தாட்கொண்டவனே**

கொடியவற்றையேசெய்துபுறமாகத்திரிகின்றஎன்னைஅத்தீயவழியில்செல்லாமல்தடுத்து மெய்யாகவேவந்துஇங்குஎன்னைஆண்டமெய்யனே!மெய்யருக்குமெய்ப்பொருளானவனே!படமெடுத்துஆடுகின்றபாம்பைத்திருவரையில்கட்டியபரமனே!பழையனூர்ஐயனே!திருவாலங்காடனே!யான்உன்அடியார்க்குஅடியவன்ஆவேன்.

**பொய்யேசெய்துபுறம்புறமே**

**திரிவேன்தன்னைப்போகாமே**

**மெய்யேவந்திங்குஎனைஆண்ட**

**மெய்யாமெய்யர்மெய்ப்பொருளே**

**பையா(டு)அரவம்அரைக்கசைத்த**

**பரமாபழையனூர்மேய**

**ஐயாஆலங்காடாஉன்**

**அடியார்க்குஅடியேன்ஆவேனே. (721)**

**3) முப்புரத்தைபொடியாக்கியவன்**

தூண்டவேண்டாதுசிறந்தஒளிவடிவானவனே!வணங்குவோரின்வினைகளைஒழிப்பவனே! என்புமாலையைஅணிந்தவனே!முப்புரத்தைப்பொடியாகசெய்தபுண்ணியனே!பண்டைவினைகள்பற்றாதுகாக்கும்பரமனே!பழையனூரில்எழுந்தருளியஆண்டவனே!திருவாலங்காடா!யான்உன்அடியார்க்குஅடியவன்ஆனேன்என்றுபாடிப்பரவுகிறார்.

**தூண்டாவிளக்கின்நற்சோதி**

**தொழுவோர்தங்கள்துயர்தீர்ப்பாய்**

**பூண்டாய்எலும்பைப்புரம்மூன்றும்**

**பொடியாய்ச்செற்றபுண்ணியனே**

**...............................................**

**ஆண்டாஆலங்காடாஉன்**

**அடியார்க்(கு)அடியேன்ஆவேனே. (722)**

**4) வினைகளைநீக்குபவனே!**

ஐயனே!மானின்கண்களைஒத்தமகளிரின்வலையில்சிக்கிஅறிவுமயங்கியான்அறிவிழந்தேன்.நீலகண்டனே!நீங்காதவினைகளைநீக்குகின்றமேலானவனே!பழையனூரில்எழுந்தருளியஅறிவுருவமே!திருவாலங்காடனே!நான்உன்அடியார்க்குஅடியவனானேன்என்கிறார்.

**5) மயக்கம்கொள்ளல்**

மணியே!முத்தே!மரகதமணியே!பாலாடுவோனே!நெய்யாடுவோனே!விரிந்துபரந்தசடைமுடியைஉடையவனே!பழையனூர்திருவாலங்காடனே!அடியேன்வேல்போன்றஅழகியகண்களைக்கொண்டமகளிரின்வலையிற்சிக்கிஉன்னைமறந்துமயக்கம்கொண்டுஎன்னையேமறந்தேன்.இனிஅவ்வாறுஇருக்கமாட்டேன்.நான்உன்அடியவர்க்குஅடியவன்ஆவேன்என்கிறார்.

**வேலங்காடுதடங்கண்ணார்**

**வலையுட்பட்டுன்நெறிமறந்து**

**மாலங்காடிமறந்தொழிந்தேன்**

**மணியேமுத்தேமரகதமே**

**பாலங்காடீநெய்யாடீ**

**படர்புன்சடையாய்பழையனூர்**

**ஆலங்காடாஉன்னுடைய**

**அடியார்க்குஅடியேன்ஆவேனே. (724)**

**6)காக்கும்முதல்வனே**

பகைவருடையமும்மதில்களைஅம்புஎய்திஅழித்தஎந்தந்தையே!என்தந்தைக்கும்பெருமானாய்அமர்ந்தவனே!அனைத்திற்கும்ஆதாரமாகியஉலகத்தைக்காக்கின்றமுதல்வனே!மாசற்றவனே!பண்பொருந்தியஇசைகளைக்கொண்டுபலரும்போற்றுகின்றபழையனூர்பெருமானே!திருவாலங்காடனே!நான்உன்அடியவர்க்குஅடியேன்ஆவேனேஎன்றுஅடியவர்களுக்குஎல்லாம்தான்அடியவனாகவாழ்வேன்என்றுஉரைக்கிறார்சுந்தரர்.

**7) வினைகள்தீர்ப்பவனே**

வண்டுகள்நிறைந்தகூந்தலைஉடையஉமைபாகனே!கங்கையின்கணவனே!பகைவரின்மு ப்புரங்களைஎரித்தஇடபவாகனனே!மறைமார்க்கநெறியானே! முன்செய்தபலவினைகளைத்தீர்க்கும்தேவனே!பழையனூர்பெருமானே!திருவாலங்காட னே!நான்உன்அடியார்க்குஅடியவன்ஆவேன்.

**வண்டார்குழலிஉமைநங்கை**
**பங்காகங்கைமணவாளா**
**விண்டார்புரங்கள்எரிசெய்த**
**விடையாய்வேதநெறியானே**
**பண்டாழ்வினைகள்பலதீர்க்கும்**
**பரமாபழையனூர்மேய**
**அண்டாஆலங்காடாஉன்**
**அடியார்க்குஅடியேன்ஆவேனே. ( 726)**

**8)தீப்பிழம்பாய்நின்றமெய்ப்பொருளே**

பெரியவாயினைஉடையபாம்பணையைஉடையவனாகியதிருமாலும்,பெரியமலர்எனப்ப டும்தாமரைமலரில்இருப்பவனாகியநான்முகனும்உன்நிலையைஉணர்ந்துஉன்திருவடிக ளைவணங்கத்தீப்பிழம்பாய்நின்றமெய்ப்பொருளே!பாழானவினைகளைவேரறுக்கவல்ல பெருந்தகையே!பழையனூரைஆளும்பெற்றியோனே!திருவாலங்காடனே!நான்உன்அடி யார்க்குஅடியவன்ஆவேன்என்கிறார்.

**9) இடுகாட்டில்ஆடுபவனே**

என்தந்தை.தந்தையின்தந்தையானஇருவகையானஏழுதலைமுறைகளில்எங்களைஅடிமை யாய்க்கொண்டபெருமானே!இடுகாட்டில்பேயோடுஆடல்புரிபவனே!பெருமைகொண்டம லர்களால்பலரும்போற்றிவணங்குகின்றபழையனூர்ப்பரமனே!திருவாலங்காடனே!நான்உ ன்அடியவர்க்குஅடியவன்ஆவேன்.

இதில்இருவகைஏழ்தலைஎன்பதுதாய்வழியில்ஏழுதலைமுறையும்தந்தைவழியில்ஏழுதலை முறையும்என்பதாகும்.

10)

அடியவரும்சித்தருமாகவணங்குகின்றகடவுளும்,பழையனூர்மேவியதலைவனும்ஆகியதிருவாலங்காடனின்அடிமைவகையிலேஅன்புஉள்ளவனாகிசித்தர்கள்தங்கள்மனதில்மறவாது வைத்துள்ளபுகழ்அடியவனானநம்பியாரூரனதுஒள்ளியதமிழ்ப்பாடல்கள்பத்தினையும்பாடியாடுவார்பரமன்அடியையேபணிவர்.

**பத்தாசித்தர்மலர்ஏத்தும்**
**பரமன்பழையனூர்மேய**
**அத்தன்ஆலங்காடன்தன்**
**அடிமைத்திறமேஅன்பாகிச்**
**சித்தர்சித்தம்வைத்தபுகழ்ச்**
**சிறுவர்ஊரன்ஒண்தமிழ்கள்**
**பத்தும்பாடிஆடுவார்**
**பரமன்அடியேபணிவாரே. (729)**

**திருச்சிற்றம்பலம்**

**வினாக்கள்**

1. சுந்தரர்குறிப்புவரைக
2. அடியவருக்குஅடியவன்ஆவேன்எனசுந்தர்குறிப்பிடுவனவற்றைஎழுதுக.

**மாணிக்கவாசகர்திருவாசகம்**

**அன்னைப்பத்து**

மணிவாசகர்என்றமாணிக்கவாசகர்பாடிய**திருவாசகமும்திருக்கோவையாரும்**எட்டாம்திருமுறையில்அடங்கும்.மாணிக்கம்போன்றபாடல்களைபாடியஇவர்மாணிக்கவாசகர்எனப்பட்டார்.

அரிமர்த்தனபாண்டியனின்அவையில்அமைச்சராகஇருந்தவர்.அரசன்குதிரைவாங்கக்கொடுத்தபணத்தில்திருத்துறைப்பூண்டியில்கோவில்கட்டியவர்.மன்னரால்சிறையில்அடைக்கப்பட்டபோதுஇறைவனேகுதிரையாகவந்துஇவரைஅடையாளம்காட்டிஅற்புதங்கள்செய்தார்.**திருவாசகம் 658 பாடல்களைக்கொண்டது.51 பகுதிகளைஉடையது**அன்னைப்பத்து 17 -வதுபகுதியாகஅமைந்துள்ளது.

அன்னை + பத்து=அன்னைப்பத்து.அன்னையைமுன்னிலைப்படுத்திக்கூறும்பத்துசெய்யுள்களின்தொகுதிஎன்பதுஇதன்பொருள்.இதனையும்மகளிர்விளையாட்டுகளுள்ஒன்றுஎனக்கூறுவர்.இதில்வரும்பாடல்கள்அகத்துறையைச்சார்ந்தவை.அன்னைக்கூற்றாகவந்துள்ளனஎன்றுஒருசாராரும்,தோழிகூற்றாகவந்துள்ளனஎன்றுமற்றொருசாராரும்சொல்கின்றனர்.

அதாவதுஇறைவனேதனதுகாதலன்என்றுசொன்னமகளதுநிலையினைவியந்துஅன்னைகூறுவதுபோல்அமைந்துள்ளதுஎனவும்,தலைவிதன்காதலனைநினைத்துஅன்னையிடம்புலம்பியதைத்தோழிமற்றொருத்தியிடம்கூறுவதுபோல்அமைந்துள்ளதுஎனவும்கூறுகின்றனர்.இங்ஙனம்இருவகையிலும்பொருள்கொள்வதற்கும்பொருத்தமாகஇதில்உள்ளபாடல்கள்அமைந்துள்ளனஎன்பதேசிறப்பு.ஆத்துமபூரணம்என்பதுஉயிரானதுஇறைவனோடுகலந்துநிறைவுபெறுவதுஆகும்.

**வேதமொழியர்வெண்ணீற்றர்செம்மேனியர்**

**நாதப்பறையினர்அன்னேஎன்னும்**

**நாதப்பறையினர்நான்முகன்மாலுக்கும்**

**நாதரிந்நாதனார்அன்னேஎன்னும் (1)**

அவர்,வேதப்பொருளாய்விளங்குபவர்.வெண்மையானதிருநீற்றைப்பூசிஇருப்பவர்.சிவந்த மேனியினைக்கொண்டிருப்பவர்.நாததத்துவப்பறையினைஉடையவர்.அன்னையே!என் பாள்.

நாததத்துவப்பறையினைஉடையஅவரே,நான்முகனுக்கும்நாராயணனுக்கும்நாயகராம்.எ னக்கும்அவரேநாயகர்ஆவார். அன்னையே!என்பாள்.

**கண்ணஞ்சனத்தர்கருணைக்கடலினர்**

**உள்நின்றுருக்குவர்அன்னேஎன்னும்**

**உள்நின்றுருக்கிஉலப்பிலாஆனந்தக்**

**கண்ணீர்தருவரால்அன்னேஎன்னும் (2)**

அவர்கண்களில்கருமையானமையைப்பூசிஇருப்பவர்.கருணைக்கடலாகவிளங்குபவர்.என் உள்ளத்தில்புகுந்துஎன்னைஉருகச்செய்பவர்.அன்னையே!என்பாள்.

உள்ளத்தில்புகுந்துஎன்னைஉருகச்செய்து,அழியாதஆனந்தக்கண்ணீரைஅளிப்பவரும்அவ ர்தாம்,அன்னையே!என்பாள்.

**நித்தமணாளர்நிரம்பஅழகியர்**

**சித்தத்திருப்பரால்அன்னேஎன்னும்**

**சித்தத்திருப்பவர்தென்னன்பெருந்துறை**

**அத்தர்ஆனந்தரால்அன்னேஎன்னும்! (3)**

அவர்என்றைக்கும்மணமகனாகவேஇருப்பவர்.பேரழகுபெற்றிருப்பவர்.என்சித்தத்தில்புகுந்துகுடிகொண்டவர்,அன்னையே!என்பாள்.

என்சித்தத்தில்குடிகொண்டவர்,அழகுமிகுதிருப்பெருந்துறையின்அத்தரேஆவார்.ஆனந்தமயமாய்விளங்குபவரும்அவர்தாம்,அன்னையே!என்பாள்.

**ஆடரப்பூணுடைத்தோல்பொடிப்பூசிற்றோர்**
**வேடம்இருந்தவாறுஅன்னேஎன்னும்**
**வேடம்இருந்தவாகண்டுகண்டென்னுள்ளம்**
**வாடும்இதுவென்னேஅன்னேஎன்னும்! (4)**

அவர்ஆடுகின்றபாம்பினைஅணிகலனாகஅணிந்தவர்.புலித்தோலைஉடையாகஉடுத்தியவர்.திருவெண்ணீற்றைஉடலெங்கும்பூசியவர்.அன்னையே!அவரதுவேடம்தான்என்னே!என்பாள்.

இவ்வாறு,அவரதுவேடம்இருக்கக்கண்டும்,என்மனம்அவரிடத்துப்பித்தாகிஅலைகின்றதே! அன்னையே!இதுவும்என்னகாரணம்பற்றியோ,அறியேனே!என்பாள்.

**நீண்டகரத்தர்நெறிதருகுஞ்சியர்**
**பாண்டிநன்னாடரால்அன்னேஎன்னும்**
**பாண்டிநன்னாடர்பரந்தெழுசிந்தையை**
**ஆண்டன்புசெய்வரால்அன்னேஎன்னும்! (5)**

அவர்நீண்டகைகளைஉடையவர்.அடர்த்தியானசடாபாரத்தைஉடையவர்.நன்மைதரும்பாண்டியநாட்டிற்குஉரிமைபடைத்தவர்.அன்னையே!என்பாள்.

நன்மைதரும்பாண்டியநாட்டிற்குஉரிமைபடைத்தவரானஅவர்,பலபக்கங்களிலும்அலைபாய்ந்துகொண்டிருந்தஎன்மனத்தைத்தமக்கேஅடிமையாக்கிக்கொண்டவர்.எனக்குஅன்பும்செய்யக்கூடியவர்.அன்னையே!என்பாள்.

**உன்னற்கரியசீர்உத்தரமங்கையர்**
**மன்னுவதென்நெஞ்சில்அன்னேஎன்னும்**
**மன்னுவதென்நெஞ்சில்மாலயன்காண்கிலார்**
**என்னஅதிசயம்அன்னேஎன்னும்! (6)**

அவர்,மனத்தால்நினைப்பதற்கும்இயலாத,அரியசிறப்புகளைப்பெற்றிருக்கும்உத்திரகோசமங்கைக்குஉரியவர்.அப்படிப்பட்டவர்என்நெஞ்சில்குடியேறியிருக்கும்காரணம்தான்என்ன,அன்னையே!என்பாள்

நாராயணனாலும்நான்முகனாலும்கண்டறியமுடியாதசிறப்பினைஉடையஅவர்,என்நெஞ்சில்குடியேறியிருப்பதுதான்என்னஅதிசயமோ,அன்னையே!என்பாள்.

**வெள்ளைக்கலிங்கத்தர்வெண்திருமுண்டத்தர்**
**பள்ளிக்குப்பாயத்தர்அன்னேஎன்னும்**
**பள்ளிக்குப்பாயத்தர்பாய்பரிமேற்கொண்டென்**
**உள்ளங்கவர்வரால்அன்னேஎன்னும்! (7)**

அவர்வெண்மையானபட்டாடையினைஉடுத்திஇருப்பவர்.திருநீறுபூசுவதால்வெள்ளையாகவிளங்கும்நெற்றியினைஉடையவர்.பள்ளியறைக்குப்பயன்படும்மேற்சட்டையினைஅணிந்திருப்பவர்.அன்னையே!என்பாள்.

பள்ளியறைக்குப்பயன்படும்மேற்சட்டையினைஅணிந்துகொண்டு,பாய்ந்துசெல்லும்குதிரையின்மீதுஏறிஎன்உள்ளம்கவர்பவரும்அவரே,என்அன்னையே!என்பாள்.

**தாளிஅறுகினர்சந்தனச்சாந்தினர்**

**ஆளெம்மைஆள்வரால்அன்னேஎன்னும்**

**ஆளெம்மைஆளும்அடிகளார்தம்கையில்**

**தாளமிருந்தவாறன்னேஎன்னும்! (8)**

அவர்தாளிக்கொடியினையும்அறுகம்புல்லினையும்உடையவர்.சந்தனச்சேற்றினைப்பூசிய வர்.அவரேஎன்னைஆளாகஆட்கொள்பவர்,அன்னையே!என்பாள்.

எம்மைஆளாகஆட்கொள்ளும்அந்தஅடிகளாரின்கையிலேதாளம்இருந்ததற்கும்காரணம்தா ன்யாதோ,அன்னையே!என்பாள்.

**தையலோர்பங்கினர்தாபதவேடத்தர்**

**ஐயம்புகுவரால்அன்னேஎன்னும்**

**ஐயம்புகுந்தவர்போதலும்என்னுள்ளம்**

**நையுமிதுஎன்னேஅன்னேஎன்னும்! (9)**

அவர்உமையவளைஒருபாகத்தேஉடையவர்.தவவேடத்தையும்பெற்றிருப்பவர்.பிச்சைக்கு ம்செல்லக்கூடியவர்.அன்னையே! என்பாள்.

பிச்சைபெறவந்தவர்,அங்கிருந்துஅகன்றுசென்றவுடன்,அன்னையே!என்உள்ளமும்நலிவ டையக்காரணம்தான்என்னவோ!என்பாள்.

**கொன்றைமதியமும்கூவிளமத்தமும்**

**துன்றியசென்னியர்அன்னேஎன்னும்**

**துன்றியசென்னியின்மத்தம்உன்மத்தமே**

**இன்றெனக்கானவாறன்னேஎன்னும்! (10)**

அவர்கொன்றைப்பூமாலையோடு,பிறைச்சந்திரனையும்ஊமத்தைமலரையும்கொண்டத லையினைஉடையவர்.அன்னையே!என்பாள்.

அவரதுதலையின்மீதுதங்கியிருக்கும்ஊமத்தமலரேஎனக்குஉன்மத்தத்தைக் (பித்தினை)கொடுத்தது. இதற்குக்காரணம்தான்என்னவோ,அன்னையே?என்பாள்.

**வினாக்கள்**

1. அன்னைப்பத்து - விளக்குக.
2. வேதமொழியர் - பாடல்கள்வழிஅறியலாகும்கருத்துகள்யாவை?
3. இறைவன்மீதுகாதல்கொண்டபெண்ணின்மனநிலையைவிளக்குக.

## முதற்பத்து – இரண்டாம்திருமொழி

### பெரியாழ்வார்

இவர்பெரியதிருவடியின்அம்சமாகஸ்ரீவில்லிபுத்தூரில்பிறந்தவர்.விஷ்ணுசித்தர்என்பதுஇவரதுபிள்ளைப்பெயர்.நந்தவனம்அமைத்துநறுமணம்மிக்கமலர்களைவிளைவித்துஅவைகளைமாலையாகதொடுத்துபெருமாளுக்குசாத்தும்பணியைமேற்கொண்டுஇருந்தவர்இவர். ஸ்ரீவல்லபன்என்றபாண்டியமன்னன்காலத்தவர்.
இவர்இயற்றியபிரபந்தங்கள்**திருப்பல்லாண்டு(11 பாசுரங்கள்)பெரியாழ்வார்திருமொழி(461 பாசுரங்கள்)**ஆகியஇரண்டும்ஆகும். எம்பெருமான்தன்அடியார்களிடத்துக்காட்டும்பரிவினுக்குத்தாயின்அன்பைஉவமைகூறுவர்.இம்மரபுக்குமாறாகப்பக்தன்தன்னைப்பரிவுடையதாயாகவும்இறைவனைத்தன்அன்பினைச்சொரிந்துவளர்க்கும்சேயாகவும்காண்பதுபுதுமைஆகும்.அவ்வகையில்பாவனையினால்காலத்தால்கண்ணனுக்குப்பிற்பட்டவரானஅவர்,அவன்பிறந்துவளர்ந்தஅந்தக்காலத்துக்கேசென்றார்.யசோதையாகமாறிஅவனைத்தொட்டிலில்இட்டுத்தாலாட்டினார்.அம்புலிகாட்டினார்.குழல்வாரினார்.பூச்சூட்டினார்.

### வண்ணமாடங்கள்

### கண்ணன்திருஅவதாரச்சிறப்பு

பாண்டியநாட்டிலுள்ளபதினெட்டுதிருமால்திருத்தலங்களில்திருக்கோட்டியூரும்ஒன்று.ஸ்ரீவல்லபபாண்டியனின்அரசபுரோகிதராகவும், அமைச்சராகவும்இருந்தசெல்வநம்பிஎன்பவர்,இவ்வூரைச்சேர்ந்தவர்.இவர்பெரியாழ்வாரின்நெருங்கியதோழர்.ஒருசமயம்செல்வநம்பியைபார்ப்பதற்குத்திருக்கோட்டியூர்வருகின்றார்பெரியாழ்வார்.அங்குகோயில்கொண்டிருக்கும்சௌமியநாராயணப்பெருமாளைஅவர்வணங்கினார்.அப்போதுஅவர்மனக்கண்ணிற்கு,அத்திருக்கோவில்நந்தகோபரின்மாளிகை

யாகவும்,அவ்வூர்ஆயர்பாடியாகவும்மாறின.அப்பெருமாள்கண்ணனாககாட்சியளித்தார்.இதைக்கண்டபெரியாழ்வார்,தானும்யசோதையாகமாறி,கண்டகாட்சியைவிளக்குகிறார்.

**1) வண்ணமாடங்கள்சூழ்திருக்கோட்டியூர்**
**கண்ணன்கேசவன்நம்பிபிறந்தினில்**
**எண்ணெய்சுண்ணம்எதிரெதிர்தூவிட**
**கண்ணன்முற்றம்கலந்தளராயிற்றே.**

அழகியவீடுகளால்சூழப்பட்டுள்ளதிருக்கோட்டியூரில்கேசவன்என்றதிருநாமத்தைஉடையவனும்குணங்களால்நிரம்பியவனுமானதிருமால்பிறந்தவீட்டில்வந்துதிருவாய்பாடியில்உள்ளவர்கள்கூடினர்.அவர்கள்பெருமகிழ்ச்சிஅடைந்தவர்களாய்எண்ணெயையும்,மஞ்சள்பொடியையும்,ஒருவர்மீதுஒருவர்தூவவே,அவ்விரண்டும்கீழேவிழுந்துஒன்றுசேர்ந்துகண்ணன்திருஅவதரித்தமாளிகையின்முற்றத்தைச்சேறாக்கிவிட்டன.

2)

திருவாய்பாடியில்உள்ளஆயர்கள்எல்லோரும்,தமக்குத்தலைவனானநந்தகோபனுக்குப்பிள்ளைபிறந்ததைக்கேட்டு,மிகுந்தமகிழ்ச்சியடைந்து,தாம்செய்வதுஇன்னதெனதெரியாமல்சிலர்ஓடுபவர்களும்,சிலர்எண்ணெய்சுண்ணம்கலந்ததனாலானசேற்றிலேவழுக்கிவிழுபவர்களும்,சிலர்ஆரவாரம்செய்பவர்களும்ஆனார்கள்.வேறுசிலர்,பிறந்தகுழந்தையைத்தேடினர்.இன்னும்சிலர்கண்ணன்எதிரேஇருக்கும்போதே,நமக்குத்தலைவன்எங்கேஇருக்கிறான்என்றுகேட்டனர்.மற்றும்சிலர்பாடினர்.சிலர்பறையடிக்க,அதற்கேற்பக்கூத்தாடினர்.இவ்வாறுஆயர்பாடியில்உள்ளவர்கள்ஆனார்கள்.

3)

நல்லகுணத்தைஉடையபுதல்வன்,தன்னைக்காப்பாற்றிக்கொண்டுபிறந்தபோது,பிள்ளையைப்பார்ப்பதற்கு,நந்தகோபர்மனையில்ஆயர்கள்புகுந்தனர்.பார்த்தவர்கள்வெளியேவந்தனர்.அவர்களில்,உடலமைப்புஇலக்கணம்தெரிந்தவர்கள்கண்ணனைப்பார்த்து,இப்பிள்ளைக்குசமமானவர்ஆண்களில்ஒருவரும்இல்லைஎன்பர்.திருவோணநட்சத்திரத்திற்குரியதிருமாலினுடையஉலகைஇவன்ஆளுவான்என்றும்அவர்கள்சொன்னார்கள்.

**4) உறியைமுற்றத்துருட்டிநின்றாடுவார்**
**நறுநெய்பால்தயிர்நன்றாகத்தூவுவார்**
**செறிமென்கூந்தல்அவிழத்திளைத்துஎங்கும்**
**அறிவழிந்தனர்ஆய்ப்பாடியாயரே.**

அந்தஆயர்களின்சிலர்,தங்களுக்குஏற்பட்டஅடங்காதபெருமகிழ்ச்சியால்,நெய்யும்,பாலும்,தயிரும்இருக்கிறஉறிபானையைஅறுத்துக்கொண்டுவந்துவீட்டின்முன்புறத்தில்உருட்டிவிட்டுஆடினர்.வேறுசிலர்,பிள்ளைக்குநலம்உண்டாகவேண்டும்என்றுநெய்,பால்,தயிர்களைமிகுதியாகத்தானம்செய்தனர்.மற்றும்சிலர்தங்களுடையமென்மையானகூந்தல்அவிழ்ந்துஅழியும்படிக்கூத்தாடினர்.இவ்வாறுஆயர்கள்எல்லாம்பேரானந்தநிலையில்செய்வதுஇன்னதென்றுஅறியாமல்,அறிவுஅழிந்துநின்றனர்.

5)

ஆயர்கள்உறியையும்,மழுஎன்னும்ஆயுதத்தையும்,பசுமேய்க்கும்கோலையும்,ஓலைப்பாயையும்உடையவர்கள்ஆவர்.அவர்கள்மகிழ்ச்சியினால்,தங்கள்பற்கள்வெளியேதெரியும்படிசிரித்துக்கொண்டு,நெருங்கிவந்துநின்று,பிள்ளைபிறந்தமகிழ்ச்சியினால்எண்ணெய்தேய்த்துக்கொண்டுநீராடினர்.

6)

ஒருநாள்கண்ணனுடையதாயார்யசோதைப்பிராட்டிகண்ணனைநீராட்டும்போதுவழக்கப்படியே,குழந்தையின்கையையும்,காலையும்மெல்லநீட்டிநிமிர்த்துசிறுமஞ்சளைப்பூசினாள்.பச்சிலைகளையும்,வாசனைப்பொருட்களையும்சேர்த்துக்காய்ச்சினநீரைக்கொண்டுநீராட்டினாள்.பின்னர்மஞ்சள்தேய்வையைக்கொண்டு,அக்குழந்தையின்நாக்கைவழித்தாள்.அப்போதுஅக்குழந்தையின்திறந்தவாயிலே,உலகம்ஏழினையும்கண்டாள்.

7)

யசோதைப்பிராட்டி,கண்ணனின்திருவாயிலேஎல்லாஉலகங்களையும்,கண்ணன்தந்தஞானக்கண்ணால்கண்டு,ஆச்சரியப்பட்டு,தன்அருகில்இருக்கும்பெண்களுக்கும்காட்ட,அவர்களும்கண்ணன்அருளால்ஞானக்கண்பெற்றுஎல்லாஉலகங்களையும்கண்டு,மிகுந்தபுகழையும்,நல்லகுணங்களையும்உடையமனிதர்களால்செய்யமுடியாதஆச்சரியமானசெய்கையைச்செய்கின்றான்.ஆதலால்இவன்இடைப்பிள்ளைஅல்லன்.அருமையானதெய்வமேஇப்படிநேரில்வந்துள்ளதுஎன்றுகொண்டாடிக்கூறினார்கள்.

**8) பத்துநாளும்கடந்தஇரண்டாம்நாள்**
**எத்திசையும்சயமரம்கோடித்து**
**மத்தமாமலைதாங்கியமைந்தனை**
**உத்தானம்செய்துஉகந்தனர்ஆயரே.**

பிறந்தகுழந்தைக்குபத்தாம்நாளிலோ,பன்னிரண்டாம்நாளிலோபெயரிடவேண்டும்என்பதுமரபு.கண்ணன்பிறந்தபன்னிரண்டாம்நாள்ஆயர்பாடிமுழுவதையும்அலங்கரித்துதிருநாமம்இடுவதுபற்றிஇப்பாசுரம்கூறுகிறது.

பன்னிரண்டாம்நாளன்று,எல்லாத்திசைகளிலும்,வெற்றிக்குஅறிகுறியானஆயர்பாடியில்தோரணங்களைநாட்டிஅலங்கரித்தனர்.கோவர்த்தனமலையைக்குடையாகஎடுத்துப்பிடித்த

கண்ணனை,நாமகரணம்செய்யவந்தஆயர்கள்,தம்தம்கைகளிலேஎடுத்துக்கொண்டுமகிழ்ந்தனர்.

9)

என்னருகில்இருக்கும்பெண்களே,நீங்கள்அனைவரும்பருவத்துக்குத்தகுந்தசெயல்களைச்செய்யும்பிள்ளைகளைப்பெற்றதால்ஒன்றும்குறைவில்லாதுஇருக்கிறீர்கள்.ஆனால்என்மகன்செய்வதைக்கேளுங்கள்என்றுயசோதைகூறுகின்றாள்.இப்பிள்ளையைத்தொட்டிலில்கிடத்தினால்,அத்தொட்டில்கிழிந்துவிடும்படிஉதைக்கிறான்.அக்கால்களுக்குவலிக்குமேஎன்றுஇவனைஎடுத்துஇடுப்பில்வைத்துக்கொண்டால்,
அந்தஇடுப்பைநழுவிமுறித்துவிடுகின்றான்.இதனால்இக்குழந்தைக்குநோவுண்டாகுமேஎன்றுமார்பிலேதழுவிக்கொண்டால்கால்களால்வயிற்றைஉதைக்கிறான்.இப்படிஇவன்தன்னுடையபருவத்திற்குத்தகாதசெயல்களைச்செய்வதைநினைத்து,நினைத்து,நான்மிகவும்இளைத்துவிட்டேன்என்கிறாள்.

**10) செந்நெலார்வயல்சூழ்திருக்கோட்டியூர்**
**மன்னுநாரணன்நம்பிபிறந்தமை**
**மின்னுநூல்விட்டுசித்தன்விரித்தஇப்**
**பன்னுபாடல்வல்லார்க்கில்லைபாவமே.**

இப்பாசுரத்தால்இப்பதிகத்தைக்கற்பதனாலாகும்பயன்கூறுகின்றார்.நெற்பயிர்நிறைந்திருக்கின்ற,வயல்கள்சூழ்ந்தவளமானதிருக்கோட்டியூரிலே,எப்போதும்கோயில்கொண்டிருக்கும்பெருமான்ஆயர்பாடியில்கண்ணனாகத்திருஅவதாரம்செய்தபோது,அங்குநடந்தகொண்டாட்டம்முதலியவற்றைப்பெரியாழ்வார்விரிவாகக்கூறினார்.புலவர்கள்இப்பாடல்களைசிறப்பித்துச்சொல்வர்.இவற்றைப்பொருளோடுநன்குஓதிஉணர்பவர்களுக்குப்பாவம்இல்லையாம்.

**வினாக்கள்**

1. பெரியாழ்வார் - குறிப்புவரைக

2. வண்ணமாடங்கள் - பாடல்கள்வழிஅறியலாகும்செய்திகளைதொகுத்துரைக்க

**நம்மாழ்வார்திருமொழி**

**ஐந்தாம்பத்து**

**ஐந்தாம்திருவாய்மொழி**

**1)எங்ஙனேயோஅன்னைமீர்காள்!என்னைமுனிவதுநீர்**
**நங்கள்கோலத்திருக்குறுங்குடிநம்பியைநான்கண்டபின்**
**சங்கினோடும்நேமியோடும்தாமரைக்கண்களோடும்**
**செங்கனிவாய்ஒன்றினோடும்செல்கின்றதுஎன்நெஞ்சமே!**

தாய்மார்களே!நீங்கள்என்னைக்கோபித்துக்கொள்வதுஎப்படி?அழகியதிருக்குறுங்குடிஊரில்எழுந்தருளியுள்ளநம்பியைநான்கண்டபிறகுஎன்னைமுற்றிலும்இழந்துவிட்டேன்.அவனுடையவில்லும்தண்டமும்வாளும்சக்கரமும்சங்கும்ஒன்றாகஎன்கண்முன்னேநின்றுஎன்னைக்கவர்ந்துவிட்டன.நான்என்செய்வேன்?

2)

என்னைக்கோபிக்காமல்என்நெஞ்சினாலேஅனுபவித்துக்காண்பீராக.தெற்குத்திக்கிலுள்ளசோலைகள்சூழ்ந்ததிருக்குறுங்குடிஎன்னும்திருத்தலத்திலேநம்பிஎழுந்தருளியுள்ளார்.அவரைநான்பார்த்தபின்னர்,மின்னுகின்றபூணுலும்,
குண்டலங்களும்,திருமார்பில்எழுந்தருளியுள்ளபிராட்டியாரும்,ஸ்ரீவத்சமும்,நிலைபெற்றஆபரணங்களும்நான்குதிருத்தோள்களும்அங்கங்கேவந்துநிற்கின்றன.

3) தாய்மாராகியநீங்கள்‘செயல்அற்றுநிற்பாள்,பின்அறிவுகலங்குவாள்,பின்வருந்துவாள்என்றுஎன்னைப்பார்த்துக்கோபிக்கிறீர்கள்.மலைபோல்மாடங்கள்உயர்ந்துகாணப்படும்திருக்குறுங்குடிநம்பியைநான்கண்டபின்னர்,(அப்பெருமானின்)

வெற்றிபொருந்தியவில்லும்தண்டமும்வாளும்சக்கரமும்சங்கமும்ஒருபடிப்படநின்றுகண்க ளில்தோன்றிநீங்கவில்லை.நெஞ்சுக்குள்ளேயும்நீங்கவில்லை.என்செய்வேன்?என்கிறாள்.

4)

என்கண்களில்கண்ணீர்எப்பொழுதும்இருந்துகொண்டேஇருக்கின்றதுஎன்றுதாயரும்கோ பிக்கின்றீர்கள்.சோலைகளால்சூழப்பட்டதிருக்குறுங்குடிநம்பியைநான்கண்டபின்,குளிர்ந் ததிருத்துழாய்மாலையும்,பொன்முடியும்,திருமேனியும்அழகாகத்தோன்றும்பட்டாடையும், அரைஞாணும்பாவியேனாகியஎன்னுடையபக்கங்களிலேயேஇருக்கின்றன.

**5) பக்கம்நோக்கிநிற்கும்நையும்என்றுஅன்னையரும்முனிதிர்**
**தக்ககீர்த்தித்திருக்குறுங்குடிநம்பியைநான்கண்டபின்**
**தொக்கசோதித்தொண்டைவாயும்நீண்டபுருவங்களும்**
**தக்கதாமரைக்கண்ணும்பாவியேன்ஆவியின்மேலனவே.**

‘பெருமான்வரும்திசையையேபார்த்தவண்ணம்இப்பெண்எப்பொழுதும்வருந்திக்கொண் டேஇருக்கிறாள்’என்றுதாய்மார்களே!என்னைக்கோபிக்கிறீர்கள்.புகழ்நிரம்பியதிருக்குறுங் குடிபெருமானைநான்கண்டுகாதல்கொண்டபிறகு,என்உயிரையேஅவனுக்குஎன்றுஅர்ப்ப ணித்துவிட்டேன்.அவன்திருஅதரஅழகுகோவைப்பழமாய்என்னைக்கொள்ளைகொண்டது .(அழியாஅழகனாகிய)அவன்நீண்டபுருவங்களும்தாமரைபோன்றதிருக்கண்களும்பாவியே னாகியஅடியேன்உயிரில்தங்கிஅதனைநலியச்செய்துவிட்டது.

6)

என்தாயானவள்,‘இவள்மேலும்நம்குடிக்குக்கொடியபழியைஉண்டாக்குபவள்என்றுசொல் லிக்கொண்டு,நம்பியைக்காணஇடம்தரவில்லை.சோலைகள்சூழ்ந்ததிருக்குறுங்குடிநம்பி

யைநான்கண்டபின்,அழகுடன்மிகவும்நீண்டிருக்கிறதிருமூக்கும்,தாமரைபோன்றதிருக்கண்களும்,கோவைக்கனிபோன்றதிருவாயும்,கரியதிருமேனியும்,நான்குதிருத்தோள்களும்என்நெஞ்சத்தின்இடத்தில்நிறைந்துவிட்டனஎன்கிறாள்.

7)

‘ஒருவராலும்போக்கமுடியாதபழியைஇவள்நம்குடும்பத்துக்குச்செய்கின்றவள்’என்றுஅன்னைநம்பியைநான்காண்பதற்குவிடமாட்டாள்.திருக்குறுங்குடிநம்பியைநான்கண்டபின்,அவன்திருமேனியின்அழகுவெள்ளம்என்நெஞ்சிலேவேர்விழுந்தது.ஒளிவெள்ளமானஅவன்திருமேனிஅழகுஎன்இதயத்தில்புகுந்துஅதனைநிறைத்துவிட்டது.அவன்கையில்சக்கரம்தாங்கியவனாய்க்கொடுக்கிறகாட்சிஅழகுமயமாய்விளங்கிஎன்இதயத்தைநிரப்பிவிட்டது.

8)

‘அவனைப்பிரிவதால்வந்ததளர்ச்சியாலேஎன்மகள்தன்கையுள்ளேமென்மையானதன்முகத்தைமறைத்துக்கொண்டுவருகிறாள்’என்றுதாய்மாராகியநீங்கள்கோபிக்கிறீர்கள்.மேகம்தவழும்மாடங்கள்சூழ்ந்ததிருக்குறுங்குடியில்எழுந்தருளியுள்ளநம்பியைநான்கண்டபிறகு,அவன்திருமேனியின்கண்விளங்கும்அங்கஅழகுஎன்முன்னேநின்றுஎன்னைநலிவுசெய்கிறது.செந்தாமரைபோன்றதிருக்கண்களும்கீழ்இடுப்பும்,சிறியஇடையும்,கட்டமைப்பானவடிவமும்,நீண்டுசெறிந்தகுழல்தாழ்ந்ததோள்களும்,பாவியேனாகியஎன்கண்முன்னேநின்றுஎன்னைக்கவர்ந்தன.

**9) முன்னின்றாய்என்றுதோழிமார்களும்அன்னையரும்முனிதிர்**
**மன்னுமாடத்திருக்குறுங்குடிநம்பியைநான்கண்டபின்**
**சென்னிநீண்முடிஆதியாயஉலப்பில்அணிகலத்தன்**
**கன்னல்பால்அமுதாகிவந்துஎன்நெஞ்சம்கழியானே.**

‘பெண்மைக்குஇலக்கணமாகப்பிறர்முன்னேநிற்காமல்வளர்ந்துவந்தநீஇப்போதுமுன்னே வந்துநிற்கின்றாய்’என்றுதாய்மார்களேஎன்னைக்கோபித்துப்பேசுகிறீர்கள்.மாடங்கள்சூழ்ந் ததிருக்குறுங்குடியில்திகழும்நம்பியைநான்கண்டபிறகுவேறுஎன்னசெய்வேன்?தலையில் திருமுடிதரித்தவனாய்,பலஅணிகலன்களைஅணிந்தவனாய்அழகனாய்விளங்கும்நம்பியா கியஎம்பெருமான்,கன்னலாகிப்பாலாகிஅமுதாகிவந்துஎன்நெஞ்சத்தைவிட்டுநீங்கமாட்டா தவனாய்உள்ளான்என்றவாறு.

10)

எல்லாருடையகாதலைக்காட்டிலும்மிகஅதிகமானதொருகாதலைஉடையவள்இவள்என்று, என்தாயானவள்,நம்பியைக்காணஅனுமதிக்கவில்லை.குற்றமற்றபுகழுடையதிருக்குறுங்கு டிநம்பியைநான்கண்டபிறகு,அவன்திருமேனிவடிவழகுஎன்நெஞ்சமெல்லாம்தங்கிவிளங்கு வதுவேறுயாராலும்அறியமுடியாது.நித்தியசூரிகள்யாவரும்கூட்டமாகவந்துகைகூப்பித் தொழுதுவணங்குகிறார்கள்.அவர்கள்திரண்டுஅனுபவிக்கிறஅழகுவெள்ளத்தின்நடுவேஈடு இணையற்றஒளிமயமானவடிவுடையஅவன்விளங்குகிறான்.அவனுடையஇந்தஅழகுநிறை ந்தஉருவமேஎன்மனத்துள்ளேதோன்றுகிறது.இதனைஎத்தனையேனும்அறிவுடையவர்களு க்கும்சுயமுயற்சியால்அறியமுடியாது.

**11) அறிவரியபிரானைஆழிஅம்கையனையேஅலற்றி**
**நறியநன்மலர்நாடிநன்குருகூர்ச்சடகோபன்சொன்ன**
**குறிக்கொள்ஆயிரத்துள்இவைபத்தும்திருக்குறுங்குடியதன்மேல்**
**அறியக்கற்றுவல்லார்வைட்ணவர்ஆழ்கடல்ஞாலத்துள்ளே.**

பெருமான்மக்கள்தங்கள்முயற்சியால்அறியஒண்ணாதபெருமைஉடையவன்ஆவான்.சக்கர த்தைஅழகியகையிலேதரித்திருப்பவன்.மணம்பொருந்தியமலர்களாகப்பாட்டுகளைத்தேடி,

நன்மைமிகுந்துதிருக்குருகூரிலேதோன்றியசடகோபராலேபாடப்பட்டஆயிரம்பாசுரங்களும்அந்தசர்வேசுவரனைப்பற்றியவை.அவற்றுள்திருக்குறுங்குடிமேல்கூறப்பட்டகுறிகளைக்கொண்டஇப்பத்துப்பாசுரங்களையும்அறியக்கற்றுவல்லவர்கள்,கடல்சூழ்ந்த இவ்வுலகில் வைணவர்களாகத்திகழ்கிறார்கள்.

**வினாக்கள்**

1. நம்மாழ்வார் - ஐந்தாம்பத்துபாடல்கள்உணர்த்தும்செய்திகளைத்தொகுத்துரைக்க.
2. இறைவனின்சிறப்பினைநம்மாழ்வார்எவ்வாறுகுறிப்பிடுகிறார்.

**மூன்றாம்பத்து – முதல்திருமொழி**

**இருந்தண்மாநிலம்**

**திருவயிந்திரபுரம்**

**திருமங்கையாழ்வார்**

இவர்சோழமண்டலம்திருவாலிநாட்டில்திருக்குறையலூர்எனும்ஊரில்பிறந்தவர்.திருமாலின்**சார்ங்கம்**என்னும்வில்லின்கூறாய்த்திருவவதாரம்செய்தார்.கலியன்என்பதுஇவரதுபிள்ளைத்திருநாமம்.இவர்**86 திருப்பதிகங்களைமங்களாசாசனம்செய்துள்ளார்.பெரியதிருமொழி,திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம்,திருவெழுகூற்றிருக்கை,சிறியதிருமடல்,பெரியதிருமடல்**ஆகியனஇவரதுஅருளிச்செயல்கள்ஆகும்.இவரதுபாசுரங்களில்திருமாலின்அவதாரங்களும்,அவற்றில்நிகழ்த்தியஅரும்பெருஞ்செயல்களும்நயம்படப்பாராட்டப்பட்டுள்ளன.ஏழுவிடைகளைஅடக்கியது,விளங்கனிஎறிந்தது,பேய்முலைஉண்டது,மருதிடந்தது,குன்றெடுத்தது,அன்னமாய்அன்றுஅங்குஅருமறைபயந்தது,அந்தணாளன்பிள்ளையைஅந்நாளளித்ததுமுதலியவற்றைக்குறிப்பிடலாம்.

**இளமை,செல்வம்,யாக்கை**என்றமூன்றின்நிலையாமையையும்நன்குணர்ந்துஅவற்றைப்பிறருக்குவற்புறுத்தியருளியபாசுரங்கள்நெஞ்சைஉருக்கும்தன்மைஉடையன.

**திருவயிந்திரபுரம்**

திருவயிந்திரபுரத்தைமங்களாசாசனம்செய்வதுஇத்திருமொழிஆகும்.திருவயிந்திரபுரம்குறிஞ்சியின்குணமும்,முல்லைநிலமேன்மையும்,நெய்தல்நிலத்தன்மையும்,மருதநிலத்தன்மையும்கூறப்பெற்றிருப்பதால்நானிலவளமும்பெற்றதிருத்தலம் என்பதுவிளங்கும்.

1) **இருந்தண்மாநிலம்ஏனம்-அதுஆய், வளை**

**மருப்பினில்அகத்துஒடுக்கி,**

**கருந்தண்மாகடல்கண்துயின்றவன்இடம்**

**கமலநல்மலர்த்தேறல்**

**அருந்தி,இன்இசைமுரன்றுஎழும்அளிகுலம்**

**பொதுளி,அம்பொழில்ஊடே**

**செருந்திநாள்மலர்சென்று,அணைந்துஉழிதரு**

**திருவயிந்திரபுரமே.**

பெரியபூமியைவராகவடிவெடுத்துகோரப்பற்களிடத்தேஅடக்கியவனும்,பெரியகடலில் யோகநித்திரை(அறிதுயில்)செய்தருள்பவனுமாய்உள்ளபெருமான்வாழும்இடம்எதுவென் றால்வண்டுகள்சோலைகளின்உள்ளேதாமரைமலரின்தேனைக்குடித்துஇனியஇசைபாடிக் கொண்டுசுரபுன்னைமரத்தினுடையபூவிலேபோய்ச்சேர்ந்துதிரிகின்றதிருவயிந்திரபுரம்ஆ கும்.

2)

ஒளிவீசும்சக்கரத்தைத்திருக்கையிலேஉடையவனும்,பிராட்டிநித்தியவாசம்செய்யும்திருமா ர்பைஉடையவனும்,நான்குவேதங்களின்பலபொருள்களும்தானேயாய்இருப்பவனுமானஎ ம்பெருமான்,வாழுமிடம்எதுவெனில்வண்டுகள்மலைப்பக்கத்தில்உள்ளகுருக்கத்திப்பந்தலி லிருந்துதம்பெண்வண்டுகள்தம்மிடம்வந்துசேருவதற்காகதாமரைமலரில்இருந்துகொண்டு தென்னாதெனாஎன்றுஇனியஇசைகளைபாடும்திருஅயிந்திரபுரம்ஆகும்.

3)

பிரளயகாலத்தில்எல்லாஉலகங்களையும்திருவயிற்றில்உட்கொண்டுஆலந்தளிரிலேதங்கி யஆச்சரியமானவனும்,தன்னைவணங்கியவர்க்குஉண்மையாகச்சேவைசாதிப்பவனும்ஆ

னதெய்வநாயகப்பெருமானுக்குஉறைவிடம்அப்பெருமானின்திருமேனிநிறமுள்ளமலையி
ன்அருகில்குருக்கத்திச்செடிகளோடும்செண்பகமரங்களோடும்தழுவியமுல்லைக்கொடிகள்
அசைவதும்,வயல்களில்தாமரைமலர்கள்செழித்துவளர்வதும்ஆன
(இயற்கைவளம்நிறைந்த)திருவயிந்திரபுரம்ஆகும்.

4)
பகைமையுடன்கறுவிக்கொண்டுஎதிரிட்டுவந்தஇரணியனதுமார்புஇருபிளவாகும்படிபிளந்துஒழித்துஅவனதுசிறந்தமகனானபிரகலாதன்ஆழ்வார்க்குஅருள்செய்தபெருமான்வாழும்இடமாவது,ஒன்றோடுஒன்றுநெருங்கிசாறுநிறைந்தகரும்பின்கழிகள்தடைசெய்துவானத்தைக்கிட்டிவளர்ந்திருக்கின்றன.வயல்களில்சேறுஉண்டாகிறது.அப்படிப்பட்டநீர்நிலங்கள்மிகுந்ததுதிருவயிந்திரபுரம்ஆகும்.

**5) ஆங்குமாவலிவேள்வியில்இரந்து**
**சென்றுஅகல்இடம்அளந்து,ஆயர்**
**பூங்கொடிக்குஇனவிடைபொருதவன்**
**இடம்பொன்மலர்திகழ்வேங்கை**
**கோங்கு,செண்பகக்கொம்பினில்**
**குதிகொடுகுரக்கினம்இரைத்துஓடி,**
**தேன்கலந்ததண்பலங்கனி**
**நுகர்தருதிருவயிந்திரபுரமே.**

மாவலியின்யாகசாலையில்வாமனனாகச்சென்றுமூவடிமண்யாசித்துப்பெற்றுஅவ்விடத்திலேயேஉலகம்முழுவதையும்அளந்துகொண்டவனும்,நப்பின்னைக்காகஏழுஎருதுகளையும்போர்செய்துமுடித்தவனுமாகியபெருமான்உறையும்இடமாவது,குரங்குக்கூட்டம்பொன்னிறமலர்கள்விளங்கும்வேங்கைமரம்,கோங்குமரம்,செண்பகமரம்என்பவற்றின்கொம்புகளில்

குதித்துக்கொண்டும்ஆரவாரம்செய்துகொண்டும்இங்குமங்கும்ஓடிக்கொண்டும்பலாப்பழங் களைத்தின்னும்.இப்படிப்பட்டவளமானசோலையைஉடையதுதிருவயிந்திரபுரம்ஆகும்.

6)

மந்தரைஎன்னும்பெண்ணுடையகொடியபேச்சினால்பிராட்டியோடுகாட்டுக்குளழுந்தருளிய மேகம்போன்றவடிவுடையபெருமானுக்குஇடமாவது,சந்திரன்தவழப்பெற்றபெரியமலையு ம்பெரியமதிலும்பக்கங்களில்சூழ்ந்திருக்கப்பெற்றதும்வண்டுகள்உலவும்சோலைகளால்சூ ழப்பட்டதுமானதிருவயிந்திரபுரம்ஆகும்.

7)

மின்னல்போல்இடையையும்,மடமைக்குணத்தையும்உடையபிராட்டிக்காக,சுவேலமலை யின்மீதுஅமைக்கப்பட்டிருந்தஇலங்கைக்குஅரசனானஇராவணனுடையமுடிகள்பத்தையு ம்பொடிசெய்தமிடுக்கைஉடையபெருமானுக்குஇடமாவது,மலையின்நிழலில்அன்னங்கள் தாமரைப்பூவாகியபடுக்கையில்தங்கள்பெண்அன்னங்களுடன்இனிதாகப்பொருந்திவாழ, அவற்றுக்குசாமரம்வீசுவதுபோலசெந்நெல்கதிர்கள்அசையும்வளமுள்ளதிருவயிந்திரமாகும்
.

**8) விரைகமழ்ந்தமென்கருங்குழல்காரணம்,**

**வில்இறுத்து,அடல்மழைக்கு,**

**நிரைகலங்கிட,வரைகுடைஎடுத்தவன்**

**நிலவியஇடம்– தடம்ஆர்**

**வரைவளம்திகழ்மதகரிமருப்பொடு**

**மலைவளர்அகில்உந்தித்**

**திரைகொணர்ந்துஅதனைசெழுநதிவயல்புகு**

**திருவயிந்திரபுரமே.**

வாசனைவீசும்கரியகூந்தலைஉடையபிராட்டிக்காகவில்லைமுறித்தவனும்,பெருமழைவந்தபோதுபசுக்கூட்டங்கள்கலங்கக்கோவர்த்தனமலையைக்குடையாகஎடுத்துஅவற்றைக்காத்தவனும்ஆகியபெருமான்மகிழ்ந்துஉறையும்இடமாவது,யானைகளின்தந்தங்களையும்மலையில்வளரும்அகில்மரங்களையும்அலைகளாலேதள்ளிக்கொண்டுவந்துசேருகிறஅழகியஆறுகழனிகளில்பாயப்பெற்றதிருஅயிந்திரபுரம்ஆகும்.

9)

கையிலேவேலாயுதத்தைஉடையதுரியோதனன்முதலியஅரசர்களின்கொடியபாரதப்போரில்அர்ச்சுனனுக்குத்துணையாகிஅவனுடையதேரிலேதன்கையில்கோல்பிடித்துநின்றஎம்பெருமானுக்குஇடமாவதுமலைச்சாரலில்வெற்றிலைக்கால்கள்கணுக்கள்தோறும்கிளைக்கின்றவெற்றிலைக்கொடிகள்மிகுதியாகவளரப்பெற்றதும்பாக்குமரங்களின்குருத்துகள்மணம்வீசப்பெற்றசாரலைஉடையதும்மீன்கள்துள்ளிவிளையாடும்ஆறானதுகழனிகளிலேபெருகப்பெற்றதுமானதிருவயிந்திரபுரம்ஆகும்.

**10) மூவர்ஆகியஒருவனை,மூவுலகு**
**உண்டுஉமிழ்ந்துஅளந்தானை**
**தேவர்தானவர்சென்றுசென்றுஇறைஞ்சத்,தன்**
**திருவயிந்தரபுரத்து**
**மேவுசோதியைவேல்வலவன்கலி**
**கன்றிவிரித்துஉரைத்த**
**பாவுதண்தமிழ்பத்துஇவைபாடிடப்**
**பாவங்கள்பயிலாவே.**

தான்ஒருவனேமும்மூர்த்தியாகஉருவெடுத்துமுத்தொழில்செய்பவனாய்மூவுலகங்களையும் பிரளயகாலத்தில்உட்கொண்டுபிறகுவெளிப்படுத்திபின்புதிரிவிக்கிரமன்ஆகிஅளந்தவனாய்தேவரும்அசுரரும்வந்துவணங்கும்படிதிருஅயிந்திரபுரத்தில்கோயில்கொண்டுள்ளபெருமானைக்குறித்துதிருமங்கைமன்னன்விரிவாகஅருளிச்செய்தஅழகியஇப்பத்துத்தமிழ்ப்பாசுரங்களையும்பாடியஅளவில்பாவங்கள்சேரமாட்டா.இத்திருமொழிகற்றார்க்குப்பலன்சொல்லித்தலைக்கட்டினாராயிற்று.

**வினாக்கள்**

1. திருமங்கையாழ்வார் - குறிப்புவரைக.
2. திருமங்கையாழ்வாரின்பெரியதிருமொழிபாடல்கருத்துகளைதொகுத்துரைக்க.

நாச்சியார் திருமொழி

**கண்ணனைப் பெறக் காமனைத் தொழுதல்**

**1) தைஒரு திங்களும் தரைவிளக்கித்**
**தண் மண்டலம் இட்டு மாசி முன்னாள்**
**ஐய நுண்மணல் கொண்டு தெரு அணிந்து**
**அழகினுக்கு அலங்கரித்து, அனங்கதேவா!**
**உய்யவும் ஆம்கொலோ? என்று சொல்லி**
**உன்னையும் உம்பியையும் தொழுதேன்**
**வெய்யது ஓர்தழல் உமிழ் சக்கரக் கை**
**வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே.**

மன்மதனே! தை மாதம் முழுவதும் தரையைச் சுத்தம் செய்து அலங்கரித்துக் குளிர்ந்த வட்டமான கோலம் போட்டு, மாசி மாத முதல் பருவமான வளர்பிறைக் காலத்தே அழகிய மணலாலேதெருவை அணி செய்தேன்.'நான் உய்வுபெறுவேனோ?' என்று கூறி உன்னையும் உன் தம்பி காமனையும் வணங்கி நோன்பு நோற்றேன்.வெம்மையான தீ உமிழும் சக்கரத்தை ஏந்திய திருவேங்கட நாதனுக்கு என்னை நீ அந்தரங்கக்கைங்கர்யம் செய்யும்படி விதிக்க வேண்டும்.

2)காமதேவா! வெண்பொடி மணலாலே பகவான் வரும் வழியை அலங்காரம் செய்த பின், கீழ்வானம் வெளுப்பதற்கு முன்னே துறையிலே நீராடினேன். உன் உதவியை நாடி, முள் இல்லாத சுள்ளிகளை நெருப்பிலிட்டு வேள்வி செய்து நோன்பு நோற்கிறேன். நீ, கடல் நிறத்திருமாலை இலக்காகக் கொண்டு, தேனொழுகும் பூக்களாகியஅம்புகளைத் தொடுத்து, அவனிடத்தே நான் சேரும்படி எய்ய வேண்டும்.

3)வேங்கட நாதனைப் பெறுவதற்காகக் காலை, பகல், மாலை ஆகிய மூன்று நேரங்களிலும் ஊமத்தம் பூவையும் முருக்கம் பூவையும் உன் காலில் போட்டு வணங்கி நோற்றேன்.'நீ பொய்யன்' என்று நான் நெஞ்சு கொதித்து வாயால் உன்னை வையாதபடி, கொத்தாகப் பூக்களை அம்பாகக் கொண்டு கோவிந்தன் என்னும் பெயரை இதயத்தில் எழுதி, வியக்கத்தக்க வேங்கடவன் ஆகிய விளக்கினிலே நான் புகும்படி செய்ய வேண்டும்.

4) தொன்றுதொட்டே பெருமை உடைய மன்மதனே! சுவர்களிலே உன் பெயரை எழுதி, சுறாமீன் வரையப்பட்ட துணிக்கொடிகளையும் குதிரைகளையும் சாமரங்கள் ஏந்திய பெண்களையும் கரும்பு வில்லையும் உனக்குக் காணிக்கையாக தருகிறேன். பருவம் நிரம்பாத சிறுவயதுமுதல், ஒருபடிப்பட்டு எழுந்த என் முலைகளைத் துவாரகா நாதனானகண்ணனுக்கே என்று முடிவு செய்து தொழுதேன். சீக்கிரம் என்னை நீ அவனிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

5)மன்மதனே! மேலுலகத் தேவர்களுக்கு என்று அந்தணர்கள் தங்கள் யாகங்களிலே கொடுக்கும் உணவைக்காட்டில் திரியும் நரி புகுந்து,முகர்ந்து எடுத்துக்கொள்ளல்தக்கதன்று. இதே போல், நானும் திருமாலுக்கன்றி, மனிதனுக்கு வாழ்க்கைப்படேன். சங்கு சக்கரங்களைத் திருமேனியில் தாங்கிய உத்தமனான திருமாலுக்கு என்றே எழுந்த என் முலைகள், மனிதர்களுக்கு என்ற பேச்சு உண்டானால், நான் உயிர் வாழ மாட்டேன்.

6)காமதேவா! காம நூலில் புலமை உள்ள அழகிய நல்ல இளையவர்களை முன்னிட்டுக் கொண்டு, நீ வரும் வழியிலே தினமும் எதிரே சென்று, பங்குனிப் பண்டிகை நாளன்று திருத்தமாக நோன்பு நோற்கின்றேன். சூல் கொண்ட மேகம்,காயாம் பூ, கருவிளைப் பூ ஆகியவற்றின் நிறமுடைய கமல வண்ணனின் திருமுகக் கண்களின் பார்வை என் மேல் விழ, நீ அருள் செய்ய வேண்டும்.

**7) காய் வுடை நெல்லொடு கரும்பு அமைத்து,**

**கட்டி அரிசி அவல் அமைத்து,**

**வாய் உடை மறையவர் மந்திரத்தால்**

**மன்மதனே! உன்னை வணங்குகின்றேன்**

**தேசம் முன் அளந்தவன் திரிவிக்கிரமன்**

**திருக்கைகளால் என்னைத் தீண்டும் வண்ணம்**

**சாய் உடை வயிறும் என்தட முலையும்**

**தரணியில் தலைப்புகழ் தரக்கிற்றியே.**

மன்மதனே! பசுங்காய் நெல்லையும் கரும்பையும் பரப்பி கருப்புக் கட்டி, அரிசி, அவல் ஆகியவற்றைச் சேர்த்து சமைத்ததைப் படைத்து, காமநூல் வல்ல அந்தணர் மந்திரம் ஓத நோன்பு செய்து உன்னை வணங்குகிறேன். உலகம் அனைத்தையும் அளந்த திரிவிக்கிரமன் திருக்கைகளால், ஒளியுடைய என் வயிற்றையும் மென்மையான முலைகளையும் தொடும்படி நீ அருள வேண்டும். உலகில் நெடுங்காலம் நிலைக்கும் இத்தகைய புகழை எனக்குத் தருவாயா!

**8) மாசு உடை உடம்பொடு, தலை உலறி,**

**வாய்ப்புறம் வெளுத்து, ஒரு போதும் உண்டு,**

**தேசு உடைத் திறல் உடைக் காமதேவா!**

**நோற்கின்ற நோன்பினைக் குறிக்கொள், கண்டாய்**

**பேசுவது ஒன்று உண்டு இங்கு எம்பெருமான்!**

**பெண்மையைத் தலை உடைத்து ஆக்கும் வண்ணம்**

**கேசவ நம்பியைக் கால் பிடிப்பாள்**

**என்னும் இப் பேறு எனக்கு அருள், கண்டாய்.**

ஒளியும் வலிமையும் உடைய மன்மதனே! அழுக்குப் படிந்த உடம்புடன் தலைமயிரை விரித்தவாறு, வாய் உதடுகள் வெளுத்துப்போக, ஒரு வேளை மட்டுமே

சாப்பிட்டு,நோற்கும், என் நோன்பினை நீ குறிக் கொள்ள வேண்டும். இப்போது நான் கூறுவதை கேள், பெண் தன்மையான என் இருப்பைத் தலைமை ஆக்கும்படி கேசவனானநம்பியை நான் கால் பிடிக்கும் பாக்கியத்தை எனக்கு நீ அருள வேண்டும்.

9) முக்காலங்களிலும் மனத்தால் உன்னைத் தொழுது தலையால் வணங்கித் தூய பூக்களைக் காலில் போட்டுத் துதிக்கின்றேன். பூமியைச் சுற்றி உள்ள கடல் போன்ற நிறமுடைய திருமாலுக்கு நான் குற்றமின்றிப் பணிசெய்து வாழப் பெறாவிட்டால், அழுது மனம் கலங்கி ‘அம்மா’ என்று அலறும்படி ஆகும். இந்தப் பாவம் உன்னையே சாரும். ஏர் உழுகிற காளையை நுகத்தடியில் தள்ளித் தீனிஇடாமல் விலக்கி விடுவது போல் என் நிலை ஆகிவிடும்.

10) கரும்பு வில்லும் மலர் அம்பும் கொண்ட மன்மதனின் கழல்கள் உள்ள இரு அடிகளிலும் ஆண்டாள்வணங்கினாள்.குவலயாபீடம் யானை அலற அதன் கொம்பை ஒடித்தவனும் பகாசுரப்பறவை வாயைப்பிளந்தவனும் ஆன மணிவண்ணனுடன் தன்னைச் சேர்க்குமாறு அவள் வேண்டினாள். மலை போன்ற மாளிகைகள் உள்ள புதுவை நகர்க்கோன் பெரியாழ்வார் மகளான கோதை அருளிய இத்தமிழ் மாலையைப் பாட வல்லவர், திருமால் அடி அடைவார்கள்.

**சிற்றில் சிதைக்க வேண்டாம் என்று வேண்டுதல்**

**11) நாமம் ஆயிரம் ஏத்த நின்ற**

**நாராயணா!நரனே! உன்னை**

**மாமி தன் மகன் ஆகப் பெற்றால்**

**எமக்கு வாதை தவிருமே**

**காமன் போதரு காலம் என்று பங்**

**குனி நாள் கடை பாரித்தோம்**

**தீமை செய்யும் சிரீதரா! எங்கள்**

**சிற்றில் வந்து சிதையேலே.**

நித்திய சூரிகள் ஆயிரம் திருநாமங்களைக் கூறி துதிக்கும்படி வீற்றிருக்கும் நாராயணனே! மனித வடிவங்களில் அவதரித்தவனே! எங்கள் மாமியானயசோதை தீம்பு செய்யும் உன்னை மகனாகப் பெற்றதால், நாங்கள் உன் குறும்பால் துன்புறுவதுதப்புமோ! பங்குனி மாதம் ஆதலால், மன்மதன் வரும் காலம் என்று பாதையை அலங்கரித்தோம். தீம்புகள் செய்யும் சிரீதரா! எங்களுடைய சிறு வீடுகளைச் சிதைக்காதே.

12) எங்கள் முதுகுகள் நொந்து போகும்படி இன்று முழுவதும் இருந்து கட்டிய இந்த சிறு வீட்டை ஆர்வத்துடன் உற்றுப் பார்க்கிறோம். இப்படிப் பார்த்துக் கொண்டிருக்கும் ஆசை அழியும்படி செய்யாதே! பிரளய காலத்தில் குழந்தையாய் மாறி,ஆலந்தளிரிலே கண் வளர்ந்த எங்கள் ஆதிப்பிரானே! உனக்கு எங்களிடத்தில் எக்காலத்தும் இரக்கம் ஏற்படாதது எங்களுடைய பாவமோ!

13) ஆழமான பிரளயகாலக் கடலிலே திருக்கண் வளர்ந்த சிங்கமே! யானையான கஜேந்திராழ்வானின் துன்பத்தைப் போக்கியவனே! உன்னைப் பார்த்து ஆசைப்படும் எங்களைக் கடைக்கண்ணால் விழித்து வதைக்காதே! நாங்கள்,வண்டல் உள்ள இடம் தேடிப் பொடி மணல்களைக் கொண்டு வந்து,வளைக்கைகளால் சிரமப்பட்டு இச்சிறு வீட்டைக் கட்டி உள்ளோம். அலைபொருந்திய பாற்கடலில் பள்ளி கொண்டவனே! இச்சிற்றிலைக் கலைக்காதே.

14) மழை பெய்யும் கருத்த மேகம் போன்ற நிறம் உடையவனே! உன் பேச்சும் செய்கையும் எங்களை மயக்கி பித்துப்பிடிக்கச் செய்கின்றன. உன் முகம் சொக்குப் பொடி போடும் மாய மந்திரமோ! தாமரைப்பூப் போன்ற கண்களை உடையவனே!“ இச்சிறுமிகள் பலவீனமான பிள்ளைகள் ” என்று பிறர் கூறுவதற்குப் பயந்து, நீ வருந்தும்படி நாங்கள் பேசவில்லை. எங்கள் சிறுவீட்டைச் சிதைக்காதே.

15) கள்ளத்தனம் கொண்ட கண்ணா! கேசவா! நாங்கள் வெண் மணற்பொடிகளாலே தெருவிலே யாவரும் வியக்கும்படி தெளித்துக் கட்டிய இச்சிறுவீட்டுக் கோலத்தை நீ அழித்தாலும், எங்கள் இதயம் உடைந்து உருகுமே அல்லாமல், உன்மேல் கோபம் கொள்ள மாட்டோம். காரணம் உன் கண்ணழகே. உன் முகத்தில் உள்ள கண்கள், பார்க்கும் கண்கள் அல்ல. எங்களை விழச்செய்யும் வலையாகஅன்றோ உள்ளன!

16) கடலில் அணை கட்டி, இலங்கை சென்று அதனைப்போர்க்களமாக்கி அரக்கர் குலத்தை முழுவதும் அளித்த வீரம் மிகுந்தவனே! சிறுவீட்டைஅழிப்பது போல வந்து, நீ எங்களிடத்தே செய்யும் செயல்களுக்கு கருத்து உண்டு.நாங்களோ, அதைக் கற்கவில்லை! மார்பகங்கள் கிளர்ந்து எழாத சிறுமிகளாகிய எங்களிடத்தே நாள்தோறும் வந்து துன்புறுத்தாதே! உன் நினைவு அறிவற்கு ஈடான பருவத்தை நாங்கள் அடையவில்லை.

**17) பேதம் நன்கு அறிவார்களோடு இவை**
**பேசினால் பெரிது இன்சுவை**
**யாதும் ஒன்றும் அறியாத பிள்ளைக**
**ளோமை நீ நலிந்து என் பயன்?**
**ஓதமா கடல் வண்ணா! உன் மண**
**வாட்டிமாறொடுசூழுறும்**
**சேதுபந்தம்திருத்தினாய்! எங்கள்**
**சிற்றில் வந்து சிதையேலே.**

அலைகடல் நிறமுடைய கண்ணா! நீ பேசும் கருத்தை அறிவாருடன் சொன்னால் உனக்குப் பயன் கிடைக்கும். அது உனக்கு இனிமையாகும்.யாதொன்றும் அறியாத பேதைப் பெண்களானஎங்களை நீ நலிவதால் என்ன பயன்? கடலின் மீது அணை

கட்டியவனே! எங்கள் சிறுவீட்டைச் சிதைக்காதே. உன் மனைவிமார்கள் மீது ஆணை இட்டோம்.

**18) வட்ட வாய்ச் சிறுதூதையோடு**

**சிறுசுளகும் மணலும் கொண்டு**

**இட்டமா விளையாடு வோங்களைச்**

**சிற்றில் ஈடழித்து என்ன பயன்?**

**தொட்டு உதைத்துநலியேல் கண்டாய்**

**சுடர்ச் சக்கரம் கையில் ஏந்தினாய்!**

**கட்டியும்கைத்தால் இன்னாமை**

**அறிதியேகடல்வண்ணனே!**

ஒளி பொருந்திய சக்கரத்தைக் கையில் ஏந்திய கடல்நிறக் கண்ணனே! வட்டமான வாயுடைய சிறிய பானையுடன் சிறிய முறத்தையும் மணலையும் கொண்டு விருப்பமுடன் விளையாடும் எங்கள் சிறுவீட்டைக் கலைத்துப் பயன்படாது அழிப்பதால் உனக்கு என்ன பயன்? கையால் தொட்டும் காலால் உதைத்தும் எங்களைநலியாதே. இதயம் கசந்து போய்விட்டால் கருப்புக்கட்டியும்இனிக்காது என்பதை அறிவாயன்றோ!

19) கோவிந்தா! உன் ஒரு காலால் பூமி முழுவதையும் தாவி அளந்து மற்றொரு காலால் பரமபதம் வரை ஓங்கி அளந்தாய். எங்கள் முற்றத்திலே புகுந்து உன் அழகிய முகம் காட்டிப் புன்சிரிப்புச் செய்தபடி, எங்கள் சிற்றிலையும் இதயத்தையும் அழிக்கலாமோ?இம்மட்டுமின்றி எங்களைப் பிடித்து உடம்போடு அணைத்துக்கொண்டால், பக்கத்தில் நின்று பார்ப்பவர்கள் என்னதான் கூறமாட்டார்கள்?

**20) *சீதை வாயமுதம் உண்டாய் எங்கள்***

***சிற்றில் நீ சிதையேல் என்று***

**வீதிவாய் விளையாடும் ஆயர்**

சிறுமியர் மழலைச் சொல்லை
வேத வாய்த் தொழிலாளர்கள் வாழ் வில்லி
புத்தூர் மன் விட்டு சித்தன்தன்
கோதை வாய்த் தமிழ் வல்லவர் குறைவு
இன்றி வைகுந்தம் சேர்வரே.

தெருவில் விளையாடும் இடைப்பெண்கள்,"சீதாதேவியின் வாய் அமுதம் பருகிய பெருமானே! எங்கள் சிற்றிலைச் சிதைக்காதே" என்று பேசியதாக ஆண்டாள் அருளினாள். வேதம் ஓதி, வைதிகத் தொழில் செய்யும் அந்தணர்கள் வாழும் ஸ்ரீவில்லிபுத்தூர் தலைவரான பெரியாழ்வாரின் மகள் கோதை வாயில் தோன்றிய இத்தமிழ்ப் பாசுரங்களை ஓத வல்லவர்கள் குறைவில்லாமல் வைகுந்தம் சேரப் பெறுவார்கள்.

**கண்ணனிடம் ஆடைகளைத் தரும்படி வேண்டுதல்**

**21) கோழி அழைப்பதன் முன்னம்**
**குடைந்து நீராடுவான் போந்தோம்**
**ஆழியஞ் செல்வன் எழுந்தான்**
**அரவுஅணைமேல் பள்ளிகொண்டாய்!**
**ஏழைமை ஆற்றவும் பட்டோம்,**
**இனி என்றும் பொய்கைக்கு வாரோம்**
**தோழியும் நானும் தொழுதோம்**
**துகிலைப்பணித்தருள்வாயே.**

ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டவனே! நாங்கள் இக்காலைப் பொழுதில் தண்ணீருக்குள் மூழ்கிக் குளிப்பதற்காக,கோழி கூவுவதற்கு முன்பேயே வந்துவிட்டோம். ஆயினும் உன் எண்ணத்துக்கு மாறாக, ஒற்றைச்சக்கரத்தேருடைய சூரியன் தோன்றிவிட்டான். உன்னாலே மிகவும் துன்பப்பட்ட நாங்கள் இனிமேல் என்றைக்கும் குளத்திற்கு வரமாட்டோம். நானும் தோழியும் உன்னைத் தொழுகின்றோம். தயவுடன் எங்கள் சேலைகளைத் தந்தருள வேண்டும்.

22) ஐயோ! இங்கே நடந்தது என்னே! மாயனே! நீ இப்பொய்கைக்கு எவ்வாறு வந்தாய்! தேன் சொட்டும் துழாய் மாலையைத் திருமுடியில் சூடிய திருமாலே! இனிய அமுதே! எங்களுக்குப் பாக்கியம் இல்லாததாலே, நீ விரும்பும் சேர்க்கைக்கு இசையோம். வித்தகப் பிள்ளையே அவசரப்படாதே!காளிய நாகத்தின் மீது ஆடியவா! நீ,குருந்த மரத்தில் வைத்துள்ள சேலைகளைக்கொடுத்தருள்வாய்.

23) வில்லால் இலங்கையை அழித்தவனே! இது என்ன சிறுபிள்ளைத்தனம்! எங்கள் இந்த நிலையைத் தாய்மார்கள் கண்டால், எங்களை மறுபடியும் சேர்த்துக் கொள்ளார்கள். எங்கள் ஆடைகளைப் பறித்துக் கொண்டதைத் தீங்கு என்று எண்ணாமல், பூத்த குருந்த மரத்தின் மேல் ஏறி நிற்கிறாய். நீ விரும்புவதைத் தருவோம். எங்களுடைய பட்டுச் சேலைகளைத் தந்தருள வேண்டும். ஊரில் உள்ளோர் காணாதபடி நாங்கள் போவோம்.

24) இலங்கையை அழித்த பெருமானே! பலரும் நீராடும் இந்த பொய்கைக் கரையில் நாங்கள் எங்கும் விழித்துப் பார்த்துப்பிறர்அறிவாரே என்று பயந்து, கண்ணீர்த்தாரைகள் பெருக, அடக்கமுடியாமல் வருந்துகிறோம்.எங்கள்இந்நிலையைப் பார்த்தும் கூட உனக்கு இரக்கம் ஏற்படவில்லையா? நீ குரங்குகளுக்கு அரசன் என்பதை அறிவோம். குருந்தின் மேலுள்ள சேலைகளைக் கொடு.

**25) காலைக் கதுவிடுகின்ற**
**கயலொடு வாளைவிரவி**
**வேலைப் பிடித்து என்னைமார்கள்**
**ஓட்டில் என்ன விளையாட்டோ?**
**கோலச் சிற்றாடைபலவும்**
**கொண்டு நீ எரியிராதே,**
**கோலம் கரிய பிரானே!**
**குருந்திடைக் கூறை பணியாய்.**

கறுத்த நிறமுடைய கண்ணனே!இப்பொய்கையில், கயல் மீன்களும் வாளை மீன்களும் கூடி, எங்கள் கால்களைக் கடிக்கின்றன. எங்களின் இத்துன்பத்தைத்தமையன்மார்கள் கேள்விப்பட்டால்,வேல்களைத் தூக்கியவாறு ஓடி வந்து உன்னைத் துரத்துவார்கள். பிறகு உன் விளையாடல் என்னவாகும்?ஆகவே, அழகிய எங்கள்சிற்றாடைகளுடன் மரத்தில் ஏறி இராமல், கீழிறங்கிக்குருந்த மரத்திலுள்ள சேலைகளைத் தந்துவிடு.

26) அகன்ற இப்பொய்கையில் உள்ள தாமரைத் தண்டுகள் எங்கள் கால்களைக் கடிப்பது விஷம் கொண்ட தேள் கொட்டுவது போல மிகவும் வேதனைப்படுகிறோம். குடக்கூத்து ஆட வல்லவனான அரசே! நீ செய்யும் தீம்புகளை விட்டு, எங்களுடைய பட்டாடைகளைத் தந்தருள்வாய்.

**27) நீரிலே நின்று அயர்க்கின்றோம்**
**நீதி அல்லாதன செய்தாய்**
**ஊரகம் சாலவும் சேய்த்தால்**
**ஊழி எல்லாம் உணர்வானே!**
**ஆர்வம் உனக்கே உடையோம்**
**அம்மனைமார் காணில் ஒட்டார்**
**போர விடாய் எங்கள் பட்டைப்**
**பூங்குருந்துஏறியிராதே.**

ஊழிக்காலத்தில் உலகங்களைக் காக்கும் உணர்வுடையவனே!நாங்கள் தண்ணீரிலே நின்று தளர்ந்து விட்டோம். நியாயமற்றவற்றைச் செய்யும் உன்னிடம் இருந்து தப்பி ஓட, எங்கள் ஊரும் வீடும் மிகவும் தூரத்தில் உள்ளன. ஐயோ! நீ எங்களை துன்புறுத்தினாலும், நாங்கள் உன்னிடத்தே அன்புடையோம். நாங்கள் உன்னைச் சேர்ந்திருப்பதைத் தாய்மார்கள் அறிந்தால் ஒப்புக்கொள்ளார். எங்கள் பட்டைத் தந்துவிடு.பூங்குருந்தில் ஏறிக்கொண்டு தீமைகளைச் செய்யாதே.

28) முன்னிரவிவெல்லாம் வம்பு செய்து விட்டுப் பின்னிரவில் தூங்கும் பூப்போன்ற கண்களை உடைய கண்ணா!ஆயப்பாடியில் உள்ள மாமிமார்களும், தாய்மார்களும் மற்றவர்களும் இங்கு வந்திருக்கிறார்கள். நீ செய்யும் தீம்பு தகுதியற்றது. இடையர்களின்

தலைவனான இளங்கொழுந்தே! உண்மையாக, உறுதியுடன் கூறுகிறோம். குருந்தமரத்து ஆடைகளைத் தந்துவிடு.

29) கம்சன் உன்னை அழிக்க வலை வீசிய காலத்தில், இருண்ட இரவில் இடம்மாறிப்பிழைத்தாய்.இன்றோ தண்ணீரில் நிற்கும் எங்கள் நெஞ்சம் வருந்தும்படி செய்கிறாய்.யசோதை பிராட்டியோ நீ பயப்படும்படிஅதட்டாமல், தீமையிலே வளரும்படி விட்டுவிட்டாள். வஞ்சனையாய் வந்த பூதனைப்பேயின் பாலை அருந்தி அவள் உயிரை உறிஞ்சியவனே!வெட்கமற்றவனே! சேலைகளைத்தா.

30) எங்கள் தலைவனான, கரிய பிரான் கண்ணன், கோபியர்களுடன் செய்த விளையாட்டை, ஆண்டாள் இனிய இசைப்பாட்டாக அருளினாள்.பொன்பூசிய மாடங்கள் உள்ள புதுவை நகர்க்கோன் பட்டர்பிரானின் திருமகளான கோதை அருளிய இவற்றைக் கற்க வல்லவர்கள் புகுந்து மாதவனுடன் கூடியிருப்பார்கள்.

**கூடல் இழைத்தல்**

**31) தெள்ளியார் பலர் கைதொழும் தேவனார்**
**வள்ளல் மாலிருஞ் சோலை மணாளனார்**
**பள்ளி கொள்ளும் இடத்து அடி கொட்டிடக்**
**கொள்ளுமாகில், நீ கூடிடு கூடலே.**

கூடலே!என்றும் தெளிந்திருக்கும் நித்திய சூரிகள் பலரால் கைகள் ஆர வணங்கப்படும் இறைவனான திருமால், வள்ளலாக, திருமாலிருஞ்சோலை மலையிலே எழுந்தருளி உள்ளான். இந்த அழகிய மணவாளன் பள்ளிகொள்ளும் இடமாகிய திருவரங்கத்தே அவன் திருவடிகளை நான் பிடிக்கும்படியாக அருள்வானோ!அவன் திரு உள்ளம் பற்றுவான் என்றால் நீ, கூடிக்காட்ட வேண்டும்.

32) கூடலே வாமனனாக அவதாரம் செய்தவன் காட்டையே வாழிடமாகக் கொண்டு திருவேங்கடத்திலும், திருவாய்ப்பாடி போன்ற கண்ணபுர நகரிலும் குறைவில்லாமல் ஆனந்தமும் அன்பும் மேலிட எழுந்தருளி உள்ளான். இவன் ஓடி வந்து என் கை பற்றி அணைத்துக் கொள்வானாகில் நீ கூடுக.

**33) பூ மகள் புகழ் வானவர் போற்றுதற்கு**
**ஆமகள் அணி வாணுதல் தேவகி**
**மா மகள் மிகுசீர் வசுதேவர்தம்**
**கோமகன் வரில், கூடிடு கூடலே.**

தாமரையில் தோன்றிய பிரமனும் புகழுடைய நித்திய சூரிகளும் போற்றத் தகுந்த உபயவிபூதி நாயகன், ஒளிமுகம் பெற்ற தேவகிக்கும் நற்குணங்கள் உடைய வசுதேவர்க்கும், ஆளுமை கூடிய மாண்புடன் மகனாகப் பிறந்தான்.இக்கண்ணன் என்னை அணைக்க வருவானாகில் கூடலே! நீ கூடிடு.

34) பயமே இயல்பான இடைச்சிகளும் அச்சமே அறியாத ஆயர்களும் பயப்படப்பூத்துயர்ந்தகடம்ப மரத்தின் மேலிருந்து, நீருக்குள் புகும்படி பாய்ந்து, பேறுபெற்ற காளிய நாகத்தின் மேல் ஆடிய நடனக்கலைஞன், கண்ணபிரான் வரக்கூடுமாகில், கூடலே நீ, கூடிடு.

35) நெற்றிப் பட்டத்தை உடைய மதம் மிகுந்த குவலயாபீட யானையை உதைத்துக் கொன்ற கண்ணன் மாட மாளிகை சூழ்ந்த மதுரை நகரிலே நம் வீடு தேடி, தெருவின் நடுவே வந்து நம்மோடு கூடுவானாகில், கூடலே! நீ கூடிடு.

36) என்னை அடையத் தீர்ந்த முடிவுடன் அவதரித்து, மருத மரங்கள் முறிந்து விழும்படித் தவழ்ந்த நடை கற்று,வஞ்சகக்கஞ்சனை வஞ்சனையாலே அழித்து, மதுரை நகருக்கு அரசன் போல் திகழ்ந்த கண்ணபிரான் வருவானாகில் கூடலே! நீ கூடிடு.

**37) அன்றுஇன்னாதன செய் சிசுபாலனும்**
**நின்றநீள் மருதும் எருதும் புள்ளும்**
**வென்றி வேல் விறல் கஞ்சனும் வீழ முன்**
**கொன்றவன் வரில், கூடிடு கூடலே.**

கூடலே! முன்பொருகால், தீமைகளையே செய்த சிசுபாலனும், இரட்டை மருதமரங்களாய் பாதையில் நின்றஅசுரர்களும், ஏழு காளைகளும், பறவை வடிவில் நின்ற பகாசுரனும், வெற்றிவேல் தாங்கிய பலம் மிகுந்த கம்சனும் அழியும்படி, வதம் செய்த கண்ணன் வரக்கூடுமாகில்,கூடிடுக.

38) ஆவலையும் அன்பையும் உடையவர்களுடைய உள்ளத்தை அன்றி வேறு எங்கும் தங்காத கண்ணன் மணம் சூழ்ந்த துவாரகை அரசன் ஆவான். கன்றுகளை மேய்த்துக் காத்து விளையாடிய கோபாலனாகிய இக்கண்ணன் வருவானாகில், கூடலே நீ கூடிடு.

39) பூணூல், பவித்திரம், தண்டு ஆகியவற்றுடன் குட்டையான பிரமச்சாரி வடிவம் கொண்டு முற்காலத்தில், மகாபலியின் வேள்விச்சாலை சென்று மேல் உலகங்களுடன், பூமி, கீழ் உலகங்களையும் ஒவ்வோர்அடியாலே அளந்து நின்ற திரிவிக்கிரமன் வருவானாகில், கூடலே! நீ கூடிடு.

**40) பழகு நான்மறையின் பொருளாய் மதம்**
**ஒழுகு வாரணம் உய்ய அளித்த எம்**
**அழகனார் அணி ஆய்ச்சியர் சிந்தையுள்**
**குழகனார் வரில், கூடிடு கூடலே.**

எம்பெருமான் எழுதாக் கிளவியாய்ப் பழகி வந்துள்ள அநாதியான நான்கு வேதங்களுக்கு உட்பொருள் ஆனவன். மதம் பெருக்கும் யானையான கஜேந்திராழ்வானின் துன்பம் நீக்கி உய்வித்தவன். என்னைத் தன் அழகாலே ஈர்த்து ஈடுபடுத்தியவன். அழகிய இடைச்சிகளின் உள்ளத்தில் குழைந்திருக்கும் இக்கண்ணன் வரில், கூடலே! நீ கூடிடு.

41) ஊடுதல், கூடுதல், குற்றங்களை உணர்த்துதல், முடிவில் கலத்தல் ஆகியவற்றில் பொருந்திய ஆய்ப்பெண்கள் இழைத்த கூடல் பற்றி அழகிய கூந்தலை உடைய ஆண்டாள் அருளினாள். இப்பத்துப் பாசுரங்களையும் ஓதுபவர்களுக்குப் பகவானை பிரிந்துபடும் பாவமில்லை.

**குயிலை வேண்டுதல்**

**42) மன்னு பெரும்புகழ் மாதவன் மாமணி**
**வண்ணன் மணிமுடி மைந்தன்**
**தன்னை உகந்தது காரணமாக என்**
**சங்கு இழக்கும் வழக்கு உண்டே?**
**புன்னை குருக்கத்தி ஞாழல் செருந்திப்**
**பொதும்பினில் வாழும் குயிலே!**
**பள்ளி எப்போதும் இருந்து விரைந்து என்**
**பவளவாயன் வரக் கூவாய்.**

புன்னை, குருக்கத்தி, கோங்கு, செருந்தி ஆகிய மரங்கள் நிறைந்த சோலைப் பொந்துகளில் வாழும் குயிலே! மணிகள் பதித்த திருமுடி சூடியவனாய்,நீல நிறத்துடன், நித்யகல்யாண குணங்களால் புகழ்பெற்ற திருமகள் கேள்வனை ஆசைப்பட்டது காரணமாக, என் கை வளையல்கள் கழன்று போக நியாய உண்டோ? என்செய்வேன்? பவளம் போன்ற வாயையுடைய என் நாயகன் வரும்படி, எப்போதும் அவன் திருப்பெயர்களைக் கூறி, விரைவில் நீ கூவுவாயாக.

43) தேன் துளிர்க்கும் செண்பகப் பூவைக்கோதி, மகிழ்ந்து இசை பாடும் குயிலே! கைங்கரியம் செய்ய அழைக்கும் வெண்மையான சங்கினை இடது கையில் ஏந்திய குற்றமற்ற தூயவனான திருமால், தன் உருவத்தை எனக்குக் காட்டவில்லை. ஆனால் அவன் என் இதயம் புகுந்து, என்னைத் தளரச் செய்து, நாள்தோறும் உயிரை உருக்கித் தத்தளிக்கச் செய்து வேடிக்கை பார்க்கிறான். நீ என்னருகே இருந்து மழலைச்சொல்லால் துன்புறுத்தாது, திருவேங்கடவன் வரும்படி கூவாய்.

44) பூக்கள் மலர்கிற சோலையில் புதிய வாசனை பரவவும் வரிவண்டுகள் 'காமரம்' என்னும் பண்ணைப் பாடக் கேட்டு, உன் பெடையோடு வாழும் குயிலே!மாதலியானவன் கோல்கொண்டு தேரோட்ட, மாயாவியான இராவணன் மீது அம்பு மழை தொடுத்து அவன் நடுத்தலையை அற்று விழும்படி செய்த தலைவனான எம்பெருமானின் வரவை எத்திசையிலும் காணேனே! நீ என் கருமாணிக்கம் வரும்படியாகக் கூவ வேண்டும்.

**45) என்பு உருகி இனவேல் நெடுங் கண்கள்**
**இமை பொருந்தா பலநாளும்,**
**துன்பக் கடல் புக்கு வைகுந்தன் என்பது ஓர்**
**தோணி பெறாது உழல்கின்றேன்**
**அன்பு உடையாரைப் பிரிவு உறுநோயது**
**நீயும் அறிதி குயிலே!**
**பொன் புரை மேனிக் கருடக்கொடி உடைப்**
**புண்ணியனைவரக் கூவாய்.**

குயிலே! பிரிவுத் துயரால் எலும்புருகி,வேல் கூட்டம் போன்று நீண்ட என் கண்கள் தூக்கமில்லாமல் மூடவே இல்லை. பல நாட்களாய்த்துன்பமாகிய கடலுள் அழுந்திய நான் வைகுண்டநானாகிய தோணியை அடையப் பெறாமல் பிரிவுக் கடலில் தடுமாறுகிறேன்.காதல் உடையார்கள், பிரிவால் அடையும் துன்பத்தை நீ அறியமாட்டாயா? அழகானதிருமேனி உடைய, என் நாயகன், கருடக்கொடி பெற்ற புண்ணிய மூர்த்தியை இங்கே வரும்படி கூவ வேண்டும்.

46) மெல்ல நடை போடும் அன்னங்கள் ஓடி விளையாடும் ஸ்ரீவில்லிபுத்தூரில் எழுந்தருளி உள்ளவனின் அழகிய திருவடிகளைக் காணும் ஆசையால் என் கயல் மீன்கள் போன்ற கண்கள் தூங்கவே இல்லை.ஓ குயிலே! உலகத்தை அளந்த அந்த திரிவிக்கிரமன் இங்கே வரும்படி நீ கூவு. நீ அவ்வாறு கூவினால், சோறும் பாலும் ஊட்டி வளர்த்த என் அழகிய கிளியை உன்னுடன் நட்புறச் செய்வேன்.

**47) எத்திசையும் அமரர் பணிந்து ஏத்தும்**
**இருடீகேசன் வலி செய்ய,**
**முத்து அன்ன வெண் முறுவல் செய்ய வாயும்**
**முலையும் அழகு அழிந்தேன் நான்**
**கொத்து அலர் காவில் மணித்தடம் கண்படை**
**கொள்ளும் இளங் குயிலே! என்**
**தத்துவனைவரக் கூகிற்றியாகில்**
**தலைஅல்லால் கைம்மாறுஇலேனே.**

பூக்கள் கொத்தாக மலரும் சோலையில், அழகிய இடத்தே உறங்கும் குயிலே! அகங்காரம் தொலைந்த தேவர்கள், எத்திசையும் வணங்கித் துதிக்கும் பெருமை உடைய இருடீகேசனான பகவான், தன்னை எனக்கு காட்டாமல் துன்பம் செய்கிறான். அதனால் நான், முத்துப்போன்ற பற்களும், சிவந்த உதடுகளும் முலைகளும் அழகு இழக்கும்படி,மாறுபட்டேன். தான் உளன் ஆகில் நான் உள்ளவளாகும் படியாய்ச் செய்யும் மூல காரணனை இங்கே வரும்படி கூவுவாய் ஆனால், என் ஆயுள் முழுவதும் என் தலையால் உன்னை வணங்கும் பிரதி உபகாரம் உடையேன்.

48) அழகிய குயிலே! அலை பொங்கும் பாற்கடலில் பள்ளிகொண்டவனைச் சேரும் ஆசையால், என் மார்புகள் பருத்துக்களித்து, உயிரை உருக்கித் துன்புறுத்துகின்றன. வெயில் படாமல் நிழலிலே மறைந்திருப்பதால், குயிலே! உனக்கு என்ன பயன்? சங்கு, சக்கரம், கதை தாங்கிய கைகள் உடைய பகவானை இங்கே வரும்படி நீ கூவினால், மிகவும் தர்மம் ஆவாய்.

49) இனிய பழங்கள் உள்ள மாந்தோப்பில் சிவந்த தளிர்களைக் கோதும் சிறிய குயிலே! சார்ங்க வில்லை வளைத்திழுக்கும் வலிய கைகளுடைய திருமால் வீரத்தில் காட்டும் சாமர்த்தியம் போலவே, காதல் ஊடலில் திறமை உடையவன்.“ பிரிந்தால் உயிர் தரியோம் ” என்று எங்களுக்குள் நாங்கள் செய்து கொண்ட ரகசிய வாக்குறுதியை மற்றவர்கள் அறியார்கள். ஆகவே, அவனை நீ சீக்கிரம் கூவுவாயாகில், அவன் இங்கு வந்தபின் நான் படுத்தும் பாட்டைக் காண்பாய்.

50) ஒளி பொங்கும் வண்டுகள் ஒலித்து இசைபாடும் சோலையில் வாழும் குயிலே! நான் கூறுவதைக் கவனமாகக் கேள். பசுங்கிளி நிறமுடைய ‘ஸ்ரீதரன்’ என்னும் வலையில் நான், சிக்கிக் கிடக்கிறேன்.இச்சோலையில் இனியும் நீ வாழ வேண்டும் என்று எண்ணினால், சங்குச்சக்கரப் பெருமானை இங்கு வரும்படி கூவி, என் கழன்ற பொன் வளையைத்தங்கும்படி செய். அல்லது அவன் உகந்த ஆபரணங்களைக் கொண்டு வந்து கொடு. இவை இரண்டில் ஒன்றாவது கட்டாயம் நீ செய்ய வேண்டும்.

**51) அன்று உலகம் அளந்தானை உகந்து**
**அடிமைக்கண் அவன் வலி செய்ய,**
**தென்றலும் திங்களும் ஊடறுத்து என்னை**
**நலியும் முறைமை அறியேன்!**
**என்றும் இக்காவில் இருந்திருந்து என்னைத்**
**ததைத்தாதே நீயும் குயிலே!**
**இன்று நாராயணனை வரக் கூவாயேல்,**
**இங்குத்தைநின்றும் துரப்பன்.**

மகாபலிசெருக்கில் மேலோங்கிய காலத்தில், தன்னை விரும்பாத அவன் தலையில், திருமால் தன் திருவடிகளை வைத்து உலகங்களை அளந்தான். பெற்றால் அன்றி உயிர்வாழ முடியாத கைங்கரியத்தை அன்றோ இவன் விஷயத்தில் நான் ஆசைப்பட்டேன். அவனோ வஞ்சனை செய்து விட்டான். தென்றலும் சந்திரனும் என்னை பிளந்து துன்புறுத்தும் நியாயத்தை அறியேன். ஓ குயிலே! நீ என்றும் இச்சோலையில் இருந்து இடைவிடாமல் என்னைத் துன்புறுத்தாதே!ஸ்ரீமன்நாராயணன் இங்கே வரும்படி இன்று கூவாவிட்டால் இங்கிருந்து உன்னைத் துரத்தி விடுவேன்.

52) வேல் போன்ற கண்ணழகும் பெண்மையும் நிரம்பிய ஆண்டாள், வானில் திருவடி நீட்டி உலகளந்த எம்பெருமானை விரும்பி " கருங்குயிலே! என் கடல் வண்ணனை வரும்படி கூவு " என்று பாடினாள். இசையுடன் நான்கு வேதங்கள் ஓதும் அந்தணர் வாழும் ஸ்ரீவில்லிபுத்தூர் பட்டர்பிரானின் மகளான கோதை அருளிய இவ்வாசகங்களை ஓதுபவர்கள் 'நமோ நாராயணாய' என்று கைங்கர்யம் செய்வர்.

**கனவிற் கண்ட திருமணத்தைத் தோழியிடம் கூறுதல்**

**53) வாரணம் ஆயிரம் சூழ வலஞ்செய்து**
**நாரணன் நம்பி நடக்கின்றான் என்று எதிர்**
**பூரண பொற்குடம் வைத்துப் புறம் எங்கும்**
**தோரணம் நாட்டக் கனாக்கண்டேன், தோழி! நான்.**

தோழீ! கல்யாண குணங்கள் நிறைந்த ஸ்ரீமந்நாராயணன், ஆயிரம் யானைகள் சூழ்ந்து வர,ஊர்வலமாக வருவதால் எதிரே, பொன்மயமான பூரண கும்பங்கள் வைத்து, நகர் முழுவதும் தோரணங்கள் நாட்டியிருப்பதாக, நான் கனவு கண்டேன்.

54) தோழீ! நாளைக்குத் திருமண முகூர்த்தம் என்று நிச்சயித்துக் கமுகம் பாளைகளுடன் அலங்காரம் செய்யப்பட்ட பந்தலில் சிங்கம்போன்ற நடையுடன் திருமகள் கேள்வன் ஆகிய கோவிந்தன் என்னும் காளை புகுவதை நான் கனவில் கண்டேன்.

**55) இந்திரன் உள்ளிட்ட தேவர்குழாம் எல்லாம்**
**வந்திருந்து என்னை மகட்பேசி, மந்திரித்து**
**மந்திரக் கோடி உடுத்தி, மணமாலை**
**அந்தரிச் சூட்டக் கனாக் கண்டேன், தோழீ! நான்.**

இந்திரன் அடக்கமான தேவர்கள் கூட்டம் இங்கு வந்து என்னைத் திருமணப் பெண்ணாகப் பேசிப் பெண் வீட்டாரும் பிள்ளை வீட்டாரும் கலந்து பேசித் தனித்தனியாகச் என்று முடிவு செய்து, வேத மந்திரத்தால் தூய்மையாக்கிய கூறைப் புடவையை உடுத்தச் செய்து துர்க்கையான நாத்தனார்,மணம் மிகுத்த மாலையைச் சூட்டக் கனவு கண்டேன் தோழீ!

56) தோழீ! வைதிகச் சடங்குகளில்வல்ல நல்ல அந்தணர்கள் பலரும் நான்கு திசைகளிலிருந்தும் தீர்த்தங்களைக் கொண்டு வந்து தெளித்து உயர்ந்த குரலில் மணமக்களுக்கு மங்களாசாசனம் செய்ய,பூக்கள் சூடிய புனிதமான கண்ணனுடன் என்னைச் சேர்த்து கங்கணம் கட்டக் கனவு கண்டேன்.

57) பருவத்தாலும் வடிவத்தாலும் அழகுமிகுந்த இளம்பெண்கள் சூரிய ஒளி போன்ற மங்கள விளக்கையும் பொன் கலசங்களையும் தங்கள் கைகளில் தாங்கியவர்களாய் எதிரே வரவும், மதுரை மன்னன் கண்ணன் பாதுகைகளை அணிந்தவராய் பூமி அதிர நடந்து புகுவதை கனவு கண்டேன் தோழீ!

58) தோழீ! மத்தளங்கள் கொட்டவும் வரியுடைய சங்குகளை ஊதவும் மைத்துனமை முறையுள்ள நம்பியான கண்ணன்,முத்து மாலைகள் தொங்க விடப்பட்ட பந்தலின் கீழே என் கைகளைப் பற்றி அருளக் கனவு கண்டேன்.

**59)வாய் நல்லார் நல்ல மறை ஓதி, மந்திரத்தால்**
**பாசிலை நாணல் படுத்துப் பரிதி வைத்து,**
**காய்சின மாகளிறுஅன்னான் என் கைப்பற்றி,**
**தீவலஞ் செய்யக் கனாக் கண்டேன்,தோழீ! நான்.**

தோழீ! உச்சரிப்பில் வல்லவர்களான வேதியர்கள் சிறந்த வேதத்தொடர்களை ஓதி, அந்தந்தச் சடங்குகளுக்கு உரிய மந்திரங்களாலே, பசுமையான தர்ப்பைகளையும் ஸமித்துகளையும் பரிதி வைத்து, சினமுடைய மதயானை போன்ற கண்ணன், என் கையைப் பிடித்துக்கொண்டு அக்னியைச் சுற்றி வருவதாகக் கனவு கண்டேன்.

60) தோழீ! இப்பிறவிக்கும் மேல்வரும் எல்லாப் பிறவிகளுக்கும் அடைக்கலமான பற்றுக் கோடாய். நமக்கு நாயகத் தலைவனாய் உள்ள நம்பியான நாராயணன், தன் செவ்விய திருக்கையால், எனது கால்களைப் பிடித்து அம்மியின் மேல் எடுத்து வைக்கக் கனவு கண்டேன்.

61) தோழீ! வில்லை ஒத்த புருவமும் ஒளி பொருந்திய முகமும் உடைய என் தமையன்மார்கள்வந்து, ஓம குண்ட நெருப்பைப் பாரித்து, என்னை அதன் முன்னே நிறுத்தி, அச்சுத்தனான கண்ணன் கைமேல் என் கையை வைத்துப் பொரிகளை அள்ளி நெருப்பிலே சேர்ப்பதைக் கனவு கண்டேன்.

**62)குங்குமம் அப்பிக் குளிர்சாந்தம் மடடித்து,**
**மங்கல வீதி வலஞ் செய்து, மணநீர்**
**அங்கு அவனோடும் உடன்சென்று, அங்குஆனைமேல்**
**மஞ்சனம் ஆட்டக் கனாக் கண்டேன்,தோழீ! நான்.**

தோழீ!ஓமப்புகை முன்னே இருந்த வெப்பம் நீங்கக் குளிர்ந்த குங்குமக் குழம்பை உடம்பில் பூசி, சந்தனத்தை நிறையத்தடவி, அங்குள்ள யானையின் மீது கண்ணனுடன் கூடி அமர்ந்து, திருமண அலங்காரம் மிகுந்த தெருக்களிலே, ஊர்வலம் வந்து, நிறைவாக, வாசனை நீரில், மஞ்சனம் ஆட்டுவதைக் கனவு கண்டேன்.

63) வேயர் குலத்தில் புகழ்மிக்க, ஸ்ரீவில்லிபுத்தூர்ப் பெரியாழ்வாரின் மகள் கோதை, தான் கண்ணனைத் திருமணம் செய்து கொண்டதாகக் கண்ட கனவை,

தூய தமிழிலே அருளினாள். இப்பத்துப் பாசுரங்களையும், பயில வல்லவர்கள் நல்ல குணங்களையுடைய குழந்தைகளைப் பெற்று மகிழ்வார்கள். பெண்கள் கண்ணனைப் போன்ற கணவன்மார்களைப் பெறுவார்கள்.

**திரிச்சங்கு அடைந்த திருமால் பேறு**

**64) கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?**
**திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ?**
**மருப்பு, ஒசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்**
**விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல், ஆழி வெண்சங்கே!**

கடலில் பிறந்த வெண்மையான பாஞ்சசன்னியச்சங்கே! குவலயாபீட யானையின் கொம்பை ஒடித்த கண்ணனின் உதட்டின் சுவையையும், வாசனையையும் பற்றி ஆசையுடன் உன்னிடம் கேட்டறிய விரும்புகிறேன். அவனுடைய,பவள உதடுகளில் பச்சைக் கற்பூர வாசனை வீசுமோ? தாமரைப் பூ மணம் வீசுமோ! இனிமையாய் இருப்பது எப்படி என்று எனக்குச் சொல்வாய்.

65) நல்ல சங்கே! உப்புக் கடலில் பிறந்த நீ, இறைவனை வெறுத்த பாஞ்சசனன் என்னும் அசுரன் உடலுக்குள் வளர்ந்து, இரண்டு இடங்களையும் கருதாமல்,ஊழிக்கால நிர்வாகனான திருமாலின் கைத்தலங்களில் குடி புகுந்து, தீய அசுரர்கள் அழிவுபட, முழங்கும் மேன்மை பெற்றாய்.

**66) தட வரையின் மீதே சரற்கால சந்திரன்**
**இடை உவாவில் வந்து எழுந்தாலே போல், நீயும்**
**வட மதுரையார் மன்னன் வாசுதேவன் கையில்**
**குடியேறி வீற்றிருந்தாய், கோலப் பெருஞ் சங்கே!**

உன் அழகுக்கும் மேலே திருமாலுக்கு அழகூட்டும் கோலம் உடைய சங்கே!சரற் காலத்தில் முழு நிலா நாளன்று பெரிய மலையிலே சந்திரன் உதயமாகி ஒளி விடுவது போலே, வடமதுரை அரசன் கண்ணன் திருக்கையில் நீயும் குடிபுகுந்து, உன் பெருமைகள் தோன்ற விளங்குகிறாய்.

67) வலம்புரிச்சங்கே! தாமோதரன் ஆகிய கண்ணன் கையில் சந்திர மண்டலம் போல,அவன் நாயகிகள் பிரியாதிருப்பதை ஒத்து, இடைவிடாது இருந்து, அவன் காதுகளில் மந்திரம் பேசுகிறாயா! இத்தகைய உன் செல்வத்துக்கு இந்திரனும் ஒப்பாக மாட்டான்.

**68) உன்னோடு உடனேஒரு கடலில் வாழ்வாரை**
**இன்னார் இளையார் என்று எண்ணுவார் இல்லைகாண்**
**மன் ஆகி நின்ற மதுசூதன் வாயமுதம்**
**பன்னாளும்உண்கின்றாய், பாஞ்சசன்னியமே!**

பாஞ்ச சன்னியமே! கடலில் உன் இனத்தைச் சேர்ந்த மற்ற சங்குகளை,‘இவர்கள் இப்படிப்பட்டவர்’ என்று மதித்துப்பேசுவார் இல்லையே! ஒரே கடலில் வாழ்ந்த உங்களுக்குள், நீ ஒருவன் மட்டும், உலக சக்கரவர்த்தியாய் விளங்கும் மதுசூதனின் வாயமுதத்தைப் பல நாட்களாய்ப்பருகுகிறாய்.

69) வலம்புரிச் சங்கே! கங்கை முதலிய தீர்த்தங்களில் நீராட மேற்கொள்ளும் துன்பங்கள் இல்லாமலே,அப்பலனைப் பெற்று விட்டாய். இரட்டை மருதமரங்களை முறித்துத் தள்ளிய கண்ணனின் கைத்தலத்தில் குடிகொண்ட நீ, அச்செங்கண்மாலின் வாய்த் தீர்த்தத்தில் நீராடும் பேறு பெற்றாயே!

70) சங்குகளின் அரசனான பாஞ்சசன்னியமே! அன்று மலர்ந்த செந்தாமரைப் பூவில் தேனைக்குடிக்கும் அன்னம் போல, சிவந்த கண்களையும் கருத்த

உடம்பையும் உடைய கண்ணனின் அழகிய கைத்தலத்தின் மீது ஏறி உறங்கும் உன் செல்வம் மிகவும் சிறந்தது அன்றோ!

**71) உண்பது சொல்லில் உலகு உலகளந்தான் வாயமுதம்**
**கண்படை கொள்ளில் கடல்வண்ணன் கைத்தலத்தே**
**பெண் படையார் உன்மேல் பெரும் பூசல் சாற்றுகின்றார்**
**பண் பல செய்கின்றாய், பாஞ்சசன்னியமே.**

பாஞ்ச சன்னியமே! உலகளந்த திருமாலின் வாய் அமுதத்தை நீ உண்கிறாய். நீ தூங்கும் இடமோ, கடல் நிறக் கடவுளின் திருக்கை. இப்படி உணவும் உறக்கமும் கண்ணனிடமே உனக்கு வாய்த்ததால், பெண் குலத்தவர் உன்னிடம் பொறாமை கொண்டு பூசல் இடுகிறார்கள்.பண்பல்லாத இக்காரியத்தை நீ செய்வது உனக்குத் தகுதியா?

**72) பதினாறாம் ஆயிரவர் தேவிமார் பார்த்திருப்ப**
**மது வாயில் கொண்டாற்போல் மாதவன்தன் வாயமுதம்**
**பொதுவாக உண்பதனைப் புக்கு நீ உண்டக்கால்**
**சிதையாரோ உன்னோடு? செல்வப்பெருஞ்சங்கே!**

பெரும் செல்வம் உடைய சங்கே!பதினாறாயிரம் தேவிமார்கள் கண்ணனின் வாயமுதம் பருகக் காத்திருக்கையில், நீ ஒருவனே புகுந்து, தேனைக் குடிப்பது போல, பருகலாமா? பகவான் அடியவர்கள் யாவருக்கும் பொதுவாக உள்ளதை, நீ மட்டுமே பெறலாமா! மற்றவர்கள் வேறு படமாட்டார்களா?

73) அழகிய ஸ்ரீவில்லிபுத்தூரில் புகழுடைய பட்டர்பிரானுக்குமகளான கோதை,பாஞ்சசன்னியசங்கை பத்மநாபனுடன் கிட்டிய சுற்றமாக்கிப் பாசுரங்கள் அருளினாள்.இப்பத்தையும் பயின்று எம்பெருமானைத்துதிப்பவர்கள், அவனுக்கு அணுக்கத் தொண்டர்கள் ஆவார்.

**மேகவிடு தூது**

**74) விண் நீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள்!**
**தெண்நீர் பாய் வேங்கடத்துஎன் திருமாலும் போந்தானே?**
**கண்ணீர்கள்முலைக்குவட்டிற் துளி சோரச் சோர்வேனைப்**
**பெண் நீர்மை ஈடழிக்கும் இதுதமக்கு ஓர் பெருமையே?**

ஆகாயத்தில் நீலநிற விதானம் விரித்தால் போல் விளங்கும் மேகங்களே! தெளிந்த அருவி நீர் கொட்டும் திருவேங்கடமலைத் திருமால் உங்களுடன் வந்தானோ! பிரிவுத் துயரால், என் மார்பக முனையில் கண்ணீர் சொட்டுமாறு வருந்தி அழுகிற என் பெண்மையின் உயர்வை அழிக்கிறானே!இச்செயல் அப்பெருமானுக்குப் பெருமை தரக்கூடிய ஒன்றா?

75) உயர்ந்த முத்துக்களையும் பொன்னையும் சொரிகின்ற பெரிய மேகங்களே! நீல நிறமுடைய திருவேங்கடமுடையான் என்னும் மேன்மையன், எனக்கு ஏதாவது செய்தி விடுத்திருக்கிறானா? விரக தாபமானதீ என்னுள் புகுந்து, கவ்வியதால், இரவு நடுயாமத்திலே, வீசும் தென்றல் காற்றின் கொடுமைக்கு இலக்காகி விட்டேன். அதனால் நலிந்து இங்கு இருப்பேனோ?

**76) ஒளி வண்ணம் வளை சிந்தை உறக்கத்தோடு இவை எல்லாம்**
**எளிமையால் இட்டு என்னை ஈடழியப் போயினவால்**
**குளிர் அருவி வேங்கடத்து என் கோவிந்தன் குணம் பாடி**
**அளியத்த மேகங்காள்! ஆவி காத்து இருப்பேனே?**

அருள்புரியும் மேகங்களே! பிரிவுத் துயரால், என் ஒளி, நிறம், உறக்கம் யாவும் போய்விட்டன. உதவிற்றஎன் எளிமையாலே, நான் குலைந்து போக, அவை நீங்கின. குளிர்ந்த அருவி கொட்டும் திருமலையில் உள்ள என் கண்ணனின் கல்யாண குணங்களைப் பாடி, அதுவே தாரகமாக, நான் என் உயிரைக் காத்திருக்க முடியுமா?

77) உங்கள் உடம்புகளில் மின்னலைத் தோன்றச் செய்யும் மேகங்களே! அந்த எம்பெருமான், என்னை விரும்பி, உடம்போடு மார்பு தழுவுவதற்கு, எனக்கு, ஆசை தினந்தோறும் உள்ளது. திருமகளான மங்கையைத் தன் மார்பிலே, கொண்டுள்ள திருவேங்கடமுடையானிடம் இதனைச் சொல்லுங்கள்.

78) திருமலையிலே தேன் மலர்கள் சிதறும்படி, கூட்டங் கூட்டமாக வானில் ஏறி மழைபொழிந்து வானையே விழுங்குவதுபோல் கிளறும் மேகங்களே! தசையுடன் கூடிய கூர்மையான நகங்களால் இரணியன் உடலைக் கீறி எறிந்து எம்பெருமான், என்னிடமிருந்து பறித்த, கைவளைகளை, அவன் திரும்பத்தருவான்ஆகில், என் அவல நிலையை அவனிடம் எடுத்துக் கூறுங்கள்.

79) நீரை மொண்டு மேலெங்கும் குளிர்ந்த மேகங்களே! மகாபலியிடத்தே சென்று யாசித்துப் பூமியைப் பெற்ற திரிவிக்கிரமன் எழுந்தருளியிருக்கும் திருவேங்கடமலையின் மீதேறிப் பரந்து மழை பொழிபவர்களே!உலங்கு என்னும் ஜாதி வகையைச் சார்ந்த கொசுக்கள் புகுந்து உண்ட விளாம்பழம், ஒன்றுமில்லாமல் போவது போல், என்னுள்ளேபுகுந்த பிரிவு என்னும் வியாதி, என் நலன்களை உண்டது.இத்துன்பத்தை அவனிடம் தெரிவியுங்கள்.

**80) சங்க மா கடல் கடைந்தான் தண்முகில்காள்! வேங்கடத்துச்**
**செங்கண்மால் சேவடிக்கீழ் அடிவீழ்ச்சி விண்ணப்பம்**
**கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பு அழியப்புகுந்து ஒருநாள்**
**தங்குமேல், என் ஆவி தங்கும் என்று உரையீரே.**

சங்குகள் உள்ள கடலைக் கடைந்தவனின் திருவேங்கட மலையில் பரவும் மேகங்களே! சிவந்த கண்களை உடைய திருமாலின் அடிக்கீழ்ச் செய்யும் விண்ணப்பத்தை அவனிடம் கூறுங்கள். அவன் அடியேனை ஒரு நாளாகிலும் அணைத்து,‘என் மார்பிற் பூசப்பட்ட குங்குமக் குழம்பு அழியுமாறு செய்தால் என் உயிர் நிலைக்கும்’.

81) திருவேங்கட மலையில் எழுந்த மழைக்காலக் கருமேகங்களே! அடியார்களுக்காகப் போர் செய்து வெற்றி பெறும் பகவானின் திருநாமங்களை நான்

பலபடியாகச் சொல்லி மழைக்காலத்தில் பழுத்து விழும் எருக்கம் பூப் போலத் தளர்ந்து விழுகிறேன்.பிரிவால் நீளும் இக்காலத்தில் அவன் ஒரு நாளாவது என்னுடன் பேசமாட்டானா?

**82) மத யானை போல் எழுந்த மாமுகில்காள்! வேங்கடத்தைப்**
**பதியாக வாழ்வீர்காள்! பாம்பு அணையான் வார்த்தை என்னே!**
**கதி என்றும் தான் ஆவான் கருதாது ஓர் பெண்கொடியை**
**வதை செய்தான் என்னும் சொல் வையகத்தார் மதியாரே?**

திருவேங்கடமே வாழிடமாகக் கொண்டு மதயானை போல் கிளரும் மேகங்களே! ஆதிசேஷனைப் படுக்கையாகக் கொண்டவனின் பேச்சுத்தான் யாது? எனக்குக் கதியாக உள்ள அவன், தன்னைக் காப்பவனாகக்கருதவில்லையா?“இவன் ஒரு பெண் கொடியைவதைத்தான் ” என்னும் பேச்சை உலகோர்கள் மதிக்க மாட்டார்களோ?

83) பக்தியில் தவறாத புதுவைக் கோன் பெரியாழ்வாரின் மகளாய், அழகிய முகமுடைய ஆண்டாள், ஆதிசேஷனைப் படுக்கையாகக் கொண்ட திருவேங்கடமுடையானை ஆசைப்பட்டு மேகத்தைத் தூது விட்டாள்.இப்பாசுரங்களை மனத்துக்கொண்டு ஓதுபவர்கள் திருமாலுக்கு அடிமை ஆவார்கள்.

**திருமாலிருஞ்சோலைப் பெருமானை வழிபடுதல்**

**84) சிந்துரச் செம்பொடிப் போல் திருமாலிருஞ்சோலை எங்கும்**
**இந்திர கோபங்களே எழுந்தும் பரந்திட்டனவால்**
**மந்தரம் நாட்டி அன்று மதுரக் கொழுஞ்சாறு கொண்ட**
**சுந்தரத் தோளுடையான் சுழலையில் நின்று உய்துங் கொலோ?**

திருமாலிருஞ்சோலை மலையில் எங்கும் பட்டுப்பூச்சிகள் சிவந்த சிந்தூரப்பொடிபோல் மேலெழுந்து பரவியுள்ளன.மந்தர மலையை நாட்டிப்பாற் கடலைக் கடைந்து, இனிய

அமுதம் போன்ற திருமகளைக் கைப்பிடித்த அழகிய தோளுடைய எம்பெருமான் வீசிய வலையில் இருந்து பிழைப்பேனோ?

85) யானைகள் தங்களுக்குள் போரிடும் திருமாலிருஞ்சோலை மலை அடிவாரத்தில்,அழகரின்புன்முறுவலைக் காட்டும் முல்லைகளுடன் படாக்கொடிகளும் பூத்துச் சிரிக்கின்றன. அவைகளின்ஏளனப் பேச்சைத் தாங்க முடியவில்லை. தோழீ! அவன் தோள் மாலைக்கு ஆசைப்பட்ட நான் படும் துயரை யாரிடம் கூறுவேன்!

**86) கருவிளை ஒண்மலர்காள்! காயா மலர்காள்! திருமால்**
**உருஒளி காட்டுகின்றீர், எனக்கு உய் வழக்கு ஒன்று உரையீர்**
**திருவிளையாடுதிண்தோள் திருமாலிருஞ்சோலை நம்பி**
**வரிவளை இற் புகுந்து வந்திபற்றும் வழக்கு உளதே?**

அழகானகருவிளைப் பூக்களே! பெரிய பிராட்டியாருடன் கூடியுள்ள பகவானின் நிறத்தைக் காட்டி என்னை வருந்தச் செய்கிறீர்களே! நான் உய்வு பெற வகை சொல்லல் ஆகாதோ! திருமகள் விளையாடும் திண்மையான தோள்களை உடைய அழகர் என் வீட்டில் புகுந்து என் வளைகளைப் பலாத்காரமாக கொண்டு போவது நேர்மையா?

87) பரந்த சோலையில் வாழும் குயில்களே! மயில்களே! காக்கணம் பூக்களே! புதிய களாப் பழங்களே! அழகும் மணமும் உள்ள காயம் பூக்களே! நீங்கள் ஒன்று சேர்ந்து ஐந்து பெரும் பாதகர்களைப் போலே என்னைநலிகிறீர்களே! திருமாலிருஞ்சோலைமலை அழகரின் நிறத்தை ஏன் நீங்கள் ஏறிட்டு கொண்டீர்கள்?

88) ஓங்கிய பூஞ்சோலைகள் சூழ்ந்த திருமாலிருஞ்சோலையில் நின்ற, சிவந்தகண்ணுடைய மேகம் போன்ற அழகரின் வடிவத்தை ஒத்துப் பூக்கள் மேல் தொங்கித் தங்கும் வண்டுக் கூட்டங்களே!அருகருகே இருக்கும் சுனைகளே!சுனைகளில் உள்ள தாமரைப் பூக்களே! எனக்குப் புகலிடம் காட்டுங்கள்.

89) மணம் மிகுந்த திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருளி உள்ள குணங்கள் நிறைந்த அழகருக்கு, அடியேன் நூறு தடாக்களில் வெண்ணெய்யையும், இன்னும் நூறு

தடாக்களில் அக்கார அடிசிலையும் மனத்தாலும் வாயாலும் காணிக்கையாக்குகிறேன். மார்பில் ஏறி அமரும் திருமகளின் நாதன் இன்று இவற்றைக் கொள்வானோ!

**90) இன்று வந்து இத்தனையும் அமுது செய்திடப் பெறில், நான்**
**ஒன்று நூறாயிரமாகக் கொடுத்துப் பின்னும் ஆளும் செய்வன்**
**தென்றல் மணம் கமழும் திருமாலிருஞ் சோலை தன்னுள்**
**நின்றபிரான் அடியேன் மனத்தே வந்து நேர்படிலே.**

மணம் கலந்து, தென்றல் வீசும் திருமாலிருஞ்சோலை மலைப் பெருமான் இன்று வந்து, காணிக்கையாக்கிய, வெண்ணெய்யையும் அக்கார அடிசிலையும் அமுதுசெய்வானாகில் அடியேன் நெஞ்சில் வசிப்பதாக எண்ணுவேன். மேலும் நூறாயிரம் தடாக்களாகஅமுது சமர்பிப்பேன்.பின்னும் கைங்கரியங்கள் செய்வேன்.

91) கறுத்த குருவிக் கூட்டங்கள், காலையில் எழுந்து, திருமாலின் வருகையைக் கூறி 'மருள்' என்னும் பண்பாடும். இவை,"சோலைமலைப் பெருமான்","துவாரகாபுரி நாதன்","ஆலிலையில் வளர்ந்தவன்" என்று பேசும்.

92) கோங்கு மரங்கள் பூக்கும் திருமாலிருஞ்சோலையில் கொன்றை மரங்கள் மேல் தொங்கும் அழகிய பொன் நிற மாலைகளுடன் நானும் பயனற்றுக் கிடக்கிறேன். திருமால் தன் அழகிய, பவள வாயில் வைத்து ஊதும் சங்கொலியையும் சார்ங்க வில்லின் ஓசையையும் கேட்கப் பெறுவது என்றைக்கோ!

93) சந்தனம், அகில் ஆகியவற்றைச் சுமந்து, கரைகளை அழித்தபடி ஓடும் நூபுர கங்கை என்னும் சிலம்பாறு உள்ள திருமாலிருஞ்சோலை அழகரை,வண்டு தங்கும் பூவணிந்த கூந்தலுடைய கோதை பாடினாள். இப்பத்துப் பாசுரங்களை ஓதுபவர்கள் திருமால் அடி சேர்வார்கள்.

**பிரிவுத்துயரில் வருந்தித் தரித்தல்**

**94) கார்க்கோடற்பூக்காள்!கார்கடல்வண்ணன் என்மேல் உம்மைப்**

**போர்க்கோலம் செய்து போர விடுத்தவன் எங்கு உற்றான்?**
**ஆர்க்கோ இனிநாம் பூசல்இடுவது? அணிதுழாய்த்**
**தார்க்கு ஓடும் நெஞ்சந்தன்னைப் படைக்கவல்லேன், அந்தோ!**

கருமையான காந்தள் மலர்களே! என்னுடன் போர் செய்ய உங்களை அனுப்பிய கறுத்த கடல் நிறத்திருமால் எங்கே இருக்கிறான்? உங்களால் துன்புறும் நான் இனி யாரிடத்தே முறையிடுவது? அவனுடைய திருத்துழாய் மாலை ஆசைப்பட்ட நெஞ்சுடையேன்!அந்தோ!

95) உயரத்தே பூத்துள்ள காந்தள் பூக்களே! மேல் உலகங்களைக் கடந்து, சுயம் ஜோதியாகப் பரமபதத்தில் எழுந்தருளியுள்ள வேதமுதல்வனின் வலக்கைச் சக்கரத்தின் ஒளிபோல் எரிக்காமல், என்னை, ஆத்மானுபவத்தை மட்டுமே விரும்பும் மாற்றார்கள் கூட்டத்தில் சேர்ப்பீர்களோ?

96) மணவாட்டி போன்ற கோவைக் கொடியே! உன் கனிந்த பழம் திருமாலின் பவளச் செவ்வாயை எனக்கு நினைவு படுத்தி, என் உயிரைத்தொலக்கிறது. கூடற்காலத்தில், அழகரின் திருவாய்ச் சேர்த்தியின் இனிமையால் என் கண்ணை மூடும்படி அச்சுறுத்தும்.பிரிவிலே விரகத்தாலே பயமுறுத்தும். வெட்கமற்ற பாவியேனுக்கு ஆதிசேஷனின் நாவுபோல இரண்டு சொற்கள் பிறக்கும்படி ஆயிற்று.

**97) முல்லைப் பிராட்டி! நீ உன் முறுவல்கள் கொண்டு எம்மை**
**அல்லல் விளைவியேல் ஆழி நங்காய்! உன் அடைக்கலம்**
**கொல்லை அரக்கியை மூக்கு அரிந்திட்ட குமரனார்**
**சொல்லும் பொய்யானால், நானும் பிறந்தமை பொய் அன்றே?**

கம்பீர நங்கையானமுல்லைப் பிராட்டியே!புன்சிரிப்பது போல் மலரும் நீ, உன்னை அடைக்கலம் அடையும் என்னைத் துன்புறுத்தாதே! பெண்மையின் எல்லை கடந்த சூர்ப்பனகையை மூக்கறுத்த இராமபிரான் கூறியவை பொய்யாகி விட்டால், பெரியாழ்வார் மகளாய் நான் பிறந்ததும் பொய் அன்றோ!

98) பாடுகிற குயில்களே! உங்கள் பாட்டு காதுகளுக்குக் கடூரமாக அன்றோ உள்ளது! திருவேங்கடமுடையான் எனக்கு அவனுடன் இருக்கும் வாழ்வைத் தந்தால், அப்போது வந்து பாடுங்கள். ஆடும் கருடனைக் கொடியாகஉடையவன் அருள்காட்டி, இங்கே வந்தால், உங்களை அழைத்து நானே உங்கள் பாடல்களைக்கேட்பேன்.

99) மயில் கூட்டங்களே! கண்ணனைப் போல் அழகாய் நடனம் ஆடும் உங்கள் அடிகளில் வணங்குகிறேன்.ஆடுவதை நிறுத்துங்கள். படமெடுத்து ஆடும் பாம்பைப் படுக்கையாய்ப்பற்பல காலமும் பள்ளிகொள்ளும் அழகிய மணவாளன் என்னை உங்கள் காலைப் பிடிக்கச் செய்து விட்டானே!

100) தோகைகளை விரித்து நடனம் ஆடும் மயில்ளே! உங்கள் கூத்தைப் பார்க்க என்னிடம் எக் கைமுதலும் இல்லை. குடக்கூத்து ஆடிய கோவிந்தன், தான் சுதந்திரன் என்று ஆளுமையைக் காட்டி, என் நாணம்,நிறம் முதலிய உடைமைகளைக் கவர்ந்தான். நீங்கள் ஏன் கூத்தாடிக் குலைக்கிறீர்! என்னைத் துன்புறுத்துவது உங்களுக்குத் தகுமோ?

**101) மழையே! மழையே! மண் புறம் பூசி உள்ளாய் நின்று**
**மெழுகு ஊற்றினாற் போல ஊற்று நல் வேங்கடத்து உள்நின்ற**
**அழகப்பிரானார் தம்மை என் நெஞ்சத்து அகப்படத்**
**தழுவநின்று என்னைத்தகைத்துக்கொண்டு ஊற்றவும் வல்லையே?**

ஓ! மேகமே! மேகமே!ஈரமண்ணை வெளியே பூசி, உள்ளே இருக்கும் மெழுகைச் சுட வைத்து வெளியே தள்ளுவது போலே, என்னை அணைத்து, அதற்குப்பின்என் நெஞ்சை உருக்கி, எம்பெருமான் தள்ளிவிட்டான். திருவேங்கட நாதன் என் நெஞ்சில் தோன்றுகிறபடியே தழுவிக்கொள்ள என்னை அவருடன் நெருங்கச் செய்து, மழை பொழியவல்லையோ!

102) ஓ! கடலே! கடலே! உன்னைக் கடைந்து கலக்கி, உன்னுள் புகுந்து,பிழிவான அமுதத்தை எடுத்தவன், என் உடம்பிலும் புகுந்து, என் உயிரை அறுக்கிறான். இம்மாயப் பிரானுக்கு என் துன்பங்களைச் சொல்ல, அவன் படுக்கையாகிய ஆதிசேஷனிடத்தே நீ சென்று கூற வேண்டும்.

103) என் நல்ல தோழியே! ஆதிசேஷன் மேல் பள்ளிகொள்ளும் நம்பெருமாள் திருமகள் கேள்வனான பெரிய செல்வர். பரம்பொருளானவர். மிகப்பெரியவர். நாமோ மிகவும் தாழ்ந்த மனிதர்கள். ஆகையால் அவனைப்பெற என் செய்வது!ஸ்ரீவில்லிபுத்தூர் பெரியாழ்வாருக்கு உகந்ததேவர் ஆதலால், அவரையே ஆச்சாரியராகக் கொண்டு பெறலாம். அவர் அவனை தம்மால் கூடிய வழிகளாலே அழைத்தால்,வரப்பெற்று நாம் அவனை வணங்கப்பெறுவோம்.

**திருவரங்கன் மேலுற்ற காதல்**

**104) தாம் உகக்கும் தம் கையிற் சங்கமே போலாவோ**
**யாம் உகக்கும் எம் கையில் சங்கமும் ஏந்திழையீர்!**
**தீ முகத்துநாகணைமேல் சேரும் திருவரங்கர்**
**ஆ! முகத்தை நோக்காரால் அம்மனே! அம்மனே!**

ஆபரணங்கள் அணிந்துள்ள மாதர்களே! விருப்பத்துடன் நான் போட்டிருக்கும் கைவளைகள், திருமால் தரித்துக்கொண்டுள்ள தம் சங்குக்கு ஒவ்வாதோ? தீ உமிழும் ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டுள்ள அரங்கநாதன் என் முகத்தைப் பார்த்து அருளவில்லையே! ஐயோ!எந்நிலை என்னாவது அந்தோ!

105) அழகான தாய்மார்களே! திருவரங்கன் எனக்கு அமுதம் போன்று இனியவர். அவருடைய குழல், வாய், கண், கொப்பூழ் ஆகிய யாவும் அழகு சிறந்து விளங்குவன. என்னுடைய தலைவரான அவர், என் கைவளையைக் கழன்று போகும் வளையாக ஆக்கிவிட்டார்.

106) பொங்குகின்ற கடலாலே சூழப்பட்ட இப்பூவுலகும், பரமபதமும் எந்தக் குறைபாடும் இன்றி அரசாளும் எம்பெருமான், தன் செங்கோலை வழுவாது செலுத்துபவராய்த் திருவரங்கத்தில் பள்ளி கொண்டுள்ளார்,அவர் என்னுடைய திண்மையான கோல் வளையையும் கொண்டார்.

**107) மச்சு அணி மாடமதில் அரங்கர் வாமனனார்**
**பச்சைப் பசுந் தேவர்தாம் பண்டு நீர் ஏற்ற**
**பிச்சைக்குறையாகி, என்னுடைய பெய்வளை மேல்**
**இச்சை உடையரேல்,இத் தெருவே போதாரே?**

மேல் மாடிகள், மாடங்கள், மதில்கள் உள்ள திருவரங்கத்தே எழுந்தருளிய அழகிற் சிறந்த தேவரான நம்பெருமாள் மகாபலி முன்னே வாமனனாகச் சென்று தண்ணீரைக் கையில் ஏந்தி பிச்சை பெற்ற குறையைத் தீர்ப்பதற்காக, என் கைவளையை விரும்பினாரோ? அவர் இத்தெரு வழியே எழுந்தருளுவாரோ?

108) அழகிற்சிறந்த வாமனனாய்க் கையில் நீரேற்று உலகங்கள் அனைத்தையும் அளந்து தனதாக்கிக் கொண்ட எம்பெருமான், நல்லவர்கள் வாழும் குளிர்ந்த திருவரங்கத்தே ஆதிசேஷன் மேல் பள்ளி கொண்டுள்ளார்.அப்பெரியபெருமாள் கைம்முதல் எதுவும் இல்லாத அடியேன் உடம்பைக்கொள்ளை கொள்வாரோ!

109) வயல்களில் காவிரி நீர் ஓடிப்பாயும் வளம் உள்ள திருவரங்கச் செல்வனார், அடியார்களாகிய யாவர்க்கும் எளியவராய், தன்முனைப்புடைய உயர்ந்தார்க்கு எட்டாதவராய் நான்கு வேதப் பொருளாய் விளங்குபவர். முன்பே அடியேன் கைப்பொருளைக் கொண்டதால், இப்போது உடலாகிய பொருளைக் கொண்டார்.

**110) உண்ணாது உறங்காது ஒலிகடலை ஊடறுத்துப்**
**பெண் ஆக்கையாப்புண்டு தான் உற்ற பேது எல்லாம்**
**திண்ணார் மதில் சூழ் திருவரங்கச் செல்வனார்**
**எண்ணாதே தம்முடைய நன்மைகளே எண்ணுவரே.**

திண்மையான மதில் சூழ்ந்த திருவரங்கச் செல்வனார், இராமனாக அவதரித்த பொழுது சீதாப் பிராட்டியின் திருமேனியில் கட்டுண்டு, உண்ணாமல், உறங்காமல் ஒலிக்கும்

கடலில் அணை கட்டித் தாம்பட்ட எளிமை எல்லாம் எண்ணாமல் என் பிரிவுத் துயரைத் தமக்குப் பெருமையாக எண்ணுகிறாரோ?

111) பண்டைக்காலத்தில் பாசி படர்ந்து கிடந்த, பூமி மாதாவுக்காக, அழுக்குடம்புடன் தண்ணீர் ஒழுகும் வெட்கமற்ற வராக வடிவம் கொண்ட திருமால், திருவரங்கத்தில் ஒளி திகழ உள்ளார். இவர் முன்பு 'உன்னைப் பிரியேன்' என்று சொன்னதை மறந்து பிழைக்க முடியவில்லை.

112) ருக்மிணியைக்கரம்பிடிப்பதாகத் திண்ணமாக எண்ணித் திருமண ஏற்பாடுகளைச் செய்து முடித்த சிசுபாலன் ஒளி இழந்து மேலே பார்த்துத் தளர்ந்த நேரத்தில், தன் கையை அவள் பிடிக்குமாறு செய்த கண்ணன், பெண்களைக் காக்கும் பெண்ணாளன் அன்றோ! இப்பெருமான் எழுந்தருளியுள்ள திவ்யதேசப்பெயர் திருவரங்கம் ஆகும்.

113) மனம்,மொழி, செயல் மூன்றும் ஒன்றுபட்ட செம்மை உடைய திருவரங்கநாதர் வாயால் அருளிய உண்மைத் தத்துவமான சரம சுலோகச் செய்தியை பெரியாழ்வார் கேட்டு அறிந்து ஊன்றி இருப்பார்.'தம்மை விரும்பியவர்களைத் தாமும் விரும்புவர்' என்னும் உலக மொழி பொய்யாகாதே! நீரே இதைப் பொய்யாக்காமல், என்னை உகக்க வேண்டும்.

**கண்ணனிடத்தே கொண்டு விடும்படி வேண்டுதல்**

**114) மற்று இருந்தீர்கட்குஅறியலாகா**
**மாதவன் என்பது ஓர் அன்புதன்னை**
**உற்று இருந்தேனுக்கு உரைப்பது எல்லாம்**
**ஊமையரோடு செவிடர் வார்த்தை**
**பெற்றிருந்தாளை ஒழியவே போய்ப்**
**பேர்த்து ஒரு தாய் இல் வளர்ந்த நம்பி**
**மற் பொருந்தாமற்களம் அடைந்த**
**மதுரைப் புறத்து என்னை உய்த்திடுமின்.**

நான் மாதவனிடத்தே கொண்டுள்ள காதலை எனக்கு எதிராக உள்ள உங்களுக்குக் கூறுவது,ஊமையும் செவிடனும் கூடிப் பேசுவது போல் உள்ளது. உடம்பு நோவப் பெற்ற தேவகியை விட்டு,யசோதைத் தாயிடத்தே வளர்ந்த கண்ணன் மல்யுத்த களத்தில் முற்பட்டு நின்று வென்றான். இந்த நம்பியின் நகரமான மதுரைப் புறத்தே, என்னைக் கொண்டு சேர்த்து விடுங்கள்.

115) நான் இனிமேல் வெட்கப்படுவதால் என்ன பயன்? நான்கு பக்கத்து அயலார்களும் என் நிலையைத் தெரிந்து கொண்டார்கள். காலம் தாழ்த்தாமல் இதற்கு வேண்டிய மருந்தென்ன என்று கண்டு என் விரகநிலை, கலவி நிலைக்கு முன்பான கன்னி நிலையை நான் பெறும்படி காக்க விரும்பினால், என்னை ஆய்ப்பாடிக்குக் கொண்டு சேருங்கள். வாமனனாய் வந்து திரிவிக்கிரமனாக வளர்ந்த அவனைக் கண்டால் நோய் நீங்கும்.

116) “தந்தை, தாய் உற்றார்களை விட்டுத்தன் மனம் போனபடி, இவள் தனியாகத் தெருவே புறப்பட்டாள்” என்னும் பழிவந்த பிறகு அதனைத் தடுக்க முடியாது. நானும் தனிவழியே போகாதிருக்க முடியாது. ஏனெனில், மாயன் கண்ணன் வந்து திருமேனி காட்டி இழுக்கிறான். வலுச்சண்டைக்கிழுத்துத் தீம்பு செய்யும் பிள்ளையைப் பெற்ற நந்தகோபருடைய இல்லத்துக்கு என்னை நடு இரவிலே கொண்டு போய்ச்சேருங்கள்.

**117) தந்தையும் தாயும் உற்றாரும் நிற்கத்**
**தனிவழி போயினாள் என்னும் சொல்லு**
**வந்த பின்னைப் பழி காப்பு அரிது**
**மாயவன் வந்து உருக் காட்டுகின்றான்**
**கொந்தளம் ஆக்கிப்பரக்கழித்துக்**
**குறும்பு செய்வான் ஓர் மகனைப் பெற்ற**
**நந்தகோபாலன் கடைத்தலைக்கே**
**நள்இருட்கண் என்னை உய்த்திடுமின்.**

அழகான கையிலே சக்கரத்தை ஏந்திய கண்ணனை அன்றி மற்றையோர் முகத்தில் விழியேன் என்று கூறுவது போலக் கச்சால் மறைக்கப் பெற்றுக் கண்மூடியுள்ள என் மார்பகங்கள், சிறிய மனிதர்களைப் பார்த்து வெட்கப்படும். தாய்மார்களே!இவற்றை நீங்களே காணுங்கள். கோவிந்தனை விட்டு மற்றவர் வீட்டுவாசல் போகா. ஆகவே, என்னுடைய இங்குள்ள வாழ்வைத் தவிர்த்து, யமுனை நதிக்கரைக்கு இட்டுச் செல்லுங்கள்.

118) தாய்மார்களே! என்னுடைய இந்த நோயை எப்படிபட்டவர்களாலும் தெரிந்து கொள்ள முடியாது. துயரம் கொள்ளாமல் நீங்கள் என்னை, காளிங்கன் தங்கிய சுனைக் கடம்ப மர உச்சி ஏறிப் பாம்பின் தலையில் நடனம் செய்த இடத்தே, அதன் கரைக்கு அழைத்துச் செல்லுங்கள். நீலக்கடல் நிறப்பெருமான் தன் கைகளால் என்னைத் தடவினால் நோய் போகும். இதுவே கை மேலே பயன் தரும் வழியாகும்.

119) கார்காலத்து மேகமும் கருவிளை, காயா, தாமரை ஆகிய பூக்களும் வந்து,இருடீகேசனிடத்தே நீ போ என்று கட்டாயப்படுத்துகின்றன. கண்ணன் பசுமேய்த்து, வேர்த்துப் பசியாலே வயிறு தளர்ந்து,'உணவு உண்ணும் நேரம் இது' என்று முனிவர் மனைவிமாரை எதிர்பார்த்திருந்த 'பக்தவிலோசனம்' என்னும் இடத்துக்கு என்னைக்கொண்டு சேருங்கள்.

120) மானம் கெட்டவளாய், என் உடல் நிறம் மாற, மனம் தளர்ச்சியடைய,வாய் வெளுத்து, உணவு வெறுத்து,உள் மெலிந்து போனேன். இவை நீங்க வேண்டுமானால், கடல்வண்ணனின் திருத்துழாய் மாலையைக் கொண்டு வந்து சூட்டுங்கள். அதனால் நோய் தணியும்.முடியாதாகில், பலதேவன் பிரலம்பாசுரனை எலும்புகள் உடையக் கொன்ற இடமாகிய பாண்டீரம் என்னும் ஆலமரத்தடிக்கு என்னைக்கொண்டு சேருங்கள்.

**121) கற்றினம் மேய்க்கிலும் மேய்க்கப் பெற்றான்**
**காடு வாழ் சாதியும் ஆகப் பெற்றான்**
**பற்றி உரலிடை யாப்பும் உண்டான்**
**பாவிகாள்! உங்களுக்கு ஏச்சுக்கொலோ?**
**கற்றன பேசி வசவு உணாதே,**

**காலிகள்உய்ய மழை தடுத்துக்**
**கொற்றக் குடையாக ஏந்தி நின்ற**
**கோவர்தனத்து என்னை உய்த்திடுமின்.**

கண்ணன் கன்று மேய்ப்பதையே தொழிலாகக்கொண்டான். காட்டிலே தங்கும் இடையர்கள் சாதியில் பிறந்தான். வெண்ணெயைத் திருடும்போழுது பிடிபட்டு உரலில் கட்டவும் பட்டான். எளிமையான எல்லையான இச்செயல்கள், பாவிகளான உங்களால் பழிக்கும்படி ஆயிற்றே! கற்றவற்றைப் பேசி, என்னிடம் வசை வாங்கிக் கொள்ளாமல், பசு மேய்த்துகண்ணன் குடையாகப் பிடித்த கோவர்த்தன மலைக்கு என்னைக்கொண்டு சேருங்கள்.

122) நான் வளர்த்த கிளி எப்பொழுதும் கூட்டில் இருந்து கொண்டு ‘கோவிந்தா’‘கோவிந்தா’ என்று கூவுகிறது. உணவு ஊட்டாது ‘உலகளந்தானே’ என்றுஎன் கோபத்தை காட்டினேன் ஆயில் உலகம் தானே என்று ஓங்கி கூவும்.இப்பெயர்களோ என் விரகத்தை அதிகப்படுத்தும். நாட்டில் பழியை அடைந்து உங்களுடைய பெயரையும் கெடுத்து, முகம் காட்ட முடியாமல் நிற்கலாகாது. ஆகவே மாடங்கள் உயர்ந்து தோன்றும் துவாரகைக்கு என்னைக்கொண்டு சேருங்கள்.

123) பொன் மாடங்கள் விளங்கும் ஸ்ரீவில்லிபுத்தூர் கோன் விஷ்ணுசித்தர் மகள் கோதை, தாழ்ந்த கூந்தலை உடையவள். மதுரை தொடக்கமாக, துவாரகை வரை கூறப்பட்ட தலங்களுக்குத் தன்னை உறவினர் கொண்டு சேர்க்கவேண்டுமாறு ஆண்டாள் கூறிய இந்த இசைப்பாடலை ஓதுபவர்கள் வைகுந்தத்தை வாழும் இடமாகப் பெறுவார்கள்.

**கண்ணன் அணிந்த ஆடை முதலியவற்றால்**
**வாட்டத்தைத் தணிக்க வேண்டுதல்**

**124) கண்ணன் என்னும் கருந்தெய்வம்**
**காட்சிப் பழகிக் கிடப்பேனைப்**

**புண்ணிற்புளிப்பெய்தாற் போலப்**
**புறம் நின்று அழகு பேசாதே,**
**பெண்ணின் வருத்தம் அறியாத**
**பெருமான் அரையில் பீதக**
**வண்ண ஆடை கொண்டு என்னை**
**வாட்டம் தணிய வீசீரே.**

கண்ணன் என்னும் கருத்த தெய்வத்துடன் பழகிய காட்சிகளை நினைத்து உயிர் வாழ விரும்பினால்,அதுவிரக வேதனையை அதிகமாக்குகிறது. தாய்மார்களே! நீங்கள் வேறாக நின்று கொண்டு புண்ணிலே புளிச்சாற்றை ஊற்றுவதுப் போல், நன்மைகளைப் பேசுவதாக அறிவுரை செய்ய வேண்டாம். இதற்குப் பரிகாரம், பெண்ணின் வருத்தம் அறியாத கண்ணனின் அரையில் சாத்திய பீதக ஆடை கொண்டு, என் வாட்டம் தீரவீசுவதே ஆகும். ஆகவே அவன் பீதாம்பரத்தை என்மேல் வீசுங்கள்.

125) பால்பாயும் தளிரான ஆலிலையிலே கண் வளர்ந்த திருமாலின் வலையிலே அகப்பட்டுள்ள என்னை வேலாயுதம் கொண்டு துளைப்பது போல உங்களுக்குத் தோன்றும் படியெல்லாம் பேசித் துன்புறுத்தாதீர்கள். இடைப்பிள்ளையாய்க் கையில் கோல் பிடித்துப் பசுக்களை மேய்த்த, திருக்குடந்தையில் பள்ளி கொண்டருளிய குடக்கூத்தன் கண்ணனுடைய, குளிர்ந்த திருத்துழாய் கொண்டு, மென்மையான என் கூந்தலில் சூட்டுங்கள்.

126) கம்சனைக் கொன்ற, வில்லை ஒத்த புருவம் உடைய கண்ணனின் கடைக்கண்ணாகிற சிறகுடைய அம்பாலே, என் இதயம் முழுவதும் வெந்து போய் நிலை தளர்ந்தேன். இவ்வாறு வருந்தும் என்னைப் பார்த்துப்“பயப்படாதே” என்று கூறாத அப்பெருமான் தான் அணிந்த வனமாலையை,வஞ்சியாமல் தந்தால், நீங்கள் அதைக் கொண்டு வந்து என்மார்பில் போட்டு, நெஞ்சு வெப்பம் போகுமாறு புரட்டுங்கள்.

**127) கஞ்சைக் காய்ந்த கருவில்லி**
**கடைக்கண் என்னும் சிறைக்கோலால்**
**நெஞ்சுஊடுருவவேவுண்டு**

**நிலையும் தளர்ந்து நைவேனை**
**அஞ்சேல் என்னான், அவன் ஒருவன்**
**அவன் மார்வு அணிந்த வனமாலை**
**வஞ்சியாதே தருமாகில்**
**மார்விற் கொணர்ந்துபுரட்டீரே.**

ஆய்ப்பாடி அனைத்தையும் தன் தீம்பால் கவர்ந்து, அனுபவிக்கும் கறுத்த காளையான கண்ணன், என் மனதைக் கவர்ந்து துன்புறுத்துவதால் நலிவுற்றுத் தளர்ந்து நொந்தேன். இவ்வுலகில் எனக்குத் தேறுதல் கூற யாரும் இல்லையே! தாய்மார்களே!ஆரா அமுதமான கண்ணன் திருவாயில் ஊறிக்கிடக்கும், அமுத நீரைக் கொண்டுவந்து நான் பருகும்படி செய்து, என் தளர்ச்சியை நீக்கப் பாருங்கள்.

128) நான் அழுதாலும், தொழுதாலும், கண்ணன் தன் உருவத்தை எனக்குக் காட்டவில்லை. உருவைக் காட்டாவிடிலும்,'பயப்படாதே' என்று கூடக் கூறவில்லை. இந்த ஒப்பற்ற தீம்பன் என்னுள் புகுந்து, நெருக்கி அணைத்து, சுற்றிலும் வளைத்துக் கொண்டு, போகாமல் இருக்கிறானே!பீலிக்குடைக் கீழ் பசுக்களின் பின்னே சென்ற,காதல் மிகுந்த கண்ணன் ஊதி வரும் புல்லாங்குழலின் துளைகளில்ஊறும் நீரைக் கொண்டுவந்து என் முகத்தில் தடவுங்கள்.

129) உலக மரியாதையோ குலைந்துவிட்டது. நந்தகோபன் மகன் என்று பெயர் பெற்ற, இரக்கமற்ற தன்னலம் பேணும் திருமாலால் நான் வஞ்சிக்கப்பட்டேன். கண்ணன் என்னும் காளை தன் கால் குளம்பாலே மிதித்து மிதித்துப் பிளவுபட்ட அபலையான நான்,இங்குமங்கும் அசையவும் வலிமை இல்லாமல் போனேன்.தீம்பனான கண்ணன் திருவடி பட்ட இடத்தின் பாத துளியையாவது கொண்டு வந்து, உயிர் போகா என் உடம்பில் பூசுங்கள்.

130) கருடனை வெற்றிக் கொடியாகக் கொண்ட திருமால் ஆட்சியை மீற இயலாத இவ்வுலகில், தாயான யசோதை, கண்ணனைப் பெற்று, வேப்பங்காய் போலே, கசக்கும்படி, வீணாக வளர்த்தாளே!அந்தத் தீம்பனை அன்றி வேறு ஒருவனை விரும்பும்

குற்றமில்லாத என் மார்புகளைக் குமாரனான அவன் அழகிய தோள்களுடன் சேரத்தழுவுமாறு,செய்து,அற்றுத்தீர்ந்த குற்றம் போகும்படி செய்யுங்கள்.

131) பிரிவால் நான் உங்களுக்குள்ளே உருகி நைந்தேன். ‘இவள் இருக்கிறாளா? இல்லையா?’ என்று விசாரிக்காமல் அலட்சியம் செய்யும் அவனிடம் நான் என்னை இழந்துவிட்டேன். பெண்களிடத்தில் குறும்பு செய்யும் கோவர்த்தனனைக் கண்டால்,என் முலைகளை வேருடன் பறித்து அவன் மார்பில் வீசி என் துயரத்தைப் போக்கிக் கொள்வேன்.

**132) கொம்மை முலைகள் இடர்தீரக்**
**கோவிந்தற்கு ஓர் குற்றேவல்**
**இம்மைப் பிறவி செய்யாதே**
**இனிப் போய்ச் செய்யும் தவம்தான் என்?**
**செம்மை உடைய திருமார்வில்**
**சேர்த்தானேலும், ஒரு ஞான்று**
**மெய்ம்மை சொல்லி முகம்நோக்கி**
**விடைதான் தருமேல் மிக நன்றே.**

பருத்து வளர்ந்த என் முலைகளின் துன்பம் போக, அந்தக் கோவிந்தனுக்கு அந்தரங்கத் தொண்டை இப்பிறவியில் செய்யாமல், அதன் பின் கிடைக்கும் பரமபதத்தில் என்ன தவம் வேண்டிக்கிடக்கிறது?இவ்வுடம்புடன் அணைய விரும்பும் என்னை, அவன் செம்மையான திருமார்பில் தழுவிக் கொண்டால் நல்லது.அன்றி, ஒரு நாளாவது என் முகம் பார்த்து உண்மை பேசி, வேண்டாம் என்றாலும் மிக நன்றே.

133) ஸ்ரீவில்லிபுத்தூர் நம்பி விஷ்ணு சித்தரின் மகளான கோதை வில்லையும் தோற்கடிக்கும் புருவம் உடையவள். தீம்பனாய் ஆய்ப்பாடியின்அணிவிளக்காகத் திகழ்ந்த கண்ணனைக் காதல் செய்து ஆற்றாமையுடன் அருளிய ஆண்டாளின் பாசுரங்களை ஓதுபவர்கள் துன்பக்கடலில் தத்தளியார்கள்.

**விருந்தாவனத்தில் கண்ணனைக் கண்டது கூறல்**

**134) பட்டி மேய்ந்து ஓர் காரேறு பலதேவற்கு ஓர் கீழ்க்கன்றாய்**
**இட்டீறுஇட்டு விளையாடி இங்கே போதக் கண்டீரே?**
**இட்டமான பசுக்களை இனிது மறித்து நீர் ஊட்டி**
**விட்டுக் கொண்டு விளையாட விருந்தாவனத்தே கண்டோமே.**

பலராமனுக்கு ஒப்பற்ற தம்பியாய்க் காவலைக் கடந்து திரியும் கறுத்த காளையான கண்ணன் மகிழ்ச்சியுடன் விளையாடி வருவதைக் கண்டீர்களா? பசுக்களை விருப்பத்துடன் பெயர் கூறி அழைத்து நீர் ஊட்டி,மேய்த்து விளையாடுவதை நாங்கள் விருந்தாவனத்தில் கண்டு வணங்கினோம்.

135) என்னைப் பிரிந்து வருந்தச் செய்த கண்ணன் ஆய்ப்பாடியை குறும்பால் கவர்ந்து திளைத்தவன்.வெண்ணெய் நாற்றமுடைய காளை போன்ற கோவர்தனனை நீங்கள் கண்டீர்களா? மின்னலும் மேகமும் கலந்தாற்போல் உடம்பில் வனமாவை விளங்குபவனைத் தோழர்கள் நடுவே விருந்தாவனத்தில் விளையாடக் கண்டோம்.

**136) மாலாய்ப் பிறந்த நம்பியை மாலே செய்யும் மணாளனை**
**ஏலாப் பொய்கள் உரைப்பானை இங்கே போதக் கண்டீரே?**
**மேலால்பரந்த வெயில்காப்பான் வினதை சிறுவன் சிறகு என்னும்**
**மேலாப்பின் கீழ் வருவானை விருந்தாவனத்தே கண்டோமே.**

பெண்கள் மேல் மோகமே வடிவு கொண்டு பிறந்ததோ என்னும்படியான அன்பையே காட்டும் மணவாளனாய், பொருத்தமில்லாத பொய்கள் கூறும் கண்ணனை இங்கே போகக் கண்டீரோ? மேலே பரவும் வெயில் படாமல் தடுக்கும் வினதை புதல்வன் கருடன் சிறகின் கீழ் எழுந்தருளும் பெருமானை விருந்தாவனத்தே கண்டோம்.

137) கறுத்த மேகத்தில் பூத்த தாமரை போன்ற கண்களாகிய கயிற்றில் கட்டி என்னை இழுத்துப் போகும் இறைவனைக் கண்டீர்களா? முத்துச் சட்டையைப் போர்த்தவனாய் ஒளிமிகுந்த பெரிய யானைக்குட்டி போல் வேர்வையுடன் விளையாடும் கண்ணனை விருந்தாவனத்தே கண்டோம்.

**138) மாதவன் என் மணியினை வலையிற் பிழைத்த பன்றிபோல்**
**ஏதும் ஒன்றும் கொளத் தாரா ஈசன் தன்னைக் கண்டீரே?**
**போர்த்த முத்தின் குப்பாயப் புகர் மால் யானைக் கன்றேபோல்**
**வேர்த்து நின்று விளையாட விருந்தாவனத்தே கண்டோமே.**

எனக்கு மணி போன்றவன் மாதவன். வலையில் இருந்து தப்பி ஓடும் பன்றி போல்,ஒருவர்க்கும் எட்டாமல், தான் எதுவும் கொடுக்காமல் எல்லாம் தன்னுடையதாய்க் கொள்ளும் இறைவனைக் கண்டீரே? பீதாம்பரம் தாழக்கறுத்த மேகக்குட்டி போல் வீதியிலே வருபவனை விருந்தாவனத்தில் கண்டோம்.

139) இரக்கம் என்பதை அறியாதவனாய், தனது கைச்சார்ங்க வில்லைப் போன்ற புருவ வட்டங்களாலே அழகு பெற்றவனாய், என்னுடன் பொருந்தாத கண்ணனைக் கண்டீரோ? உதயகிரியில் விரிகின்ற சூரியன் போல்,கறுத்த மேனியில் செம்மையான முகம் பெற்ற கண்ணனை விருந்தாவனத்தில் கண்டோம்.

140) பொருத்தமுடைய தலைவனாய், உடல் கறுப்பை போல், உள்ளமும் கறுத்து, நம் கருத்தைத் தப்பி நிற்கிற கறுத்த மேகம் போன்ற கண்ணனைக் கண்டீரோ? நற்பலன்களை விரும்புகிறவர்கள் வேண்டும் நட்சத்திர,கிரகக்கூட்டம் உள்ள வானம் போலே, தோழர்கள் கூட்டத்துடன் வருபவனை விருந்தாவனத்தில் கண்டோம்.

141) வெளுத்த பாஞ்சசன்னிய சங்கும், அருள்தரும் சக்கரமும் உடையவனாய்ப் பீதாம்பரம் அணிந்தவனான திருமாலைக் கண்டீரோ?மது மாந்திக் களிக்கும் வண்டுகள் கலத்தாற்போல், எங்கும் திருக்குழல்கற்றைகள் தோள்கள் மேல்மிளிர, விளையாடி வரும் கண்ணனைப்பிருந்தாவனத்தில் கண்டோம்.

**142) நாட்டைப் படை என்று அயன்முதலாத் தந்த நளிர் மாமலர் உந்தி**
**வீட்டைப் பண்ணி விளையாடும் விமலன் தன்னைக் கண்டீரோ?**
**காட்டைநாடித் தேனுகனும் களிறும் புள்ளும்உடன மடிய**
**வேட்டையாடி வருவானை விருந்தாவனத்தே கண்டோமே.**

உலகுகளைப் படைப்பதற்காகப் பிரம்மன் முதலானவரைப் படைத்துக் குளிர்ந்த தாமரை மலரைக் கொப்பூழில் வீடாக உண்டாக்கிப் படைத்தல் காத்தல் முதலியவற்றை விளையாட்டாகக் கொண்ட விமலனைக்கண்டீரோ?தேனுகன், குவலயாபீடம், பகாசுரன் ஆகியோரைக் கொன்றவன். காட்டில் சென்று வேட்டை ஆடிவருவதை விருந்தாவனத்தே கண்டோம்.

143) பருத்த கால்களைப் பெற்ற கஜேந்திரனுக்கு அருள்செய்த பரமனான திருமாலை இவ்வுலகில், ஸ்ரீ பிருந்தாவனத்திலே கண்டதைப் பெரியாழ்வார் திருமகள் ஆண்டாள் பாசுரங்களாகஅருளினாள். இவற்றைப் பிறவி நோய்க்கு மருந்தாகக் கொண்டு,பயின்று வாழ்பவர் திருமாலின் திருவடிகளில்பொருந்தி என்றும் பிரியாமல் இருப்பார்கள்.

**வினாக்கள்**

1. நாச்சியார் திருமொழி - நூல் சிறப்பினை எழுதுக.
2. ஆண்டாள் கண்ணனை அடைய காமனைத் தொழும் நிலையை விளக்குக.
3. கூடல் இழைத்தல் - குறிப்பு வரைக.
4. ஆண்டாள் குயிலை வேண்டி நிற்கும் நிலை யாது?
5. மேக விடு தூது - கருத்துக்களை தொகுத்துரைக்க

**குணங்குடிமஸ்தான்சாகிபுபாடல்கள்**

**பொறைநிலை**

குணங்குடிமஸ்தான்இராமநாதபுரம்மாவட்டம்குணங்குடிஎன்றஊரைச்சார்ந்தவர்.தந்தை நைனாமுகமது.தாய்பாத்திமா.இவருக்குபெற்றோர்இட்டபெயர்**சுல்தான்அப்துல்காதிர்**என் பதாகும்.காலம்1788 முதல் 1835.இவருக்குத்**தொண்டியார்**என்றபெயரும்உண்டு.இவர்சிறுவயதிலேயேசித்திவாய்க்க ப்பெற்றவர்.**ஷாஷாகிபிடம்**தீட்சைவாங்கினார். 17 வயதில்துறவுபூண்டார். மனத்தைஒருநிலையில்நிறுத்துவதும்பொறுமையினால்எண்ணினஎண்ணத்தைஒருஎண்ண மாகக்கொண்டுதரிக்கின்றஉண்மைநிலையைஉடையதிருவருள்கிடைக்கமனமிரந்துவேண் டுவதுஆகும்.

**1) முன்னையேமூட்டுமூட்டென்றுமூலக்கனலை**
**மூட்டிவைத்தருள்புரியவும்**
**முன்வைத்தகாலையும்பின்வாங்கிடாமலெனை**
**முன்னேற்றியருள்புரியவுஞ்**
**சென்னிமீதேந்தியான்றெண்டனிட்டுய்யவுஞ்**
**சீர்பாதமருள்புரியவும்**
**தெட்சணாமூர்த்தமாய்நின்றுதரிசனம்தந்து**
**தீட்சைவைத்தருள்புரியவுஞ்**
**சட்டமுனிமுதலானநாதர்க்களடியினுஞ்**
**சரணமிடவருள்புரியவும்**
**வன்னிநடுவணையானதவராஜசிங்கமே**
**வரவேண்டுமென்றனருகே**
**மாகுணங்குடிவாழுமென்னகத்தீசனே**
**மவுனதேசிகநாதனே.**

அக்கினியில்நடுவணையில்இருக்கின்றநவராஜசிங்கமே!மகத்தாகியகுணங்குடிஎன்னும்தி வ்வியஇடத்தில்எழுந்தருளியிருக்கின்றஎன்னுடையஅகத்தின்கண்ணுள்ளஅகத்தீசரனே! மௌனஆசிரியனே!முன்னமேமுட்டுமுட்டுஎன்றுமூலாதாரகனலைமூட்டிவைத்துஅருள்புரி யவும்,முன்வைத்தகாலைப்பின்வைக்காமல்என்னைத்தொடர்ந்துவரஅருள்புரியவும்,தலை யின்மேல்கையைவைத்துதொண்டஞ்செய்துஉய்வதற்குஉன்னுடையத்திருவடிகளைஅருள் புரியவும்,தெட்சணாமூர்த்தமாயிருந்துதரிசனம்கொடுத்துதீட்சைவைத்துஅருள்புரியுவும்,சந் நிதானத்தின்கண்ணேசரணம்சரணம்என்றுநான்நமஸ்காரம்செய்யஅருள்புரியவும்,சட்டமு னிவர்கள்போன்றநாதர்களுடையதிருநகரிலும்சரணமிடுவதற்குஅருள்புரியவும்என்அருகில் எழுந்தருளிவரவேண்டும்.

**2) மனந்தனைசமர்ப்பொருதகுதித்தேறக்கொடிபோட**
**வாடம்பரமாட்டவரவேண்டும்**
**சாட்டியில்லாதுபம்பரமாட்டவல்லமை**
**தனைதந்துனருள்புரியவுஞ்**
**சரவாள்பிடித்தச்சுமட்டமேவிட்டுச்**
**சமர்ப்பொருதவருள்புரியவுங்**
**கோட்டைவாயிற்படிகடந்தலங்கத்திற்**
**குதித்தேறவருள்புரியவுங்**
**கொடிமரங்கைக்கொண்டுஜயமாகியென்கைக்**
**கொடிப்போடவருள்புரியவும்**
**ஆட்டுமோர்சக்கரமுமோயாமலாடவா**
**டம்பாம்மருள்புரியவும்**
**அகிலாண்டகோடிகளனைத்தையுநினைத்தபடி**
**பாட்டென்றுனருள்புரியவும்**
**மாட்டோமெனாமலேதவராஜசிங்கமே**
**வரவேண்டுமென்றனருகே**
**மாகுணங்குடிவாழுமென்னகத்தீசனே**
**மவுனதேசிகநாகனே!**

தவராஜசிங்கமே!

மகத்தாகியகுணங்குடிஎன்னும்திவ்வியஇடத்தில்எழுந்தருளியிருக்கின்றஎன்னுடையஅகத்

தின்கண்உள்ளஅகத்தீசரனே!
மௌனஆசிரியனே!சாட்டையில்லாதபடிபம்பரம்ஆட்டவல்லமையைக்கொடுத்துஉன்னுடையஅருள்புரியவும்,பாணத்தையும்வாளையும்பிடித்துஅச்சமட்டமேவிட்டுசண்டைசெய்யஅருள்புரியவும்,கோட்டைவாசற்படியைக்கடந்துஅவங்கத்தில்குதித்துஏறுவதற்குஅருள்புரியுவும்,கொடிமரத்தைக்கையில்பிடித்துக்கொண்டுஜெயமடைந்துஎன்னுடையகையினால்கொடிபோடஅருள்புரியவும்,ஆட்டுகின்றஒருசக்கரமும்ஓயாமல்ஆடஆடம்பரஞ்செய்யஅருள்புரியவும்,சர்வஅண்டகோடிகளையும்நினைத்தபிரகாரம்ஆட்டென்றுஉன்அருள்புரியவும், இல்லையென்றுசொல்லாமல்எனக்குசமீபமாகஎழுந்தருளிவரவேண்டும்.இறைவனேசர்வதந்திரங்களையும்எனக்குத்திருவருள்செய்யவேண்டும்என்பதுகருத்து.

3)பெற்றோர்களைப்போன்றதவராஜசிங்கமே! மகத்தாகியகுணங்குடிஎன்னும்திவ்வியஇடத்தில்எழுந்தருளியிருக்கின்றஎன்னுடையஅகத்தின்கண்ணுள்ளஅகத்தீசரனே!
மௌனஆசிரியனே!சாதனத்தில்ஏற்றவும்வாதனையைமாற்றுகின்றசாயுஜ்ஜியபதவியைஅருள்புரியவும்ஏற்பாடென்கிறகுழப்பங்களைஎல்லாம்விட்டுநல்லகாரியங்களைசாதித்துஉன்னுடையஅருள்புரியவும்,என்னுடையகாதில்உபதேசங்கள்சொல்லவும்,மகத்தாகியதவத்தைக்கைக்குக்கொடுத்துஅருள்புரியவும்,உள்ளங்கைநெல்லிக்கனியைப்போலஎனக்குள்ளேஎன்னையும்காட்டிவிட்டுஅருள்புரியவும்,போதனைகளுக்குஎட்டாதபோதனையைக்கைக்கொண்டுபோதித்துஉன்அருள்புரியவும்,அறிவுக்குஎட்டாதநடுதீபத்தைசேர்த்துவைத்துஅருள்புரியவும்என்னருகில்எழுந்தருளிவரவேண்டும்.

4)
சகலவேதனைகளையும்ஒழியப்பெற்றதவராஜசிங்கமே!மகத்தாகியகுணங்குடிஎன்னும்திவ்வியஇடத்தில்எழுந்தருளியிருக்கின்றஎன்னுடையஅகத்தின்கண்ணுள்ளஅகத்தீசரனே!
மௌனஆசிரியனே!யாதொருசூதுமில்லாமல்சும்மாஇருக்கின்றமௌனத்தைஅருள்புரியவும்,சோம்பியிருப்பதும்ஒழிந்துசோம்பேறியைப்போலசுருண்டுவிடுவதற்குஅருள்புரியவும்,உபதேசக்குற்றமொழிந்துஅவற்றுள்ளும்ஒருஉண்மைஞானோஉபதேசத்தைஅருள்புரியவும்,சர்வபோகங்களும்ஒழிந்தபரிபூரணஆனந்தசுகபோகத்தைஎனக்குஅருள்புரியவும்,ஆசைஒழியும்படிஉன்னுடையபாதங்களில்விருப்பம்வைப்பதற்குஅருள்புரியும்,சரங்களைகட்டுவதற்

குஆதாரமானவலியக்கட்டைஅவிழ்த்துவிட்டுஅருள்புரியவும்எனக்குசமீபமாகஎழுந்தருளி வரவேண்டும்.

5)

மகத்தாகியகுணங்குடிஎன்னும்திவ்வியஇடத்தில்எழுந்தருளியிருக்கின்றஎன்னுடையஅகத்தின்கண்ணுள்ளஅகத்தீசரனே!

மௌனஆசிரியனே!அன்னமயக்கத்தால்எடுத்திருக்கின்றசுவரைப்போன்றஉடலைச்சுத்திச்செய்யஅருள்புரியவும்,சூட்சமம்,காரணம்,மகாகாரணம்இவைகளோடுவிளங்குவதற்குஅருள்புரியவும்,எனக்குத்தகுந்தவண்ணம்ஆன்மாவின்உண்மைச்சொரூபமானதுவெளியேதெரிவதற்குஅருள்புரியவும்அடியவனாகியநான்உன்னைபலமுறைஏத்திஏத்திவணங்குவதற்குஅருள்புரியவும்,வேறுஎவராலும்காணப்படாதவேதாந்தமெனும்வீட்டில்என்னைவிட்டுஅவ்விடத்தில்நீர்எழுந்தருளிவந்துஅருள்புரியவும்,கண்களைமயக்குகின்றமாயைநீங்கிமுச்சுடர்எனும்ஒருமணிவிளக்குஅருள்புரியவும்,போற்றுகின்றதவராஜசிங்கமே!தேவரீர்எனக்குச்சமீபமாகஎழுந்தருளிவரவேண்டும்.

**6)பீற்றற்றுருத்தியிற்காற்றெலாஞ்சேர்த்துப்**
**பிடித்தடைத்தருள்புரியவும்**
**பீற்றலாற்காற்றும்புறத்துப்படாதெம்**
**பிரானேயுனருள்புரியவுஞ்**
**சேற்றினிடைநாட்டுமொருகம்பமெனவென்னிலை**
**தியங்காமலருள்புரியவுஞ்**
**செத்தாற்பிழைப்பனோதருணமிதுசீக்கிரஞ்**
**சித்திக்கவருள்புரியவும்**
**ஏற்றபடிதன்னரசுநாடாகவொட்டா**
**திழுத்துவைத்தருள்புரியவும்**
**என்றுமாதவமெய்துமென்றிடையுமேழையேற்**
**கிடையறாதருள்புரியவும்**
**மாற்றுமொழிசாற்றாதுதவராஜசிங்கமே**
**வரவேண்டுமென்றனருகே**
**மாகுணங்குடிவாழுமென்னகத்தீசனே**

**மவுனதேசிகநாதனே.**

மகத்தாகியகுணங்குடிஎன்னும்திவ்வியஇடத்தில்எழுந்தருளியிருக்கின்றஎன்னுடையஅகத்தின்கண்ணுள்ளஅகத்தீசரனே!
மௌனஆசிரியனே!நவதுவாரம்பொருந்தியதுருத்தியில்காற்றைஎல்லாம்சேர்த்துபிடித்துஅடைத்துஅருள்புரியவும்,அந்ததுவாரம்இருப்பதனால்காற்றுகளெல்லாம்வெளிப்பட்டுவிடாமலிருக்கஅருள்புரியவும்,சேற்றின்கண்நடப்பட்டகம்பத்தைப்போலஎன்னுடையஉண்மைநிலையானதுவிளங்குவதற்குஅருள்புரியவும்,நான்செத்துப்போய்விட்டால்பிழைப்பேனோஆகையால்சாவாதிருக்கின்றஇத்தருணத்தில்மேலேசொன்னவைகள்எல்லாம்சீக்கிரமாகஅருள்புரியவும்,தகுந்தவிதமாகதானேஒருநாட்டைஆட்சிசெய்வதாகவைக்காமல்என்னைஇழுத்துவைத்துஅருள்புரியவும்,என்றைக்குநல்லதவம்கிடைக்குமென்றுமனம்வருந்துகின்றஇந்தஏழைக்குஅருள்புரியவும்,வேறுசொற்களைசமாதானமாகசொல்லாமல்தவராஜசிங்கமே!நீஎனக்குச்சமீபமாகஎழுந்தருளிவரவேண்டும்.

7)

மகத்தாகியகுணங்குடிஎன்னும்திவ்வியஇடத்தில்எழுந்தருளியிருக்கின்றஎன்னுடையஅகத்தின்கண்ணுள்ளஅகத்தீசரனே!
மௌனஆசிரியனே!இந்திரசாலம்போன்றபலமென்னும்சேரியின்வேதனைகள்என்னைத்தொடர்ந்துவருத்தாதபடிஅவைகளைகனவுப்போல்முடித்தருள்புரியவும்,இல்லறம்விடுத்துதுறவறம்அடையவும்,சொல்லுதற்கரியஉண்மையறிவைவிளக்கவும்அருள்புரியவும்,
பந்தம்போன்றவற்றைஇருளாகக்கொண்டுபிரிந்தொழியஅருள்புரியவும்,பேராசைகொள்ளஇடம்கொடுக்கின்றஉலகப்பற்றைவிடுக்கஅருள்புரியவும்,திருவருட்செல்வமே!என்னுடையமனம்யாதொருமாற்றமும்அடையாதபடிஅருள்புரியவும்தேவனே!தேவர்களுக்கெல்லாம்ஆதிதேவனே!
பரவாசுதேவனே!நீஅருள்புரியவும்தவராஜசிங்கமே!இந்தவேளையில்என்னருகில்எழுந்தருளிவரவேண்டும்.

8)

மகத்தாகியகுணங்குடிஎன்னும்திவ்வியஇடத்தில்எழுந்தருளியிருக்கின்றஎன்னுடையஅகத்தின்கண்ணுள்ளஅகத்தீசரனே!

மௌனஆசிரியனே!வீண்கதைபேசுவதில்எந்தகாரியமும்இல்லை.ஆகவே,அவைகளைநீக்கிஎனக்குஅருள்புரியவும்,யாதொருகல்வியையும்கல்லாதகருங்கல்லைபோன்றஎன்னுடையமனமானதுகரைந்துவிடஅருள்புரியவும்,அடங்காதமனத்தைஅடங்கும்படிசெய்துநல்லஇடத்தில்சேர்த்துவைத்துஅருள்புரியவும்,யாதொருபற்றுமில்லாமல்உண்மையானதும்உயர்ந்ததுமானபக்குவகாலத்தைஎனக்குஅருள்புரியவும்,என்னுடையஇதயமானதுதிறக்கவும்எல்லாவற்றையும்விட்டொழிக்கின்றஏகாந்ததிசையையும்அருள்புரியவும்உண்மைதவராஜசிங்கமே!நீமதிலையும்கடந்துஎனக்குஅருகில்எழுந்தருளிவரவேண்டும்.

9)

மகத்தாகியகுணங்குடிஎன்னும்திவ்வியஇடத்தில்எழுந்தருளியிருக்கின்றஎன்னுடையஅகத்தின்கண்ணுள்ளஅகத்தீசரனே!

மௌனஆசிரியனே!மனத்தின்கண்முதலாவதாகக்குடிக்கொண்டிருக்கின்றஉலகஆசைஒழியவும்அம்மனத்தின்கண்ணேகூடியிருக்கின்றதலைவனே!அருள்புரியவும்,

இருட்டகலவெல்வதற்கும்அளவிடமுடியாதஆனந்தத்தைஅருள்புரியவும்,இன்பமானதுஅதிகரிக்கவும்மனச்சங்கடம்நீங்கவும்சுயஞ்சோதிப்பொருளைஎனக்குஅருள்புரியவும்,வேதத்தின்முதலாகஇருந்தநினைக்கின்றஅடியவர்உள்ளத்தில்உள்ளஒருசுடரைஅருள்புரியவும்,ஒன்றென்றுசொல்லாதடிஉன்னுடையதிருவடித்தாமரைகளில்எக்காலமும்படிந்திருக்கஅருள்புரியவும்மகிமைசொல்வதற்குஅருமையானதவராஜசிங்கமே!தேவரீர்எனக்குஅருகில்எழுந்தருளிவரவேண்டும்.

10)மகத்தாகியகுணங்குடிஎன்னும்திவ்வியஇடத்தில்எழுந்தருளியிருக்கின்றஎன்னுடையஅகத்தின்கண்ணுள்ளஅகத்தீசரனே!

மௌனஆசிரியனே!தலைவனே!அத்வைதப்பொருளைத்துதிசெய்யும்மார்க்கத்தைஅருள்புரியவும்,நித்தியஆனந்தம்உண்டாக்குகின்றமௌனமானதுஎன்னுடையமனத்தில்நிறைவதற்குஅருள்புரியவும்,மோட்சத்திற்குக்காரணமாகமுளைத்துஎழுகின்றசோதிப்பொருளும்என்னிடத்தில்முதிர்வதற்குஅருள்புரியவும்நடுவேதோன்றினஉண்மைத்தவராஜசிங்கமே!எனக்குசமீபமாகஎழுந்தருளிவரவேண்டும்.

**வினாக்கள்**

1. குணங்குடிமஸ்தான்சாகிபு - குறிப்புவரைக.

2. குணங்குடிமஸ்தான்பாடல்கள்உணர்த்தும்பொறைநிலைகருத்துகள்யாவை?

**கீழக்கரைக்**

**கல்வத்துநாயகமவர்கள்**

**இன்னிசைப்பாமாலை**

அற்பூரநும்மடிக்கேயஞ்சவித்தநெஞ்சினேடு
பொற்பூரவின்னிசைப்பாப்பூட்டிமகிழீட்டேனே
இற்பூரவன்பருளத்தேற்றிவைத்துப்போற்றுமொரு
கற்பூரத்தீபமொத்தகல்வத்துநாயகமே (2)

விண்கண்டவாதவன்போல்மேதினியெலாம்விளக்கிப்
பண்கண்டநும்மருட்சீர்பாவியேன்பாடேனே
திண்கண்டவாய்மைமிகுசெய்யிதப்துல்காதிறெனுங்
கண்கண்டசற்குருவேகல்வத்துநாயகமே (3)

பூவிருந்தவாசமெனப்பூதலத்துமீதலத்து
மேவிருந்தநாதனருண்மேன்மைமிகுமேலோராய்த்
தூவிருந்தமுத்தர்குலச்சுத்தபரதத்துவரே
காவிருந்தகீழைநதர்கல்வத்துநாயகமே (4)

கேடுமுறித்தற்பகலுங்கீழ்மைதருமேழமையாம்
பாடுமுறித்துற்றமலப்பற்றுமுறித்தாளீரோ
வாடுமுறித்தோங்குசிததீக்மாமரபில்வந்தபெருங்
காடுமுறித்தார்குலததீர்கல்வத்துநாயகமே (5)

ஆரணமும்பல்கலையுமாய்ந்துரைத்தவான்மீகப்
பூரணமெய்ஞ்ஞானதவப்போதனைகளத்தனையுஞ்
சீரணமுன்றோந்துணர்ந்தசெலவருமச்செல்வர்தரு
காரணமுநானென்றீர்கல்வத்துநாயகமே (6)

ஆட்டிவைத்தபம்பரம்போலல்லலுழந்தற்பகலுங்
கோட்டிவைத்தவையமுற்றுங்கூர்ந்துவப்பநேர்ந்தறிஞர்
தீட்டிவைத்தபல்கலையிற்செய்தொழிலில்வாய்மொழியிற்
காட்டிவைத்தபொக்கிஷமேகல்வத்துநாயகமே (7)

சத்திருந்தஞானகலைசாத்திரங்கள்யாவுமுமை
யொததிருந்துதேடிமிகவோலமிடுமுததமரே
பித்திருந்தயேழைமனப்பின்னலறுததுன்னுமுன்னு
கத்திருந்தவந்தருள்வீர்கல்வத்துநாயகமே (8)

மட்டற்றசெல்வமொடுமக்கள்மனைசுற்றமெலா
முட்டற்றவாழ்க்கைமிகமுன்னிருந்தும்பின்னெருவ
விட்டற்றமோக்கநிலைமேவுதுறவேய்ந்துமனக்
கட்டற்றநீர்மைகொண்டீர்கல்வத்துநாயகமே (9)

வானடும்பூநாடுமற்றனவுந்தானட
நானடுநும்மருட்டேன்நாயேனுண்டுய்யேனே
ஊனடுமாந்தரெலாமுண்ணுடமுன்னடுங்
கானடும்பூம்பதத்தீர்கல்வத்துநாயகமே (10)

பேணுவதுநும்மருளேபேசுவதுநுந்நாமம்
பூணுவதுநும்மலர்த்தாள்போற்றுவதுநும்புகழே
நாணுவதுநும்மறதிநண்ணுவதுநுஞ்சமுகங்
காணுவதுநுங்காட்சிகல்வத்துநாயகமே (11)

என்னசையொன்றுளநேதின்பமிகுசெம்பொனடி
தன்னசையன்றியுநுந்தண்ணருட்கீழ்வாழ்வதுவே
பின்னசையேதுமிலைப்பேதுறுத்தித்தீத்ருத்துங்
கன்னசைநீத்தருள்வீர்கல்வத்துநாயகமே (12)

ஆட்சிதரும்புந்திமனமாக்கையிந்தியங்களெலாம்
நீட்சிதருநுண்ணறிவால்நேர்ந்தொழித்தென்முன்பனிபோன்
மாட்சிதருநீனனமாற்றமறுத்தைக்கியமெய்க்
காட்சிதருங்கண்ணுதலெங்கல்வத்துநாயகமே (13)

மானரும்பெற்றுவந்தமக்களொடுசுற்றமென
ஆனருநம்முயிரக்கிங்காயதுணையாவாரோ
தானருஞ்சீவமுத்ததத்துவருஞ்சாற்றவல்ல
கானரும்பூங்கழலீர்கல்வத்துநாயகமே (14)

முட்குடியைநச்சுணவைமுந்நீரையுற்றருந்த
மட்குடிகளெண்ணதவாறென்னைநண்ணீரோ
உட்குடியாவீற்றிருந்தென்னுச்சிகனிந்தூறிவருங்
கட்குடியைக்காட்டுமெங்கள்கல்வத்துநாயகமே (15)

பொய்கண்டநுண்ணிடையார்பூட்டுமையலார்கலியுள்
நொய்கண்டநாயேனும்நொந்தழுந்திமூழ்குவனே
எய்கண்டமாந்தருளததின்னறவிர்த்தின்பநல்குங்
கைகண்டமாமருந்தேகல்வத்துநாயகமே (16)

மண்ணடிப்பெண்ணடிமாநிதியந்தானடிப்
புண்ணடிநின்றநெஞ்சப்புல்லனையுமாளீரோ
உண்ணடிவந்தவெலாமுற்றுணர்ந்துமற்றுரைத்துங்
கண்ணடியானீரென்கல்வத்துநாயகமே (17)

பண்ணூறுமென்மொழியார்பார்வைவலைக்குள்ளாகிப்
புண்ணூறுநெஞ்சினனய்ப்புத்திகெட்டுப்போகாமற்
றண்ணூறுநுங்கருணைச்சாகரத்துண்மூழ்கவென்றன்
கண்ணூறுதீர்த்தருள்வீர்கல்வத்துநாயகமே (18)

வேல்பிடித்தகண்மடவார்வெய்யமையற்காட்டகத்தே
மால்பிடித்தயானையெனமாழாந்துநில்லாமற்
கோல்பிடித்தகையுடையகொற்றவருங்காண்பருநுங்
கால்பிடித்தேன்கண்ணில்வைத்தேன்கல்வத்துநாயகமே (19)

கொக்கிவிட்டசங்கிலிபோற்கூண்டெழுந்துநும்மடியார்
சொக்கிவிட்டநல்லருட்கேதோய்ந்துநின்றரையோநா
னுக்கிவிட்டநெஞ்சினனயுள்ளுடைந்துமெயம்மயங்கிக்
கக்கிவிட்டதம்பலொத்தேன்கல்வத்துநாயகமே (20)

ஆணவத்தைமற்றிரண்டையாங்கறுத்துவென்றுபல
பூணவத்தைப்பூண்டுநின்றபுண்ணியர்க்காளாகாமல்
வீணவத்தைகொண்டெழுந்திம்மேதினியெலாமலைந்தேன்
காணவத்தைக்காட்டுமெங்கள்கல்வத்துநாயகமே (21)

துலைவத்தநாவென்னசசூழ்ந்தபலஞாயநிலைக்
குலைவைத்தபாவியெனையுள்ளுவந்துகாவீரோ
மலைவைத்ததீபமொத்தமௌலல்கௌமியானவெங்கள்
கலைவைத்தமாமதியேகல்வத்துநாயகமே (22)

பாராருமூராரும்பாவியெனப்பேசாமற்
சீராருநுந்துணைததாள்சென்னிமிசைசூடேனே
ஏராருநேமநிட்டையேய்ந்தியற்றுமாதவர்சூழ்
காராருங்கையுடையீர்கல்வத்துநாயகமே (23)

மண்ணொளியும்பொன்னொளியும்வாய்ந்தபலமாமணியின்
றண்ணொளியுநுங்கமலத்தாளொளிக்கோவொவ்வாவே
விண்ணொளியுமுற்றபலவேற்றொளியுமன்பருளக்
கண்ணொளியுங்காண்பருமெங்கல்வத்துநாயகமே (24)

பொற்பகத்தைக்கட்டுணையைப்போற்றுமுயர்நாவகத்தை
யெற்பகத்தைநும்மடிக்கேயீடாகவையேனே
அற்பகத்தையர்ப்பணமென்றற்பகலுமாக்குநர்க்கோர்
கற்பகத்தையொத்தவெங்கள்கல்வத்துநாயகமே (25)

**வினாக்கள்**

1. செய்குத்தம்பிபாவலர்குறிப்புவரைக.
2. இன்னிசைபாமாலை - பாடல்கள்உணர்த்தும்செய்திகள்யாவை-

**இரட்சணியயாத்திரிகம்**

**எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை**

எச்.ஏ.
கிருஷ்ணப்பிள்ளைஅவர்கள்திருநெல்வேலிமாவட்டம்பாளையங்கோட்டைக்குஅருகில்கரையிருப்புகிராமத்தில்பிறந்தவர்.பெற்றோர்சங்கரநாராயணப்பிள்ளை,தெய்வநாயகிஆவர் **.1827ஆம் ஆண்டுஏப்ரல் 24ஆம் நாள்**கிருஷ்ணப்பிள்ளைதோன்றினார்.தந்தைமகனுக்குமுதல்ஆசிரியராகவிளங்கினார்.மனைவிமுத்தம்மமாள்.
உறுதிமிக்கவைணவராகவாழ்ந்தகிருஷ்ணப்பிள்ளைதம்முப்பதாம்வயதில்சென்னைதூயதாமஸ்ஆலயத்தில்திருமுழுக்குபெற்றார்.
**என்றிஅல்பிரட்கிருஷ்ணப்பிள்ளை**எனபெயர்மாற்றினார்.**இலக்கணச்சூடாமணி,போற்றித்திருஅகவல்,கிறிஸ்தவரானதன்வரலாறு,இரட்சணியயாத்திரிகம்,இரட்சணியசமயநிர்ணயம்,இரட்சணியமனோகரம்,இரட்சணியக்குறள்**போன்றநூல்களைஇயற்றியுள்ளார்.**கிறித்தவக்கம்பர்**எனசிறப்பிக்கப்படுபவர்.
இந்நூல்ஆதிபருவம்முதல்இரட்சணியபருவம்என**5 பருவங்களையும்**,வரலாற்றுப்படலம்தொடங்கிகாட்சிப்படலம்முடிவாக**47 படலங்களையும் 3766 பாடல்களையும்**கொண்டுள்ளது.இதில்பெரும்பிரிவுபருவம்என்றும்சிறுபிரிவுபடலம்என்றும்பெயர்பெற்றுள்ளன.

**ஆதிபருவம்**

இந்தபருவத்தில்19 படலங்கள்உள்ளன.
அழியும்உலகைவிட்டு,அழியாதஉலகைஅடைவதற்காகஇவ்வுலகைவிட்டுப்பயணப்படும் ஒருமனிதனின்வரலாற்றைக்கூறும்பகுதியாகஅமைந்துள்ளது.வழியில்இயேசுபெருமானின்

சிலுவைக்காட்சியைக்கண்டஅளவில்குற்றம்நீங்குகின்றது.தொடர்ந்துசெல்லும்போதுமீட்புவழியில்குறுக்கேநின்றுதுன்பம்மலையைக்கடந்துசெல்லும்செய்தியைக்கூறுவதுஆதிபருவம்ஆகும்.

**வரலாற்றுப்படலம்**

**1)உலகம்யாவும்புரந்தருள்உன்னதர்**
**அலகிவ்சோதிஅருள்கடல்ஆரணத்து**
**இலகுமெய்த்திரியேகர்பதத்துணை**
**குலவிஎன்னெஞ்சிடம்குடிகொண்டவே.**

எல்லாஉலகங்களையும்காத்துஅருள்புரிகின்றமேலானஇறைவன்,அளவில்லாதஒளியானவர்.அருள்கடல்திருமறையில்விளங்கும்உண்மையானமூவொருகடவுள்,அவருடையதிருவடிகள்இரண்டும்துணையாகப்பொருந்திஎன்மனதில்குடிகொண்டுள்ளன.(எனவேநான்எடுத்துக்கொண்டசெயல்இனிதுமுடியும்)

2)கருணையானகடலால்சூழப்பட்டஉலகத்திற்கு,விண்ணில்உள்ளசூரியன்,தகுந்ததேவையானஒளியினைத்தருகின்றதோஅதுபோன்று,மேலானதிருமுறையைக்கற்றுத்தேர்ந்தஉண்மையானகிறித்தவர்கள்தங்கள்ஒன்றாகச்சேர்ந்துகூடியதூய்மையானதிருச்சபைநிறையுடையதாகும்.

3)மலைமேல்பொருந்திஉயர்ந்துஒளிவீசுகின்றசுடரைப்போல,இவ்வுலகத்தில்ஆன்மமீட்புவிளங்கத்தக்கதாககலைகளைப்பெற்றுவளருகின்றஒளிக்கதிர்களையுடையநிலவினைப்போன்று,திருச்சபையானதுநிலைபெற்றுஆன்மஅனுபவத்தில்உயர்ந்துவளர்ந்துஎங்கும்சிறந்துவிளங்கும்.

**4)சென்னிதேவகுமாரன்திருச்சபைக்கு**

**இந்நிலத்திருத்தொண்டரெல்லாமுடல்**

**அன்னவாப்பரிசுத்தஅயிக்கியம்**

**மன்னிநின்றுவளர்க்கும்தருமமே.**

திருச்சபைக்குத்தலைஇறைமகன்இயேசு.இவ்வுலகத்தில்உள்ளதிருத்தொண்டர்கள்யாவரும்அதற்குஉடலாவர்.அத்தகையதூய்மையானஒற்றுமைநிலைபெற்றுநின்றுஅறத்தைவளர்க்கும்.

5) உண்மை,அறம், பொறுமை,தயவு, இரக்கம்,மனத்தூய்மை,உண்மையன்புஎன்றஇப்படிப்பட்டதகுந்தஒழுக்கம்விளங்கும்மெய்யறிவினைஉடையதுறவிகள்இருக்கின்றார்கள்என்னும்கூர்மையானஅறிவுள்ளவர்கள்இருக்கின்றார்கள்என்பதால்இவ்வுலகம்இருக்கின்றது.அவர்கள்இல்லாவிட்டால்இவ்வுலகம்இராது.

6)முன்காலத்தில்நோவாவும்அவன்குடும்பத்தினரும்பேழையில்புகுந்துகொள்ள,வெள்ளமானதுஇந்தஉலகமண்டலத்தைவாயில்விழுங்கியதேமயக்கமில்லாததெளிவானசான்றாகக்கண்டும்,கேட்டும்அறிந்தும்இன்னமும்தாங்கள்வாழவேண்டியவழியைநினைந்துஉலகமக்கள்இறைவனுக்குத்தொண்டுசெய்யவில்லை.உலகமக்களின்துணிவின்காரணம்என்னவோ?

7) திருமறைஒளியைஉள்ளத்தில்ஒளிபெறச்செய்துஅறியாமையாகியஇருள்முற்றிலும்நீங்கஅதைநீக்கி,எப்பொழுதும்ஒப்பற்றமீட்புவழிக்குத்துணைநின்று,அடியவர்களாகியஎங்களைமீட்டுவாழவைப்பதையேகுறிக்கோளாகக்கொண்டு,நினைத்தநல்லசெயல்கள்யாவும்கைகூடத்தக்கதாக,பெரியஅருளாகியகடைக்கண்பார்வையைத்தந்தருளுகின்றமூவரில்ஒருவரானதூயஆவியானவரின்திருவடித்தாமரைகளைத்தலைமேல்கொள்வோம்.

**8)பத்தபாலனம்செய்திருள்பாறிட**

**வித்தகச்சுடர்வீசிவிளங்கிடும்**

**மெய்த்திருச்சபைமெய்த்திருத்தொண்டரைச்**

**சித்தமீதுதிகழ்த்திவிளம்புவாம்.**

இறையடியார்களுக்குப்பாதுகாப்புசெய்து,அறியாமையாகியஇருள்நீங்கிட,மெய்யறிவுஒளி வீசிவிளங்குகின்றஉண்மையானதிருச்சபையின்உண்மையானதிருத்தொண்டரைமனத்தில் விளங்குமாறுநினைந்துஇந்நூலைச்சொல்லுவோம்.

9)

மலர்போன்றஅழகுபொருந்தியஉண்மைத்திருமறையின்துணிவினால்அழகுமிகுந்தவாழ்வளிக்கும்“ இரட்சணியயாத்திரிகம் ”என்னும்சிறந்தபொருள்பொதிந்தசெய்தியைப்பாடல்களினால்ஆகியசெந்தமிழ்க்காவியமாகச்செய்வதற்காகஆர்வம்கொண்டுஇறைவனின்திருவருள்துணையுடன்துணிந்தேன்.

**10)என்னையபாவியரிந்நிலவுலகில்யாண்டுமிலர்எனினும்நாயேன்**

**தன்னையொருபொருளாகத்தடுத்தாண்டகிறித்துயேசுசாமிசெய்ய**

**பொன்னனையதிருவடிக்குச்செந்தமிழ்மாலிகையொன்றுபுனைவான்எண்ணித்**

**துன்னுநவஇரட்சணியயாத்திரிகமலரெடுத்துத்தொடுக்கல்உற்றேன்.**

என்னைப்போன்றகுற்றமுடையவர்இந்தநிலவுலகத்தில்எவ்விடத்திலும்இல்லைஎன்றாலும் ,நாய்போன்றஎளியவனாகியஎன்னையும்ஒருபொருளாகமதித்துத்தடுத்தாட்கொண்டகிறித்துஇயேசுஇறைவனின்சிவந்தபொன்போன்றஅழகியதிருவடிகளுக்குச்செந்தமிழ்மாலைஒன்றுஅணியுமாறுநினைந்து,நெருங்கியபுதியஇரட்சணியயாத்திரிகமலர்களைஎடுத்துஅம்மாலையைத்தொடுக்கத்தொடங்கினேன்.

11)

மெய்யறிவாகியகிறித்து,திருமறையின்மேலானசெய்திகளைஆய்வுசெய்துநிலையானவாழ்வின்வழியைஉறுதியுடன்கடைபிடித்தஇறையன்பன்ஆகியஜான்பனியன்என்றஆசிரியன், முன்னாளில்கற்பனைக்கதையாகஉண்மையைவிளங்கவைத்தமேன்மையேசிறப்பானதாகும்.

**12) ஆக்கியபாஷைக்கன்றிஅவனியில்பலபாஷைக்கும்**
**பாக்கியம்பயந்ததென்னப்பாசுரம்சமைந்ததாக**
**மேக்குயர்காதலாலவ்வித்தகசரிதம்சொல்வான்**
**ஊக்கினன்தமிழில்யானும்உசிதமாண்பொருளைஉள்ளி.**

முதல்நூல்உண்டாக்கப்பட்டமொழிக்கேஅல்லாமல்,இவ்வுலகில்உள்ளபலமொழிகளுக்கும் நன்மையைக்கொடுத்ததுபோல,அதனிடத்தில்உள்ளமேன்மையானசிறப்பமைந்தசெய்திகளைமனதில்நினைத்து,மேலும்மேலும்எழுகின்றஆர்வத்தினால்தமிழில்பாடலாகஅமைத்து அந்தமெய்யறிவுசரிதத்தைசொல்லுமாறுநானும்ஊக்கம்கொண்டேன்.

13)எட்டுத்திசைகளும்புகழுமாறுநிலைபெற்றுநிற்கின்றதிருமறைமெய்யறிவைஇந்தஉலகக்கதையானதுகொண்டிருக்கின்றது.பெரியதிறமையின்பயனாகநான்கூறுகின்றஇந்தக்காவியம்,எல்லாக்காலத்தும்சிறந்ததமிழில்ஆற்றல்உள்ளவர்களின்செல்வாக்கில்வலிமைகொண்டுவிளங்கி,தெளிந்தஅலைகளைஉடையகடலால்சூழப்பட்டஇவ்வுலகில்என்றைக்கும்உயர்ந்துஒளிவீசும்என்பதற்குஐயமில்லை.

14)இந்தநூலானதுவீணாகக்காலத்தைக்கழிப்பதற்காகச்சொல்லப்பட்டபுதுமையானகாதையும்அன்று.புற்றின்கண்வாழும்பாம்பின்நஞ்சுநிறைந்தசெப்பைப்போன்றுகவிதைகளால்அழகுபடுத்தப்பட்டுச்சிற்றின்பத்தன்மையைநல்லதுஎன்றுசொல்லும்வண்ணம்சீர்ப்படுத்திக்

கூறும்காதையும்அன்று.மற்றுஇக்காவியம்உயிரையுடையமக்களுக்குமீட்பைவழங்கும்ஒப்பற்றமருந்தாகும்.

15)தீயசெயலாகியகடலில்வீழ்ந்துஅழிகின்றஉயிரையுடையகோடிக்கணக்கானமக்களைஅழிவில்லாதபுகலிடமாகியகரைஎன்னும்விண்வீட்டில்சேர்க்கவல்லஒரேகிடைத்தற்கரியநன்மையைத்தரும்ஒப்பில்லாதமரக்கலம்வாழ்வளிக்கும்இரட்சணியயாத்திரிகம்ஆகும்.இதனையாவரும்அறியுங்கள்.

16) **முதிர்கடுத்தாழைநுகர்ந்திடும்ஒட்டையின்மூர்க்கர்**
**கதிவழுக்கியபாழ்ங்கதைகற்றுநாள்கழிப்பர்**
**புதியதேனுகர்அளியெனப்புனிதர்யாத்திரிகம்**
**மதிநலந்தரும்அமிழ்தெனப்புசித்துளம்மகிழ்வர்.**

முதிர்ந்தகசப்பானதழைகளைஉண்ணுகின்றஒட்டகத்தைப்போன்றகீழ்மக்கள்,நல்லநெறியில்இருந்துநீக்கியபாழ்ங்கதைகளைப்படித்துத்தம்முடையவாழ்நாளைவீணாக்கழிப்பர்.புதியதானதேனைநுகர்கின்றவண்டைப்போலத்தூய்மையானவர்கள்இரட்சணியயாத்திரிகமாகியஇந்தநூல்தங்களுடையஅறிவுக்குநன்மைதருகின்றஅமுதம்எனநினைத்துஇதனைஉண்டுமனம்மகிழ்வார்கள்.

**வினாக்கள்**

1. எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளைகுறிப்புவரைக.
2. ஆதிபருவம்வரலாற்றுப்படலம் - வழிஅறியலாகும்செய்திகள்யாவை?

**கண்ணதாசனின் இயேசு காவியம்**

**மகிமை**

விவிலியத்தின் ஒரு பகுதியான இயேசுவின் நற்செய்தியை காவிய வடிவில் தந்துள்ளார் கவிஞர் கண்ணதாசன் அவர்கள். இயேசு காவியத்தை**'இறவா காவியம்'** என்றே குறிப்பிடுகிறார் கவிஞர். கவிதையைப் படைக்கும் போதே கவிஞனுக்கு அந்த உணர்வு வந்துவிடுகிறது. அதனை நூலின் தொடக்கத்தில் **'என்னுரை'** என்னும் இடத்தில் குறிப்பிடுகிறார்.**இயேசு காவியம் ஐந்து பாகங்களை உடையதாக காணப்படுகிறது.** இயேசுவின் வாழ்வியலை பிறப்பு என்ற தலைப்பில் முதல்பாகமாகவும்,யோவானிடம் இயேசு திருமுழுக்குப் பெற்று தம்மைத் தயார்படுத்திய நிலை இரண்டாம் பாகமாகவும், இயேசு பொது வாழ்வில் ஈடுபட்டமை மூன்றாம் பாகமாகவும், அவர் அடைந்த பாடுகள் நான்காம் பாகமாகவும், பெற்ற மகிமை ஐந்தாம் பாகமாகவும் பாடப்பட்டுள்ளன. நூலில் பல இடங்களில் பெருங்காப்பியங்களின்மரபை பின்பற்றிப் பாடுகிறார் கவிஞர். மகிமை எனும் தலைப்பில் முதலாவதாக இடம் பெற்றுள்ளது
உயிர்த்தெழுந்தார் என்பதாகும்.

**உயிர்த்தெழுந்தார்**

**வெள்ளியன்று பிற்பகலில் மரித்த இயேசு**
**வேதமுற மாலையிலே அடக்க மானார்**
**கள்ளர்களும் ஓய்வெடுப்பார் சனியில் அன்று**
**கட்டாய விடுமுறை நாள் யூதருக்கு!**
**பிள்ளைகளும் பெரியோரும் மாதர் தாமும்**
**பேதலித்துச் சனிமுழுதும் ஓய்ந்திருந்தார்!**
**வெள்ளிமுளைத் தேஎழுந்து ஞாயிறன்று**
**விடிகின்ற போதினிலே குறித் தெழுந்தார்!**

வெள்ளிக்கிழமை பிற்பகலில் மரித்த இயேசு மாலையில் அடக்கமானார்.கள்ளர்களும் சனிக்கிழமை ஓய்வு எடுப்பார்கள். யூதர்களுக்கு அன்று கட்டாய விடுமுறை. சனிக்கிழமை

முழுவதும் பிள்ளைகளும் பெற்றோர்களும்,மாதர்களும் பேதலித்து போய் ஓய்ந்திருந்தார்கள். மூன்றாம் நாள் உயிர்த்தெழுவேன் என்று சொன்ன வார்த்தைக்காக அனைவரும் காத்திருந்தார்கள். வெள்ளி முளைத்து எழுவது போன்று ஞாயிறன்று விடிகின்ற பொழுதினில் இயேசுவும் உயிர்த்தெழுந்தார்.

அந்நேரம் கல்லறையைக் காவல் காத்த ஆயுதம் கையில் ஏந்திய பெருவீரர்கள் பூமியின்மேல் மின்னலுடன் இடி வந்து மோதியது போல் மிகப்பெரிய பூகம்பம் நிகழக் கண்டார்கள்.பொன்னிறத்தில் ஒரு தூதன் வானை விட்டுப் பூமிக்கு வருவதை அவர்கள் பார்த்தார்கள்.வந்தவர் கல்லறையின் கல்லை நீக்கி அதன்மீது அமர்வதைக் கண்டார்கள்.

**தூதனவன் திருவுருவம் மின்னல் போலும்**
**தொட்டெடுத்த உடைவெள்ளைப் பனியைப் போலும்**
**நாதவடிவாகஅவன் நிற்கக் கண்டு**
**நடையிழந்து படைவீரர் மயங்கி வீழ்ந்தார்!**
**மாதர்களும்வைகறையில் கல்லறைக்கு**
**வாசமிகும்பொருளோடும் வந்து சேர்ந்தார்!**
**பாறைக்கல் விலகியதும் தேவதூதன்**
**பக்கத்தில் இருப்பதுவும் திகைத்தே பார்த்தார்!**

தூதனின் திருஉருவம் மின்னல் போன்றும்உடலிலுள்ள உடை பனியைப் போன்ற வெள்ளை நிறமாகவும் தேவனவன் நிற்கக் கண்டு நடையிழந்து படைவீரர்கள் மயங்கி விழுந்தார்கள். பெண்களும் அதிகாலைப் பொழுதில் கல்லறைக்கு வாசம் மிகுந்த பொருள்களோடு வந்து சேர்ந்தார்கள்.பாறைக்கல் விலகி இருப்பதையும் தேவதூதன் அதன் பக்கத்தில் இருப்பதையும் திகைத்தே பார்த்தார்கள்.

**ஆண்டவரின் திருத்தூதன் அவரை பார்த்து**
**“அறையுண்டு மடிந்தவரைப் பார்க்க வந்தீர்**
**ஈண்டவரின் உடல்இல்லை உரைத்தவாறே**
**இயேசுபிரான் உயிர்தெழுந்தார்; இங்கே நீங்கள்**
**வேண்டுமெனில் சடலத்தை வைத்த அந்த**
**வியத்தகுந்த கல்லறையைப் பார்த்துச் செல்வீர்!” (142 – 4)**

ஆண்டவனின் திருத்தூதன் அவரைப்பார்த்து ‘அறையுண்டு மடிந்தவரை’ பார்க்க வந்தீர்கள். இங்கு அவரின் உடல் இல்லை. கூறியது போலவே இயேசுபிரான் உயிர்தெழுந்தார். நீங்கள் வேண்டுமெனில் சடலத்தை வைத்த இடத்தை பார்த்துச் செல்லுங்கள்.காண்பதற்கரிய செய்தியை கண்ட பின்பு கட்டாயம் அதனை சீடர்களிடம் போய்ச் சொல்லுங்கள் என்று திருத்தூதன் கூறி முடித்தான்.

வந்த எல்லோரும் கைப்பொருளைக் கீழே போட்டுவிட்டு மனவேதனையில் இருக்கின்ற சீடர்களுக்கு மகிழ்வான செய்தியைச் சொல்லப் புறப்பட்டார்கள். வரும் வழியில் தன்னைக் கண்டவர்கள் பேசினாலும் கூட தாங்கள் கண்ட காட்சியை மறைத்தவாறு மக்கள் கூட்டமானது,தலைவன் இயேசுபிரான் உயிர்த்து எழுந்ததைச் சொல்வதற்காக சீடர்களைத்தேடிச் சென்றது.

**ஆண்டவரைக் கண்டேன்**

**அருளப்பர் ராயப்பர்க்கு**
**அவசரச் சேதி சொல்ல**
**மருள்கின்ற விழிகள் கொண்ட**
**மக்தலேனாதான் சென்றாள்!**
**குருவினால் பாவம் தீர்ந்து**
**கொடுமைகள் தீர்ந்த மங்கை**
**அருள்மிகும் சீடர் தம்மை**
**அவர்கள்தம் மனையிற் கண்டாள்!**

அருளப்பர், ராயப்பருக்கு அவசர செய்தி சொல்ல மருள்கின்ற பார்வையைக் கொண்ட மக்தலேனா சென்றாள். குருவினால் பாவம் தீர்ந்து கொடுமைகள் தீர்ந்த அவள் அருள்மிகுந்த சீடர்களை அவர்கள் மனையினில் கண்டாள்.

ஆண்டவர் உடலைக் காணோம். அர்த்தராத்திரியில் யாரோ தோண்டி எடுத்துச் சென்றார். சோகத்தில் மனது விம்ம அருளைப் பெற்ற மக்தலேனா கூறினாள். ஆண்டவர் உயிர்த்தெழுந்த செய்தி அவள் எங்கே அறிவாள் பாவம்!

சீடர்கள் இருவரும் மனம் பதைத்தவாறு அவ்விடத்தை நோக்கி ஓடினர். அருளப்பர் முன்னே ஓடிச் சென்றார். தேடினார். தேவ மைந்தனின் திருவுடல் அங்கே இல்லை. பகைவர்கள் வஞ்சகச் செயல் புரிந்தனர் என்று மனம் வாடினார்.

ராயப்பரும் தேடினார். நல்ல பரிவட்டத்தோடு காயத்தில் போர்த்த துண்டு தனியுடத்தில் இருப்பதைக் கண்டார். நடந்த அதிசயத்தை அறியாதவராக மயங்கினார். அவரும் தீயவர்கள்தான் தேவமைந்தனின் உடலை மறைத்தார் என்று நினைத்தார்.

மரியவளாகிய மக்தலேனா திருமகனை அடக்கம் செய்த தோட்டத்தில் கண்ணீர் மல்க அழுதவாறு நின்றாள். தோட்டக்காரன் போன்ற தோற்றத்தில் ஒரு உருவம் தோன்ற கருவிழி சிவக்க அவள் கலங்கி நின்றாள்.

நீங்கள் யார்? தோட்டத்தை காவல் காப்பவரா? கருணை வெள்ளமாகிய தேவகுமாரன் மறைந்தார். அவரது திருவுடலை இங்கே வைத்தோம். காவலர்கள் கொண்டு சென்றார்களோ? கள்வர்கள் கொண்டு சென்றார்களோ? தெரியவில்லை. நீங்கள் அச்சடலத்தைக் கண்டால் கூறுங்கள். எடுத்துச் செல்வேன் என்றாள்.

**பேசினாள்;அங்கே வந்த**
**பெரியவர்,“மரியே!” என்றார்;**
**“இயேசுவா! குருவா!சுவாமி!”**
**என்றவள் காலில் வீழ்ந்தாள்!**
**ஓர்சொலில் அவரைத்தேர்ந்தாள்**
**உத்தமா மக்தலேனா**
**பேர்சொலும் போதே அந்தப்**
**பெருமகன் கருணை கண்டாள்!**

என்று பேசிய உடனே அங்கு வந்த பெரியவர் ‘மரியே’ என்றார். இயேசுவா! குருவா! சுவாமி! என்றவள் காலில் வீழ்ந்தாள். ஒரு சொல்லில் அவரைத் தெரிந்துகொண்டாள். உத்தம மக்தலேனா என்று பேர் சொலும் போதே அந்த பெருமகனின் கருணையைக் கண்டாள்.

மரியளே மக்தலேனா! மற்றுள்ள என் சீடர்களுக்கு திரும்ப நான் உயிர்த்த செய்தியைச் செப்புவாய். விண்ணிலுள்ள அரும்பெரும் தந்தையோடு ஐக்கியமாகச் செல்வேன். தரும் பொறுப்பு இதுதான் என்றார். அவளும் பணிந்து சென்றாள்.

பாவத்தில் இருந்த மங்கை தேவனால் பாவம் தீர்ந்து திருந்தினாள். அவளுக்குத்தான் கடவுள் மைந்தன் முதலில் காட்சி தந்தார். முதலாவதாக அன்பினை அவளிடம் வைத்தார்.

மகிழ்ச்சி அடைந்த மக்தலேனா தான் கண்ணால் கண்ட காட்சியினை சீடர்களிடம் கூறுவதற்காக ஓடினாள் ஓடினாள் மனமகிழ்ச்சியோடு ஓடினாள்.பதினொரு சீடர்களிடம்,

**" தேவகுமாரன் திருமுகம் பார்த்தேன்**
**உயிரோ டிருந்தார் உரையாடினரே!"**

என்று பலமுறை எடுத்துச் சொன்னாள். திரும்பத் திரும்ப கூறியும் கூட நல்ல சீடர்கள் நம்பவில்லையே!

### பொய் பிரசாரம்

தேவதூதனின் திருமுகம் பார்த்து ஒளியில் மயங்கி தூங்கிய காவலர் தூக்கம் தெளிந்து தேவகுமரன் உயிர் கொண்டெழுந்த உண்மையை அறிந்தார். அதனை அவர்கள் ஆச்சாரியார்மாரிடம் இம்மியளவு கூட விடாமல் எடுத்துக் கூறினர். ஆச்சாரியர்களோ அவர்களுக்கு வெள்ளிக் காசுகளை அள்ளிக் கொடுத்து பொய் சொல்லுமாறு அறிவுரை கூறினார்கள்.'நாங்கள் எல்லோரும் தூங்கிய பிறகு திருவறைக்குள்ளேசீடர்கள் புகுந்து உடம்பைத் தூக்கிக் கொண்டு ஓடிவிட்டார்கள்' என்று கூறுமாறு சொல்லிக் கொடுத்தனர். அப்படியே அவர்களும் கூறிக் கொண்டு திரிந்தார்கள். சீடர்கள் தான் திருடிச் சென்றதாக யூதர்கள் பலரும் நம்பினார்கள்.

### எம்மாவுஸ் வழியிலே

எருசலேம் பக்கம் எட்டாம் கல்லில் எம்மாவுஸ் எனும் அழகிய ஊர் இருந்தது. அந்த ஊரை நோக்கி இரண்டு சீடர்கள் மாலைப்பொழுது மயங்கிய நிலையில் உரையாடியபடி சென்று கொண்டிருந்தனர். இயேசுபிரானின் பெருமையைப் பற்றியும் சிலுவையில் அறைந்த சிறுமை பற்றியும் பெருந்துயரத்தோடு பேசிக்கொண்டு சென்றனர்.

தேவரின் மைந்தன் பாதி வழியிலே அவர்கள் பின்னாலே தொடர்ந்து நடந்தார். வழிப்போக்கன் போல மாறி இருந்தார்.தேவரின் மைந்தன் என்பதை அவர்கள் அறியவில்லை. இயேசுவும் அவர்களோடு பேசினார். ஆனால் சீடர்களுக்கு அவரைத்

தெரியவில்லை. பாதையின் நடுவில் பக்கத்தில் வந்து எதைப் பற்றி நீங்கள் என்ன பேசினீர்கள் என்று கேட்டார் இயேசுபிரான்.

**“சிறுபிள்ளை முதல்எருசலேம் மக்கள்**
**அறிவார் இதைனை அறியீரோநீர்?”**

சிறுபிள்ளை முதல் எருசலேம் மக்கள் வரை இந்த விசயத்தை அறிவார்கள். நீங்கள் அறியவில்லையா என்று அவர்கள் இயேசுவைக் கேட்டனர். அறியாதவரைப் போல அவரும் எது நடந்தது என்ன நடந்தது என்று கேட்டார்.சீடரில் ஒருவர் நடந்த அத்தனை கதையையும் எடுத்துச் சொன்னார்.

மீட்பர் என்று நாங்கள் மிகவும் நம்பினோம். மரணம் அடைந்து மூன்று நாள் ஆனது. உயிர்ப்பார் என்று கூறியது போல் ‘உயிர்ப்பார்’ என்றே மனதில் நினைத்து இருந்தோம்! பெண்கள் சிலபேர் பேச்சுவாக்கில் நகரில் சொன்னார்கள்.ஆனால் நம்பிக்கை இல்லை என்றான் சீடன். உடனே இயேசு அவர்களை நெருங்கி அறிவற்றவர்களே! அறிவற்றவர்களே!இசையாஸ் போன்ற இறைவாக்கினர்கள் கூறிய அந்த கூற்று போலவே

**“ மீட்பர் வரவும் மிகப்பெரும் பாடு**
**படவும் வேண்டும்!பட்டார் இறந்தார்**
**உயிர்த்தார் அதுதான் உண்மையும் ஆகும்! ”**

என்று இறைவாக்கினர்கள் கூறியவற்றுக்கு எல்லாம் விளக்கமும் சொன்னார். சீடர்கள் தங்கள் ஊரை அடைந்ததும் மேலும் தொடர்ந்து நடக்க மேன் மகனாகிய இயேசு முனைந்தார். அப்போது அவர்கள் எங்களுடன் வாருங்கள். இப்போது மாலை ஆயிற்று. இனிமேல் வழிநடை பயணம் மேற்கொள்வது வம்பில் முடியும். ஆகவே இன்று இரவில் எங்களுடன் இருந்து விட்டு செல்லுங்கள் என்று அழைத்தார்கள். தான் யார் என்பதை வெளிப்படுத்தாத இயேசு சீடர்கள் வீட்டிற்கு சென்றார்.

பந்தியில் அமர்ந்து கொண்டு இறைவனின் பெயரைக் கூறி அப்பத்தை எடுத்து அதனை அவர்கள் கையில் அளித்தார் இயேசு. நொடிப்பொழுதில் கண்கள் திறக்க தேவன் மகனைத் தெரிந்து கொண்டனர் சீடர்கள். அந்த பொழுதே அவரும் மறைந்தார்.

பிறகுதான் தங்களுடன் பேசிக்கொண்டு வந்த இயேசு வழியில் கூறிய வார்த்தைகள் எல்லாம் நினைவில் வந்தன. நினைத்துப் பார்த்து,

**“ இயேசு அதனை இயம்பியபோது**
**இதயம் நெருப்பில் எரிந்த தல்லவோ!”**
என்று கூறி இருவரும் திகைத்தனர்.

அந்த நேரத்தில் எருசலேம் நகரில் உத்தம சீடர் ஓடிவந்து பதினொரு பேர்களோடு மற்றும் சில பேர் இருக்கும்போது இந்தச் செய்தியைக் கூறினர். விசுவாசத்தில் சிறந்து விளங்கிய சீடர்கள் இதையும் ஏற்றுக் கொள்ளவில்லையே!

**என் ஆண்டவரே! என் கடவுளே!**

சீடர்கள் மனத்தில் பயம் என்பது தொற்றிக்கொண்டது. தவித்த ஒவ்வொரு சீடரும் ஓர் இல்லத்தில் இருந்தார்கள். அவர்கள் அங்கு கூடியிருக்கையில் சத்தமில்லாது ஒரு பேரொளி மின்னிட தோன்றினார் திரு தேவகுமாரன்.‘அமைதி’ எனும் சொல்லை சொல்லி வந்தார்.

**ஓது மிந்த வார்த்தையைக் கேட்டவர்**
**உற்று நோக்கி ஓருருக் கண்டனர்**
**பூத மென்றே அஞ்சி நடுங்கினர்**
**பூமி யாள்பவர் புன்னகை செய்தனர்!**
**“ வாத மென்ன வந்தெனைப் பாருமே**
**வந்திருப்ப தூனுடல் தானரோ!**
**போதும் எந்தன் அற்புதச் சீடரே!**
**பொய்யி லாமல் இயேசுநான் ” என்றனர்!**

கூறுகின்ற வார்த்தையைக் கேட்டவர் உற்றுநோக்கி ஓருருவம் கண்டனர். பூதம் என்று அஞ்சி நடுங்கினர். பூமி ஆளும் தேவகுமரன் புன்னகை செய்தார். வாதம் செய்யாது வந்து

என்னைப் பாருங்கள் சீடர்களே! வந்திருப்பது ஊன் உடலுடைய இயேசுதான். போதும் என்றன் அற்புத சீடர்களே! பொய்யில்லை நான் இயேசு என்றனர்.

மெல்ல மெல்ல அவர் உருவத்தைக் கண்டனர் சீடர்கள். உடல், கண், வாயையும் பார்த்தனர். அளவற்ற மகிழ்ச்சி கொண்டாடினர். ஆனாலும் தொட்டுப்பார்க்க அஞ்சியே நின்றனர். நல்ல தோற்றத்தை அடைந்த நாதனோ'எனக்கு பசிக்கின்றது' உணவு என கேட்டார். கேட்கும் முன்னரே மீன், தேனடையை எடுத்துக் கொடுத்தார்கள். இயேசுவும் அதனை உண்டார்.

ஈசன் மைந்தன் தான் இவர் என்பதை எண்ணி அந்தச் சீடர்கள் கொண்டாடினர். ஆசையோடு அவரை நெருங்கினர். அண்ணலின் மேனியானது வானுலகம் போனது. வாசல், வீடு மற்ற எல்லா இடங்களிலும் தேடினர்.வான மைந்தனின் உருவத்தைக் காணவில்லை. தேவமைந்தன் வந்ததை சீடர்கள் மகிழ்ந்து பேசிக் கொண்டிருக்கும்போது அந்த இடத்தில் தோமையார் இல்லை.

பத்து சீடர்களும் தோமையார் வந்தபின் நடந்ததைக்கூறினர். ஆனால் அவரோ இது பொய் என்று நம்ப மறுத்தார்.

**" பொங்கும் ஐயன் தன்னைநான் பார்த்தபின்**
**கையிரண்டில் ஆணியின் காயமும்**
**காவலாளி ஈட்டியின் காயமும்**
**கையை வைத்துத் தடவியே நம்புவேன்**
**கண்ணைக் கூட நம்பிடேன் " என்றானர்!**

எட்டு நாட்கள்கழிந்தபின் தோமையாரும் மற்ற சீடர்களும் வட்டமிட்டு அமர்ந்திருந்த வேளையில் வாசல் கதவு பூட்டிய நிலையில் கடவுளின் திருமகன் கால் பதித்து நடந்து வந்தார்.'அமைதி' என்ற வார்த்தையைக் கூறியபின் தயங்கி நின்ற சீடர்களைக் கண்டார்.

**" அன்புமிக்க தோமையச் சீடரே!**
**அன்று மின்றும் வந்தது இயேசுவே!**
**என் ரத்தம் சதைஇவை காணுக! "**
**என்று கையைத் தொட்டு, விலாவிலே**

**துன்புறுத்தும் காயமி ருப்பதும்**
**தொட்டுப் பார்த்தேதெரிந்தபின் நம்புவீர்!**
**என்று மேவிசுவாசமி ருப்பது**
**எந்த நாளும் சீடர்க்கு நல்லது!"**

என்று கூறி தன்னுடைய ஊன் உடலைக் காட்டினார். எந்தன் கடவுளே! ஆண்டவா என்றவர்கள் கன்றினைப் போல இயேசுவின் காலில் விழுந்தனர்.

கண்டதால் எனை நம்பிடும் தோமையா! என்றும்எனை கண்களால் காண்கிலார்.மனதில் கொண்ட நல்ல விசுவாசத்தில் வாழ்கிறார்! அவையில் அவரே பேறு பெற்றவர் என மரிய மைந்தன் தெளிவாகக் கூறினார்.

புகழ் படைத்த தேவகுமாரன் சீடர் மீது வாயினால் ஊதினார்."பரிசுத்த ஆவியை வேண்டுமட்டும் பெறுக" என்று ஓதினார்.ஒருவர் பெற்ற பாவங்கள் தீரவும், பாவங்கள் தீராதிருக்கவும் நல்ல வல்லமையை நல்கினார். அன்புமிக்க சீடர்கள் புதியவர்கள் ஆனார்கள்.

**" விண்ணகத்தும் மண்ணகத் துள்ளுமே**
**வேண்டுமட்டும் பேரதிகாரமே**
**என்னிடத்துத் தந்துளார் தந்தையே**
**இன்று மக்கு நல்கினேன் சீடரே!**
**மண்ணி டத்துத் திசைதொறும் செல்லுவீர்**
**மக்கள் மீட்கும் செய்தியைச் சொல்லுவீர்**
**தன்னை என்பால் சதமென வைத்தவர்**
**தமக்கு ஞானஸ்நானம் நடத்துவீர்!**

விண்ணுலகிலும் மண்ணுலகிலும் வேண்டியமட்டும் பேரதிகாரத்தை என்னிடத்துத் தந்துள்ளார் தந்தையாகிய இறைவன். அதனை இன்று உங்களுக்கு நல்கினேன் சீடர்களே என்றார். பூமியில் எல்லா திசைகளிலும் செல்லுவீர், மக்களை மீட்கின்ற செய்தியைச் சொல்லுங்கள். என்னை நம்புகின்ற மக்களுக்கு ஞானஸ்நானம் நடத்துவீர் என்றார்.

**"நம்பி வந்த மானிடர் யாவரும்**

**நல்ல வாழ்வை நாள்தொறும் நாடுவார்**
**நம்புகின்ற ஞானமில்லாதவர்**
**நாடி நிற்கும் தண்டனை காணுவார்!**
**அம்பு போல ஒவ்வொரு நாட்டிலும்**
**அள்ளி இந்தத் தத்துவம் வீசுவீர்**
**தம்பு புறத்தில் கால்நடை வழியிலே**
**தலையணைக்கு அருகில்யான் நிற்பனே!"**

நம்பி வந்த மானிடர்கள் நல்ல வாழ்வை நாள்தோறும் அடைவார்கள். நம்புகின்ற ஞானமில்லாதவர்கள் நாடி நிற்கக்கூடிய தண்டனையை பெறுவார்கள். ஒவ்வொரு நாட்டிலும் இந்த தத்துவங்களை அள்ளி வீசுங்கள். உங்களுக்கு வழித்துணையாகவும் தலையணைக்கு அருகில் தலைத்துணையாகவும் நான் நிற்பேன் என்றார்.

**சென்று போதியுங்கள்**

வலை எடுத்து மீன்பிடிக்க வந்திருந்த சீடர்களைக் கூட்டினார். அலையென பதினொரு பேரும் வந்தனர். அவர்களோடு இராயப்பரும் சென்றார். மாலைப்பொழுது வரையிலும் மீன்கள் கிடைக்கவில்லை. அதிகாலைப் பொழுதில் ஒருவரைக்கண்டனர். வந்திருப்பவர் பெருமகன் என்பதை அவர்கள் அறியவில்லை.

**" கடலில் மீன்கள் இல்லையோ பிள்ளைகாள்?**
**கண்டயூதர் கொண்டுசென்றார்களோ?**
**படகி லேறி வலப்புறம் வீசுவீர்**
**பார்ப்பதற்கே மலையெனக்கொள்ளலாம்**
**உடன்ந டத்து வீரெ"னக் கூறினார்;**
**ஓடி யன்னார் வலையினை வீசினார்!**
**கடன்ப யந்த மனிதரைப் போலவே**

**கடலின் மீன்கள் வலையினில் வீழ்ந்தன!**

கடலில் மீன்கள் இல்லையோ பிள்ளைகளே! யூதர்கள் கொண்டு சென்றார்களோ? வலப்புறமாக உள்ள பக்கத்தில் படகில் ஏறிச் சென்று வலையை வீசுங்கள். மலை போன்று மீன்களைப் பிடிக்கலாம். உடனே செல்லுங்கள் என்று கூறினார். ஓடிச்சென்று அவர்கள்வலையினை வீசினார்கள். மீன்கள் வலையில் வீழ்ந்தன.

வந்திருப்பவர் ஆண்டவர் தாம் என அருளப்பர் என்னும் அன்புடைச் சீடர் கூறினார்.படைகிலிருந்து தாண்டி கடலில் குதித்தனர் தன்னை மறந்த இராயப்பர். வேண்டியமட்டும் மீன்களை நிரப்பிக் கொண்டு விரைந்து வந்தார்கள் அத்தனை தோழர்களும்.கூண்டு போன்று அடுப்பினை ஏற்றி கொதிக்க வைத்திருந்தார் திருக்குமரனாகிய இயேசு.

அந்த மீனும் அப்பமும் இயேசுவும் கண்டு சீடர்கள் இயேசுதான் என்பதை அறிந்துகொண்டனர். வந்தவர்களிடம் சில மீன்களை வாங்கி ருசியாக சமைத்து குமாரன் பந்தி வைத்து எல்லோரும் உண்பதற்காக பரிமாறினார். பசிதீர தானும் உண்டார். முன்னொரு நாளும் இதுபோல் நடந்ததை மூத்த சீடர் நினைத்துப் பார்த்தார்.

மீன் விருந்தும் அப்பமும் தீர்ந்தபின் வேதநாதனாகிய குமாரன் இராயப்பரிடம்‘ நான் விரும்பும் அற்புதச் சீடனே! நம்புகின்ற சீடன் நீயல்லவோ! சொல்லு’ என்றார். ஆம் என்று இராயப்பர் சொன்ன பிறகு மீண்டும் அக்கேள்வியை குமாரன் கேட்டார். சீடர்களோ மன்னர் நீங்கள் அறிவீர்களே என்றனர்.

இயேசு நாதன் கேள்வியைக் கேட்டதும்‘ஆம்’ என இராயப்பர் சொன்னபின் “ மேய்க்க எந்தன் ஆடுகளே ” என மேலும் மேலும் மூன்று முறை கூறினார்.கேட்ட மூன்று கேள்விகளில் ஒரு பதில் சொன்ன இராயப்பரிடம் வாய் நிறைந்த வார்த்தையைச் சொன்னவர் வஞ்சமற்ற புன்னகையை வீசினார்.

இப்படியாக வாதம் நிகழ்ந்தபின் ஏக்கமுற்ற இராயப்பர் மனம் எப்படி கேட்டீர்கள் தலைவனே! எல்லாம் நீங்கள் அறிந்தவை அல்லவா. அப்படியே தவறு செய்தாலும்

ஆண்டவர் முன்னால் அவை எல்லாம் தீர்ந்ததே. உங்கள் சொல்படி நடக்கிறேன் என்றார். அவரின் தோளில் தட்டி இயேசு உரைத்தனர்.

**" இற்றை நாளில் உன்கரம் கொண்டுநீ**

**ஏற்ற சேவை யாவையும் செய்கிறாய்!**

**பிற்றை நாளில் மற்றவர் கைகளே**

**பிழையிலாநின் கைகள் பிணைக்கலாம்! "**

**கற்ற நாதன் சொன்னதன் உள்ளுறை**

**கடைசிக் கால இராயப்பர் முடிவையே!**

**" உற்று நோக்கி எனைப்பின் செல்" என**

**உரைத்த இயேசு இறுதியில் சொன்னவை**

இன்றைய நாள் முதல் உன்கரம் கொண்டு நீ எல்லா சேவைகளையும் செய்கிறாய்.பிற்றைய நாட்களில் மற்றவர் கைகளே பிழையில்லாத உன்னுடைய கைகளை பிணைக்கலாம் என்று தேவகுமாரன் சொன்னதன் உட்பொருள்இராயப்பரின் கடைசி கால முடிவையே ஆகும். என்னை உற்று நோக்கி என்னை பின் தொடர்ந்து செல் என கூறிய இயேசு இறுதியில் சொன்னவை,

**" தந்தை பேரால் மைந்தனின் பெயரினால்**

**தழைக்கும் தூய ஆவியின் பெயரினால்**

**வந்த பேர்க்கு ஞான ஸ்நானமும்**

**வாழு கின்ற நல்வழிக் கோலமும்**

**தந்து நீங்கள் போதனை செய்குவீர்**

**தழுவி எந்தன் மொழிகளைச் சொல்லுவீர்!**

**எந்த நாளும் யானுமே உம்முடன்**

**ஏகு வீர்"என கூறினார் நாதனே!**

என்று போதனை செய்குவீர். எந்தன் மொழிகளை எடுத்துச் செல்லுங்கள். எந்த நாளும் நான் உங்களுடனே இருப்பேன் என கூறினார் நாதனாகிய தேவகுமாரன்.

**விண்ணேற்றம்**

உன்னத வாழ்வில் மன்னவன் கண்ட ஒலிவேத் மலை மீது தன்னையும் சீடர்களையும் கொண்டு அவர் வரும்போது பூமி முழுவதும் மெல்லிய காற்றானது வீசியது. தன் நிலையை அறிந்து கொண்ட நாயகனாகிய இயேசுவின் குரல் முடிவாய் பேசியது.

**“ தந்தை உரைத்த பரிசுத்த ஆவி**
**உங்களிடத்து வரும்**
**சிந்தை திருந்தி அதுவரை நீவீர்**
**இந்நகரில் அமரும் ”**
**இந்த உரைக்குப் பின்னர் தலைமகன்**
**இருகை மேலெழவே**
**தந்தையின் அருளும் தன்னருள் சேர்ந்துத்**
**தந்து உயர்ந்தனரே!**

தந்தை உரைத்த பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும். மனத்தெளிவோடு அதுவரை நீங்கள் இந்நகரில் அமர்ந்து கொள்ளுங்கள் என்று கூறிய உரைக்குப் பின்னர் தேவகுமரன் இருகை மேலெழவே தந்தையின் அருளும் தன்னுடைய அருளும் சேர்ந்து தந்து உயர்ந்து சென்றார்.

அந்நேரத்தில் வானில் இருந்து மழையானது மண்ணில் விழவும் மேகங்கள் மந்திரங்கள் முழங்குவது போல மங்கல இசைப்பாடவும் வானின் மீது நடந்து சென்றார் தந்தையைக் காண்பதற்காக இயேசுபிரான்.

**மங்களம்**

தத்துவ ஞானம் புத்துயிர் பெற்றது யூத நிலத்தினில்; பூமி முழுக்க சத்திய வேதம் நின்று நிலைத்தது. எத்தனை உண்மை வந்து பிறந்தது இயேசு பிறந்ததிலே. இத்தனை நாளும் மனிதன் வாழ்வது இயேசுவின் வார்த்தையிலே ஆகும்.

எத்தனை கோடி செய்திகளோ இங்கு இயேசுவைப் பற்றி வரும். அத்தனை கோடியில் முத்து குளித்தோம். கற்றவர்கள் அனைவரும் இத்தனையும் தொடுத்து மாலையாக்கிய போது அதில் ஒரு சக்தி வரும். தத்துவம் ஏதேனும் விடுபட்டிருந்தால் தயவுடன் பொறுத்தருளுங்கள்.

**நாடு விளங்கிட வீடு துலங்கிட**
**நல்லவர் பாவிகளும்**
**கேடு மறைந்திட கீழ்நிலை மாறிட**
**கேட்டதும் ஓடிவரும்!**
**பாடுபவர்இதைப் படிப்பவர்க் கெல்லாம்**
**பரமனின் வீடுவரும்!**
**கூடுகளில் அவன் ஆவி புகுந்து**
**நன்மைகள் கோடிவரும்!**

பாடுபவர் இதைப் படிப்பவர்க்கெல்லாம் பரமனின் வீடு கிடைக்கும். உடலில் அவன் ஆவி புகுந்து நன்மைகள் கோடி வரும்.

**வாழிய சூசை வாழிய மரியாள்**
**வாழிய இயேசுபிரான்!**
**ஆழியும் வானும் உள்ளவரைக்கும்**
**வாழிய தேவபிரான்!**
**ஏழைகள் பாவிகள் இரட்சகராக**
**எங்கும் நிறைந்தபிரான்!**

**ஆழ்தமி ழாலே அவர்புகழ் சொன்னேன்**

**துன்பங்கள் சேரவிடான்!**

மண்ணிடை இயேசு மறுபடியும் வருவார் என்பது சத்தியமே. புண்கள் இருக்கும் வரையில் மருந்து தினந்தோறும் தேவைப்படும். உலகம் முழுதும் விண்ணரசு அமையும். இதுதான் தத்துவமே! எண்ணும் எழுத்தும் எல்லாம் இயேசுவே. இயேசுவை நம்புவோமே.

**ஆமென்**

**வினாக்கள்**

1. இறைவன் உயிர்த்தெழுந்த மகிமையை விளக்குக.
2. தன் தோழர்களுக்கு இறைவன் காட்சி கொடுத்த செய்திகள் விளக்குக.

பத்திரகிரியார் பாடல்கள்

**உஞ்சேனை மாகாளம் எனும் நகரை ஆட்சிப் புரிந்த மன்னர் பத்திரகிரியார்.** பட்டினத்தாரின் அருளாற்றலைக் கண்டு வியந்த பத்திரகிரியார் துறவொழுக்கம் அடைந்தார்.பட்டினத்தாரிடம் தன்னையொரு அடியவனாக ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினார். பட்டினத்தாரும் இசைந்தார்.**பத்திரகிரியாரின் பட்டறிவும் உலக உண்மையியலும்இறையன்பும் மெய்ஞானப் புலம்பல் என்ற தலைப்பில் 234 பாடல்களில் காணப்படுகிறது.**

ஒவ்வொரு பாட்டின் இறுதிச் சீரான எக்காலமோ? என்பது பத்திரகிரியாரின் ஏக்கத்தையும் அது நிறைவேற வேண்டுமே என்ற கவலையையும் வெளிப்படுத்துகின்றது.

1. முதற்பாடல் தன் புலம்பலாகிய கருத்தை யாவருக்கும் எடுத்துரைக்க யானை முகனுடைய திருவருள் துணைபுரிய வேண்டும் என்கிறார்.

**முத்திதரும் வேதமொழியாம் புலம்பல் சொல்ல**
**அத்தி முகவன்தன் அருள்பெறுவது எக்காலம்?**

நான் நினைக்கின்ற பிறவிக்கு முக்தி தரும் மறைமொழியான கருத்துக்களைப் புலம்பலாய் எடுத்துரைக்க வேண்டுகின்றேன். அதற்கு ஆனைமுகனான பிள்ளையாரின் திருவருளைப் பெற்று மகிழ்வது எந்த நாளோ தெரியவில்லையே! என்கிறார்.

2. **ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்**
**தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுவது எக்காலம்?**

நான் ஆணவமென்னும் இருளை உயிருள்ளே அடக்கிக் கொண்டு ஐம்பொறிகளின் அறிவுப் புலன்களை நுகரவிடாமல் அறவே தீர்ந்துபோகச் செய்தும் தவப்படிகள்எட்டிலும் வெற்றி பெற்றும்இறையொளியோடு கலந்து முயங்கி இன்புறுதல் எந்தக் காலமோ? தெரியவில்லையே.

3. நான் எப்பொழுதும் பிரியாமல் சிவச் செம்பொருள் ஒளியில் கலந்து தவத்திலே மூழ்கித் தூங்கிக் கொண்டிருக்க வேண்டும். அந்த அடக்க முடியாத அருள் வெள்ளத்தை எனது ஆன்ம உயிரிலே தேக்கி இன்புறுவதும் எந்த காலமோ தெரியவில்லை.

4. அடைக்க முடியாமல் பெருகும் அருள் வெள்ளத்தை என் உயிரிலே தேக்கி வைத்துக்கொண்டு உண்ணுதற்கு முன்னமே அருளைப் பெறாமல் தவறவிட்ட குறையைப் போக்கி இப்பொழுது வாய்ப்பைப் பெறுவதும் எந்தநாளோ அறியேன்!

5. **ஓயாக் கவலையினால் உள்ளுடைந்து வாடாமல்**
**மாயாப்பிறவி மயக்கறுப்பது எக்காலமோ?**

பிறவி அறவேண்டும் என்று ஓயாமல் கவலைப்பட்டு வாடி வதங்காமல் இருக்க வேண்டும். மயக்கிக் கொண்டிருக்கும் மாயையின் மயக்கத்தை அறுத்துப் பிறவியிலிருந்து விடுதலை பெறவேண்டும். அந்த நாளும் என்று வருமோ?

6. மாயையால் மயக்கப்படும் மனிதப்பிறவியின் அறிவுப் புலன்களின் அடிமை மயக்கத்தை எல்லாம் முதலில் வென்று உடம்பென்னும் கோட்டையைப் பிடிக்கும் நாள்தான் எந்த நாளா தெரியவில்லையே! அந்தோ!

7. உடம்பாகிய கோட்டைக்குள்ளிருக்கும் பொறி புலன்களை அடக்கி ஒடுக்கி வெற்றிக் கொள்வதற்கு ஆற்றலுடையமெய்யறிவு (அனுபூதி) வந்து துணை செய்யவேண்டுமே! அது எப்போது வருமோ? அறியேன்.

8. **சேயாய்ச் சமைந்து செவிடூமை போல்திரிந்து**
**பேய்போல் இருந்துன் பிரமை கொள்வது எக்காலமோ?**

இறைவனே ! என்னுயிர் தலைவனே! நான் குழந்தை போலிருந்தும் காது கேளாதவன் போலவும் வாய் பேசாதவன் போலவும் வெளியே திரிந்தும் பேய்போல் மறைந்திருந்தும் உன்னிடம் மெய்யன்பாகிய காதல் கொள்வது எந்த காலமோ? தெரியவில்லையே!

9. நான் பேயைப் போல மறைந்து திரிந்தும் உயிர்ப்படங்கிய உடம்பைப் போல் படுத்துக் கிடந்தும் மற்ற பார்வையில் படும் பெண்களைத் தாயைப் போல் நினைந்து போற்றியும் அவற்றைத்தவமாகவே முடித்து வாழ்வதும் எக்காலமோ? இறைவா! அதை அருள்வாயாக!

10. **கால்காட்டிக் கைகாட்டிக் கண்கள் முகங்காட்டி**

**மால்காட்டும் மங்கையரை மறந்திருப்பது எக்காலமோ?**

அழகிய நடையை காட்டியும் கைவீச்சு காட்டியும் சிமிட்டும் கண்ணுடைய மலர்ந்த முகம் காட்டியும் மயக்கும் மங்கையரின் வலையில் சிக்காமல் மறைந்திருப்பதும்எக்காலமோ? தெரியவில்லையே!

11. நல்ல பெண்களின் மேல் கொள்ளும் ஆசையையும் காதலையும் விட்டுவிட்டு கண்கள் இரண்டையும் மூடிய நிலையில் முறையான தவஞ்செய்து இறையொடு கலந்து இன்புறுவது எந்த காலமோ? அறியேன். அந்தோ!

12. வெட்டப்பட்ட புண் போன்ற விரிந்த அல்குல் பைதனில் ஆசைப்பட்டு அறிவிழந்து நிற்கும் இழிவைத் தவிர்ப்பதும் எக்காலமோ? அறியேன். இறைவா!

13. ஆறாத புண் போன்ற அல்குலில் என் அறிவு அழுந்திக் கெட்டுப்போகாமல் தெளிவில்லாத சிந்தையைத் தெளிவுச் செய்து விளங்குவதும் எக்காலமோ?

14. பெற்ற தந்தையும் தாயும் குழந்தைகளும் உடன் பிறந்தார்களும் யாவருமே பொய்ப் பொருளாய் அழிந்து போவரென்றும் கருதும் சிந்தையைப்பெற்றுத் திருந்தும் நிலையை அடைவதும் எக்காலமோ? அறியேன்.

15. இறைவனே நீ படைத்த ஆருயிர்களை இரக்கமில்லாமல் கொன்று அதையே உணவாகக் கொண்டு தீவினைச் செய்யாமல் அவ்வுயிர்களை தன் உயிர்போல் கருதி அருட்பண்போடு வாழ்வதே தவமென கருதுகின்ற நாள் என்று வருமோ அறியேன். இறைவா!

16. பாவி என்ற நிலையேற்பட்டு பாழும் துயர் தரும் நரகத்திலே வீழ்ந்து விடக் கூடாது. மனித ஆருயிர் இவனே என்று இலக்கணமாய் புகழும் வாழ்வை நான் அடைவது இனி எந்த நாளோ?

17. உளியால் செதுக்கப்பட்ட கற்சிலைகளும்,வண்ணச் சுதையாலும் சாந்தாலும் செய்யப்பட்ட உருவங்களையும் புளியால் விளக்கப்படும் செம்புச் சிலைகளையும் மக்கள் மெய்ப் பொருளாகவும் தெய்வமாகவும் புரிந்து போற்றுகின்ற காலம் எந்நாள் வருமோ? அறியேன்.

18. வேடிக்கை காட்சிகளைக் காண்பதும் சொகுசான வாழ்வில் விருப்பம் கொள்வதும் உடம்பை பகட்டாய் ஒப்பனைச் செய்து கொள்வதும் தற்பெருமையாய் பொய் பேசுதலும் ஆகிய பழக்கங்களை மறந்து நேரான வாழ்வை எந்நாள் அடைவேனோ?

19.இறைவா என் வாழ்விலே பட்டாடை உடுத்திப் பொன் நகைகளை அணிவதையும், போலித் தன்மையில் நடப்பதையும், தீய செயல்கள் செய்வதையும் தொலைத்துவிட்டு, உனது திருவடியை அடைய விரும்புவதும் எக்காலமோ? அறியேன்.

20. ஆமையானது முன்னே வரும் மக்களைக் கண்டவுடன், தன் ஐந்து உறுப்புக்களையும் அடக்கிக்கொண்டு, அஞ்சி நகராமல் கிடப்பது போல் நானும் புலனறிவுகளை ஒதுக்கிக் கொண்டு,வாய் பேசாமல் ஊமையனாய் இருப்பதும் எக்காலமோ? தெரியவில்லையே!

21. இறைவா! துறவிகளின் போலி வேடமும் பகட்டும் எனக்கு வேண்டாம்.பல்லக்கில் அமர்ந்து களிப்பதும், தலைவர்கள் தங்கும் ஊர்ச் சாவடியில் தங்குவதும், பணப்பையை கையில் கொண்டிருப்பதும், பெரிய மாட மாளிகையில் தங்கி களிப்பதும் காண்பதும் மனக்கருத்தை விட்டுஒழிவது எந்நாளோ? அறியேன்.

22. நான் இறைவனின் ஆன்மா அருள்ஒளி கண்டு, களிப்பிலே ஆழ்ந்து உணர்ச்சியற்ற பிணம் போல கிடக்கும் நிலை அடைவது இனி எக்காலமோ? தெரியவில்லையே! என் செய்வேன்.

23. இறைவா! என் மனதில் நான் செய்த அறப்பணிகளை எல்லாம் சுமந்து கொண்டு தவம் செய்யும் நிலையில் உடலில் உள்ள தசைகுருதி கொண்ட எலும்புகள் வெள்ளை நிற எலும்புகளாய், உயிர்விட்ட பிணம் போல் இருந்து உன்னை காண்பது இனிமேல் எந்த நாளோ? அறிகிலேன்.

24. மனிதர்களே மிகவும் சிறிதான மாயை தரும் சிற்றின்பத்தை மறந்துவிட்டு, உயிரின் அறிவை உயிரறிவால் அறிந்து கொண்டு, மனிதக் கருவிலே வந்து சேர்ந்த தீய கோள்களின் தாக்கத்தை அழித்து ஒழிப்பது எந்த நாளோ? தெரியவில்லையே!

25. **கருப்படுத்தி என்னையமன் கைப்பிடித்துக் கொள்ளாமுன்**
**உருப்படுத்தி யாள உடன்படுவது எக்காலமோ?**

இறைவா! என்னைக்கருவிலேயே எமன் வந்து கையைப் பிடித்துக் கொண்டு போகும் முன்னரே, என்னை நல்ல உடம்பு உடையவன் ஆக்கி, அடியானாக ஆட்கொள்ள இசைவது எந்தநாளோ? அறியவில்லையே!

26. தூண்டிக்கொண்டிருக்கின்ற அகல் விளக்கும் அணைந்து போக, இருள் தொடர்ந்து முன்னே வந்தது போல் இறந்த ஒருவன், உயிர் பிழைத்து வந்த வகைத் திறனைதெரிந்துவியப்பது எக்காலமோ? அறியேன்.

27. தூண்டிலில் அகப்பட்ட மீன் எப்படித் துயரடைந்து சுழன்று துள்ளுமோ அதுபோல் உலகில் படும் அல்லலால் மனம் வாடித் துடிக்காமல் கடவுளைத் தேடி அவன் திருவடியைப் பணிந்து இன்புறுதல் எக்காலமோ?

28. எண்ணூறு ஊழிக் காலமும் தவம்செய்து முயன்றும், கிட்டாத பேரின்ப வீட்டைப்பெற்று மகிழத் திருவெண்ணீற்றைப் பூசி ஒளி திகழ வாழ்வதும் எக்காலமோ? தெரியவில்லை.

29. **அவவேடம் பூண்டிங்குஅலைந்து திரியாமல்**
**சிவவேடம் பூண்டு சிறந்திருப்பது எக்காலமோ?**

உலகியல் வாழ்வுக்காக வீணான வேடமும் ஒப்பனையும் செய்து நடித்து வாழாமல், சிவ அடையாளமான ருத்ராட்சத்தையும் திருநீற்றையும் அணிந்து கொண்டு மகிழ்ந்து வாழ்வது எக்காலமோ?

30. ஒருகாலத்தில் பாற்கடலைக் கடைந்த நிலையில் அதிலே தோன்றிய நஞ்சினைத் தேவர்களைக் காக்கும் பொருட்டு தானே உண்டு மகிழ்ந்த கடவுள் சிவபெருமான்.அவர் உலகத்தை இயங்க செய்வதற்காகவே அம்பலத்துள் ஆடுகின்றான்.அவருக்கு நான் ஒரு தொண்டனாக தொண்டு செய்வது எந்த காலமோ?

31.சிவனின் திருவடியைக் காணும் ஆசையினால் திருமால் பன்றி உருவம் கொண்டு நிலத்தையே தோண்டிப் பார்த்தார்.திருவடியை காண முடியவில்லை. அத்தகைய அருமை உடைய சிவன் குன்றிலே தெரியும் விளக்கு போன்றவன். அவனது பெருமையை நான் எடுத்துரைக்கும் காலம் என்று வருமோ?

32. தித்திக்கும் தெள்ளமுதாய் சித்தாந்தத்தின்உட்பொருளாய் விளங்குபவனும் முக்தி பெற விதையாகத் திகழக் கூடியவன் இறைவன். இறைவனை முதன்மையாய் நினைப்பது எக்காலமோ?

33. இறைவா! வேத நூல்களின் கொள்கைகளை விட்டுவிட்டு, தனி நிலையில் இருந்து தவம் செய்து அதில் ஒளி கண்டு, அமுதம் பெற்று வாழ்வது இனி எந்த காலமோ?

34. இறைவனே! நான் உன்னை வெளி இடங்களில் தேடி வாழ்நாளை வீணடிக்காமல், எனது தலை நடுவாகிய சிற்றம்பலத்தில் நீ இருப்பதை உணர்ந்து உன்னோடு தவம் கூடிக்களித்து உறங்குவதும் எந்நாளோ?

35.**இன்றுளோர் நாளை இருப்பதுவும் பொய்யெனவே**
**மன்றுளோர்சொல்லும் வகையறிவது எக்காலமோ?**

இறைவா! இன்று வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் நாளைக்கு இருப்பார்கள் என்பது பொய்யே என்று சான்றோர் சொல்லும் கூற்றின் உண்மையை நான் அறிந்து கொள்வது எக்காலமோ?

36. இறைவனே அறிவைக் கெடுக்கும்மருந்தான கஞ்சா, அபின், கள்முதலியவற்றை உண்டு மயங்கி வாழாமல் நீ கொடுக்கும் அருள் அமுதமான பஞ்சாமிர்தத்தை பெற்று சுவைத்து இன்புற வாழ்வது எந்நாளோ?

37.தாயின் கருப்பையில் கருவானது விடுதலைபெற்று் பேரின்பத்தை அடைவதற்காக நான் உலகத்து இன்பங்களை விட்டொழிந்து உன் திருவடியை அடைவதும் எந்த நாளோ?

38. கடவுளே! நான் வயிற்றுப் பசிக்காக உணவைத்தேடி அன்புடன் கொடுப்பவர்களின் இல்லம் தோறும் சென்று, உடல் வருத்தி அலைதலை விடுவது தான் இனி என்றோ?

39.இறைவா! பொம்மலாட்டத்தில் ஆடும் நூலானது அறும் வரையிலும் பொம்மை ஆடும். பின் அறும்பொழுது பொம்மையும் விழுந்துவிடும்.அது போன்று எனது உடம்பிலிருந்து உயிர் போகும் முன்பே உன்னை போற்றி வழிபடும் பேறு எனக்கு வாய்க்க வேண்டும். அந்த நாள் இனி என்று வருமோ?

40. ஒன்பது துளைகளோடுநரம்பு என்னும் நூலால் கட்டப்பட்ட உடம்பென்னும் வீட்டை 'நான்' என்னும் செருக்குக் கொண்டு அலையாமல்,கடவுளான செம்பொருள் சிவத்தின்இயற்கை இலக்கணத்தை தெரிந்து கொள்வது எந்த காலமோ?

41. கழிவுகள் வெளியேற்றும் இந்த உடம்பை மறைத்துக் கொண்டு உனது திருவடியில் கலந்து நிற்பது எக்காலமோ?

42. இறைவா! இப்பிறவியில் நல்வினை தீவினைப் பயனால் பிறந்த உடலைப் பெற்ற நான் உடம்பான பொய்மையை மண்ணிலே போட்டுவிட்டு உன்னைப் போற்றி நின்று இன்புறுவது எக்காலமோ? அறியேன்.

43. உப்பிட்டு வைத்திருந்த மண்பாண்டம் அரிக்கப்பட்டு உடைவது போன்று உடம்பு அழிந்து உயிரானது மற்றொரு கருவிலே போகும் முன்னே சிவனின் அடிமையாவது எக்காலமோ?

**44. சேவைபுரிந்து சிவரூபக் காட்சி கண்டு**
**பாவைதனைக் கழித்துப் பரனடைவதுஎக்காலமோ?**

பெண்ணாசையை ஒழித்துவிட்டு திருக்கோயில்களில் தொண்டு செய்வதுடன்,சிவத்திருமேனியின் காட்சி கண்டு வழிபட்டுப் பயனான மேல் நிலையை அடைவது எந்நாளோ?

45. கார்முகில் கடல் நீரை எடுத்து சென்று நன்னீராக மாற்றி தருதல் போன்றுஇறைவனின் அருளால் மூன்று மாசுகளையும் நீக்கி மேலான அருள் வாழ்வைப் பெறுவது எந்த காலமோ?

46. சோற்றை நிரப்பும் பையாகிய உடம்பை சுமந்து கொண்டு பிழைப்பு நோக்கி அலைந்து மனம் வருந்தாமல், இந்த நாறும் அழுக்கான உடம்பை கீழே போட்டுவிட்டு உன்னை அடைந்து பெருவாழ்வு வாழ்வது எந்த நாளோ?

47. உடல் நிலையானது என்று கருதி மனம் வாடாமல் உடம்பில் உள்ள உண்மையான அழுக்குகளை களைந்துவிட்டு உன்னையும் உலகையும் அறிந்துகொள்வது என்ற காலமோ?

48. அடியேன்ஆசை என்னும் வலையிலும், பாச வலையில் அகப்பட்டு மனம் செத்துப் போகாமல், வழிபாட்டிலே கேட்கும் மணியோசையிலும் திருவிளக்கு சுடரிலும் மனம் கலந்து ஒன்றி நிற்கக்கூடிய காலம் என்று வருமோ?

49. வேதங்களால் காண முடியாத ரகசியம் இருக்கும் பெரிய

மெய்ப்பொருளானபேரொளியாம் வெட்டவெளியை நான் பார்த்துக்கொண்டிருக்கும் நாள்தான் என்று வருமோ? அறியேன்.

**50.புல்லாய் விலங்காய்ப் புழுவாய் நரவடிவாய்**
**எல்லாப் பிறப்பின் இருளகல்வது எக்காலமோ?**

இறைவனே! நான் புல்லாய், விலங்காய், புழுவாய், மனிதனாய் பிறந்தாலும் எந்த பிறவி எடுத்தாலும் மாசு எனும் இருட்டு ஒழிந்தபிறவியாக வேண்டும். இந்த வேண்டல்எந்த நாள் நிறைவேறுமோ?

51. ஆசையைத் தூண்டும் எந்த வகையான ஒரு பொருளும் என் நினைவிலே வந்து நிற்கக்கூடாது. என் உள்ளமும் உயிரும் பண்பட வேண்டும். அந்த நாள் என்று வருமோ அறியேன்.

52. செந்தாமரைக்காடு போன்ற அழகிய சுடர் மேனியுடைய கடவுளான தலைவரைத் தழுவிக்கொண்டு இன்பம் அடைவதற்கு எனக்கு ஆசையுண்டு. ஆதலால், எனக்கு பெண்ணுக்குரிய சிறந்த பருவமான தெரிவைப் பருவம் இப்போது வரவேண்டும். இந்த வாய்ப்பான நற்பேறு எந்நாள் வருமோ? அறியேன்.

53. தெரிவைப் பருவத்துப் பெண்ணின் பெண்ணியப் பண்புகளைப் போற்றிப் பாராட்டும் நிலையை அறிந்தும்,சிறந்த குருவை அறிவொளியால் நினைத்தும் கும்பிடும் நாளானது எந்நாள் வருமோ? அறியேன், இறைவா!

54. **வம்படிக்கும் மாதருடன் வாழ்ந்தாலும் மன்னுபுளி**
**யம்பழமும் ஓடும்போல் ஆவதினி எக்காலமோ?**

வீண்பேச்சுப் பேசிப் பொழுதைக் கழிக்கும் பெண்களோடு வாழ்கின்ற சூழ்நிலை ஏற்பட்டாலும், சிறந்த பயன்தரும் புளியம்பழமும் அதன் ஓடும் ஒட்டாமல் இருப்பது போல் நெருங்கிப் பழகாமல் இருக்க வேண்டும். அத்தகைய நாள் என்று வருமோ?

55. குளத்து நீரில் படர்ந்திருக்கும் தாமரை இலையின் மேல்வரும் நீர் ஒட்டாமல் உருண்டோடும். அது போன்று சுற்றத்தாரிடம் பற்று வைக்காமல் மனம் நீங்கியே தூரத்தில் இருக்க வேண்டும். அத்தகைய நாள் என்று வருமோ? தெரியவில்லை.

56. தன் மனைவி சிற்றின்ப களிப்பு விளையாட்டிலே தந்த இன்பத்தைச் சொல்லால் விரித்துரைக்கும் (வெளிப்படையான) அறிவுநிலை எனக்கு எக்காலமோ?வாய்க்குமோ? அறியேன்.

57. தழுவிக் கலக்கும் அயலான ஆடவன் வருகையை நோக்கி, இன்னும் வரவில்லையே என்று ஏங்கி உருகும் பெண் மனம் போல எனது உள்ளம் உன்னை நோக்கி உருகும் காலம் என்று வருமோ? அறியேன். இறைவா!

58. தன் கணவன் தந்த கலவி இன்பம் குறைவு எனக் கருதி மற்றோர் ஆடவனை மனதில் நினைப்பது போல் நான் இந்த மண்ணுலக இன்பத்தை வெறுத்து, உனது திருவடியின்பத்தையே நினைக்கின்றேன்.

59. கூடித்தழுவிப் பிரிந்துபோன பூங்கொம்பு போன்ற அழகுமிக்க பெண் ஒருத்தியைக் காண முடியாமல், தேடித் தவிக்கும் ஒருவனைப் போல என் உள்ளம் இறைவனை அடையும் ஏக்கத்திலே தவிக்கும் நாள்தான் எந்தநாளோ? தெரியவில்லையே.

60. ஒருவனுக்கு அழகிய பெண்ணின் மேல் எப்படி காதல் பிறக்கின்றதோ அப்படியே, இறைவா! உன்னைக் காதலால் கவர்ந்து கலந்திருக்க வேண்டும். அந்த இன்ப நாளை நான் என்றைக்குப் பெறுவேனோ?

61. இவ்வுலகில் வாழும் மாந்தர்களும் மற்ற உயிர்களும் முத்து உதிர்வது போல் கண்ணால் கண்ணீரை அருவியெனக்கொட்டும்படி சொன்ன கடவுளைப் பற்றி முழுமையாக ஆராய்ந்து அறிந்து கொள்வது எக்காலமோ? அறியேன்.

62. நான் உடம்பெல்லாம் கண்ணாய் உருகவும்,அன்புருகிப் பாயவும், உள்ளெலும்பெல்லாம் நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகவும் கடவுள் அருளும் இன்பத்தை

நுகர்ந்து சுவைக்கின்ற அறிவு (அனுபூதி) பெற வேண்டும். எனக்கு அந்த நாள் என்று வருமோ? அறியேன்.

63. இறைவா! அறியாமை என்னும் இருளிலே மூழ்கிக் கிடக்கும் இம்மண்ணில், நீரிலே தோன்றி அழியும் குமிழிபோல் நிலையில்லாத வாழ்வை விட்டொழித்து, பெருக்கெடுத்து ஓடும் உனது பேரின்ப அருள் வெள்ளத்தைப்பருகி அழிவின்றி வாழ்வதுஎந்த காலமோ? தெரியவில்லையே!

64. **ஆகம் மிகஉருக அன்புருக என்புருகப்**
**போக அநுபூதி பொருந்துவதும் எக்காலம்?**

இறைவா! நான் உலகிலே அன்பு நெகிழ்ச்சியை முதலில் காட்டி நல்லறிவை எடுத்துரைத்து, அதன் அடிப்படையில் துன்பம் என்னும் பாசவலையின் தொடர்பை அறுத்தொழிப்பது எக்காமோ?அப்பா!

65. ஒருவன்பிறந்த கருவின் பெற்றோர் - மரபு வழியறிந்து (நல்லவன் என்றும் கெட்டவன் என்றும்) ஆராய்ந்து கருத்தைச் செலுத்தாமல், பொதுநிலையில் ஆருயிர் இரக்கம் கொண்டு, எல்லோரிடமும் துன்பம் அடையும் பொழுது அவருக்காக அருவிபோல் கண்ணீர் விட்டு அழுது, அன்பு செய்ய வேண்டும். அந்த நாள் என்று வருமோ? தெரியவில்லை.

66. இறைவா!தெளிந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சிவன் நுகர்வில் பெறும் இன்பத் தேனானது,ஆன்ம அகமாகிய உயிரிலே பொழியப் பொழிய சுவைத்துக் கொண்டிருக்கும் நாள் என்று வாய்க்குமோ?

67. ஆறு ஆதாரங்களிலே, முதலாவதான மூலாதார வேரிடத்தில் அமர்ந்திருக்கும் ஓங்காரக் கணபதியின் தாமரை மலர் போன்ற திருவடிகளை அடியேன் போற்றிப் பணிந்து நிற்பது எக்காலமோ? தெரியவில்லை.

68. உடலில் மண்ணிடமாகிய இரண்டாம் வட்டத்தில் இருக்கும் படைப்போன் ஆகிய மலரவனை உடலுக்குள் கூர்ந்து கண்டிருப்பது எக்காலமோ?தெரியேன்.

69. மூன்றாம் ஆதாரமாகிய நீரிடமாம் உந்திச் சுழியில் பிறை போன்ற இடம் நடுவில் அமைந்துள்ள காக்கும் தெய்வமான திருமாலை உப்புநீர் பையருகே உணர்ந்தறிவதுஎக்காலமோ? அறியேன்.

70. நான்காம் ஆதாரமான நெருப்பு இடத்தில் (முக்கோணப்பை வடிவான நெஞ்சகத்தில்)அழித்தல் தெய்வமான அரன் இருப்பதை உணர்ந்து தொழுது நிற்பதும்எந்நாளோ?அறியேன்.

71. மூச்சுக்காற்று வந்து இயங்கும் இடமான ஐந்தாம் சக்கரம் (கோணம்) என்னும் மூச்சுக்குழலில் வீற்றிருக்கும் மறைத்தல் தெய்வமாக மகேச்சுவரை நன்கு கேட்டறியும் நாள் என்று வருமோ? அறியேன்.

72. புருவநடு இடமாகிய மனமென்னும் வட்டத்தில் வீற்றிருக்கும்அருளோனாம் சதாசிவத்தை அடைய வழி கண்டு, அவன் அருளைப் பெறுவதும்எக்காலமோ? அறியேன்.

73. தலையின் நடுவிடத்திலுள்ள அறிவுமன்றமான (மூளை நடுவில்) ஆயிரம் இதழ் தாமரை மலரிலே சிவந்த பேரொளியாய்த் தோன்றும்,செம்பொருளாகிய குருவின் திருவடிகளை உறுதியாகப் பற்றிக் கொண்டிருந்துகண்டு அடைவதும் எக்காலமோ? அறியேன்.

74. இறைவா! நீயே மண்ணுலகம் ஆனாய். அதிலே ஐந்து பூதங்களாகி அவற்றின் ஐந்து நிறங்களும் ( விண் – சாம்பல், காற்று – கருநீலம், தீ – சிவப்பு, நீர் – வெள்ளை, மண் - பொன்மை ) ஆனாய். நீயே எல்லாப் பொருள்களுக்கும் விதையாயும் வேராயுமாகி முளைத்தாய்! இப்பெருமை உடைய உன்னை நான் ஆராய்ந்து அறிவது எக்காலமோ? இறைவா!

75. இறைவா! யாராலும் கட்டுப்படுத்த முடியாத நிலையுள்ள ஐம்பொறி – புலனறிவுகளையும், மனம் - அறிவு - எண்ணம் - ஊக்கம்முதலானஉட்கருவிகளையும் இயங்காமல் ஒதுக்கிக் கடுமையான தவத்திலே ஆழ்ந்து, ஒளி இன்பம் நுகர்ந்து, உறங்குவதும் எனக்கும் எப்பொழுது வாய்க்குமோ?அறியேன்.

76. இறைவா!உள்ளத்திலே தோன்றும் வஞ்சனை - சூது - தீவினைகளாகிய கள்ளக் கருத்துக்களை எல்லாம் முழுமையாக வேரோடு அறுத்து ஒழிக்க வேண்டும். உள்ளத்திலே ஒளியான உனது கொள்கையை உணர்ந்து வாழவேண்டும்.

77. இறைவா!உடலெடுத்த பிறவியிலே, செருக்கும் சினமும் கொண்டு பகட்டுடன் வாழும் தொல்லையுடைய உடம்புடனே,பட்டு நுகர்ந்த இன்ப - துன்பங்களை எல்லாம் எவற்றால் வந்து சேர்ந்தனவென்று பகுத்து அறிகின்ற மெய்யறிவு எனக்கு எக்காலம் வாய்க்குமோ?

78. இறைவா! நான் அறிவு முதலிய காக்கும் கருவிகளைப் பெற்றிருந்தும் படுகின்ற துயரங்களைத் தடுத்து நிறுத்த முடியவில்லையே. என் விருப்பம் போல் அவற்றை எல்லாம் தடுத்து நிறுத்தக்கூடிய அருளாற்றலை நான் பெற வேண்டும்.

79. இறைவா! எனக்கு இயற்கையை அறியும் அறிவியல் அறிவை அருளவேண்டும். உடம்பிலே அமைந்த ஐம்பூதங்களும், ஐம்பொறிகளும், ஐம்புலன்களும், நான்கு உட்கருவிகளும் அவிந்து அடங்கி விட்டன. ஓசை, ஒளி ஆகிய வேறுபாடுகளும் உள்ளன. இவ்வாறு அமைந்துள்ள இயற்கைப் பொருட்களைப் பிரித்து அறியும் அறிவை அடைவதுஎக்காலமோ? தெரியவில்லை.

80. இறைவா! அறிவிலே தோன்றுகிற பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை என்றும் மூன்றும் என்னைத் தொடர்ந்து வந்து சுற்றாமல் இருக்க, அந்த ஆசைகள் மனதிலே ஊன்றிவிடாமல் முதலிலேயே வேரை அடியோடு அறுக்க வேண்டும். அறுக்கும் நாள்தான் எந்நாளோ?அறியேன்.

81. மிகவும் சிறிய இப்பிறவியில் பிறந்து, போற்றிப்புரிந்து வாழ்ந்து முடிவதற்கு முன்னேயே, அடுத்த பிறவி எப்பிறவியாக வாய்க்கும் என்பதை அறிந்து கொள்வது எப்போழுது இறைவா!

82. வாழ்வின் நடுவிலே மனதைப் பற்றியிருந்த மாயை என்னும் மாசு ஒழிந்துபோக, நன்மை செய்யும் மறைப்பாற்றலான "திரோதாயி" நல்வழி காட்டவும்,அருளோனான சதாசிவம் அருள் கொடுப்பது எக்காலமோ? தெரியவில்லை.

83. உயிராகிய நான், என்னை ஓர் அறிவென்று கருதாமல்,(உயிரை மறைக்கும்) ஆணவ - இருள் என்றே கருதியிருந்தேன். பின்னர், நடுவாக உள்ள தூய மாயை என்னும் ஆற்றலுடைய அழகி வந்து, தீமை செய்யும் மாசான இருளைப் போக்கித் தன்னையும் வெளிப்படுத்தி, அருள்பெறச் செய்வேன் என்று சொல்வதை, நான் எக்காலம் பெற்று உய்வேனோ? அறியேன்.

84. வேண்டாத தீய எண்ணங்களை மிகுதியாகக் கொண்ட மனம் என்னும் காட்டை 'நமச்சிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரமாகிய அரிவாளால் தொடர்ந்து வெட்டிப் போட்டு,தீயால் சுட்டொழிப்பது எந்த காலமோ?தெரிந்திலேன், இறைவா!

85. இறைவா! நன்மைக்கும் தீமைக்கும் அடிப்படையான இந்த மனமானது அடங்கியிருக்காமல் ஐந்து பொறிகளின் வழியே சென்று (வேடிக்கை பார்த்து) அலைந்து திரிந்து கெடுகின்றது. இந்த மனம் கெட்டு வெந்து போகாமல் (எச்சரிக்கையாய்) வாழ விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். இப்படி இனி இருக்கும் காலம் என்று வருமோ?

86. சினத்தின் இனமான கொலை முதலிய குற்றங்கள் இன்றி ஒன்றுபட்ட எல்லோரும் சினத்தை ஒழித்து, அதனால் மாண்புடன் அருள்பெற்று வாழ்வர். அந்தப் பண்பிலே நானும் சேர்ந்து வாழ்வது எக்காலமோ? இறைவா!

87. இறையுலகப் பேரின்ப வீட்டுக்காட்சி என்பது வாய்ப்பு கிடைக்காத மானமுள்ள அன்பர்க்கும் ஒருநாள் அவரது அரிய முயற்சியால் கிடைக்கும். எனவே, அத்தகைய

வீட்டுக்காட்சியைக் காண தவத்திலே விழி மூடாமல் ஒரே நாட்டத்தில் இருக்க வேண்டும். அந்த நாள் தான் இனி எனக்கு என்றைக்கு வருமோ?

88. இறைவா!மெல்லக் கொட்டாவி விடுதல் போல் ஆவியானது உடம்பென்னும் கூண்டை விட்டு விழுந்து ஓடிவிடும். அப்படி நான் இறக்கும் முன்னே, அருள்மாட்சியைப் பெற்று செந்திறத்தோடு செம்மாந்து வாழவேண்டும். அந்த இனிய நாளும் எந்நாள் வருமோ

89. எனது ஊனாலான உடம்பில் இருந்து உயிரானது போகும் முன்னே,'நான்' என்னும் அகச்செருக்குகரைந்து இல்லாமல் போக வேண்டும்.

90. இறைவா! அழிந்துபோகும் மாந்தர் பலர் வந்து, என்னை ஆணவத்தோடு தீய சொற்களால் பேசி உள்ளத்தைச் சுட்டுவிடும் முன்னே, என்னைச் சுட்டு நான் தூய்மையாகி ஒளி பெற வேண்டும். இறைவா! அந்த நாள் எனக்கு என்று வருமோ?

91. பேரொளிக் கடவுளே!நான்இந்த உடம்பாகிய தோலேணியைக் கொண்டு ஏறிப் பல நகர்களில் உள்ள கோயில்களுக்குச் சென்று இளைத்துப் போய் வருந்தாமல், தவமிருந்து குண்டலினி ஆற்றலால் நூலேணி போன்ற சுழுமுனை நாடி வழியே ஆதாரங்களைக் கடந்து, புருவநடு மேலே சென்று, தலை நடுவில் உள்ள அறிவு அம்பலத்தில் காட்சிதரும் செம்பொருள் சிவத்தை நோக்கிப் பார்க்க வேண்டும். அந்த நாள் என்று வருமோ அறியேன் இறைவா!

92. நான் கண்களை மூடிக்கொண்டும், மந்திரங்களை வாய்குள்ளே முணுமுணுத்துக் கொண்டும், மயக்கமடைந்து இருக்காமல், முழுத்தவங்கூடியிருந்து, அதிலே விளங்கும் அருள் புரியும் தாயான சிவசெம்பொருளைத் தழுவியபடிக் கண்ணை மூடியிருப்பது எக்காலம் வாய்க்குமோ?

93. கடவுள் காட்சியைக் காண வேண்டி நாடு நகரமெல்லாம் நடந்து நடந்து, கால்கள் நடக்க முடியாமல் ஓய்ந்து போக வேண்டாம். காற்றை மூக்குத் துளைகளில் ஏற்றியும் இறக்கியும், இடக்கலை - வலக்கலை என்னும் நாடி வழியே மூலாதார

இடத்துக்குக் கொண்டு சென்று மூலக்கனலை எழுப்பி, சுழுமுனை நாடியைக் கொண்டு தலைக்குச் சென்று கடவுள் காட்சியைப் பெறலாம். அதை காணும் நாள் எந்நாளோ?

94. ஒலியாகி நாத ஆற்றல் வெளிப்படும் குண்டலினிப் பாம்பின் படத்தை அகத்தே நினைந்து, அவ்வாற்றலை மூலக்கனலால் எழுப்பி, அதனை சுழுமுனை நாடி வழியே மேலே செலுத்தி தலைத்துளை என்னும் பிரமரந்திரக் கதவைத் திறந்து, அறிவம்பலத்திலே கடவுள் காட்சியைக் காணும் காலம் எந்நாள் வருமோ?

95. இடமூக்குத் துளைக் கலைக்கும் வலமூக்குத் துளைக் கலைக்கும் நடுவே தோன்றி இயங்கும் சுழுமுனை நாடியின் செயல் தடையில்லாமல் நடைபெற்று மேலே சென்று வெற்றி தரவேண்டும். இந்த வெற்றியை நான் காணும் நாள் எந்நாள் வருமோ?

96. மூலாதாரத்தில் உள்ள கனலை மூச்சுக்காற்றால் எழுப்பி, சுழுமுனை நாடி வழியே அக்கனலை மேலே கொண்டு சென்று, புருவநடு விடத்தையும் தாண்டி, தலைநடு அம்பலத்தின் மேலே வான் நிலாவில் தோன்றும் அமுதமான அருட்பாலை வாங்கி உண்டு பசி தீர வேண்டும். இறைவா! அப்படி நான் பசியாறுவது எந்த காலமோ? தெரியவில்லையே.

97. உடலாகிய வெளியிடத்துக்குள்ளே மூலாதாரத்தில் தோன்றும் கனல் காற்றும் சுழுமுனை நாடியும் சேர்ந்து ஒரு குதிரை போல் மேலே சென்று, ஒரே வெளியான கடவுளை (வெட்டவெளியை) அடைந்து அவனோடு இருப்பது எக்காலமோ? அறியேன். அதற்காக ஏங்குகின்றேன்,

98. கடவுளாகிய மெய்ப்பொருள் விரித்துரைத்துப் பேசுகின்ற பல கலைநூற் பொருள்களுக்கும் எட்டிப்பிடிக்க முடியாத பேரொளியாவான். அவனோடு உறவாடி வாழ்ந்து தவங்கூடுவதுஎக்காலமோ? அறியேன்.

99. **மலமும் சலமுமற்று மாயையற்று மானமற்று**
**நலமும் குலமுமற்று நானிருப்பது எக்காலம்?**

என் உடலிலே கழிவுப் பொருள்களும், தீமை செய்யும் மாயையும், மான உணர்ச்சியும், செல்வ வளமும் நலமும்,நற்பண்பான குடிப்பிறப்பும் அற்ற நிலையில், நான் தனித்திருந்து தவங்கூடி,அருளொளி பெறுவது எக்காலமோ?

100. ஓடாமல் மனநினைவாலே ஓடி உலகை எல்லாம் சுற்றித் தேடாமலே, கடவுள் என்னிடம் வரவும், என்னுள்ளேயே கண்டு வழிபடக்கூடிய காலம் என்று வருமோ?

101. நான் அறியாமை என்னும் இருளை விட்டொழித்து, ஒளிமயமான அருளறிவை முழுமையாகப் பெறுவதோடு, அதன் பயனான மெய்யறிவு வாழ்வென்னும் பேரின்ப வீட்டையும் பெறவேண்டும். அந்த நாள் என்று வெளிப்படுமோ? இறைவா!

102. உலக வாழ்வில் மக்களிடையே சினந்து அச்சுறுத்தால் மகிழுமாறு இனிமையாய்ப் பேசி வெல்ல வேண்டும். இறைவனிடம் சிந்தனையைச் செலுத்தி சொல்ல முடிந்த அளவுக்கு சொல்லிப் போற்றவேண்டும். இந்த நெறிக்கான வாழ்வு எனக்கும் என்றைக்கு வாய்க்குமோ?

103. மெய்ப்பொருளான கடவுளை உள்ளகத்தில் இருக்க வைத்து, மேலான ஒளி வாழ்வை நோக்கி ஒருமை எண்ணத்தில் பற்று கொள்ள வேண்டும். நான்காவது பேறான முடிவில்லாத பேரின்ப வீட்டை அடைய வேண்டும். இந்த நாள் தான் என்று வருமோ? ஏங்குகின்றேன்.

104. கடவுளைப் பற்றி எண்ண முடியாத அளவுக்கு மனம் எண்ணி எண்ணி கற்பனைசெய்து வீண் போகாமல், உள்ளத்துக்குள் ஒளியாக இருப்பவனை உள்நோக்கியபடி நாடிநாடி ஆசை கொண்டால், அவன் கண்ணாடிக்குள் தெரிவது போல் காட்சியளிப்பான்.

105. நான் ஓர் அறிவு வடிவம் என்பதை அறிந்து கொண்டு, அத்தகுதியால் என் தலைவனாகிய கடவுளோடு உறவு கொண்டிருக்கும் இயல்பை அறிந்து கலந்திருக்கும் வாய்ப்பைப் பெறுவது எக்காலமே? அறியேன், ஐயா!

106. உடம்பில் உள்ள ஆறு ஆதாரச் சக்கரங்களைக் கடந்து தலைமேல் உள்ள அறிவம்பலத்தில் காணும் இன்பப் பேரொளியை, என்னில் தனியே (வேறாக) கண்டு போற்றி, நான் பெற்று, இறவாமல் வாழ்வது எந்நாள் வரும்?அப்பா!

107. மனிதா! எண்ணிச் செயல்படுக. அறிவு வடிவான உயிருடைய மனிதன் செருக்காலும்தீய மாயையாலும்கெட்டழிந்து போகக் கூடாது! வாழும் காலத்திலேயே இறைவனைக் கண்டு கண்டு இன்புற்று வாழ வேண்டும்.இவ்வாழ்வை நான் பெறுவதும் என்நாளோ?

108. மனித உடம்பானது பிறக்கும்போதே செருக்கு (ஆணவம்), வல்வினை, மாயை என்னும் மூன்றும் சேர்ந்தேபிறந்ததாகும். இந்த உடம்பில் இருந்து அந்த மூன்று மாசுக்களும் அழிந்து, வல்வினை இருப்பும் தொலைந்து நான் வாழ்வது எக்காலமோ?

109. இறைவா! எனது பழைய வினையிருப்பு முழுவதையும் தீர்த்து அருள் செய்ய வேண்டும். அதற்காக நீ உன் காட்சியான அருவம், உருவம், அருவுருவம் என்னும் மூன்று நிலைகளையும் வெளிப்படுத்தியருள வேண்டும். அப்படி நீ அருளும் காலம் என்றைக்கு வருமோ?

110. இறைவா!உன் திருக்கடைக் கண்ணின் அருளொளி என் ஊனக்கண்ணிலேபாய்ந்ததையும், அதன் நோக்கத்தை நான் அறிந்து கொண்டதையும், விண்ணிலே விளக்காய் தோன்றும் சுடர்களிலே நீயே இருக்கிறாய் என்று நான் உணர்ந்ததையும் வெளியே நான் எடுத்துரைக்கும் காலம் என்றைக்கு வருவோ?

111. கடவுள் எனக்குத் தம் திருவுருவைக் கனவில் கண்டாற்போல் காட்டி மகிழ வைத்துச் சென்று மறைவதால், அந்த காட்சியை நினைவில் கொண்டு அகநோக்கைப் பரவெளியான அருள்வெளியிலே செலுத்துகின்ற நாள்தான் என்று வருமோ?

112. இறைவா! நீ வந்து என்னிடம் “யார்” என்று வினவியதையும், எனக்கு உண்மையறிவு வந்தவுடன் நான் உன்னைக் கண்டு உணர்ந்ததையும், நீ “என்னைப்பார்” என்று பணித்ததையும் பகுத்தறிவோடு சிந்திக்கும் காலம் என்று வருமோ? அறியேன்.

113. தவநிலையில் நினைக்கும் போதெல்லாம் அகக்கண்ணிலே நிறைய ஒளிகாட்டும் கடவுளைச் சுழுமுனை நாடியின் மேல் கண்டு இன்புறுவதும்எக்காலமோ?

114. மூன்றுபாழாகிய இயற்கை மாயை, தூயமாயை, தூவாமாயை என்னும் மூன்றும்கெட்டு மறையவும், அடிப்படையான ஓசை, ஒளி ஆகியவை மறையவும், ஒளி வடிவான கடவுளை வெட்டவெளியென்று கருதி அதனிடம் அன்பு செய்வது எக்காலமோ?அறியேன், அப்பா!

115. உலக ஆசைப்பொருள்கள் அழிவதால் அவற்றை வெறுத்துவிட்டு, அறிவுத் தெளிவோடு, அழியாத பொருட்களையே நீ என்று மெய்ப்பொருளாய்க் கருதிக்கொண்டு, போற்றி நிலைத்திருப்பது எக்காலம்?

116. ‘ய’ என்னும் உயிரை உணர்த்தும் எழுத்திலே,‘வ’ எழுத்து உணர்த்தும் அருளாகிய சத்தியும்,‘ம’ எழுத்துக்குறிக்கும் மாயை முதலான மாசுகளும்,‘சி’ எழுத்துக் குறிக்கின்ற ஒளியான சிவக்கடவுளும் அடங்க நிற்க நான் காண்பது எந்நாளோ?

117. வகர – மகர –சிகர - யகர எழுத்துக்களின் மெய்ப்பொருள் மாண்புடன் சிறந்திருக்கவும், அகச்சிறப்பிலேமனம் ஒன்றிஒருமையுற்றுத் திகழ்ந்து, அழுத்தத்துடன் அன்பு செலுத்துவதும் எந்நாளோ?அறியேன்.

118. இறைவன் உருவமற்றவனாயும்உருவமுடையவனாயும் இருப்பதோடு முதலும் முடிவும் அற்றவனாயும் உள்ளான். அப்பெரிய கடவுள் குரு வடிவில் வந்து அடியேனை ஆண்டு கொள்வது எக்காலமோ? அறியேன்.

119. என்னை,நான்தானென்று கண்டுகொண்ட கடவுளை நான் தெரிந்து கொள்ளவில்லை.அப்படி தெரிந்து கொள்ளாத காலத்திலும், கடவுள் தானென்று தன்னைக் காட்டிக் கொண்டான்.

120. காணும் பொருட்களை எல்லாம் என் அறிவுக்குரியவை என்றே முதலில் கண்டேன். பின்பு, அவற்றின் படைப்பு நுட்பத்தை எல்லாம் எண்ணி ஆராய்ந்தபோது தான் அவையெல்லாம் இறைவன் கலந்திருக்கும் கடவுள் மயம் என்று கருதினேன். நான் இந்த உண்மையை என்றென்றம் சார்ந்திருப்பது எக்காலமோ?

121. அடிப்படைப் பொருளான தீயிலிருந்து ஞாயிறானஒளி தோன்றுவது போல் உடம்பாகிய வெளியான தலைநடுவிலே அமைந்த ஆன்ம உயிரில் அறிவொளி மன்றம் தோன்றும். இந்த இயற்கை உண்மையை நான் அறிவது எக்காலமோ?

122. தவநிலையில்,ஒளியான கடவுளை உயிரிலே வைத்து, பேசாத ஒடுங்கிய நிலையடைந்து, பின்பு புருவநடுவிலே அருட்காட்சி கண்டு போற்றுவது எக்காலமோ? அறியேன்.

123. காந்தமானது தன் வலிமையை மறைவாக வைத்துக் கொண்டு இரும்பைத் தொட்டு இழுத்துக் கொள்வது போல் இறைவா! நீ என்னைப் பாய்ந்து (மின்னலைப்போல்) பிடித்து இழுத்துக்கொண்டு உனது திருவடியிலே வைத்துக்கொள்வது எக்காலமோ?

124. எனது உயிரானது காதல்பித்துக் கொண்டு, ஓங்காரக்குடிலையென்னும் நாதமான அறிவுமன்றுக்குச் சென்று அங்கே தவம் முற்றியிருந்து, செத்தவரைப் போல் பேச்சு நிலையற்றுக் கிடக்கும் நாளும் என்று வருமோ?இறைவா!

125. பற்றுகள் ஒழிந்த தகுதியில், கடவுளை உயிரில் வைத்து, ஒளியில் ஒளிகலப்பதைப் போலிருந்து தவம் செய்து, உடம்புக்குள்ளிருக்கும் தசையோடுகூடிய செவ்வெலும்பு வெள்ளெலும்பாய் வலுவிழந்து, உயிர் அடங்கிய பிணம் போல் ஆகும் நிலையடைவது எக்காலமோ?அறியேன்.

126. அறநூற் சான்றோரான கபிலர் படைத்த நூலிலே சொன்னபடியே, (மக்களில் நால்வகைப் பிரிப்பான அரசர், அந்தணர், வணிகர், வேளாளர்

என்பவை)ஒற்றமையை குலைக்கும் சாதிவகையில்லாமல் அன்பையும் நலப்பண்பையும் போற்றி வாழ்வது எக்காலமோ?இறைவா!

127. கள்ள உள்ளத்தால் செய்யும் சூதையும் களவையும் தொடர்ந்து செய்யும் பிறவியையும் சுட்டு அழித்திடவும், உயிர் வாழ்வுக்கு வேண்டிய காற்றை ஊதிக் கொண்டிருக்கும் துருத்தி போன்ற உடம்பை மண்ணிலே போட்டு விடவும் எந்த நாள் வருமோ!

128. மனிதப் பிறவியான நான், உலகப் பொருள்களின் மேல் கொள்ளும் ஆசையென்னும் வலையிலும் பாசம் என்னும் பசையிலும் அகப்பட்டு ஒட்டிக்கொண்டு அழிந்து போகாமல், கடவுளான நாத ஓசையிலும் செம்மணிக்கல்(மாணிக்கம்) போல் ஒளிரும் திருவிளக்கிலும்ஒன்றிக் கலந்து வாழ்வதுதான் எந்த நாளோ?

129. கல்லாகவும், மலையாகவும், மரமாகவும், நீரில் வாழும் மீனாகவும், பறக்கின்ற பறவை வகையாகவும் புல்லாகிய பயிராகவும் பிறந்த பிறவியெல்லாம் போதும் போதுமென்று உயிரனைத்தும் கூறுவதும் எந்நாளோ?

130. பயன்படுத்தும் ஆசையில் எந்த வகைப் பொருளையும் வேண்டி அவற்றிலே பற்றுக் கொள்ளாமல், உள்ளம் பண்பட்டு உன் அருளைப் பெறுவதிலேயே வேட்கை கொண்டு நோக்கியிருப்பது எக்காலமோ? இறைவா!

131. உலக உண்மையியற்(தத்துவம்) பொருள்கள் எல்லாம் இயற்கை அருள் சத்தியால் படைக்கப் பெற்று உயிர்களோடு பொருந்திச் சுழன்றே வாழ்கின்றன.
அத்தகையதுாரான அருள் சக்தியோடும்வேரான உயிர் இசைந்து ஒன்றி வாழ்ந்து விளங்குவது தான் எனக்கு எக்காலமோ? அறியேன்.

132. பாச வடிவான உடலில் ஏறிப் பாயும் நாத ஓசையான ஓங்கார மந்திரப் படத்தை உடலில் அடிப்படையான ஒன்றான உயிரில் இருத்தி வைப்பதும் எந்நாளோ? ஐயா!

133. மனிதன் ஒப்பற்ற இன்பத்தைக் காட்டுகின்ற மிகச்சிறந்த ஒளியறிவென்னும் பரப்பிலே கற்றுத்தேர்ந்து, கடவுள் அருளும்பேரின்ப வீட்டைக் காண்பதோடு அதை அடைய வேண்டும். அந்த நாள்தான் எனக்கு எந்த நாள் வாய்க்குமோ?

134. எனக்கு மெய்யறிவைப் புகட்டும் பொருட்டு வந்து, என் நெஞ்சிலே உரைத்தவற்றை எல்லாம் நான் முழுமையாய் உணர்ந்துகொண்டு, கடவுளைப் புகழ்ந்து போற்றிப் பாடுவது எக்காலமோ? அறியேன்.

135. ஆராய்ந்து உணரக்கூடிய கலைநூல்கள் பலவற்றையும் முழுமையாக நன்கு ஆராய்ந்து கண்ட பின்னர் எனக்கு உண்மை புரிந்தது. அந்த உண்மை, இறைவா! நீயே எக்காலமும் நிலையாக இருக்கக் கூடிய (எவராலும் காண இயலாத) மெய்ப்பொருள் என்பதே! இந்த உண்மையைக் காண்பது எந்நாள் வாய்க்குமோ?

136. எனக்கு அருள்புரியவே திருவுள்ளம் கொண்டு, தொண்டர் குலம் அளித்த என் உயிர்த்தலைவனை எப்பொழுதும் பிரியாமல் கலந்தே இருந்து என் பிறப்பை ஒழிக்க வேண்டும். அந்த நாளையே நான் எதிர்பார்த்து ஏங்கியிருக்கின்றேன்.

137. இறைவா!கோயில்களிலே சிலர் மருளாகிய மயக்கம் வந்து, தடியைக் கையில் கொண்டு குதித்து ஆடுவர். இவரைப்போல நான் உன்னிடம் கொண்ட காதலால் பித்துப் பிடித்தவனாகி உனது அருளைப் பெற்று வாழ்ந்திருப்பது எக்காலமோ? அறியேன்.

138. நான் சாகாமல் செத்தது போல் பொறிபுலன்களும் உட்கருவிகளும் ஒடுங்கியிருந்து, இறைவனாகிய குருவின் பொன்னொளி வீசும் திருவடியின் கீழே அமர்ந்து, உள்ளம்தவ வெப்பத்தால் வெந்தது போலிருக்கும் நாள் எனக்கு என்று வருமோ?

139. நான் என்னை அறியாமல் இருக்கவும், நீ என் உயிரை உன் அருட்கயிற்றால் பிடித்து ஆட்டுகின்றாய். எனவே, நான் உனது ஆற்றலை எல்லாம் அறிந்து கொள்ளத் தவம் செய்யும் நாள் என்றைக்கு வருமோ? ஐயா!

140. உயிர்த் தலைவனான இறைவன், உள்ளம் அறியாமலே உள்ளத்தில் ஒளித்துக் கொண்டிருக்கிறான். அவனை, இருண்ட கள்ள மனமானது தெளிந்து தூய்மையாகி கண்ணாடி போல் ஆனால் காண முடியும். அந்த நாளையே நான் எதிர்பார்க்கின்றேன்.

141. பல நூல்களைப் புரிந்து படித்தும் பணிந்தும் காண முடியாமலும், வாய்விட்டு அழைத்தும் வர முடியாமலும், வழிபாடுகள் பல செய்தும் வந்து தோன்றாமலும் இருக்கின்ற மெய்ப்பொருளான கடவுளை நான் எக்காலந்தான் காண்பேனோ? ஐயா!

142. தவநிலையில் மூச்சுப் பயிற்சி செய்யும் பொழுது,பன்னிரெண்டு அங்குலம்நீட்ட அளவே உள்ள இழுத்த காற்றென்னும்குதிரையை வெளியே விட வேண்டும். அப்படி செய்யும் நிலையில் முறையாகத் தப்பாமல் காற்றை, இரண்டு மூக்குத் துளைக்குள் இடக்கலை – வலக்கலை என்னும் சங்கிலியால் பிணைத்துக்(கும்பகம் செய்து) கட்ட வேண்டும். இவ்வாறு நான் செய்யும் காலம் எந்த நாள் வருமோ?

143. மூக்குத்துளை இரண்டின் வழியே போய் வரும் இடக்கலை நாடி - வடக்கலை நாடி ஆகிய இரண்டு நாடிகளின் நடுவே நடுநாடி என்னும் சுழுமுனை சேர்ந்து, தலைக்கு மேலுள்ள அறிவம்பலத்தில் சென்று அங்கே நடனம் ஆடுகின்ற இறைவனின் இரண்டு திருவடிகளை அடைந்து அருள்பெற்று அமர்ந்திருப்பதும்எக்காலமோ?

144. பால் போன்ற தூய்மையான மனித உயிரை பண்படுத்திய நிலையில், இறைவனிடம் சேர வைத்துப் பாராட்டிப் போற்றி,அவ்வுயிராகிய பசுவை அந்த இறைவனிடத்திலேயே ஆர்வமுடன் கட்டி வைப்பது எக்காலமோ? அறியேன்.

145. மனத்தைப் பலவிடங்களிலும், காட்சிப்பொருள்களிலும் ஆசையால் பாயவிட்டுக் கெட்டுப்போகாமல், தலைமேல் பெருஞ்சுடரான கடவுள் மலையின் நடுவே செலுத்தி, அந்த அருளமுதைப் பெறுவது எக்காலமோ? ஏங்குகின்றேன்.

146. உலகவாழ்வில் ஆசை தரும் இன்பக்கடலைக் கடந்து சென்று, கரையேறி (விடுதலை அடைந்து) கடவுள் பேரொளியைக் காண்பதற்கு, உள்ளத்துக்குள்ளேயே அருட்கனலை வளர்த்து வெற்றி பெறுவது எக்காலமோ? அறியேன்.

147. வானிலே தோன்றும் அடிப்படைச் சுடரொளியான தீ – ஞாயிறு - திங்கள் என்னும் மூன்றையும்,தவமிருப்பதாலே உடம்பிலே தீயை நெற்றி நடுவிலும், கதிரவனை வலக்கண்ணிலும், திங்கள் ஒளியை இடக்கண்ணிலும் காண்பதோடு, இதயமென்னும் தலைநடுவிலுள்ள அறிவம்பலத்திலே இறைப்பேரொளியான திருநடனத்தை நான் காணவேண்டும். அந்த நாள் என்று வாய்க்குமோ?

148. வடமொழியில் அமைந்த நான்கு மறைகளிலும் சொல்லப்படும் கொள்கை அறிவுகளை எல்லாம் கடந்த நிலையிலே, உலகப் படைப்புக்கெல்லாம் அடிப்படையாக அமைந்த ஓசை - ஒளி என்னும் நாத உண்மையின் வேராகவுள்ள கடவுள் ஒளியிலே அடியேன் கலந்திருப்பதும் எக்காலமோ? அந்த வாய்ப்பை அறியேன்.

149. உயரத்தில் விடப்பட்ட பட்டமானது அறுந்து தனியே விழுந்துவிடவும், நூல்கயிறு மட்டும் பறந்தாடும் நிலைபோல் உலகப் பொருள்களின் மேல் கொண்ட பற்றற்று, உள்ளம் வெட்ட வெளியாகி இறைவனிடம் பற்றுக்கொள்ளும் நாள்தான் என்று வருமோ?

150. எட்டு படிநிலைகளான (இயமம், நியமம் முதலானவை) தவத்திற்கும் அப்பாலுக்குஅப்பாலாய் அண்ட கோடிகளைக் கடந்து திகழும், நமக்குக் கிடைத்தற்கரிய மெய்ப்பொருளை அடைவதுதான் எப்பொழுதோ? அறியேன்.

151. மனித உடலும் உயிரும் ஒட்டாமலும்ஒட்டியுமே வாழ்கின்றனர். இத்தகைய உயிரைப் பிரித்து எடுத்து, அதனை, உயிர்கள் எட்டிப் பிடிக்க முடியாமல் இருக்கும் பழம்பதியான கடவுளைப் பிடித்தற்காக இங்கு ஏணியாக வைக்கமுடியுமா?அப்படி நான் என்னுயிரை வைத்துப் பிடிப்பதுதான் எக்காலமோ?

152. பொருள்களிடத்திலும் உறவு உயிர்களிடத்திலும் வைத்திருக்கும் பாசமாகிய பற்றுகளை நீக்கிவிட்டுத் தூய்மையாகி, உயிரைக் கடவுளிடம் ஒப்படைத்து விட்டு, அந்தக் கடவுளையே உயிரில் கொண்டு எப்போதும் நினைந்திருப்பது எக்காலமோ?

153. நான் கடைப்பிடிக்கின்ற, சமயச் சார்பான ஒழுக்கத்திலும் பழக்க வழக்கங்களிலும் வைத்திருக்கும் நேயத்தை மறந்துவிட்டுக் கடவுளை மட்டும் மனத்தில் வைத்துக் கொண்டு, வாய் பேசாமலிருக்கும் மெய்யறிவு நிலையைப் பெற்றிருப்பது எக்காலமோ?

154. பல்லாயிரங்கோடி பேரண்டங்களையும் சிற்றண்டங்களையும், எண்ணற்ற வகையான உயிரிகளையும் கடவுளே படைத்தான் என்ற உண்மையை அறிவதும் எக்காலமோ? தெரியவில்லையே.

155. உலகத் தொடக்கத்தின் முதலெழுத்தாகி நின்ற ‘அகர’மென்னும் ஒளிவீசும் எழுத்தை,ஓதி – பொருளுணர்ந்து - உயிரிலே வைத்து நினைந்து உருகும் நாள்தான் எனக்கும் எந்நாள் வருமோ? இறைவா!

156. கற்பனையாகப் படைக்கப்பட்ட இறையியல் – உண்மையில் - இறையன்பியல் பற்றிய பயன்தராத நூல்களைச் சுட்டழித்தும், நான்கு மறைகளையும் அவற்றிலுள்ள ஒவ்வாத கொள்கைகளைப் பொய்யாக்கியும், ஒருவன் தனது உயிராகிய ஆன்மாவின் இலக்கணத்தைக் கண்டுணர்ந்து அதன் அருள்நெறியிலே வாழ்ந்து வருகிற துயரங்களை ஒழிப்பது எக்காலமோ? அறியேன்.

157. இரவும் பகலும் எனது வாழ்வை வழிநடத்தும் அறிவை, ஒளியறிவானமெய்யறிவால் அறிந்து கொண்டு சொல்லும் நெறியை மறந்து, உணர்வு ஒடுங்கிய நிலையில் தவஉறக்கம் கொள்வது எக்காலமோ?

158. வாழ்கின்ற இயங்கும் உயிர்களிலும் இயங்காத உயிரற்ற பொருள்களிலும் (எள்ளுக்குள்ளே எண்ணெய் மறைந்திருப்பது போல)மறைமுடிவான கடவுள் மறைந்திருந்து அருள்வதை நான் அறிவது எக்காலமோ? தெரியவில்லை.

159. கடவுள் உலகிலே படைக்கப்பட்ட அனைத்து உயிர்களின் ஊனாகியும்,அவ்வூனிலேஉயிரறிவாகியும் நிலைத்திருப்பதோடு, அனைத்து உலகங்களையும் படைத்த தான் ஒருவனாகியும் திகழும் இயற்கையுடையவன். அப்பெரிய இறைவனை அடியேன் எந்தநாள் முழுமையும் அறிவேனோ?

160. இறைவா! நீ என்னைவிட்டுப் பிரியாமல் எனக்கே உறவாகி இருக்கிறாய்.அதைப் போல் நான் உன்னைவிட்டுப் பிரியாமல் திருவுள்ளம் இசைந்து உறவாடுவது எக்காலமோ?

161. ‘இப்படியன் - இந்நிறத்தன் – இவ்வுருவினன்’ என்று யாராலும்கண்டு சொல்ல முடியாத எல்லையற்று உயர்ந்த பொருளாய் உள்ள கடவுளை, நான் அறிந்து சொன்னதாக உலகம் சொல்வதை நான் கேட்டறிந்து சொல்வதும் எக்காலமோ?

162. மனத்தை ஒருவில்லாக வளைத்து ஒருமைப்படுத்தி, உயர்ந்த ஐந்து பொறிகளையும் கயிறாகச் சேர்த்துக்கட்டி, எனது கூரிய அறிவை அம்பாகப் பொருத்தி எய்து, கடவுளைப் பெறுவது இனி எக்காலமோ? தெரியவில்லை.

163. என் உயிரின் ஆணவ இருளை இறக்கச் செய்து, இறைவனுக்கு என்னை ஒப்பாக்கி, அறிவு வெளியான மன்றில் ஒளிந்திருக்கும் அக்கடவுளைக் காணுமாறு அருளியதை நான் என்று உணர்வேனோ?

164. ஆற்றுநீரிலே தோணியைச்செலுத்துதற்காகத்‘தோணிக்காரன்’ தோணியை மூங்கில் கம்பைக் கொண்டு தள்ளிவிட்டுத் தள்ளிவிட்டுச்செலுத்தல் போன்று இறைவன் மனித வாழ்வையும் மற்ற உயிர்களின் வாழ்வையும் நடத்துகின்ற ஒப்பற்ற ஓவியமான நுட்பத்தை நான் அறிந்து கொண்டு வியப்பது எக்காலமோ?

165. இறைவா! நான் குறிக்கோளோடு நிலையாக நின்ற தன்மை தவறாமலும், நினைவிலே மற்றொரு எண்ணம் வந்து சேராமலும் கொண்டிருந்த கொள்கை,பிறவியினின்று விடுதலை (முக்தி) பெறுதல் ஆகும். அதை நான் உயிர்கலந்து அறிவதும் எந்தக் காலமோ? தெரியவில்லை.

166. தவநிலையில் நான், பொன்னொளியும் வெள்ளியொளியும் போன்ற அப்பன் அம்மையின் அழகிய திருவடிகளை மனதில் பதித்துக்கொண்டு, சுடரொளி வீசும் தலைநடுவான அறிவுமன்றில் உயிரைப்பாயவிட்டுக் கண்டு இன்புறுவது எக்காலமோ?

167. மண்கூட்டில் அடைக்கப்பட்ட ஒரு புழுவானது, குளவியுருவம் பெற்றுப் பறந்து செல்லுதல் போல் நான் வீடென்னும் கொள்கையில் அடைபட்டு, அது வெற்றிபெற இறையருளை வேண்டுவதும் எக்காலமோ? தெரியவில்லை.

168. பெருங்கடலின் ஆழத்திலே மறைந்து ஒளிந்திருந்த ஒரு பெருநெருப்பு எழுச்சிகொண்டு புறப்பட்டு வந்தாற்போல் என் உடம்பிலே உள்ளத்தில் ஒளிந்திருக்கும் சிவக்கடவுளென்னும் செம்பொற் பேரொளி தோன்றி வெளிப்பட்டு அருளொளி தருவதும் எப்பொழுதோ? அறியேன்.

169. கதிரவனது செஞ்சுடரொளி, எப்படி அனைத்து அண்ட உலகங்களையும் போர்த்தி மூடிப் பொன்மயமாக்குகின்றதோ அதுபோல் கடவுளின் அருள்பொழியும் திருவடியில் நான் கலந்து மூடி இருப்பதும் எக்காலமோ?

170. ஒரு பொற்கட்டியிலே பல்வகை அணிகலன்களைச் செய்து படைப்பது போல் இறைவா! படைத்த இயற்கை மாயையால் உருவான பிறவிகள் கோடி கோடியாக உண்டே! இப்படி நீ படைத்த பிறவிகளிலே நானும் ஒருவன் என உணர்ந்து ஒடுங்குவதுஎந்நாளோ?

171. இறைவா! நான் ஒரு நாய்ப்பிறப்பை விட கீழான பிறவியாய்ப் பிறந்தேன். அதனால் பல துன்பங்களை அடைந்தேன்.அத்துன்பங்கள் அற்றொழிய, நான்

உலையிலுருகும் பொன்னொளிபோல்விளங்கி மெய்யறிவிலே திகழ்வதும் எக்காலமோ? அறியேன்.

172. சூரியகாந்தக் கல்லின்சூட்டொளியால் பஞ்சு எரிவதுபோலக் கடவுளின் காட்சி கிட்டும்பொழுது உயிர்மாசு நீங்கப்பெற்று அருளும் கிடைக்கும். அப்படி நான் அருளை எந்நாள் அடைவேனோ?

173. கொல்லனின் நெருப்பு உலையில் இரும்பை வைத்துப் பழுக்கக் காய்ச்சுவது போல் இம்மாசான உடம்பைப்(புடம்போட்டதுபோல்) தூய்மை செய்து, அருளுடம்பாகஆக்கப்பெற்று இறையருளான கரும்பின் சாற்றைச் சுவைத்து உணர்ந்து பெருவாழ்வு பெறுவதும் எக்காலமோ?

174. கடலில் வாழும் ஆமை கரையிலே வந்து முட்டையிட்டு மணலைத் தோண்டி மறைத்து வைக்கும். பின், முட்டை கருநிலை பெற்றபோது, அதை நினைக்கவே குஞ்சு பொரிக்கும். இந்த இயற்கை போன்று இறைவா! நான் உன்னை நினைக்க நினைக்க நீ வந்து எனக்கு அருள்புரிய வேண்டும்.

175. இறைவா! வீட்டிலேயே இருக்கும் ஒருவர் அதை விட்டுவிட்டு வெளியில் பாய்ந்து வருதல் போன்றுதவம் முற்றியவர் “பிராத்தி” என்னும் தவவலிமையைக் கொண்டு கூடுவிட்டுக் கூடுபாய்வர். அத்தகைய பேராற்றலை நான் அறிந்து கொள்வது எக்காலமோ?

176. தயிரைக் கடையும்போது வெண்ணை திரண்டு தனியே நிற்கும். திரும்பவும் மோரில் கலக்காது. அதேபோன்று என் தீவினை - மாசுக்கள் எல்லாம் தீர்ந்து, மீண்டும் ஒட்டாமல் இருந்து தூயவனாகி உன்னைக் காணும் காலம் வரவேண்டும்.

177. ஒளிச்சுடரானது இருளை எல்லாம் மறைத்தொழித்து ஒரே ஒளிமயமாக இருப்பதுபோல் என் அகத்திலுள்ள அருளை, ஆணவ இருளானது மறைத்தொழிக்காமல் விலகி ஒழிய வேண்டும். இறைவா! இந்த அருளைநான் பெறுவதும் எக்காலமோ?

178. வானிலே தோன்றும் மின்னல் அந்த வானிலேயே மீண்டும் சேர்ந்து உறைவது போல் என்னுள்ளே இருக்கும் கடவுளை என்னுள்ளேயே ஆராய்ந்து நான் அறிவதுதான் எந்த காலமோ?

179. வெளியில் உள்ள நீர் நிரம்பியிருக்கும் ஒரு குடத்திலே காலைக் கதிரவன் ஒளிக்கதிர்கள் பட்டுத் தெரிவதுபோல் உருவம் கொண்டு வரும் கடவுளின் ஓர் உருவத்தைக் கூர்ந்து அகக்கண்ணால் நான் கண்டறிவது எக்காலமோ?

180. உடம்பிலே அணிகின்றபொன்னணிகளை உடம்புதான்சுமக்குமே ஒழிய அந்தப்பொன் சுமக்க முடியாது. அதுபோல் இறைவா! நான் வேண்டுகிற உன் அருளை நான்தான் பெற்றுப் போற்றவேண்டும். இந்த உண்மையை நான் அறிவது எக்காலமோ?

181. செம்பிலே பச்சைக் களிம்பு ஊறிச் செம்பையே மறைத்து விடுதல் போன்று செம்பொருள் கடவுளான சிவத்தை, உயிரிலே ஊற்றெடுக்கும் ஆணவம் - தீவினை - மாயை என்னும் மூன்று இருள்மாசுகள் மறைத்து விடுகின்றன. எனவே, இவற்றை அழித்து ஒழித்துவிடுதல் எனக்கு எந்த நாள் வாய்க்குமோ?

182. இறைவன் பேரொளியும், உயிர் அதிலிருந்து தோன்றிய சிற்றொளியுமாக உள்ளது. இந்த ‘ஆன்ம உண்மை’யில் இருக்கும் கடவுள், உயிரும் உடலும் போல் உறவாகவே உள்ளான்.அப்பெரிய உண்மையைத் தீவினையேனான நான் மனம் பற்றுக்கொண்டு நிலைத்திருப்பது எக்காலமோ?

183. வாய்பேசமுடியாத ஊமையன் கனவு கண்டு வியந்தாலும் உணர்ந்தாலும், கண்ட காட்சியினை வாய்திறந்து விண்டுரைக்க முடியாது. அது போன்றே கடவுள் உணர்த்தும் இன்பத்தையும் எத்தகையவரும் எடுத்துரைக்கும் முடியாது.அப்பெரிய இன்பத்தை நாம் அறிந்து இன்புறுதற்கும் அந்த நாள் என்று வருமோ? தெரியாது.

184. சாகாத்தலை எனப்படும் சிவசெம்பொருளின் திருவடி ஒளியை எப்போதும் தவறாமல் போற்றி வழிபடும் அடியார்களின் உயிர்போகாத உடம்பு,உயிரகன்று போகும் என்பதை ஏற்க முடியாது எனக்கூறும் காலம் என்று வருமோ?

185. தவநிலையில் முறையே அமர்வதை விட்டுவிட்டும்,நினைவறிவைத்தவறவிட்டுவிட்டும் ஒரே முடிவான வெட்டவெளி என்னும் கடவுள் ஒளியில் கலந்து நிலைத்திருப்பதுதான் எக்காலம் வருமோ?

186. ஒளிமயமான பாழென்னும் வெட்டவெளியிலே தோன்றும் வெப்பமிக்க ஒளியான கடவுளின் திருவடியொளியை மனத்திட்பமுடன் கண்டு, உறுதியாகத் தெளிந்து இன்புறுவது இனி எக்காலமோ?தெரியேன்.

187. எவ்வுலகமும் தெய்வ வடிவாயுள்ளநீ இப்போது, என் உருவம் உன் உருவமாய் ஒளியாய்ஆகவேண்டும். நான் உன்னை இரவென்றும் பகலென்றும் பாராமல், எப்பொழுதும் கண்டு உலகைக் கொண்டு இன்புற வேண்டும்.

188. பொழுதெல்லாம் பசிக்கு உணவு வகைகளை உண்பதுவும், மனைவியுடன் கூடிக் கலந்து சிற்றின்பம் பெறுவதுவும் நின் திருவருள் ஆணையேஎன்று கண்டுகொள்வதுதான் எக்காலம்? இறைவா!

189. பிறரிடமெல்லாம் சென்று,“ஈயுங்கள்” என்று உணவையும் மற்ற பொருள்களையும் வேண்டிப் பெற்றுக் கொண்டதுவும், எனது மனத்துள்ளே தெய்வமாய் நிலைபெற்று இருந்ததுவும், நான் ‘ஓம்’ என்று, தாயான முதல் மந்திரத்தை எப்பொழுதும் ஓதிக்கொண்டிருந்ததுவும் ஆக அனைத்தையும் உள்ளே நோக்கி,ஓர்ந்து அறிவதுதான் எக்காலமோ? இறைவா!

190. **சத்தம் பிறந்தஇடம் தன்மயமாய் நின்றஇடம்**
**சித்தம் பிறந்தஇடம் தேர்ந்தறிவது எக்காலம்?**

ஓசை என்னும் நாதம் எங்கே பிறந்தது? கடவுள் தீயொளி வடிவாய் நின்ற இடம் எது?எண்ணம் அல்லது அறிவு எங்கே உருவாயிற்று? என்றெல்லாம் வினவித் தேர்ந்து கொண்டு அறிவதும் எக்காலமோ?

191. படைத்த பொருள்கள் ஒவ்வொன்றிலும் உள்ளும் புறமுமாய்ச்சார்ந்திருப்பவனும், போக்கு வரவு செய்பவனும் ( எல்லா உயிர்களையும் பிறந்து இறக்கச் செய்பவனும்), ஊழிக்காலத்தில் அனைத்தையும் தாக்கி (இயற்கைச் சீற்றத்தால்)அழிப்பவனுமாகிய கடவுள் என்னும் மெய்ப்பொருளை நான் காண்பது எக்காலமோ?

192. இறைவா! உலகில் 'நான்' என்றும், நீ என்றும் நாமிருவர் என உலகோர் நினைப்பர். அன்றியும் நம்மைத்தவிர மற்றொன்றான பாசமாம் பற்று என்னும் உலகமும் உண்டு. அதுவும் சேர்த்து மூன்றும் நீயே எனச் சிந்தையில் கொள்ள வாய்ப்பதுஎக்காலமோ?

193. அறிவு வடிவான உயிரையும் கடவுளையும் ஒளியறிவானமெய்யறிவால் அறிந்து கொள்ள வேண்டும். அந்த உயிரறிவில் அறிவு வடிவான கடவுள் பிரிவுபடாமல் கலந்தே ஒன்றியிருக்க வேண்டும். அந்த ஒருமைநிலையை நான் பிடித்துக்கொள்வது இனி எக்காலமோ?

194. இறைவா! இந்த நீண்ட உலகம் முழுதும் உனது சிவந்த பொன்னொளிசுடர் பரப்பவும், அதையேபொன்மன்றாய் கொண்டு, அதிலே நீ, உலகம் வாழ ஐந்து வகையான திருநடனம் ஆடுகின்றாய். அவற்றை நான் கண்டறிவது இனி எக்காலமோ?

195. அறிவுமன்றிலே 'தித்தி' என்னும் ஆடல் பாங்கிலே இறைவன் ஆடுகின்ற அழகிய கூத்தையும், திருவடிச் சிலம்பின் ஓசைகளையும் அன்பார்வத்திலே கேட்டு, இறைஞ்சி வணங்குவது இனிமேல் எக்காலமோ? அறியேன்.

196. இருகண்களுக்கும் இடையில் உள்ள புருவநடுவென்னும் வெளி வழியே, மேலேயுள்ள தலைநடு அறிவு மன்றமான “சிற்சபை”யை அடைந்து அங்கே கடவுள் ஒளியோடு கூடிக்கலந்து உறங்குவது எக்காலமோ?

197. தலைக்குமேல் ஏழாமிடமான இடத்திலே, பேரொளி என்னும் அருட்பெருஞ்சுடரான ஓங்கிய மலை தோன்றவும், அதன் கீழே (மூளைப்பகுதி) ஆயிரம் இதழ்த்தாமரை மலரொன்று மலரவும், அதிலே ஒளிமலையில் இருந்து ஒளிவெள்ளம் அருவியாய்ப் பாய்ந்து விழும்! இந்த ஆயிரக்கால் மண்டபத்திலே தான், இறைவன் ஒளிநடனம் ஆடி உலகை ஆட்சி புரிகின்றார். இந்த திருவிளையாடலை நான் கண்டு இன்புறுவது எக்காலமோ?

198. ஓடைக்கரையில் கொக்கு மீனை மிகையாகவுண்டு விக்கிப் போகும்.அதைப் போல் நான், நீ ஆடும் ஆடற்காட்சியைக் கண்டு அதிற்பொழியும் அருளமுதத் தேனை மிகவும் ஆசையோடு உண்டு தெவிட்டி நிற்கும் காலம் எனக்கும் வாய்க்க வேண்டுமே.

199. இறைவா! தீமைகள் பல செய்யும் உடம்பைப் போட்டுவிட்டு உயிர் செல்லும் முன்னே, தவமிருந்து உயிரில் (கல்போல் ஒளிசுடரும் உயிர் எனும் பசு) சுரக்கும் அமுதப்பாலைக் கறப்பதற்குக் கற்கும் காலம் என்று வருமோ?

200. ஒரே ஒளிக்கடலாய் விளங்கும் வெட்டவெளியிடத்தினுள்ளே திகழ்கின்ற செம்பொருள் சதாசிவத்தை நான் பெறுமாறு தேடி அருளடைவது எக்காலமோ?

201. பேரறிவான கடவுளிடம் மனத்தைப் பேச்சற்ற நிலையில் பதியவைத்து என் வாழ்நாள் முழுதும் ஒரே ஒருமைப்பாட்டறிவு கொண்டு நிலைத்து நிற்பது எக்காலமோ?

202. உயிர் வேறு கடவுள் வேறு என்ற நிலை இல்லாமல், இரண்டும் ஒருமை நிலையடைந்திருக்கும் போது, உயிரின் இயற்கை உண்மையில் அதனுள்ளே வீடுபேறுதருதற்காகத் தங்கியிருக்கும் முறையை நான் அறிவதும் எக்காலமோ?

203. கடவுளே! நான் என்நெஞ்சிலே கொண்ட ஆசை முதலான பாசத்தால் உயிரானது கொஞ்சம் கொஞ்சமாய் மாண்டு போய்விடக்கூடாது. என் உயிரிலும் நெஞ்சிலும் உன் திருக்கோலமே முழுதுமாய் ஆட்சி செய்ய வேண்டும். அத்தகைய காலம் தான் எனக்கு எப்பொழுது வருமோ?

204. எள்ளிலே எண்ணெயும்கரும்பிலே இனிப்பும் மலரிலே எழுகின்ற மணமும் உடம்பிலேஉயிரும் மறைந்திருந்து வெளிப்படுவது போன்றே கடவுள் பொருள்களின் உள்ளேயும் வெளியேயும் இருந்து கொண்டு நுட்பத்தை உணர்த்துகின்றான். இவ்வுண்மையை நாம் உற்றுநோக்கி அறிவது எந்நாளோ?

205. அன்னப்பறவைக்கு முன்னே ஒரு காலத்திலே நீரையும் பாலமுதையும் கலந்து வைத்தால், அந்தப் பறவை நீரை ஒதுக்கிவிட்டுப் பாலை மட்டும் பருகும்.இறைவா! இந்த பறவைப்போல் என்னை ஒதுக்கிவிட்டு உன்னை மட்டும் காண்பது இனி எக்காலமோ?

206. நீர் மேலே பூத்து விரிந்த தாமரை மலர் போன்ற மனத்தில் நினைக்க நினைக்கக் கடவுள் காட்சி தருவான்.அக்காட்சியினைக் கண்ணாரக் கண்டு இன்புறுவதும் எக்காலமோ?

207. தவவொழுக்கத்தால் பிறப்பும் இறப்பும் இல்லாமல் முடியும் பெரிய நிலையைப் பெற்றும், மூச்சுப்பயிற்சியற்றும், பேசாமல் இருக்கும் அமைதிநிலை பெற்றும், நினைத்தலும் மறத்தலும் இல்லாமல் ஒரே நிலையில் இறையொளியில் மூழ்கியும்மாண்படைந்து இருப்பதும் எக்காலம் வாய்க்குமோ? இறைவா!

208. எக்காலமும் நிலைத்திருக்கின்ற மேலேயுள்ள கடவுள் வெளியை மனமாகிய பரப்பிலே இருக்கவைத்து, அந்தப் பேரறிவை என் நெஞ்சினுள் ஒரு வலிமையான அருள்நினைவாகத் தோற்றமளிக்கச் செய்வது எந்த நாளோ?

209. சிற்றின்பம் தரும் பெண்ணால் வருகின்ற கனவை ஒழித்துவிட்டு, பேரின்பம் தரும் இறைவனாகிய உன்மேல் ஓங்கார ஓசையை எழுப்பிக் கொண்டு நானும் அதிலே ஒடுங்கியிருப்பது என்நாளோ?

210. இறைவா! நான் என்னுயிரைக் கொண்டு அதன் வலிமையால் உலகில் அலைந்து வாழ்தல் போல் இனிமேல், உனது பேரொளியான திருவருளைக் கொண்டு இங்கே நான் பற்றற்று ஒடுங்கி விடுதலைப்பேற்றைப் பெறுவதும் எக்காலமோ?

211. கடவுளே! களிமண்ணிலே நடுகின்ற வலிமையான கம்பு போன்ற உடம்பை இனிமேல் காற்றிலே பறக்கும் மெல்லிய நூல் போல் ஆக்கிக் கொண்டு பறப்பதும் எக்காலமோ? அறியேன்.

212. இறைவா! நான் அகபற்றையும் புறப்பற்றையும் ஒழிக்க வேண்டும். எனது உடல் வலிமையும் கெட்டு, உலகப் பொருள்களின் உரிமையும் நீங்கி, உயிரின் தெம்பும் இழந்து போய் உனது திருவருளை நான் சார்ந்து பற்றிருப்பது எக்காலமோ?

213. எனது உடலையும் உயிரையும் மறந்தும், உலகிலே உள்ள பொருள்களை மறந்தும், செய்யும் வினைகளை மறந்தும் ஆக அனைத்துப் பற்றுகளையும் விட்டொழித்து வீட்டின்பத்தைப் பெறுவதுதான் எக்காலமோ?

214. இறைவா! என் உடம்பிலே எனக்குத் தெரியாமல் மறைந்திருந்த பதியான கடவுளையும் மறந்து (நினையாமல்), என் உயிரையும் தானே இயல்பாக மறந்துவிட்டுத் தனியாக இறைவனைப் போல் இருப்பது எக்காலமோ?

215. இறைவா! என் உயிரானது தன்னைத்தானே மறந்து,புருவநடுவான மனவாசலையும் அடைந்துவிட்டு, உன்னை மட்டும் நினைந்து (ஒளியோடு ஒளிகலந்த நிலையில் மூழ்கி) உறங்குவது எக்காலமோ?

216. ‘அன்றில்’ என்னும் பறவையானது, தனது இணைப்பறவை பிரிந்து சென்ற போதிலும் அதை நினைந்தே இன்பமடையும். அதைப் போலவே அருள்நூல் கற்பித்த ஆசான் பிரிந்து சென்று விட்டாலும், அவர் கற்பித்த பாடநூலைத் தொடர்ந்து நினைவுக் கொண்டு இன்புற வேண்டும். அத்தகைய வாய்ப்பு எனக்கு எக்காலம் வருமோ?

217. தவம் செய்யும் முறையான நிலையில், மனத்தில் கொள்கையில் ஆடுதல் இன்றியும், உடலில் அசைவு சிறிதும் காணாமலும் இருந்து கொண்டு, வேட்கையின் எல்லை கடந்தமெய்ப்பொருளான கடவுளை அகமான உள்ளே தேட வேண்டும். இந்த வாய்ப்பு எனக்கு எந்நாள் வருமோ?

218. முற்பிறவியில் செய்த தீவினையின் பயனாய் இப்பிறவியில் முயன்றும் தம் அறிவு முழுமையும் முதிர்வடையாமலும் பின்னடைந்தும் போனால்,அருளன்னையினைத் தவமிருந்து தேடி அருளமுதைஉண்பதும் எப்படி? அந்தக் காலமும் எப்போது வாய்க்கும்?

219. இறைவா! உலகில் கள்ளண்டு களித்து அறிவு மயங்கிப் போவார்போல் நான் உனது அருளமுதைஉண்டு களித்து, மயங்கித்தள்ளாடி நின்று ஆட வேண்டும். அப்போது உலகக் காட்சிகளைக் காண முடியாமல் தடைப்பட வேண்டும். அந்த அமுதநாள் எனக்கு எந்த நாள் வாய்க்குமோ?

220. இறைவா! உயிரில் ஊறிவருகின்ற 'தான்' என்னும் ஆணவ இருளும், உடம்பிலுள்ள தொண்ணூற்றாறுஉண்மையியற் பொருள்களும் வாழ்விலிருந்து ஒழியவேண்டும். எவருடைய வினாவுக்கும் "ஏன்" என்று கூறாத அமைதி நிலையை (பேசாதிருக்கும் ஒடுக்கத்தை) அடைய வேண்டும். இந்த நிலை எனக்கு எப்பொழுது வருமோ?

221. அறிவு என்னும் அகவிழியைப் பெறுவதால், நான் அக்கடவுளின் நிலையில் இருந்து கொண்டு எல்லாவற்றையும் உண்மையாய்க் காணமுடியும். அந்த நிலையை அடைந்து நான் அவனாகி நின்று அவனது திருவடியைப் பெறவும் முடியும்.இத்தகுதியை நான் எப்பொழுது அடைவேனோ?

222. நான் முடிவில்லாத இன்பம் தரும் உண்மை ஒளிக் கடவுளைக் கலந்து,பேரின்பம் கொண்டு தவத்தில் அமர்ந்திருப்பது எக்காலமோ?அறியேன்.

223. உயிரானது அறிவுவெளியான (சிற்சபை) தலைநடுவிலிருந்து கொண்டு,மற்ற வெளிகளைக் கூர்ந்து பார்த்து, ஆங்காங்கே காணுகின்ற மறநெறி மயக்கமான

செயல்களை எல்லாம் அழியச் செய்ய வேண்டும். இந்த நன்னெறிக் கடமையை நான் செய்வதும் எக்காலமோ? தெரியவில்லை.

224. இறைவா! உனது குளிர்ந்த சிவந்த தாமரை மலர் போன்ற திருமுகமும், இரண்டு அருள்பொழியும் விழிகளும், செவிகளிலே தோடணிந்த குண்டலி அணிகளும் தோன்றி எனக்கு அருள்செய்வது எக்காலமோ? ஏங்கியிருக்கிறேன், ஐயா!

225. கடவுளே! என் உடலைவிட்டு முப்பத்தாறு உண்மைப் பொருள்களும் (தத்துவங்களும்) நீங்கி, ஆணவமாகிய இருளில் புதைந்த மனம் ஒடுங்கி ஒளியாகி, அறிவு மன்றமான(தலை நடுவில் உள்ள)வெறுவெளியிலே நிலைக்கொள்வதும் எக்காலமோ?

226. அண்ணலே! நீ உலகிலே காட்டுகின்ற அருள்பொலியும் அறிவுக்கடலில், நான் அன்பென்னும் கப்பலை ஓடவிட்டு, அக்கரையில் தெரியும் உனது ஆசைவூட்டும் அருட்கடலிலே நான் (என்னுயிர்) மூழ்கித் திளைப்பதும்எக்காலமோ?

227. இறைவா! நான் ஓர் உயிரென்பதும் தெரியாது. நீ கடவுள் என்பதும் தெரியாது. ஆனால், நான் தவம் செய்யும்பொழுது, நீ அருளொளியாய் வந்து காட்சித் தருகின்றாய். இவ்வுண்மையை நான் உணர்ந்து கொண்டு தவத்தை நிறுத்துவதுஎக்காலம் வருமோ? அறியேன்.

228. **எவரெவர்கள் எப்படிக்கண்டு எந்தப்படி நினைத்தார்**
**அவரவர்க்கு அப்படிநின்றா னென்பது எக்காலம்?**

அன்பர்களிலேஎத்தகையவர்கள், அவரவர் அறிவுக்கும் அன்புக்கும் ஏற்றவாறு கடவுளை எப்படியெல்லாம் கருதி நினைத்தார்களோ, அவரவர்க்கும் அப்படியே அருள் செய்து வந்து நிற்பான். அவனே கடவுள் என்ற உண்மையை நானும் உணர்ந்து சொல்வது எக்காலமோ?

229. நெற்றியின் நடுவினுள்ளேஅகக்கண்ணில், உற்றுப் பொருந்தி ஆர்வத்துடன் பார்க்கப் பார்க்க, அங்கே கடவுள்தரும் அருட்பேரொளியானது பேரின்பத்தைத் தரும்.அவ்வொளியை நான் கண்டு நிலைத்திருப்பதும்எக்காலமோ?

230. வானிலே திகழுகின்ற மீன்களைக் கதிரவன் ஒளி மறைக்கும் செயல்போல் இறைவா! உன் ஒளிக்காட்சியை, என் அறியாமை என்னும் இருள் மறைத்து விடாமல் நான் கண்டறிவதும் எக்காலமோ? அறியேன்.

231.என்னை நான் இன்னும் அறியவில்லை. இந்த நிலையில், இப்படியெல்லாம் நான் பாடிய கருத்துக்களை,முந்தையோரானஅருளாளர்கள் ஏற்றுக் கொள்ளும்படி அவர்கள் முன்னே நின்று பணிந்து வேண்டுவதும் எக்காலமோ?

232.இறைவா! என்னைச் சூழ்கின்ற மாயையான மாசுக்களை நீக்கி ஒழித்துவிட்டும், பழையவினைப் பாக்கிகளையும் எதிர்வினைகளையும் அறவே ஒழித்துப் பாழாக்கிவிட்டும், எனது உடம்பை உண்மைப் பொருள்கள்(தத்துவம்) நீங்கிய தூய ஒளியுடம்பாக்கியும் தகுதி பெற்ற உன்னைக் காண்பது எக்காலமோ?

233.யானையின் கையோடு ஐந்துதிருக்கைகளை உடைய மூத்த பிள்ளையாரின்திருவடியானமலர்களைப் புகழ்ந்து போற்றி நெஞ்சிலே பதிவு செய்து நிலைபெறுவதும் எக்காலமோ? ஏங்குகின்றேன், புலம்புகின்றேன், அருள் பெறுவேன்.

**வினாக்கள்**

1. பத்ரகிரியார் குறிப்பு வரைக.
2. இறைவனை உணர்வது எக்காலம் என பத்ரகிரியார் கூறும் செய்திகள் யாவை?
3. இறைவனிடம் பக்ரகிரியார் வேண்டுவன யாவை?

அலகு: 5

## தாயுமானவர் பாடல்கள்

### ஆகார புவனம்

**சிதம்பர ரகசியம்**

**தாயுமானவர் :**

தமிழ்நாட்டில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் வேதாரண்யம் எனும் ஊரில் பிறந்தார். தந்தையார் கேடிலியப்பர் தாயார் கெசவல்லி அம்மையார். விசயரகுநாத சொக்கலிங்க நாயக்கரிடம் அரச கணக்கராக அவரது தந்தை பணியாற்றி வந்தார். தந்தையின் மறைவுக்குப் பின் தன்னுடைய பதினான்கு வயதில் அப்பணியை ஏற்று நடத்தினார். மட்டுவார் குழலி என்பவரை திருமணம் செய்தார். தவநெறியில் சிறந்து விளங்கிய தாயுமானவர் பல்வேறு திருத்தலங்களுக்குச் சென்று இறைவனைப் பாடி வழிபட்டார்.

1

**ஆகார புவனமிண்டா கார மாக**
**வங்ஙனே பொருமொழியா கைண்ட கார**
**யோகானு பூதிபெற்ற வன்ப ராவிக்**
**குறுதுணையே யென்னளவு முகந்த நட்பே**
**வாகாரும் படிக்கிசைகிண் கிணிவா யென்ன**
**மலர்ந்தமல ரிடைவாசம் வயங்கு மாபோற்**
**றேகாதி யுலகமெங்குங் கலந்து தானே**
**திகழனந்தா னந்தமயத் தெய்வக் குன்றே. (132)**

மிக விரிவாய் காணப்படுகிற இவ்வுலக சொரூபமானது பேரின்ப மயமாய் தோன்றுவதற்கு ஓர் ஒப்பற்ற அமிர்த மொழியினாலேவிரிவாய் விளங்கும் யோகத்தினாலே அனுபூதி அடைந்துள்ள மெய்யடியவர்களது உயிர்க்கு உற்றதோர் அருந்துணையே யாம்.அதுமட்டுமல்லாது என்பாலும் மன மகிழ்ந்தருளிய சினேகமே யாம். அழகு பொருந்திய தோடும் மெல்லிசை ஒலி செய்கின்ற சதங்கை வாய் போல் விரிந்துள்ள புஷ்பத்திடை மணங்கமழுமாறு போல நாமரூபப் பிரபஞ்சாதிகளிலெங்குந் தன்னந்தனியான தானே கலந்து விளங்கா நின்று முடிவிலா ஆனந்த சொரூபமாயமலை போன்ற பர தெய்வமே! என்று கூறுகிறார். இறைவன் எல்லாமாகவும் அல்லதுமாகவும் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டி என்ற திருவாக்கானும் பெறப்பட்டதை உணர்க.

2

**ஆனந்தபத வுயிர்கபொறு முயிரா யென்று**
**மானந்த நிலையாகி யளவைக் கெட்டாத்**
**தனந்தனிச்சின் மாத்திரமாய் கீழ்மேல் காட்டாச்**
**சதசத்தா யருட்கோயிற் றழைத்த தேவே**
**யினம்பிரிந்த மான்போனா னிடையா வண்ண**
**மின்பமுற வன்பர்பக்க லிருத்தி வைத்துக்**
**கனந்தருமா கனமேதண் ணருளிற் றானே**
**கனிபலித்த வானந்தக் கட்டிப் பேறே. (133)**

அநேக விதமான பதவிகளுக்கு ஆட்பட்டுள்ள ஆன்மாக்கள் தோறும் உயிருக்கு உயிராகியும் எப்போதும் மனோரம்யமாகியும் அளவுகடந்ததாகியும், தன்னந் தனிமையாகியும், ஞான சொரூப மாத்திரமாகியும், உயர்வு தாழ்வு காட்டாத நித்தியமாகியுள்ள திருவருள் வெளிக்குள் செழித்தோங்கிய தெய்வமே!யான் தனக்குரிய மானைப் பிரிந்துள்ள மற்ற மான் போன்று மனம் வருந்தாது இன்பவாழ்வு எய்துமாறு மெய்யடியவர்களது கூட்டத்தில் சேர்ந்து மேன்மை பெற வைத்த பெரிய பெருமானே!

குளிர்ச்சி வாய்ந்த திருவருளாம் மரத்தினிலே பழம் போன்று பழுத்துள்ள இனிய மதுரக் கட்டியென்று கூறத்தகும் பரமப் பிரயோசனமே!

3

**பேறனைந்து மணுவெனவே யுதளித்தள்ளப்**

**பேரின்பமாக வந்த பெருக்கே பேசா**

**வீறனைத்து மிந்நெறிக்கே யென்ன வென்னை**

**மேவென்ற வரத்தே பாழ்வெய்ய மாயைக்**

**………………………………………………**

**யத்தனையுந் தொடர்ந்துபுகு மாதி நட்பே. (134)**

ஆன்மாக்கள் பெறுவதற்கான சகல பிரயோசனங்களையும் கேவலமாக உந்தி எறியுமாறு வந்தருளிய பேரானந்தவெள்ளமே! வாய் திறவாது மோன நிலை பெற்ற பெருமையாகவும் இத்தகைய மார்க்கத்தின் பொருட்டாகவே என்ற அடிமையைப் பார்த்து இம்மார்க்கத்தில் பொருந்துமானதாக நிச்சயித்த அழிவில்லாத ஊதியமே.சூன்யமாக விளங்கும் கொடிய மாயா பகுதிகள் யாவற்றையும் கடந்தேறிய குறைவின்றி இருக்கும் எங்கும் நிறை பூரணப் பொருளே! நதிகள் யாவும் கதியாக் கொண்டிடும் வாரி போன்று மதவாதிகள் அனைவரும் பின்பற்றி நிற்பதற்கு காரணமாகியுள்ள பிரதம உரிமையே! என்கிறார் தாயுமானவர்.

4

தோன்றல் மறைதல்களில்லாதுஓங்கப்பெற்றதென்று மேலாய நான்கு வேதங்களும் தேயுறுகாறும் காண்டற்கு இன்றி பல்வேறு வகையான சமயங்களெல்லாம் ஒன்றோடு மற்றொன்றாக வாத தர்க்கமிட பர்வதத்தைப் போன்று சலித்தலின்றியவீண்வாத வம்பர்களும் மோட்சஏதுக்களாயுள்ள நன்மை மௌனத்தின் கண் உள்ளது என்று கல்லாலநீழலின்கண் அன்று வீற்றிருந்தருளிய தணிவான திருவருள் கொண்ட சந்திர சடாதரனே! ஞானமுத்திரையாகியுள்ள நின் திருக்கரங்களுக்கேற்ப எம்மனோர் இயல்பினை மாற்றுவான் கருதி கொண்டருளிய சின்முத்திரை ரூபம் தாங்கி எம்

போன்றோர்க்கும் வெளிப்பட வந்தருளியபரவஸ்துவே! நிர்மல தெய்வீக வாழ்வே! ஆன்மாக்களுக்கான ஞானமார்க்கம் மௌன நிலையில் இருந்து உண்டாகக் கூடியது என்பதாகும்.

5

நான்மறைகளும் நூற்றெட்டு உபநிஷத்துக்களாக வெளிவந்து விரிவாக எடுத்துக் கூறாமல் நின்ற விசய விளக்கத்திற்கு ஒத்த நிர்மலமாய குணமுதலாக உள்ள குண விசேடங்களை உடையதாய் அமையப்பெற்றுள்ள அடையாளங்களோடு கூடியும்,அதுமட்டுமல்லாது அப்புறத்திற்கு அப்புறமாய் சமத்துவமும் மற்றும் உடனாகவொன்று சேர்ந்தும், பின் பிரிதலுமாக அடியவர்கள் காணுமாறு தணிவான திருவருள் புரிந்து எம்மனோரைக்காத்தருள் புரிபவனே! இமை கொட்டும் நேரமாவது எவர்க்கும் நலம்புரிதலன்றி மற்றொன்றும்புரிதலிலா கருணைக் கடல் போன்ற உவமையிலா பரம்பொருளே!

6

**ஒன்றாகிப் பலவாகிப் பலவா கண்ட**
**வொளியாகி வெளியாகி யுருவு மாகி**
**நன்றாகித் தீதாகி மற்ற மாகி**
**நாசமுட னுற்பத்தி நண்ணா தாகி**
**இன்றாகி நாளையுமாய் மேலுமான**
**வெந்தையே யெம்மானே யென்றென் றேங்கிக்**
**கன்றாகிக் கதறினர்க்குச் சேதா வாகிக்**
**கடிதினில்வந் தருள்கூருங் கருணை விண்ணே. (137)**

ஒப்பற்ற ஒரே தனிப்பொருளாகியும் பல்வேறு பொருள்களாகியும் பல்வேறு பிரகாசங்களோடு கூடிய பொருள்களாகியும், அதுமட்டுமின்றி தங்களுக்கு ஏதுவாகிய வெளியாகியும், சொரூபமாயும்,நலமுடையதாகியும்தீயனவாகியும் இவை அல்லாது

வேறது ஆகியும் தோன்றல் அழிதல் இல்லாததாகியும் இன்றைய தினமும் நாளைய தினமும் ஆகியும் இதன் மேற்பட்ட காலங்களாகியுமுள்ளஎந்தந்தையே! எம்பெருமானே! என்று இவ்வாறு பலமுறை கூறி ஏக்கம் கொண்டு கன்றுகுட்டியைப் போன்று கதறுகின்றவர்க்கு அன்று ஈன்ற பசுவினைப் போன்று அதிவிரைவாக வந்தருளி திருவருள் புரிகின்ற கருணா சொரூபமான பரவெளியே என்று தாயுமானவர் வேண்டுகிறார்.

7

திருவருளை பழமாகப் பழுத்த அப்பழத்தினது மதுரமே! கரும்பே!அக்கரும்பின் இனிய ரசமே! மதுவே! அரிய தேவாமிர்தமே! எனது கண்களுக்கு ஒப்பானவனே!அரியதாயுள்ளமேலாம் பொருட்கள் எவையும்தந்தருள்கின்ற முதற்பொருளே!காரூணியம் நீங்கப் பெறாத பரிபூரண வஸ்துவாய் நிறைந்த ஒருதனிப் பொருளே! பரிசுத்த தேவ வாழ்வே! நினைவெல்லாம் உன் நினைவாக இருந்து அருளி காலமும் தேசமும் வகுத்து கருவி,கரணம் என வினை இரண்டினையும் சேர்ப்பித்து ஆன்ம கோடிகளை ஆட்டுவிக்கின்ற மேலாம் பரம்பொருளே!இச்சிறியவன் செல்லா நின்ற நிறை குறைகளை கேட்டு அருள்வாயாக.

**“ ..........................**

**கருதரிய கருத்தனுட் கருத்தாய் மேவிக்**

**காலமுந்தே சமும்வகுத்துங் கருவி யாதி**

**விருவினையுங் கூட்டியுயிர்த் திரளை யாட்டும்**

**விழுப்பொருளே யான்சொலும்விண் ணப்பங்களே.” (138)**

என்று விண்ணப்பங்களை வைக்கிறார் தாயுமானவர்.

8

இந்திராதி தேவர்கள், நாரதர் முதலாக உள்ள சப்த ரிஷிகள் மற்றும் தும்புரு முதலாக உள்ளவர்கள், சித்தர்கள், மனு சக்கரவர்த்தி போன்ற அநேக முடி மன்னர்கள், நான்கு வேதங்களை ஓதக்கூடியவர்கள், முனிவர்கள் போன்ற உலகத்தோர் அனைவரும் மெச்சிக்

கொண்டாட உள்ளங்கை நெல்லிக்கனி போன்று மேலான ஆழ்ந்த மெய்யறிவினாலேஇந்த சமயத்தில் இருந்து சொல்லுதற்கரிய அட்டமாசித்திகளும் மோட்ச சாம்பிராச்சியாதிகளும் பெற்று உய்ந்தார்கள்.

9

சொல்லரிய எல்லா சமய போக்குகளும் தத்தம் கடவுளையே கடவுளாக சித்தாந்தித்துப் பேசும். அவ்வாறு பேசாதவர்களும்அம்மதத்தினர்களும் அம்முடிபினையேகடைபிடிப்பதால் சமய சாத்திரங்களை விவரித்து பேசி வருவார்கள். ஆகவே இவ்வாறு ஒன்று பொய் மற்றொன்று மெய்யென்றும், ஒன்றுண்டு இன்னொன்றில்லை என்றும்ஆராய்ந்தறிதல் எவர்க்கும் ஒத்துவராது. இவ்வகையாயுள்ள சமயங்களாயும் அவை அல்லனவாயுமிருக்க, எந்த சமயத்தவர்களும் வணங்கக் கூடியதான தன்மையை உடையது ஆகும்.

10

எக்காலத்திலும் தன்னியற்கையாஞ் சுபாவம் மாறுபடாது இயம நியமங்களான எண்வகைக் குணங்களையும் காண்பித்து அன்பு மீதுற பதமருள்வான்.பொருள்களென்ன,பரிவாராதிகளென்ன ஆகிய இவ்வகைக் குணாதிகளெல்லாம் பொருந்துமாறு படித்தரமான நிலையினையும் அறிவித்து பின்னர் மனமயக்குறும் வகைக்கு காரணமாய மந்திரங்கள், ஜோதிடம் முதலான இதர அங்க சாத்திரங்கள் இவையெல்லாம் தொழுவதால் மௌன முத்திரையான கிரீடத்தினை தலையில் சூடி இராஜகோலமாய் அமர்ந்துள்ளது வைதீக சைவ சமய அழகிது வன்றோ என்கிறார்.

11

அந்தோ இது ஆச்சரியமானதாகும். ஆகையினால் இவ்வைதீக சமயம் போன்று வேறோர் சமயமும் இல்லையாம்.அறிவுடையவர்கள் நடுநிலையாயிருந்து ஆராய்ந்தறிந்த மட்டில்

அட்ட சித்துகள் கைவரப்பெற்று விளையாடுபவர்க்கும்,மௌன நிலையில் ஞான மார்க்கத்தில் பற்றுகோடாய் இருந்துவந்த தவமுனிவர்களுக்கும்,தெய்வீகர்களுக்கும் இவ்வைதிக சமயம் அல்லாது வேறு சுதந்திரமான சமயநிலை கிடையாதாம். சந்தனம், கற்பகம் போன்ற தேவலோக மரங்களைப் போன்று திருவருள்திறம் வெளிவந்து அருளும் மார்க்கம்சைவமேயாகும். ஆகவே,இம்மார்க்கத்தினை 'சன்மார்க்க'மென்றனர் மேலோர்.

12

சன்மார்க்கமான சைவ மார்க்கமும் அதன் சார்பாய் உள்ள மெய்ஞ்ஞானப் பொருள்களும் மற்றும் தன் மார்க்கமே நல்ல மார்க்கம் என்று இறுமாப்பு வார்த்தைப் பேசும் இதர சமய சாத்திரங்களால் நிச்சயித்துள்ள பல்வேறு சமய கொள்கைகளிலும் காணமுடியவில்லை.சொல்லுவதற்கரியதில்லை சிற்சபையில் போய்ப்பார்த்த அக்கணமே அவ்விடத்து என்ன மார்க்கம் தெரிகின்றது. அனைத்தும்பரவெளியாகிய ஆகாயமே என்று எந்த சமயத்தவர்களும் அங்கு வந்து வாழ்த்தி நிற்பர். கல் போன்ற திடமான மனமுடைய அடிமைகளுக்கும் தரிசித்த போதே பரமானந்தப் பரவச மாயிற்று அன்றே என்பதாகும்.

13

காண்பதற்கு புறத்து உள்ளது போன்றே அகத்தும் காட்சி தரும் மெய்நூல்கள் கூறி நிற்கும் பர தெய்வமே! நீயோ நீட்சியான நெடுக்கும் அகலமான குறுக்கும் விளங்காது எங்கும் பரிபூரணமாக வியாபித்துள்ள அறிவாகியும் அழிவில்லா சத்துவமாகியும் விருப்பும் வெறுப்பும் ஆகியும்அண்மை சேய்மையாகியும் பொருந்துதலும் பிரிதலுமாகியபலவாறாகிய நிலைமைகளும் மற்றும் அளவை கணக்குகளும் மனத்தினும் வாக்கினும் அமையாது உள்ளும் புறமும் பொருந்தியதாய் எல்லாமாய் அல்லதுமாய் எங்கும் நிறைந்தவனாய் திகழ்பவனே என்பதாம்.

14

மாயையும் அதனால் ஏற்படும் இரு வினைகளும் அனைத்து ஆன்மாக்களுக்கும் வந்ததற்கு என்ன காரணமோ? மாயையில் கட்டுண்டு போகாது ஆன்மாக்களுக்கு முயற்சியாக

பரிபாக நிலையினை அருளுமாறு ஓர் சக்தி தேவதை வந்து சேர்ந்ததற்கு காரணம் என்ன? இவையன்றி நான் எனக் கூறும் குணம் ஏற்பட்டதற்குக் காரணம் யாதோ என்கிறார்.

**15**

**நாகனன்று மோரகந்தை யெவர்க்கும் வந்து**
**நலிந்தவுடன் சகமாயை நானா வாகித்**
**தான்வந்து தொடருமித்தால் வளருந் துன்பம்**
**சாகரத்தின் பெருமையெவர் சாற்ற வல்லா**
**ரூனென்று முடலென்றுங் கரண மென்று**
**முள்ளென்றும் புறமென்று மொழியா நின்ற**
**வானென்றுங் காலென்றுந் தீநீ ரென்று**
**மண்ணென்று மலையென்றும் வனம தென்றும். (146)**

எதிலும் நான் நான் என்று சொல்லுகின்ற ஓர் ஆணவ வார்த்தை எல்லோரிடமும் இருந்து வந்து அவரை துன்புறுத்திய பின்னர் உலக மாயையானது பல வகையாய் பின்னும் வந்து சேர்ந்துவிடும். ஆகவே இம்மாயையால் உண்டாகின்ற துயரம் கடலினும் விரிவு உடையது என்று கூறுவர் யாரோ? உயிர் என்றும் அதில் அமைந்துள்ள உடல் என்றும், அகம் புறமென்றும்,நீங்குதலில்லாத ஆகாய வெளி என்றும் அதனுள் உலவும் காற்றெனவும், நெருப்பு, நீர் எனவும் பூமியெனவும், மலையெனவும் காடு என்பர். இவ்வுலகமே மாயையின் பிடியில் என்றால் அதன் அளவை சொல்லவும் முடியுமோ என்னும் கருத்தினை ‘துன்ப சாகரத்தின் பெருமையை எவர் சாற்றவல்லார்’ என்றார் ஆசிரியர். இவ்வாறு எல்லாமாக விளங்கும் பரம்பொருளின் நிலையை விளக்குகிறார் தாயுமானவர்.

**வினாக்கள்**

1. தாயுமானவர் குறிப்பு வரைக

2. ஆகார புவனம் - வழி அறியலாகும் செய்திகளை தொகுத்துரைக்க.

**வள்ளலார்திருவருட்பா**

**மருண்மாலைவிண்ணப்பம்**

திருவருட்பிரகாசவள்ளலார்என்றழைக்கப்படும்**இராமலிங்கஅடிகளார்கி.பி 1823 ஆம்ஆண்டுஅக்டோபர்மாதம் 5 ஆம்நாள்**சிதம்பரத்திற்குஅருகில்உள்ளமருதூரில்தோன்றினார்.**பெற்றோர்இராமையாபிள்ளைசின்னம்மையார்.**வடலூரில்தருமசாலையைநிறுவியவர். சத்தியஞானசபையைஉருவாக்கியவர். கடவுள்ஒருவரேஎன்றகருத்தைவலியுறுத்தியவர்.

**இவர்பாடியஆறாயிரம்பாடல்களின்திரட்டு 'திருவருட்பா' என்றுஅழைக்கப்படுகிறது.**இதுஆறுதிருமுறைகளாகப்பகுக்கப்பட்டுள்ளது. நம்பாடப்பகுதியில்அமைந்துள்ளமருண்மாலைவிண்ணப்பம்எனும்பகுதிஐந்தாம்திருமுறையில்அமைந்துள்ளது.

1

**சொல்லும்பொருளுமாய்நிறைந்தசுகமேஅன்பர்துதிதுணையே**
**புல்லும்புகழ்சேர்நல்தணிகைப்பொருப்பின்மருந்தேபூரணமே**
**அல்லும்பகலும்நின்நாமம்அந்தோநினைந்துன்ஆளாகேன்**
**கல்லும்பொருவாவன்மனத்தால்கலங்காநின்றேன்கடையேனே.**

சொல்லும்பொருளுமாய்நிறைந்தசுகமே!அன்பர்கள்துதிக்கின்றதுணையே!புகழ்சேர்க்கின்றநல்தணிகைமலைமருந்தே!முழுமைப்பொருளே!அல்லும்பகலும்உன்நாமம்அந்தோநினைந்துஉன்ஆளாகேன்.
கல்லும்கரையாவலிமையானமனத்தால்கலங்காதுநின்றேன்கடையேனாகியநான்.

2

**கடையேன்வஞ்சநெஞ்சகத்தால்கலுழ்கின்றேன்நின்திருக்கருணை**
**அடையேன்அவமேதிரிகின்றேன்அந்தோசிறிதும்அறிவில்லேன்**
**விடையேறீசன்புயம்படும்உன்விரைத்தாள்கமலம்பெறுவேனோ**
**கொடைஏர்அருளைத்தருமுகிலேகோவேதணிகைக்குலமணியே.**

அடியவனாகியநான்வஞ்சம்நிறைந்தமனத்தால்வருந்துகின்றேன்.உனதுதிருக்கருணையினைஅடையேன்.திரிகின்றேன்.சிறிதும்அறிவில்லேன்.காளையின்மீதுஏறும்ஈசனின்தோள்படும்உன்பாதக்கமலம்பெறுவேனோ.அருள்மழையைப்பொழிகின்றவள்ளலே.அரசனேதணிகைமலையில்குலமணியேஎனக்குஅருள்வாயாக.

3

**மணியேஅடியேன்கண்மணியேமருந்தேஅன்பர்மகிழ்ந்தணியும்**
**அணியேதணிகைஅரசேதெள்அமுதேஎன்றன்ஆருயிரே**
**பிணிஏய்துயரால்வருந்திமனப்பேயால்அலைந்துபிறழ்கின்றேன்**
**தணியேன்தாகம்நின்அருளைத்தருதல்இலையேல்தாழ்வேனே.**

மணியே,அடியவர்களுக்குகண்மணிபோன்றவனே!மருந்தே!அன்பர்கள்மகிழ்ந்துஅணியும்அணிகலனே.தணிகைஅரசேதித்திக்கின்றஅமுதமேஎன்றன்ஆருயிரே!துன்பம்எனும்நோயால்வருந்திமனம்பேய்போன்றுஅலைந்துதிரிகின்றேன்.உன்னுடையஅருளைதரவில்லையேல்என்னுடையதுன்பம்தீராது.நீஅருள்புரியாவிடில்நான்தாழ்ந்துவிடுவேனே.

4

**தாழ்வேன்வஞ்சநெஞ்சகர்பால்சார்வேன்தனக்குன்அருள்தந்தால்**
**வாழ்வேன்இலையேல்என்செய்கேன்வருத்தம்பொறுக்கமாட்டேனே**
**ஏழ்வேதனையுங்கடந்தவர்தம்இன்பப்பெருக்கேஎன்உயிரே**

**போழ்வேல்கரங்கொள்புண்ணியனேபுகழ்சேர்தணிகைப்பொருப்பரசே.**

தாழ்வேன்,வஞ்சஎண்ணமுடையவர்களோடுசேர்வேன்.எனக்குஉன்னுடையஅருளைத்தந் தால்வாழ்வேன்.இல்லையேல்என்னசெய்யமுடியும்.துன்பத்தைப்பொறுக்கமாட்டேனே!ஏ ழுபிறவிகளையும்கடந்தவர் (துன்பம்கடந்தவர்தம்)இன்பப்பெருக்கே!என்உயிரே!வேலைகையில்ஏந்தியிருக்கும்புண் ணியனே!புகழ்சேர்கின்றதணிகைமலைக்குஅரசே.அருள்புரிவாய்.

5

**அரைசேஅடியர்க்கருள்குகனேஅண்ணாதணிகைஐயாவே**
**விரைசேர்கடம்பமலர்ப்புயனேவேலாயுதக்கைமேலோனே**
**புரைசேர்மனத்தால்வருந்திஉன்றன்பூம்பொற்பதத்தைப்புகழ்கில்லேன்**
**தரைசேர்வாழ்வில்தயங்குகின்றேன்அந்தோநின்றுதனியேனே.**

அரசனே! அடியவர்களுக்குஅருள்புரிகின்றகுகனே!அண்ணாதணிகைத்தலைவனே.கடம்பமலர்மா லையைதோளில்அணிந்தவனேவேலாயுதத்தைகையில்ஏந்தியமேலானவனே!மனம்துன்ப ப்பட்டுஉன்னுடையமலர்போன்றபாதங்களைப்புகழ்கின்றேன்.உலகவாழ்வில்விருப்பமில் லாதுதயங்குகின்றேன்.அந்தோநான்தனியாகநிற்கின்றேனே!துணைபுரிவாய்.

6

**தனியேதுயரில்வருந்திமனம்சாம்பிவாழ்க்கைத்தளைப்பட்டிங்**
**கினிஏதுறுமோஎன்செய்கேன்என்றேநின்றேற்கிரங்காயோ**
**கனியேபாகேகரும்பேஎன்கண்ணேதணிகைக்கற்பகமே**
**துனிஏய்ப்பிறவிதனைஅகற்றும்துணையேசோதிக்சுகக்குன்றே.**

தனியேதுயரில்வருந்திமனம்உழன்றுவாழ்க்கைத்தளையில்எனக்குஇனிஎன்னநடக்குமோ என்றுநிற்பவனுக்குஇரக்கம்காட்டமாட்டாயா!கனியே!பாகே!கரும்பே!என்கண்ணே!தணிகையின்தெய்வீகமே!பிறவித்துன்பத்தைஅகற்றும்துணையே!ஜோதிவடிவமானதணிகையனே!

7

**குன்றேமகிழ்ந்தகுணக்குன்றேகோவேதணிகைக்குருபரனே**
**நன்றேதெய்வநாயகமேநவிலற்கரியநல்உறவே**
**என்றேவருவாய்அருள்தருவாய்என்றேபுலம்பிஏங்குற்றேன்**
**இன்றேகாணப்பெறில்எந்தாய்இறவேன்பிறவேன்இருப்பேனே.**

குன்றேமகிழ்ந்தகுணக்குன்றே!அரசனே!தணிகைமலையின்குருபரனே!தெய்வநாயகமாக விளங்கக்கூடியவனே!நல்உறவே!என்றுவருவாய்அருள்தருவாய்என்றேபுலம்பிஏங்குகின்றேன்.இன்றேகாணும்பாக்கியம்பெறில்என்தலைவனேநான்இறவாமல்பிறவாமல்இருப்பேனே.உன்அருள்எனக்குக்கிடைத்தால்பிறவாப்பெருவாழ்வுஎய்துவேன்என்கிறார்.

8

**இருப்பேன்துயர்வாழ்வினில்எனினும்எந்தாய்நினதுபதங்காணும்**
**விருப்பேன்அயன்மால்முதலோரைவேண்டேன்அருளவேண்டாயோ**
**திருப்பேர்ஒளியேஅருட்கடலேதெள்ளார்அமுதேதிருத்தணிகைப்**
**பொருப்பேமகிழ்ந்தபுண்ணியமேபுனிதஞானபோதகமே.**

வாழ்வினில்துயர்இருந்தாலும்என்தந்தையாகியநினதுதிருப்பாதங்களைகாணும்ஆசையால் வாழ்ந்திருப்பேன்.பிரம்மா,திருமால்போன்றதெய்வங்களைதொழமாட்டேன்.எனக்குநீஅரு

ளமாட்டாயா?பேரொளியாகத்திகழ்கின்றவனே!அருள்கடலே!தெளிந்தஅமுதம்போன்றவனே!திருத்தணிகைமலைவாழ்கின்றபுண்ணியமே!புனிதஅறிவுச்சுடரேஎனக்கருள்வாய்.

9

**போதாநந்தஅருட்கனியேபுகலற்கரியபொருளேஎன்**
**நாதாதணிகைமலைஅரசேநல்லோர்புகழும்நாயகனே**
**ஓதாதவமேவருந்துயரால்உழன்றேபிணியில்உலைகின்றேன்**
**ஏதாம்உனதின்அருள்ஈயாதிருந்தால்அந்தோஎளியேற்கே.**

அருட்கனியே!சொல்லுவதற்கரியபொருளே!என்நாதனே!தணிகைமலைஅரசே!நல்லவர்கள்புகழ்கின்றநாயகனே!தவப்பொருளே!வாழ்வில்துயரமாகியபிணியில்உழல்கின்றேன்.எளியவனாகியஎனக்குநீஅருள்புரியாதிருந்தால்நான்என்னஆவேனோ?

10

**எளியேன்நினதுதிருவருளுக்கெதிர்நோக்குற்றேஇரங்குகின்ற**
**களியேன்எனைநீகைவிட்டால்கருணைக்கியல்போகற்பகமே**
**அளியேதணிகைஅருட்சுடரேஅடியர்உறவேஅருள்ஞானத்**
**துளியேஅமையும்எனக்கெந்தாய்வாஎன்றொருசொல்சொல்லாயே.**

எளியவனாகியநான்நினதுதிருவருளைஎதிர்நோக்கியேஇரங்கிநிற்கின்றேன்.எனைநீகைவிட்டால்உனதுகருணைஉள்ளத்திற்குஅதுஇயல்பாகுமோகற்பகமே!தணிகையின்அருள்சுடரே!அடியவர்களுக்குஉறவானவனே!
‘வா’என்றொருசொல்சொல்வாயா.அதுவேஎன்தந்தையாகியநீஎனக்குத்தந்தஅருள்ஞானத்துளியாகஅமையும்இறைவாஎன்கிறார்.

**வினாக்கள்**

1. தணிகைமலைசிறப்பினைஎழுதுக.

2. தணிகைமலையானிடம்வள்ளலார்வேண்டுவனயாவை?

**சிவவாக்கியர்**

சிவவாக்கியரைமுற்போக்கானஉண்மைஇயல்சார்ந்தஒரேகடவுள்,ஒரேமனிதகுலம்,ஒரேசமன்பட்டவாழ்வியல்கொள்கைஉடையசீர்திருத்தச்செம்மல்என்றுகூறமுடியும். அவர்ஆன்மிகஉலகிலும்உண்மையியல்உலகிலும்ஒருபுரட்சியாளராய்த்தோன்றிமக்களிடம்மெய்யறிவையும்விழிப்புணர்வையும்வெளிப்படுத்தினார்என்பதற்குஅவரதுபடைப்பானபாடல்களேஅடையாளமாகும்.

**1)அனைத்துஉயிர்க்கும்அடிப்படையாய்இருப்பதுதீப்பிழம்பே**

**அக்கிடீர்அனைத்துயிர்க்கும்ஆதியாகிநிற்பது!**
**முக்கிடீர்உமைப்பிடித்துமுத்தரித்துவிட்டது**
**மைக்கிடில்பிறந்திறந்துமாண்டுமாண்டுபோவது**
**மொக்கிடீர்உமக்குநான்உணர்த்துவித்ததுஉண்மையே.**

மாந்தரே!படைக்கப்பட்டஅனைத்துஉயிர்களுக்கும்முதன்மையாய்இருப்பதுசிவகடவுளாகியதீப்பிழம்புஆகும்என்பதைஅறியமாட்டீர்கள்.படைப்புக்காக,மாயைஎனும்தாய்உம்மைப்பிடித்துமுத்தமிட்டு,பாலுணர்ச்சிதந்தபருவத்திலே,காதலால்மயங்கிமீளமுடியாமல்முக்கிப்போனீர்கள்.ஆணவம்முதலியமாசுகளால்நீங்கள்பிறந்தும்இறந்தும்மீண்டும்மீண்டும்தொடர்வதுஉண்மைஎன்றுஅறியமாட்டீர்கள்.இவற்றைஉமக்குநான்உணரவைக்கும்போதுநீங்கள்ஆர்வமாய்க்கேட்காமல்இருப்பீர்கள்.

**2) மௌனநிலை**

**ஐயன்வந்துமெய்யகம்புகுந்தவாறுஎங்ஙனே?**
**செய்யதெங்குஇளம்குரும்பைநீர்புகுந்தவண்ணமே;**
**ஐயன்வந்துமெய்யகம்புகுந்துகோயில்கொண்டபின்**
**வையகத்தில்மாந்தரோடுவாய்திறப்பதுஇல்லையே. 162)**

சிவந்ததென்னைமரத்தின்இளங்குரும்பையிலேதெரியாமல்தண்ணீர்புகுந்தஇயற்கைபோல்இறைவன்வந்துஎவருக்கும்தெரியாமலேஉடம்பிலேபுகுந்தான். இதையார்எண்ணிப்பார்க்கின்றார்கள்?இறைவன்வந்துஉடம்பின்உள்ளேபுகுந்துகோயிலாகக்கொண்டிருந்தபின்இந்தஉலகில்மனிதனோடுவாய்திறந்துபேசுவதில்லை.இதுவேஇறைவன்இயல்பு!

### 3) இறைநிலைஅடைதல்

இறைவனின்இயக்கம்உடம்பிலேஆறுஆதாரஇடங்களில்நடைபெறுகின்றது.நமசிவாயஎன்னும்இறைவனின்ஐந்துஎழுத்துக்களும்முறையாகமூலக்கனலில் ந வும்,குறியிடத்தில் ம வும், கொப்பூழில்சியும்,நெஞ்சகத்தில்வாவும்,கழுத்தில்யாவும்எனஅமைந்துள்ளன. இவ்வுண்மைவளமானமெய்யறிவாலேபுரியும்.
ஆறுஇடங்களில்,முதல்இடமானமூலாதாரத்தில்தோன்றும்கனல்ஆற்றலானகுண்லினியானதுஇந்தஐந்தையும்கடந்துஆறாவதானபுருவநடுவைஊடுருவிச்சென்றுதலையின்நடுவிலுள்ளஅறிவுமன்றமாம்சிற்சபையைஅடைந்துஇறையொளியோடுகூடும்.
இந்தஉண்மையைப்புரிந்தவரேஇறைநிலைபெறுவர். இதுஉண்மையாகும்.

### 4) தோன்றியகாலம்தெரியாது:

**அக்கரம்அனாதியோ?ஆத்துமம்அனாதியோ ?**
**புக்கிருந்தபூதமும்புலன்களும்அனாதியோ**
**தர்க்கமிக்கநூல்களும்சாத்திரம்அனாதியோ**
**தற்பரத்தைஊடறுத்தசத்குருஅனாதியோ?**

எழுத்துக்கள்தோன்றியகாலம்தெரியாதபழமைஉடையனவா?ஆன்மாவும்தோற்றம்தெரியாததா? இயற்கைபொருள்களும்உடம்பிலுள்ளஐம்புலன்களும்அத்தன்மைஉள்ளனவா? வினாவிடைதருகின்றசிறந்தஅறிவுமிக்கநூல்களும்,மற்றநூல்களும்அத்தன்மைகொண்டனவா? தானேதோன்றியஇறைவனைப்பற்றிவிளக்கிஉரைக்கும்ஆசானும்அப்படியா? ஆராய்ந்துபாருங்கள்.
எல்லாம்மனிதவாழ்வுக்காகஇறைவனால்படைக்கப்பட்டமெய்ப்பொருளே.

**5) மறுபிறவிஇருக்காது;**

அன்பர்களே!நீங்கள்இறைவனாகியசெம்பொற்பேரொளியைபார்த்திருக்கமாட்டீர்கள்.பார்த்தாலோஆன்மீகஉயிரைப்பற்றியிருந்தமாசுகளும்செருக்கும்அழிந்துஆன்மாதூயநிலையைஅடையும்.அப்போதேஉங்களதுஇறைவேட்கைஅறிவிலேசிவச்செம்பொருள்தோன்றும்.ஆன்மாதூய்மைஅடையாமல்எவ்வளவுகாலம்தவம்இருந்தாலும்பார்வைதான்நீண்டுகொண்டுபோகும்சிவம்தெரியாது.

அதனால்மீண்டும்மீண்டும்பிறந்துபூவும்காயும்போல்மக்களையும்உறவினரையும்பெற்றுஅதில்மகிழ்வீர்கள்அவ்வளவுதான்.

**6) இறைவன்இருக்கும்இடத்தைஅறிதல்:**

தவமிருக்கும்அன்பர்கள்தங்கள்நெற்றியின்நடுவில்நீலநிறசுடராம்இறைவனைவைத்துபற்றிக்கொண்டுவருந்துகின்றார்கள்.இதற்காகஉடலைவருத்துகின்றார்கள்.

இதன்பயனாகபற்றுகளைஒழித்தீர்களேஅன்றிவேறுபெற்றதுஉண்டா?இதைவிட்டுவிட்டுநீங்கள்உங்கள்உள்ளேஉயிரிலேநன்குபொருந்திப்பாருங்கள்.இறைவன்இருக்கும்இடம்அதுவேஆகும்.

**7) கடவுள்வேரானவன்:**

**நீரையள்ளிநீரில்விட்டுநீர்நினைத்தகாரியம்**
**ஆரையுன்னிநீரெலாம்அவத்திலேஇறைக்கிறீர்? (167)**

அன்பெனும்பெயரில்வீணாகாதீர்கள்.உண்மைஉணர்ந்துசெயல்படுங்கள்.நீர்வழிபாடுஎன்றபெயரில்நீரைஅள்ளிஎடுத்துஅந்தநீரிலேயேவிடுகின்றீர்கள்.அதனால்நீங்கள்நினைத்தஒருசெயலாவதுநிறைவேறியதுஉண்டா?

வேறுயாரைநினைத்துஇப்படிநீரைஎல்லாம்வீணாக்கின்றீர்கள்.உலகிற்குவேராகவும்விதையாகவும்இருக்கின்றவன்இறைவன்.

8)

தவம்இருப்பவர்கள்நெற்றியின்நடுவில்பெரும்சுடர்விட்டுதிகழ்கின்றநீலமணிச்சுடர்போன்

றமனவிளக்கானஉயிர்விளக்கைஅறிவின்ஆழம்கண்டுஉணர்ந்துபாருங்கள்.அந்தஆத்மஉயிர்உள்ளேபேரொளியானகடவுளைதூயஅன்பால்உறவுகொண்டவர்கள்மேலானஉயிர்உடையவர்.அவரைப்போல்இந்தவரிசையில்உள்ளவரேதகுதியுடையவர்.

**9) தெளிவு:**

**கருத்தரிக்குமுன்னெலாம்காயம்நின்றதுஎவ்விடம்?**
**உருத்தரிக்குமுன்னெலாம்உயிர்ப்புநின்றதுஎவ்விடம்**
**………..................................................................... (169)**

தாயின்கருப்பையில்ஒருகருதோன்றிவளர்வதற்குமுன்னர்இந்தஉடலானதுஎவ்விடத்தில்இருந்துவந்தது.அதேபோல்ஓர்உருவம்தோன்றுவதற்குமுன்அதைஇயக்கும்மூச்சுக்காற்றானதுஎங்கிருந்துபுறப்பட்டுவந்தது.ஒருவன்அருள்பெறுவதற்குமுன்பேஅதற்குரியஆசைஎங்கிருந்துவந்தது.இத்தகையஅடிப்படையானஉண்மைகளையும்ஐயங்களையும்வினவிஅறியாமையைஒழித்துநான்ஒளியறிவைப்பெற்றுக்கொண்டதுசிவாயமந்திரத்தால்ஆகும்.எல்லாவினாக்களுக்கும்விடை‘சிவாய’என்பதாகும்.

10)

தாயின்கருப்பையில்கருதோன்றுவதற்குமுன்னமேஅந்தஉடல்,அந்தக்கருவின்அடிப்படையானஐம்பூதங்களில்ஒன்றானதீயில்இருந்துதான்பிறந்தது.உடம்புதோன்றுவதற்குமுன்னமேஉடலைஇயக்கும்மூச்சுக்காற்றுநீரிலிருந்துதான்தோன்றியது.அருள்தோன்றுவதற்குமுன்னேஅதன்அடிப்படையானஆசைகாற்றிலுருந்தேபிறந்தது.இவ்வாறுதெளிவில்லாதுகுழம்பியகுழப்பங்களைஎல்லாம்தீர்த்துஉண்மைஅறிவைக்கொடுத்ததுசிவாயமேஎன்பர்.

11)

தூரமானபெண்அந்தநேரத்தில்ஒருவனோடுமுயங்கிப்பெற்றபிள்ளையைஅக்காலமாந்தர்இழிவெனக்கருதியதால்இடுகாட்டிலேபுதைக்குமாறுசொல்லவும்,அதைக்கேட்டவெட்டியான்கள்எடுத்துச்சென்றுபுதைத்தகொடுஞ்செயல்ஒன்றும்,தெருவில்சென்றுகொண்டிருந்தஅமைதியானதவஅறிவோர்ஒருவரைக்கண்டசிறியோர்சிலர்தவறாகநினைத்துஓடிச்சென்றுஅப்பெரியவரைக்கல்லால்அடித்தசெயலும்தீவினைகள்என்றுஅடியார்களும்கோவிலில்பணிசெய்யும்சைவஅன்பர்களும்கருதிவருந்தினார்கள்.இவர்கள்சிவாயமந்திரத்தின்வலிமைபெ

ற்றவர்கள்என்பதால்இவர்கள்வேண்டியபடிதீவினைசெய்தவர்களுக்குத்தண்டனைகிடைத்தது.

**12) உலகில்நடக்கும்துன்பச்செயல்கள்:**

**ஓடியோடிபாவியழைத்துஉள்ளங்கால்வெளுத்ததும்,**
**பாவியானபூனைவந்துபாலிலேகுதித்ததும்,**
**பணிக்கன்வந்துபார்த்ததும்பாரமில்லைஎன்றதும்**
**இழையறுந்துபோனதும்என்னமாயம்ஈசனே! (172)**

இறைவனே!இவ்வுலகில்எதிர்பாராமல்நிகழும்கொடும்செயல்கள்தாம்எத்தனை? ஒழுக்கக்கேடுகளையும்குற்றங்களையும்செய்கின்றதீவினையாளர்களைஓடிஓடிஅழைத்துகண்டும்,அறிவுரைகூறியும்எனதுஉள்ளங்கால்வெளுத்துவலுவிழந்துவிட்டதே. தீயபழக்கமுள்ளபூனையானதுவந்துசூடானபாலில்விழுந்ததைக்கண்டுவருந்தினேன்.பாம்புகடிக்கப்பட்டஒருவனைபார்வைபார்க்கவந்தபணிக்கன் (நச்சுமருத்துவன்)பார்த்ததும்இவன்பிழைக்கமாட்டான்என்றுகைவிட்டுசென்றதையும்கண்டேன்.உயிராகியமெல்லியநூல்அறுந்துபோனதையும்உணர்ந்தேன்.இப்படிஎல்லாம்இந்தஉலகம்பாழாகத்தெரிகின்றது.இதுஎன்னஉலகம்?நீயேவிளக்கவேண்டும்.

**13) பேரொளி:**

உடம்பிலேமூலாதாரம்என்பதுசதுரத்தன்மையும்நான்குஇதழ்தாமரைமலரும்போன்றது. அதில்இருந்துபுறப்பட்டுவரும்கனல்ஒளியானதுபுருவநடுவில்உள்ளமுச்சுடர்களோடுகலக்கின்றது.கழுத்திடத்தில்உயிர்வளிஎனும்காற்றுவட்டமாகச்சுழன்றுநெஞ்சகஇடமானஇதயத்தையும்தொடர்புகொள்கின்றது.இந்தநிலையில்மூலாதாரஒளியோடுமுச்சுடர்ஒளியும்சேர்ந்துபுருவநடுவுக்குமேலே,தலைநடுவானஅறிவுமன்றத்தையும்கடந்துபேரொளியாகித்தலைக்குமேல்நாதம்என்னும்கடவுள்பேரொளியோடுகலந்துகாட்சிதரும்.

**வினாக்கள்**

1. இறைவனைஅடையும்நிலையைசிவவாக்கியர்எவ்வாறுவிளக்குகிறார்.

2. சிவவாக்கியர்பாடல்கள்உணர்த்தும்செய்திகளைத்தொகுத்துரைக்க